5

பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் நிலையம்,
தூய தோமா ஆலயம்.

UNIVERSITY CHRISTIAN STUDENTS CENTRE
ST. THOMAS CHURCH.

கீர்த்தன கீத சங்கிரகம்

IN LOVING MEMORY

OF

Late Mas. PREMAKEETHAN SRIRANJAN

DIED ON 01-06-1989

SON OF

Dr. (Mr. & Mrs.) S. SRIRANJAN

JAFFNA.

18th August 1991.

பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் நிலையம்,
தூய தோமா ஆலயம்.

UNIVERSITY CHRISTIAN STUDENTS CENTRE
ST. THOMAS CHURCH.

பூமியின் குடிகளே, எல்லோரும் கர்த்தரைக்
கெம்பீரமாகப் பாடுங்கள்

கர்த்தர் நல்லவர், அவருடைய இரு பை
என்றென்றைக்கும், அவருடைய உண்மை
தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.

கீர்த்தன கீத சங்கிரகம்

(C) பாடல்களின் தெரிவும், நிரல் ஒழுங்கும் இலங்கை மெதடிஸ்த திருச்சபைக்கே உரியது.

முதற் பதிப்பு	—	1881
இரண்டாம் பதிப்பு	—	1901
மூன்றும் பதிப்பு	—	1925
நான்காம் பதிப்பு	—	1937
திருத்திய ஐந்தாம் பதிப்பு	—	1957
திருத்திய ஆறும் பதிப்பு	—	1975
திருத்திய ஏழாம் பதிப்பு	—	1983
1983 இன் மறுபதிப்பு	—	1988

ஒவ்வொரு கீர்த்தனையின், கீதத்தின், தேவாரத்தின், கூட்டுப் பிரார்த்தனையின், புதுப் பாட்டின் அடியிலும்; ஆக்கியோனது அல்லது மொழிபெயர்த்தவரது பெயர்கள் அச்சிடப்பட்டுள்ளன. இவ்வடியார்களுக்கு அல்லது அவர்களின் சந்ததியினருக்கு நாம் நன்றி நவில்கின்றோம். சில பாடல்களை ஆக்கியோரின் பெயர்கள் தெரியவில்லை, எனவே அவர்களின் பெயர்கள் அச்சிடப்படவில்லை. இப்பாடல்களில் எவற்றுக்கும் பதிப்புரிமை உண்டோ என அறிய முயன்றோம்; விபரம் கிடைக்கவில்லை. இவற்றை எழுதியோருக்கு நன்றி கூறுவதோடு, பதிப்புரிமை மீறப்பட்டிருந்தால் குறை பொறுக்கும்படி வேண்டுகிறோம்.

தொகுப்பாசிரியர்

ISBN: 955 - 9033 - 01 - 8

த பெர்ணாந்து அழுத்தகம்
95, விவேகானந்தா மேடு,
கொழும்பு-13.

பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் நிலையம்,
தூய தோமா ஆலயம்.

UNIVERSITY CHRISTIAN STUDENTS CENTRE
ST. THOMAS CHURCH.

கீர்த்தன கீத சங்கிரகம்

உவெஸ்லி பிரசுரம் கொழும்பு.
Colombo
WESLEY PRESS
1988

FOREWORD

In this reprint, which as the previous one, was edited by Rev. H. R. S. Jeyachandran, some errors and imperfections in the 1983 reprint have been removed as well as a few improvements in type faces effected. We are thankful to him, also to the Rev. S. J. Kathiresa pillai and the Rev. A. W. Jebanesan who assisted in seeing the book through the press and to the printers, The Fernando Printers for their part in the production.

March, 1988
Methodist Headquarters,
Colombo-3.

Rev. Harold A. Fernando
President of Conference,
Methodist Church, Sri Lanka,
Chairman, Wesley Press.

PREFACE

To the 1983 Edition

'Methodism was born in Song', so begins the Preface to the 1933 Edition of the Methodist Hymn Book. We, in Sri Lanka. can proudly claim that Methodism has continued to be nourished by spiritual Songs and Lyrics in keeping with the cultural milieu of our ancient land. Methodism came to our shores in 1814 and for its worship, during its early years, used translations of the Wesley Hymns. Most of the Tamil translations were done by the Rev. Dr. E. Hoole and the Rev. Dr. Peter Perceivall.

The first Tamil Methodist Hymn Book was published in 1881. It contained 1026 Hymns, and was made up of translations of almost all the Hymns in John Wesley's famous collection of 1780. The chief inspirer of this monumental work was the Rev. Dr. John Kilner. for many years Chairman of the North Ceylon District and at that time Secretary of the Wesleyan Missionary Society in London. In succeeding years, it became clear, that most of the translations needed revision and original compositions in the Tamil Language had to find a place in our Hymn Book used in public worship.

In 1901, during the Chairmanship of the Rev. G, J. Trimmer, a Hymn book with only 400 Hymns and a collection of Lyrics was published. The Editor and reviser of the 1881 collection was the Rev. D. T. Niles. Froms 1901, the use of Tamil Lyrics increased so that it was found necessary to undertake a publication of a large. Lyric book with a shortened Hymn book. This was done in 1925 during the Chairmanship of the Rev. A. Lockwood, under the Editorship of the Rev. E. T. Selby, assisted by the Rev. R A. Winslow and Mr. W. D. Niles.

But soon another change took place. There came to be used in public and private worship, a large number of 'Thevarams' and also in increasing measure, translations of songs from 'Sacred Songs and Solos'. Since many of thess songs had choruses, they became popular with the Tamil people. In 1937, during the Chairmanship of the Rev. E. M. Weaver, a composite publication containing both hymns and lyrics, in which were included many Thevarams together with a fair number of translations of songs from Sacred Songs and Solos, was made. The Editors of this book were the Rev. V. R. Samuel and The Rev. R. V, Thambipillai.

In the year 1957, during the Chairmanship of the Rev. James S. Mather, it was once again found necessary to revise and issue a book, using especially Lyrical com positions of Sri Lankan Tamil Christians. The Rev. Dr D. T. Niles was Editor of this book, assisted by a committee of which the Rev. S. B. Saravanamuttu was convenor. In 1974 during the Presidentship of the Rev Denzil de Silva, it was found that there was need to make available to the Tamil Church a Hymn and Lyric book for use without delay, because the 1957 edition was out of print. A book was issued in 1975, with the

Rev. S. M. Jacob and the Rev. Paul Benjamin as Editors. In this collection, many of the Hymns and Lyrics not often sung were omitted and a supplement of Lyrics (known as Paamalai) that had been popularised by the Ashram and the Back to the Bible Broadcast, were issued

The present book is a natural development of this history. It became essential to review all the Lyrics in use so that a selection could be made of those which had stood the test of time. The Conference of 1982 under the Presidentship of the Rev. Soma. K. Perera, appointed a committee with the Rev. S. M. Jacob, Secretary of Conference as Chairman and the Rev. H. R S. Jeyachandran, Chairman of the North and East District Synod as secretary and convenor. The members of the committee were the Revds, S. M. Jacob, H. R. S Jeyachandran, S. S. Karunairaj, J. Vivekanathan, P. J. Anandarajah, S. J. Kathiresapillai, V. J. Seevaratnam, Messrs: K. S. Arulrajah, Joseph Chandrasegaram: Mesdames: Joyce Jacob, S. Anandanayagam, C. V. Jeyanathan: Misses: J. Kanagaratnam and Roshini Rajadurai. The present book conld be said to be the corporate effort of the entire committee, for the committee met several times and every member of the committee helped in selecting the Lyrics and Hymns. However, the bulk of the Editorial work was done by the Rev, H. R. S. Jeyachandran to whom we are grateful. We are also grateful to the St. Joseph's Catholic Press of Jaffna who have undertaken the printing work of the present book. This is the first book published by the newly constituted Wesley Press Board.

A constant aim in the composition and arrangement of this book has been, to put into the hands of the Tamil people, a book that could be used for private devotions and public worship. An attempt has been made in

the selection of Lyrics to include as many as possible, those with classical carnatic tunes. and also to balance it with Tamil translations of popular Hymns, Thevarams, kootu Piraththanais, Viruththam and Venpas, and a number of Lyrics with modern tunes more popular with young people.

It is our prayer and hope that this book will serve well for at least a generation to-come enriching the worship of the Tamil Church in Sri Lanka.

July 1983
Methodist Head Quarters
Colombo-3.

Rex. Somasiri. K. Perera
President of Conference
Methodist Church Sri Lanka.

முன்னுரை

அருட்திரு எச். ஆர். எஸ். ஜெயச்சந்திரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட 1983-ம் ஆண்டுப் பதிப்பில் காணப்பட்ட சில குறைபாடுகள், இந்த மறுபதிப்பில் அகற்றப்பட்டுள்ளன. அத்தோடு அச்சுக்கோப்பிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. நாம் இதன் ஆசிரியருக்கு நன்றி கூறுவதோடு இந்த மறுபதிப்பு அச்சு அழுத்தகம் பெறும் வேளையில், எழுத்துப் பிழை திருத்தங்கள் செய்தும், பக்கம் பக்கமாக மிக அவதானத்தோடு பார்த்தும் உதவியளித்த அருட்திரு. எஸ். ஜே. கதிரேசபிள்ளை அவர்கட்கும், அருட்திரு ஏ. டபிள்யு. ஜெபநேசன் அவர்கட்கும் எமது நன்றியை நவில்கின்றோம். இந்த மறுபதிப்பை அச்சு அழுத்தம் செய்தும், புத்தக உருவாக்கியும் உதவிய தபோர்ணந்து அச்சு அழுத்தகத்தாருக்கும் எம் நன்றி உரித்தாகுக.

பங்குனி 1988
மெதடிஸ்த தலைமையகம்,
கொழும்பு-3

அருட்திரு. ஹரல்ட். ஏ. பெர்ணந்து
மகாசங்கத் தலைவர்
இலங்கை மெதடிஸ்த திருச்சபை.
தலைவர் - வெஸ்லி அச்சகம்.

முகவுரை

'மெதடிஸ்தவம் பாட்டிலே தோன்றியது' என்ற சொற்றொடரோடு 1933ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட மெதடிஸ்த கீதப் புத்தகத்தின் முகவுரை ஆரம்பமாகிறது. இலங்கைவாழ் மெதடிஸ்த கிறிஸ்தவர்களும், எமது நாட்டின் கலாசார பாரம்பரியத்திற்கமைய ஆன்மீக கீர்த்தனைகளால் போஷிக்கப்பட்டு வருகின்றோம் என பெருமையோடு சொல்லிக்கொள்ளலாம். மெதடிஸ்த கிறிஸ்தவ திருச்சபை 1814-ஆம் ஆண்டு எமது நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்ப வளர்ச்சிக்காலத்தில் இலங்கை மெதடிஸ்த தமிழ் திருச்சபையினர் கனம். கலாநிதி. ஹூல் அவர்களாலும், கனம். கலாநிதி. பீற்றர் பெர்சிவல் அவர்களாலும் உவெஸ்லி ஐயரின் கீதங்களிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட பாடல்களையே பரிசுத்த வழிபாடுகளில் உபயோகம் செய்தனர்.

தமிழில், முதல் மெதடிஸ்த கீதப் புத்தகம் 1881ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டது. அதில் அடங்கிய 1026 பாடல்களுள் ஜோன் உவெஸ்லி 1780ஆம் ஆண்டு சேர்த்துத்தந்த எல்லாப் பாடல்களும் உள்ளன. வடஇலங்கை மாகாண தலைவராகவும், லண்டன் உவெஸ்லி மிஷனரி சங்கச் செயலாளராகவும் அப்போது கடமையாற்றிய கனம். கலாநிதி. ஜோன் கில்னர் அவர்களே 1881ஆம் ஆண்டு கீதப்புத்தகத்தின் ஊக்க காரணகர்த்தாவாக இருந்தனர். காலப்போக்கில், இந்தக் கீதப்புத்தகத்தின் பெரும்பாலான கீதங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும் எனவும், தமிழ் மொழியிலேயே இயற்றப்பட்ட பாடல்கள் பொது வழிபாட்டில் உபயோகிக்கப்படல் வேண்டும் எனவும் பொதுவான அபிப்பிராயம் தோன்றியது.

இதற்கமைய, 1901ஆம் ஆண்டில் கனம். ஜி. ஜே. ட்றிம்மர் தலைமைக்காலத்தில் 400 கீதங்கள் அடங்கிய ஒரு திருத்திய கீதப் புத்தகமும், கீர்த்தனைகளை மாத்திரமே கொண்ட பிறிதோர் கீர்த்தனைப் புத்தகமும் வெளியிடப்பட்டன. 1881ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கீதப்புத்தகத்தை திருத்தியும், புதுப்பித்தும் இவ் வெளியீடுகளுக்கு பொறுப்பாயிருந்தவர் கனம். டீ. பி. நயில்ஸ் ஆவார்கள். 1901ஆம் ஆண்டு தொடக்கம் கீர்த்தனைகளின் உபயோகம் அதிகரித்தமையால், கீர்த்தனைகளை அதிகம் கொண்டதும், கீதங்களை குறையக்கொண்டதுமான ஒரு புதிய வெளியீட்டின் அவசியம் ஏற்பட்டது. இதற்கமைய, கனம். ஏ. லொக்வுட் அவர்களுடைய தலைமைக்காலத்தில், கனம். ஈ. ரி. செல்பி, கனம். ஆர். ஏ. உவின்ஸ்லோ, திரு. டபிள்யூ. டி. நயில்ஸ் ஆகியோரின் உழைப்பால், இத்தேவை 1925ஆம் ஆண்டில் நிறைவேறியது.

விரைவில், இன்னுமொரு மாற்றம் ஏற்பட்டது. பொது வழிபாட்டிலும், தனி வழிபாட்டிலும் கணிசமான அளவுக்கு தேவாரங்கள் உபயோகம் செய்யப்பட்ட படியினாலும்; 'ஞான கீதங்களும் பாட்டுக்களும் என்ற ஆங்கிலப்பாட்டுப் புத்தகத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட பாட்டுக்கள்' குறிப்பாக அவற்றின் பல்லவிகள் அதிகமான தமிழ் கிறிஸ்தவர்களினால் விரும்பப்பட்ட படியினாலும் இம்மாற்றம் ஏற்பட்டது. எனவே, 1937ஆம் ஆண்டு கனம். ஈ. எம். வீவர் அவர்களுடைய தலைமைக்காலத்தில், அநேக

தேவாரங்களும், 'ஞான கீதங்களும் பாட்டுக்களும்' என்ற நூலி லிருந்து மொழிபெயர்க்கப்பட்ட பல கீதங்களும் அடங்கிய ஒரு புதிய பாட்டுப்புத்தகம் வெளியிடப்பட்டது. இப்புதிய பாட்டுப் புத்தகத்தின் தொகுப்பாசிரியர்களாக கனம். வி. ஆர். சாமுவேல், கனம். ஆர். வி. தம்பிப்பிள்ளை ஆகியோர் கடமையாற்றினர்.

1957ஆம் ஆண்டில், கனம். ஜேம்ஸ், எஸ். மேதர் அவர் களுடைய தலைமைக்காலத்தில்; கனம். எஸ். பி. சரவணமுத்து அவர்களைச் செயலாளராகவும், கனம். டி. ரி. நயில்ஸ் அவர்களை பிரதம ஆசிரியராகவும் கொண்டு; இலங்கைத் தமிழ்க் கிறிஸ்தவர் களின் ஆக்கங்களாகிய கீர்த்தனைகள்/தேவாரங்கள், இந்திய தமிழ்க் கிறிஸ்தவர்களின் கீர்த்தனைகள்/தேவாரங்கள், ஞானப் பாட்டுக்கள், பல்லவியுள்ள பாட்டுக்கள் ஆகியவற்றை அடக்கிய 'கீர்த்தன கீத சங்கிரகம்' வெளியிடப்பட்டது. இவ் வெளியீட்டுப் பிரதிகள் கைவசம் இல்லாத பிரதான காரணத்தால், இதன் மறு பதிப்பு கனம். டென்சில். டி. சில்வா அவர்களுடைய மகாசங் கத் தலைமைக் காலத்தில், கனம். எஸ். எம். ஜேக்கப் கனம். போல் பெஞ்சமின் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு 1975ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த மறுபதிப்பில் பொது வான உபயோகத்தில் இல்லாத பாட்டுக்கள் தவிர்க்கப்பட்டும் ஆச்சிரமம், சத்திய வசனம் ஆகியோரால் பிரபலமாக்கப்பட்ட சில பாட்டுக்கள் அநுபந்தமாக 'பாமாலை' என்ற பெயரோடு சேர்க்கப்பட்டும் உள்ளன.

1983ஆம் ஆண்டு புதிய வெளியீடான 'கீர்த்தன கீத சங்கிர கம்' மேற்கூறிய சரித்திரத்தின் இயற்கையான பிறப்பேயாகும். இதற்கென மகாசங்கத் தலைவர் கனம். சோமா. கே. பெரேரா அவர்களுடைய தலைமையின்கீழ் 1982ஆம் ஆண்டு மகாசங்கம் மகாசங்கச் செயலாளர் கனம். எஸ். எம். ஜேக்கப் அவர்களைத் தலைவராகவும், வடக்கு—கிழக்கு சபாசங்கத்தலைவர் கனம். எச். ஆர். எஸ். ஜெயச்சந்திரன் அவர்களை செயலாளராகவும் கொண்ட புதிய கீர்த்தன கீத சங்கிரகப்' புத்தகக் குழுவொன்றினை நியமித் தது. இக்குழுவில் கனம். எஸ். எம். ஜேக்கப், கனம். எச். ஆர். எஸ். ஜெயச்சந்திரன், கனம். எஸ். எஸ். கருணைராஜ் கனம்.

ஜே. விவேகானந்தன், கனம். பி. ஜே. ஆனந்தராசா, கனம். எஸ். ஜே. கதிரேசபிள்ளை, கனம். வி. ஜே. சிவரெத்தினம்; திருவாளர்கள்: கே. எஸ். அருள்ராஜா, ஜோசப் சந்திரசேகரம்; திருமதிகள்: ஜொய்ஸ் ஜேக்கப், எஸ். ஆனந்தநாயகம், சி. வி. ஜெயநாதன்; செல்விகள்: ஜே. கனகரெத்தினம், ரோஷினி ராஜதுரை ஆகியோர் அங்கம் வகித்தனர்; இக்குழுவினர் பல தடவைகள் கூடி பாட்டுக்களின் தெரிவுகளைச் செய்தனர். வேலைப்பழுவின் பெரும்பாகத்தை கனம். எச். ஆர். எஸ். ஜெயச்சந்திரன் அவர்கள் பொறுப்பேற்றிருந்தாலும், இப் புது கீர்த்தன கீத சங்கிரகம், மேற்கூறிய குழுவினரின் கூட்டு முயற்சியினால் உருவானதேயாகும்.

தமிழ் மெதடிஸ்த கிறிஸ்தவர்கள், தம் பொதுவான கூட்டு வணக்க வழிபாடுகளிலும், தனிப்பட்ட வணக்கங்களிலும் ஆன்மீக பயன்பெறவேண்டும் என்பதே இப்புதிய பாட்டுப்புத்தகத்தின் நோக்கமாகும். காலத்தினால் அழிவுறாமல் நிலை நின்ற கர்நாடகை இசை/தாளத்திற்கமைந்த கீர்த்தனைகளும், மொழியாக்கம் செய்யப்பட்ட அருமையான கீதங்களும், தேவாரங்கள்/கூட்டுப் பிரார்த்தனைகளும், வெண்பா/விருத்தங்களும், எல்லோரும் விரும்பும் மெல்லிசைப் பாட்டுக்களுமாக 511 பாட்டுக்கள் இப்புதிய புத்தகத்தில் அச்சாயிருக்கின்றன. எமது மகாசங்கத்தினால் புதிதாக அமைக்கப்பட்ட 'உவெஸ்லி பிரசுரக்குழு'வின் முதல் வெளியீடாக இப்புத்தகம் அமைகின்றது. இவ்வெளியீட்டை அச்சிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் யாழ்ப்பாணம் புனித யோசப் கத்தோலிக்க அச்சகத்தாருக்கு எம் நன்றி உரித்தாகுக.

இப்புத்தகத்திலுள்ள பாடல்கள் மெதடிஸ்த தமிழ் கிறிஸ்தவ சந்ததியினரின் வணக்க வழிபாட்டை வளம்படுத்தி, அவர்தம் ஆத்மீக வாழ்வைப் பெலப்படுத்தும் என்பதே எமது நம்பிக்கையும் ஜெபமுமாகும்.

ஜூலை 1983
மெதடிஸ்த தலைமை அலுவலகம்
கொழும்பு-3.

கனம்: சோமசிறி. கே. பெரேரா
மகாசங்கத்தலைவர்
இலங்கை மெதடிஸ்த திருச்சபை

பொருள் அடக்கம்

முகவுரைகள்		I - VI
கீர்த்தன கீத சங்கிரகம்		
		பாடல் இல
கடவுள் வழிபாடு		
சபை கூடுதல், காலை-மாலை	...	01 — 23
துதி, ஸ்தோத்திரம்	...	24 — 44
மனந்திரும்புதல் பாவமன்னிப்பு	...	45 — 62
பரிந்து வேண்டுதல்	...	63 — 67
அர்ப்பணம்	...	68 — 81
வழிபாடு நிறைவு, மங்களம்	...	82 — 91
திரித்துவம், கடவுள் - தந்தை		
மகிமை	...	92 — 101
படைப்பு, பராமரிப்பு	...	102 — 106
அன்பு, அருள்	...	107 — 109
நீதி, நிறைவு	...	110 — 114
பொறுமை, தாங்குதல்	...	115 — 118
கடவுள், மைந்தன்		
நாமம், மகிமை	...	119 — 142
பிறப்பு	...	143 — 168
திருப்பணி	...	169 — 175
திருப்பாடு, மரணம்	...	176 — 204
உயிர்த்தெழுதல்	...	205 — 214
பரமேறுதல்	...	215 — 218
மகிமையின் வருகை	...	219 — 227
கடவுள், தூயஆவி		
வருகை	...	228 — 235
வழிகாட்டல்	...	236 — 241
வரங்கள், கனிகள்	...	242 — 248

திருச்சபை

ஐக்கியம் ... 249 — 255
ஞானஸ்நானம், பூரண அங்கத்துவம் ... 256 — 264
திருவிருந்து ... 265 — 273
திருமறை ... 274 — 286
திருப்பணி, சாட்சி ... 287 — 300

கிறிஸ்தவ வாழ்வு

ஜெபம் ... 301 — 317
விசுவாசம், மறுபிறப்பு ... 318 — 329
அன்பு, தெய்வசிநேகம் ... 330 — 342
சோதனை, துன்பம் ... 343 — 350
நம்பிக்கை, சமாதானம் ... 351 — 368
பரிசுத்தத்தை நாடுதல் ... 369 — 381
யாத்திரை, வழிநடத்துதல் ... 382 — 391
சேவை ... 392 — 408

மறுமை

அநித்திய வாழ்வு, மரணம் ... 409 — 415
நித்திய வாழ்வு, மோட்சம் ... 416 — 423
நியாயத் தீர்ப்பு ... 424 — 428

தினங்கள், தருணங்கள்

ஆலயப்பிரதிஸ்டை, ஆண்டுவிழா ... 429 — 435
குரு அபிஷேகம் ... 436 — 441
விவாகம் ... 442 — 449
விழிப்பிரவு, புதுவருடம், உடன்படிக்கை ... 450 — 466
தேசப்பணி ... 467 — 471

வேறு

தேவாரம் ... 472 — 483
கூட்டுப் பிரார்த்தனை ... 484 — 506
வெண்பா, விருத்தம் ... 507 — 511

பாட்டுக்களின் முதல் அடி அகராதி

கீர்த்தன கீத சங்கிரகம்

கடவுள் வழிபாடு

சபை கூடுதல், காலை - மாலை

01

சங்கராபரணம் ஏகதாளம்.

பல்லவி

அதிகாலையிலுமைத் தேடுவேன் முழுமனதாலே
தேவாசீர்வாதம்பெற நாடுவேன் செபதபத்தாலே.

அனுபல்லவி

இதுகாறும் காத்த தந்தை நீரே!
இனிமேலும் காத்தருள் செய்வீரே;
பதிவாக உம்மிலே நான் நிலைக்கவே
பத்திரமாய் எனை உத்தமனாக்கிடும், தேவே! - அதி

சரணங்கள்

1. போனராமுழுவதும் பாதுகாத்தருளின போதா! - எப்
போதும் எங்களுடனிருப்பதாய் உரைத்த நல்நாதா!
ஈனப்பாவிக்கேது துணைலோகில் உண்டு, பொற்பாதா?
எனக்கான ஈசனே! வானராசனே!
இந்தநாளிலும் ஒரு பங்கமில்லாமல் காத்திடு, நீதா! - அதி

2. பல சோதனைகளால் சூழ்ந்து நான் கலந்கிடும்போது - தப்
பாது நின்கிருபை தாங்கிடவேணும் அப்போது,
''விலகாது என் சமூகம்'' என்ற வாக்கில் தவறேது;
விசுவாசங் கொண்டு மெய்ப் பாசமூண்டிட
விக்கினம் யாவிலும் வெற்றிகாணுவேன் மலைவேது - அதி

3. நரர்யாவர்க்குமுற்ற நண்பனுய் நடந்திடவையே! - தீ
நாவின் பாவமற நன்மைகள் மொழிந்திடச்செய்யே!
பரலோக ஆவியை நல் மாரி போலெனில் பெய்யே!
புகழான நாதனே! வேதபோதனே,
பூரணமாய் உமை போற்றுவேன் தினம் தினம் மெய்யே! - அதி

— எஸ். பரமானந்தம்.

02

நாதநாமக்கிரியை. ரூபகதாளம்.

1. அந்திவேளையிவ் அமைதிநேரத்தில் அன்பேநின் வதனத்தொனி
பந்தமாய முகிலினூரிருள் பற்றியீந்தருள் செய்குவாய்.
இந்தநாட்பகலுன்னை நான் மறந்திருந்த பாதகமுண்டெனில்
தந்தருள் மன்னிப்பெந்தையே திருசாமியேசு - தயாபரா

2. இகல் கடந்த இறைவனே யுனதின்பமார்பினில் இரவெலாம்
மகவுநானயர்ந்துறங்கும் வேளையென்மனமெலாம் முனில்நிற்கவும்
பகவனே பரிசுத்தமானவை பார்த்தகங்களித்தோங்கவும்
சகலமான நல்லீவு மீந்தருள் சாமி யேசு - தயாபரா.

3. நோயின் வாயகப்பட்டவர்களும் நொந்தகங் குழைந்தோர்களும்
பேயின் மாயவலைக்குளே யகப்பட்டு நைந்துழல் வோர்களும்
தீயுந் தீமையிலாழ்ந்துதிடாது நின் திவ்விய வல்லமை தந்தருள்
சாயும் வேளையில் நீயல்லோசரண் சாமி யேசு - தயாபரா

4. மரண வாய்ப்பட்டுழன்று சிந்தைமடிந்து மாழுமனத்தருள்
மரணமானவர்க்காக நொந்து மறுகிவாடும் மினத்தரும்
கிருபைநாதனின் கிளர்திருக்கரக் கிரியையால் தேற்றி ஆற்றுவாய்
சரணம் - சநின்ரண் யேசுநாயகா சரணம் நின்சரண் ஈகுவாய்.

— ஜீ. ஞானானந்தன்.

03

சிறிரஞ்சனி. சாப்புதாளம்.

பிலகரி. அடதாளசாப்பு.

பல்லவி.

இன்றைத்தினம் உன்னருள் ஈகுவாய் யேசுநாதையா
இன்றைத்தினம் உன்னருள் ஈகுவாய்.

அனுபல்லவி.

அன்றுன் உதிரம் நரர்க்கென்று சிந்தி மீட்டெனை
வெற்றியுடன் ரட்சித்த நன்றிபோலே யெனக்கு - இன்றைத்

சரணங்கள்.

1. சேபனராவிலெனைக் கண் பார்த்தாய் - பலவிதமாம்
பொல்லா மோசங்களில் தற்காத்தாய்;
ஈனச் சாத்தான் எனையே இடர்க்குள்ள கப்படுத்தி
ஊனமெனக்குச் செய்யாதுருக்கமுடன் காத்தாய் - இன்றைத்

2. கையிட்டுக் கொள்ளுமென்றன் வேலை - யாவிலுமுன்றன்
கடைகண்ணோக்கி அவற்றின்மேலே
ஐயா! நின் ஆசிர்வாதம் அருளி என் மனோவாக்கு
மெய்யால் நின் மகிமையே விளங்கும்படி ஒழுக - இன்றைத்

3. பாவசோதனைகளை வென்று - பேய் உலகுடல்
பண்ணும் போர்களுக் கெதிர் நின்று
சீவபாதையில் இன்றும் திடனுய் முன்னிட்டுச்செல்ல
தேவ சர்வாயுதத்தைச் சிறக்க எனைக்களித்து - இன்றைத்

— பாளையங்கோட்டை பாடல்

04

குறிஞ்சி ஆதி

(''உடைந்தபாத்திரம்'' என்றதின் மெட்டு)

1. இருளாங்காலத் தெமைக்காத்து
இன்பக் காலை எமக்கீந்தாய்
அருணோதயனே! அற்புதனே!
அருள் செய் பயன் அளிப்பாயே!
அருணோதயத்தி லுனைக்காண
அருளே புரிந்தாய் அவ்விதமே
கருணாகரனே, உனைக்கானக்
கழறுந் துதியுனக் கொருகோடி - சுவாமி ஒரு கோடி.

2. செய்யுந் தொழில்களனைத்தினி லும்
சிந்தை நினைக்கும் நினைவதிலும்
உய்யுமெல்லா ஊழியத்தும்
உன்றன் பாதகருணையது,
மெய்வாய்கண்கள் செவியதுவும்
வெருளாவிதமா யொருநெறியில்
கையர்கனியாய் நினைத்தடியேன்
கழறுந்துதியுனக் கொருகோடி – சுவாமி ஒருகோடி

3. எல்லாம் வல்லபரம் பொருளே
எதற்கும் துணையா யிருப்பவனே
சொல்லின் முடிவே சுகவழியே
தோன்றும் சகல ஜீவருக்கும்
நல்ல கருணை நீ புரிந்து
நாளும் அருள் செய்திடவேண்டி
கல்லாதடியேன் கனிந்துருகிக்
கழறுந்தியுனக் கொருகோடி - சுவாமி ஒருகோடி.

— எஸ். எஸ். சோமசுந்தரம்.

05

பல்லவி.

ஈசன் பாதம் தொழுவோம்
நேசமாய் என்றைக்கும் நாம்

அனுபல்லவி.

நீசராமெமை பாசமாய் சேர்த்துமே
ஆசிகள் பலவும் பொழிந்தனரே - என்றும்

சரணங்கள்

1. அதிசயமாய் நம்மை அன்பாலரவணைத்து
ஆண்டுகள் தோறும் இன்பாய்
துன்பங்கள் தொல்லைகள் யாவும் அணுகாமல்
பத்திரமாகவே காத்தனரே என்றும் - ஈசன்

2. நம்பினோர்க் கென்நாளுமே குன்றிடாத வல்லமை
நாதனளிப்பார் அன்பாய்
நிச்சயமாகவே அச்சயன் பாதமே
அண்டினோரை ஆதரித்தனரே என்றும் - ஈசன்

3. சத்தியமும் வழியும் நித்தியஜீவனையும்
நிமலனே அளிப்பாய்
பக்தியுடன் நாமும் அத்தனின் பாதமே
பற்றிப்பிடித்திட சித்தங் கொள்வார் என்றும் - ஈசன்

— மலர் இரத்தினராசா.

06

Abide with me (M. H. B. 948)
10, 10, 10, 10

1. என்னோடிரும் மாலை விரைந்திடும்
இருட்டில் கர்த்தரே என்னோடிரும்
மற்றும் துணைகள் யாவும் நீங்கினும்
சமீபதுணையே என்னோடிரும்.

2. நம் சீவநாட்கள் ஓடிச் செல்லுமே
பூமியின் புகழ்யாவும் மங்குமே
எல்லாம் மாறி அழிந்துபோய்விடும்
மாறுத கர்த்தரே என்னேடிரும்.

3. உம் சமூகத்தை நாடித்தேடுவேன்
உம் அருளால் சாத்தானைச் செயிப்பேன்
உம்மைப்போல் யார் என்னைத் தாங்கக்கூடும்
வாழ்வு தாழ்வுகளில் என்னேடிரும்.

4. உம் துணையால் மாற்றுரை வெல்லுவேன்
நோயைத்தாங்கி துக்கத்தில் ஆறுவேன்
நான் மரிக்கும்போது என்னைத் தேற்றும்.
பின்பு விண்ணிற் சேர்க்க என்னேடிரும்

5. சாவு என் கண்களை மூடும்போது
மோட்சத்தைக் காண்பியும் ஒளிதந்து
விண் சோதிதோன்ற என் இருள் நீங்கும்
என் சீவன் சாவிலும் என்னேடிரும்.

— ஹென்றி பிருன்சிஸ் லேற்
யோன் கில்னர்.

07

பூபாளம் சாபுதாளம்

கண்ணிகள்

கதிரவன் எழுகின்ற காலையில் இறைவனைத்
துதி செய்ய, மனமே, நீ - எழுந்திராய்

வரண்டு தண்ணீரற்ற வனம் இந்த புவிதனில்
திரண்ட தயை தேவை - நாடுவேன்

கடவுளின் வல்லமை கன மகிமை காணும்
இடமதில் செல்வதே - என் இஷ்டம்

ஜீவனைப் பார்க்கிலும் தேவனின் காதலே
ஆவலாய் நாடி நான் - போற்றுவேன்

ஆயுள் பரியந்தம் ஆண்டவர் நாமத்தை
நேயமாய்ப் பாடி நான் உயர்த்துவேன்

மெத்தையில் ராச்சாமம் நித்திரை கொள்கையில்
கர்த்தரின் செயல்களே சிந்திப்பேன்

அல்லும் பகலும் நான் அவர் செட்டைகளின் கீழே
தொல்லைக்கு நீஅகியே ஒதுங்குவேன்

— ரி. யோசேப்

08

மோகனம் **சாபுதாளம்**

பல்லவி

காலமே தேவனைத் தேடு - ஜீவ
காருண்யர் பாதம் பணிந்து மன்றாடு

அனுபல்லவி

சிலமுடன் பாதம் பாடிக் கொண்டாடு
சீரான நித்திய ஜீவனை நாடு - காலமே

சரணங்கள்

1 மன்னுயிர்க்காய் மரித்தாரே - மனு
மைந்தனென நாமம் வைத்திருந்தாரே
உன் சிருட்டிகரை நீ உதயத்திலெண்ணு
உள்ளங் கனிந்து தனி ஜெபம் பண்ணு - காலமே

2. பாவச் சோதனைகளை வெல்லு - கெட்ட
பாருடல் பேயுடன் போருக்கு - நில்லு
ஜீவ கிரீடஞ் சிரத்திலணியச்
சிந்தனை செய் மனுவேலனைப் பணிய - காலமே

3. சிறுவர்கள் என்னிடஞ் சேரத் - தடை
செய்யா திருங்களென்றூர் மனதார
பரலோக செல்வ மவர்க்குப் பலிக்கும்
பாக்கியமெல்லாம் பரந்து ஜொலிக்கும் - காலமே

4 வேலையுமக்குக் கை கூட சத்ய
வேதன் திருபை வரத்தை மன்றூட
காலையில் தேடுவோர் எனைக் கண்டடைவாரே
கண் விழித்து ஜெபம் செய்யுமென்றூரே - காலமே

—சி. பி. ஞானமணி

09

The day thou gavest, Lord is ended (M H. B. 667)
9, 8, 9, 8

1. காலையுதித்த நாட்கடந்து - காரிருள் தோன்று தையனே
மாலையும் நின்றன் மார்பே யெங்கள் - மஞ்சமென் றஞ்சலிப்
போமே

2. அல்லும் பகலும் அநுபூர்வம் - அனுசரிக்கும் பூமி போல்
தொல்லுலகெங்கும் தூயசபை - துத்தியம் பாடி மகிழும்

3. ஆதித்தன் நாடு நாடாயோடி - அல்லாந்து ஜோதி அளிக்க
வேதிகை நாளும் விண்ணவர் பேர் - விநய பூசை விளங்கும்

4. நாங்கள் துயிலும் நாழிகையில் - நத்தம் முடிந்து நாடோறும்
பாங்காகப் பாடிப் பரமனை - பல்வேறு தேசம் போற்றிடும்.

5. ஆமேன்! ஆண்டவா நின்றன் ராஜ்யம் - அழிவற்றேங்கு
மென்றுமே
பூமகள் பொங்கி நின்னைப் போற்றிப் - பொலிவு தோன்றப்
புகழ்வாளே.

—ஏ. எம். கே. குமாரசுவாமி.
ஜோன் எலர்ரன்

10

சங்கராபரணம் ஆதி தாளம்

கண்ணிகள்

1. சருவலோகாதிபா நமஸ்காரம்
சருவ சிருஷ்டிகனே நமஸ்காரம்
தரை கடல் உயர் வான் சகலமும் படைத்த
தயாபர பிதாவே நமஸ்காரம்

2. திரு அவதாரா நமஸ்காரம்
ஜெகத் திரட்சகனே நமஸ்காரம்
தரணியின் மனுடர் உயிர் அடைந்தோங்க
தருவினில் மாண்டோய் நமஸ்காரம்

3. பரிசுத்த ஆவி நமஸ்காரம்
பரம சற்குருவே நமஸ்காரம்
அரூபியாய் அடியார் அகத்தினில் வசிக்கும்
அரிய சித்தே சதா நமஸ்காரம்

4. முத்தொழிலோனே நமஸ்காரம்
மூன்றுமொன்றேனே நமஸ்காரம்
கர்த்தாதி கர்த்தா கருணை சமுத்திரா
நித்திய திரியேகா நமஸ்காரம்.

— எம். வேதமாணிக்கம்

11

மணிரங்கு திஸ்ரதாளம்

பல்லவி

தருணம் ஈதுன் காட்சி சால
அருள் அனுதியே — திவ்ய — சருவநீதியே

சரணங்கள்

1. கருணை ஆசன ப்ரதாப
சமுக சன்னிதா - மெய் - பரம உன்னதா - தரு

2. பரர் சுரர் நரர் பணிந்து போற்றும்
பரம நாயகா - நின் - பத்தர் தாயகா - தரு

3. உன்னதத்திருத் தென்னை ஆளும்
ஒரு பரம்பரா - நற் - கருணை அம்பரா - தரு

4. அரிய வல்வினை தீர்ப்பதற்குற
வான தட்சகா - ஓர் - அனுதிரட்சகா - தரு

5. அலகை நரகை அகற்றி முழுதும்
அடிமை கொண்டவா - என - தருமைகண்டவா - தரு

6. தினம் தினம் நரர்க் கிரங்கும் இரங்கும்
தேவ பாலனே - இம் - மானு வேலனே - தரு

— வேதநாயக சாத்திரியார்

12

உசேனி

ரூபக தாளம்

பல்லவி

தந்தானைத் துதிப்போமே - திருச்
சபையாரே, கவி - பாடிப்பாடி

அனுபல்லவி

விந்தையாய் நமக்கனந்தனந்தமான
விள்ளற்கரியதோர் நன்மை மிகமிகத் - தந்

சரணங்கள்

1. ஒய்யாரத்துச் சியோனே - நீயும்
மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து
ஐயனேசுக்குநின் கையைக் கூப்பித்துதி
செய்குவையே மகிழ் கொள்ளுவையே நாமும் - தந்

2. கண்ணுரைக் களித்தாயே – நன்மைக்
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து
எண்ணுக்கடங்காத எத்தனையோ - நன்மை
இன்னுமுன்மேற் சோணுமாரி போற் பெய்தமே - தந்

3. சுத்தாங்கத்து நற்சபையே – உனை
முற்ருய்க் கொள்ளவே அலைந்து திரிந்து
சத்துக் குலைந்துனைச் சத்தியாக்கத் தமின்
ரத்தத்தை சிந்தி எடுத்து உயிர் வரம் - தந்

4. தூரத்திரிந்த சியோனே - உனை
தூக்கியெடுத்துக் கரத்தினிலேந்தி
ஆரங்கள் பூட்டி யலங்கரித்து - உன்னை
அத்தன் மணவாட்டி யாக்கினது என்னே - தந்

5. சிங்காரக் கன்னிமாரே - உம்
அலங்காரக் கும்மி யடித்துப் படித்து
மங்காத உம் மணவாளன் யேசுதனை
வாழ்த்தி வாழ்த்தி ஏத்திப் பணிந்திடும் - தந்

— வி. மாதிலாமணி

13

Holy Holy Holy Lord God Almighty
(M. H. B 36) 11, 12, 12, 10

1. தூய, தூய, தூயர் வல்ல கர்த்தரே!
காலையில் நம் கீதம் உம்மண்டை ஏறுமே:
தூய, தூய, தூயர் திருபா வல்லரே.
காருண்ய தூய திரியேகரே.

2. தூய, தூய, தூயர் சுத்தர் போற்றுவார்
பொன்முடி பளிங்காளி சூழ வீசியே.
கேருபின், சேராபீன், தாழ்ந்து பணிவாரே.
மாரு நித்தியர் உம்மைப் போற்றியே.

3. தூய, தூய, தூயர், கார் மறைத்தும் உம்மை
பாவக் கண்கள் காணுதிருந்தும், உம் மாண்பை,
நீர் மாத்திரம் தூயர் வேறெருவர் இல்லை
உம் சக்தி நேசம், சுத்தம் நிற்குமே.

4. தூய, தூய, தூயர் வல்ல கர்த்தரே!
உம் கீர்த்திச் செய்கை, மண் விண் ஆழி காட்டுமே
தூய, தூய, தூயர் கிருபா வல்லரே!
காருண்ய தூய திரியேகரே!

— ஜோண்கில்னர்
— றெஜினோல்ட் ஹீபர்

14

பியாக் ஆதி தாளம்

பல்லவி

தொழுகிறேம் எங்கள் பிதாவே
பொழுதெல்லாம் ஆவி உண்மையுடனே

அனுபல்லவி

பரிசுத்த அலங்காரத்துடனே
தரிசிப்பதினால் சரணம் சரணம் – தொழு

சரணங்கள்

1. வெண்மையே பரிசுத்தமானவர்
உண்மையே உருவாகக் கொண்டவர்
என்னையே மீட்க் வந்தவர்
அன்னையே இதோ சரணம் சரணம் - தொழு

2. அடியார்களின் அஸ்திபாரம்
அறிவுக்கெட்டாத விஸ்தாரம்
கூடிவந்தெம் அலங்காரம்
கோடா கோடியாம் சரணம் சரணம் - தொழு

3. பார்த்திபனே கனஸ்தோத்திரம்
கீர்த்தனம் மங்களம் ஸ்தோத்திரம்
வாழ்க வாழ்க வாழ்க என்றும்
அல்லேலூயா ஆமென் ஆமென் - தொழு

— இரத்தினம் பரஞ்சோதி

15

கல்யாணி — ஆதிதாளம்

பல்லவி

தோத்திரம்! கிருபை கூர் ஐயா!
விழிபார் ஐயா! விழி பார்ஐயா!

சரணங்கள்

1. பாத்திரம் இலா எனை நேத்திரம் என உச்சிதமாக
காத்து வந்திடும், எனது கத்தாதி கத்தனே! - தோத்
2. இந்த நாள் அளவிலும் வந்ததுன்பம் யாவுமே
என்றனை விட்டகலவே இரங்கிய தேவனே ! தோத்
3. மனதிலும் வாக்கிலும் மட்டில்லாத பாவி நான்;
எனது தீதகற்றி ஆளும், ஏகாம்பர நாதனே - தோத்
4. போதனே, நீதனே, புனித சத்திய வேதனே,
கீதனே தாசர்துதி கேளும், யேசுநாதனே! - தோத்

— யே. அண்ணுவியார்

16

சங்கராபரணம் — ஆதி தாளம்

பல்லவி

தோத்திர பாத்திரனே, தேவா,
தோத்திரம் துதியுனக்கே!
நேத்திரம் போல் முழு ராத்திரியுங் காத்தாய்,
தோத்திரம் துதியுனக்கே!

சரணம்

1. சத்துரு பயங்களின்றி - நல்ல
நித்திரை செய்ய எம்மைப்
பத்திரமாய்ச் சீராட்டியுறக்கியே
சுற்றிலுங் கோட்டையானாய். - தோத்

2. இன்றைத் தினமதிலும் - தொழில்
எந்தெந்த வகைகளிலும்
உன் திருமறைப்படி ஒழுகிடவே எமக்(கு)
உதவியே காத்துக் கொள்வாய். - தோத்

— பி ஐ. ஜோண்.

17

Little Children Singing (M S H. 5)

6, 5, 6, 5

1. பாலர் பாடும் போது - தேவன் கேட்கிறார்
தம்மை வாழ்த்தும் போது - நன்றாய் மெச்சுவார்

2. பாலரின் ஜெபத்தை - ஏற்றுக் கொள்ளுவார்
மேலான பட்சத்தை - என்றும் காட்டுவார்

3. பாலரின் முகத்தை - உற்றுப் பாக்கிறார்
தமது சாயலை - அங்கே காண்கிறார்

4. பாலரின் இன்பத்தை - தேடிக் காக்கிறார்
நெஞ்சை வாட்டுந்துன்பை - மேலும் காட்டுவார்

5. பாலரின் பூரிப்பை - தேவன் ஏற்றுவார்
நெஞ்சை வாட்டுந்துன்பை - முற்றாய் மாற்றுவார்

6. பாலரே ஊக்கமாய் - தேவனை நம்பும்
எப்போதும் பூரிப்பாய் - கர்த்தரைப் போற்றும்.

— டீ. பீ நயில்ஸ்.

18

பிலாகம்சா ஏகதாளம்

1. பாலரே நடந்து வாருங்கள்
காலையில் எழுந்து கூடுங்கள்
சாலவே சீவன் சுகமும்

தந்த தேவனை மைந்தன் இயேசுவைக்
சந்தோஷத்துடன் போற்றிப் பாடுங்கள்

2. சிறு கண்கள் இரண்டு தந்தனர்
தேவன் செய்வதை நோக்கிப் பார்க்கவே
சிறு செவி இரண்டு தந்தனர்
தேவன் சொல்லைக் கேட்பதற்குமே

சிறப்புடனவர் பதத்தை நோக்கியே
திவ்விய வார்த்தையைக் கேட்டொழுகுங்கள்

3. சிறியகால் இரண்டு தந்தனர்
செல்லவே மோட்ச பாதையில்
சிறு கைகள் இரண்டு தந்தனர்
செய்யவே தேவ ஊழியம்

சீக்கிரம் அந்தப் பாதை சென்று மெய்த்
தேவனைத் தினம் சேவித் தேத்துங்கள்

4. நாவும் ஓர் மிடறுந் தந்தனர்
நன்மையைப் பேசிப் பாடவே
மாவிளம் இதயந் தந்தனர்
வால வயதில் அவரை நினைக்க

ஆதலால் நமதுட லிதயமும்
அவருக் காலய மாய்ப் படைப்போமே.

— ஜே. சி. ஸ்ரிக்னி.

19

Come let us join with one accord.
(M.B.O. 634) C.M.

1. வாரும் சந்நிதி முன்பாக ஆனந்தம் கொள்ளுவோம்
நம்கர்த்தர் உயிர்தெழுந்த நாளைக் கொண்டாடுவோம்

2. அருள் நிறைந்த இத்தினம் எழிலும் மேலாகும்
நித்த ஓய்வு நாளின் இன்பம் இந்த நாளில் தோன்றும்

3. நம் மீட்பர் இறங்கி வந்து நிழலை அகற்றும்
நாள் மட்டும் பாடித்துதித்து முன் செல்வோம் யாவரும்

4. நாம் இங்கிருக்கும் நாள் எல்லாம் சங்கீதம் பாடுவோம்
பின்பு நம் கர்த்தரால் உண்டாம் பேரின்பம் அடைவோம்

— ஜே வி. பென்யமின்.

20

சங்கராபரணம் ஆதிதாளம்

கண்ணிகள்

1. வாருமையா போதகரே வந்தெம்மிடம் தங்கியிரும்
சேருமையா பந்தியினில் சிறியவராம் எங்களுடன்

2. ஒளி மங்கி இருளாச்சே உத்தமரே வாருமையா
கழித்திரவு காத்திருப்போம் காதலரே கருணைசெய்வீர்

3. ஆதரையிலெம் ஆறுதலே அன்பருக்கு சதாஉறவே
பேதையர்க்குப் பேரறிவே பாதைமெய்ஜீவ சற்குருவே

4. நாமிருப்போம் நடுவிலென்றீர் நாயனுன் நாமம் நமஸ்கரிக்க
தாமதமேன் தயைபுரியத் தற்பரரே நலந்தருவீர்

5. உம்தன்மனை திருச்சபையை உலகமெங்கும் வளர்த்திடுவீர்
பந்தமறப் பரிகரித்தே பாக்யமளித் தாண்டருள்வீர்.

— பாகவதர் வேதநாயகம்.

21

தன்யாசி ஆதிதாளம்

பல்லவி

வினை சூழா திந்த இரவினில் காத்தாள்,
விமலா கிறிஸ்து நாதா.

அனுபல்லவி

கனகாபி சேகனே அவனியர்க் கொளிர், பிர
காசனே, பவ நாசனே சுவாமி -வினை

சரணங்கள்

1. சென்ற பகல் முழுதுமெனைக் கண் பார்த்தாய்:
செய் கரு மங்களில் கருணைகள் பூத்தாய்,
பொன்ரு தாத்ம சரீரம் பிழைக்க ஊண்பார்த்தாய்:
பொல்லாப் பேயின் மோசம் நின்றெனைக் காத்தாய் -வினை

2. சூரியன் அஸ்தமித் தோடிச் சென்ருனே!
சோதி நட்சத்திரங்கள் எழுந்தன வானே,
சேரும் விலங்கு பட்சி உறைபதி தானே
சென்றன: அடியேனும் பள்ளி கொள்வேனே - வினை

3. சீவன் தந்தெனை மீட்டோய், சிறியேன் உன்சொந்தம்:
செகத் தின்பங்கள் விழைத்து சேர்தல் நிர்ப்பந்தம்:
பாவியேன் தொழுதேன் நின்பாதார விந்தம்:
பட்சம் வைத்தாள்வையேல், அதுவே ஆனந்தம். - வினை

4. இன்றைப் பொழுதில் நான் செய் பாவங்கள் தீராய்
இடர்கள் துன்பங்கள் நீங்க எண்ணைக் கைசேராய்:
உன்றன் அடிமைக் கென்றும் உவந்தருள் கூராய்:
உயிரை எடுப்பையேல், உன் முத்தி தாராய். -வினை

— பாளையங்கோட்டைப் பாடல்.

22

மோகன கல்யாணி — சாப்புதாளம்

பல்லவி

ஓய்வுநாள் இது, மனமே - தேவனின்
உரையைத் தியானஞ் செய் கவனமே.

அனுபல்லவி

நேய தந்தையர் சேயர்க் குதவிய
நெறி இச் சுவிசேட வசனமே. -ஓய்வு

சரணங்கள்

1. சிவ சுக புத்திர செல்வம் தந்தவர்
சேவடி உனக் கபயமே:
மேவி அவர் திருபாசனத்தின் முன்
வேண்டிக்கொள், இதுசமயமே. - ஓய்வு

2. ஆறு நாளுனக் களித்தவர், - இதோப்
பாறி ஏழினில் களித்தவர்
கூறும் பூரண ஆசீர்வாதத்தைக்
குறித்துனே இதற்கழைக்கிறார். - ஓய்வு

3. ஆத்ம தேகம் நீ கடவுட்குப் படைப்பாற்ற
நற் சுப நாளிதே
சுத்தம் நாடுவோர் யாவரும் வந்து
துதி செய்யும் இத் தேவாலயம், - ஓய்வு

— பாளையங்கோட்டை பாடல்

23

Sun of My Soul, Thou Saviour Dear (M. H. B 942)
L. M.

1. எனதருமை மீட்பரே, என்நெஞ்சின் சூரியன் நீரே:
உம்மை எனக்கு மறைக்கும் – லௌகீக முகிலை நீக்கும்.

2. தூறல் பனிபோல் நித்திரை – மூடும்போது என் கண்களை:
என் மீட்பர் மார்பில் எப்போதும் -சாயும் விருப்பம் தந்திடும்

3. பகல் முற்றுய் என்னேடிரும் -அப்போ என் சீவன் நிலைக்கும்
இருள் நேரம் என்னேடிரும் -அப்போ சாவின் அச்சம் நீங்கும்

4. உம் அழைப்பைத் தள்ளிவிட்டு - ஓர்பாவி அலைந்தால் இன்று
அவன் உறங்கு முன்னமே - மன்னிப்பைப் பெறச் செய்யும்

5. நோயுற்றோரை ஆதரியும் - வறியோரை விசாரியும்,
பாலகர் தூங்கும் வண்ணமே - துக்கிப்போர் துயிலச்
செய்யுமே

6. விழிக்கையில் நம்மோடிரும் - நாள்முற்றுய் நம்மை நடத்தும்
ஈற்றில் விண்சேரு மட்டாக - அன்பில் முழுக்கச் செய்வீராக..

— ஜோண் கெபிள்

— ஜோண் கில்னர்

துதி, ஸ்தோத்திரம்

24

ஆரபி ஆதிதாளம்

பல்லவி

ஆத்துமா கர்த்தரைத் துதிக்கின்றதே, - என்தன்
ஆவியும் அவரில் களிக்கின்றதே, - இதோ

அனுபல்லவி

நேர்த்தியாய்ப் பாடுவேன் நிதங்கனிந்தே என்தன்
பார்த்திபருடை பதந் தினம் பணிந்தேஇதோ - ஆத்

சரணங்கள்

1. அடிமையின் தாழ்மையைப் பார்த்தாரே - என்னை
அனைவரும் பாக்கிய மென்பாரே
முடிவில்லா மகிமை செய்தாரே - பலம்
உடையவர் பரிசுத்தர் என்பாரே - இதோ

2. பயப்படும் பக்தருக் கிரங்குகிறார் - நரர்
பார்த்திடப் பெருஞ்செயல் புரிகின்றார்
உயர்ந்திடு நரர்களைச் சிதறடிப்பார் - தம்மை
உகந்தவர் தாழ்ந்திடில் உயர்த்துகின்றார் - இதோ

3. முற்பிதாக் களுக்கவர் கொடுத்த - சொல்லால்
முனியாபி ராமுட ஜனமதன் பால்
நட்புடன் நினைவொடு நல்லிசரேல் - அவன்
நலம்பெற ஆதரித் தார் மறவேல் - இதோ.

— சி. டி. ஞானமணி

25

ஆனந்தபைரவி ஆதிதாளம்

பல்லவி

ஆத்துமமே என் முழு உள்ளமே - உன்
ஆண்டவரைத் தொழுதேத்து - இந்நாள்வரை
அன்பு வைத் தாதரித்த – உன்
ஆண்டவரைத் தொழு தேத்து

சரணங்கள்

1. போற்றிடும் வானோர் பூதலத் துள்ளோர்
சாற்றுதற் கரிய தன்மையுள்ள - ஆத்

2. தலைமுறை தலைமுறை தாங்கும் விநோத
உலக முன் தோன்றி ஒழியாத - ஆத்

3. தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொறுத் தருளும் மேலான . ஆத்

4. வாதை நோய் துன்பம் மாற்றி அனந்த
ஓதரும் தயை செய்துயிர் தந்த - ஆத்

5. உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்
முற்றும் கிருபையினுல் முடிசூட்டும் - ஆத்

6. துதி மிகுந்தேற ஸ்தோத்திரி தினமே
இதயமே உள்ளமே என் மனமே - ஆத்

— ரைற்றர் தைரியம்

26

பியாக் ரூபகதாளம்

பல்லவி

எந்நாளுமே துதிப்பாய் - என்னுத்துமாவே – நீ
எந்நாளுமே துதிப்பாய்

அனுபல்லவி

இந்நாள் வரையிலே உன்னதனுர் செய்த
எண்ணில்லா நன்மைகள் யாவும் மறவாது -- எந்நா

சரணங்கள்

1. பாவங்கள் எத்தனையோ நினையா திருந்தருள்
பாவங்கள் எத்தனையோ
பாழான நோயை அகற்றிக் குணமாக்கிப்
பாரினில் வைத்த மா தயவை நினைத்து - எந்நா

2. எத்தனையோ கிருபை - உன்னுயிர்க்குச் செய்தாரே
எத்தனையோ கிருபை
நித்தமுனை முடி சூட்டினது மன்றி
செத்திடாதபடி ஜீவனை மீட்டதால் – எந்நா

3. நன்மையாலுன் வாயை – நிறைத்தாரே பூர்த்தியாய்
நன்மையாலுன் வாயை
உன்வயது கழுகைப் போல் பலங்கொண்டு
இன்னும் இளமை போலாக்வே செய்ததால் - எந்நா

4. பூமிக்கும் வானத்திற்கும் உள்ள தூரம் போலவே
பூமிக்கும் வானத்திற்கும்
சாமி பயமுள்ளவர் மேல் அவர் அருள்
சாலவும் தங்குமே சத்திய மேயிது - எந்நா

5. மன்னிப்பு மாட்சிமையாம் - மா தேவனருளும்
மன்னிப்பு மாட்சிமையாம்
எண்ணுவாயோ கிழக்கும் மேற்கும் தூரமே
மண்ணில் உன் பாவம் அகன்ற தத்தூரமே - எந்நா

6 தந்தை தன் பிள்ளைகட்கு - தயவோடிரங்காமே
தந்தை தன் பிள்ளைகட்கு
எந்தவேளை யுமவரோடு நீ தங்கிஞல்
சொந்தம் பாராட்டியே தூக்கிச் சுமப்பாரே - எந்நா

— எஸ். பரமானந்தம்

27

அம்சத்வனி ஆதிதாளம்

பல்லவி

எத்தனை நாவால் துதிப்பேன் - எந்தன்
கர்த்தாவுன் கருணையைப் பாடிப்புகழ்ந்து - எத்தனை

அனுபல்லவி

நினைக்க நினைக்க எந்தன் நெஞ்சமெல்லா முருகும்
நின்னை சொல் மாலையால் சூட்டி மகிழும் - எத்தனை

சரணங்கள்

1. நம்பினேரல்லோ அறிவார் - எந்தன்
தம்பிரானே உந்தன் கெம்பீர குணம்
அம்பரா உன்அன்பின் அதிசய நடத்துதல்
சம்பூரண சவரட்சணை செல்வம் - எத்தனை

2. பிரார்த்தனை கேட்கும் பெருமானே - இந்த
நரர் பல (பவ) வீனம் பாராதருள் கோனே
சரணென்றுன் செம்பாத மலரடி சேர்ந்தோர்
கரத்தைப் பிடித்துக் கவலை தீர்த்தோனே! : எத்தனை

3. துணிவாய் என்நெஞ்சே தீவிரமாய் : மிக
பணிவுடன் ஆண்டவன் செயல் நினைந்து
எண்ணிலடங்காது இறைவனின் கிருபை
விண்ணவன் சேவையில் வீரமாய்ச் செல்லு : எத்தனை

— ய. யேசுதாசன் (பெரியண்ணன்)

28

ஆரபி — திஸ்ரஜாதி ஏகம்

பல்லவி

கண்களை ஏறெடுப்பேன் மாமேரு நேராயென்
கண்களை ஏறெடுப்பேன்

அனுபல்லவி

விண்மண்ணுண்டாக்கிய வித்தகனிட மிருந்
தெண்ணிலா ஒத்தாசை எந்நலனுக்கே வரும் - கண்

சரணங்கள்

1. காலைத்தள்ளாட வொட்டா ருறங்காது காப்பவர்
காலைத்தள்ளாட வொட்டார்
வேலையினின்றிளை ரேலைக் காத்தவர்
காலை மாலைசதா கண்ணே அயர்ந்திலர் - கண்

2. பக்க நிழலவரே எனையாதரி வலப்
பக்க நிழலவரே
எக்கால நிலாவெயில் சேதப் படுத்தாதென்பா
லக்கரை கொண்டநற் சகாயனப்பன்பால் - கண்

3. எல்லாத் தீமைகட்கும் எனையே விலக்கி
எல்லாத் தீமைகட்கும்
பொல்லா வுலகிலென் போக்குவரவிலும்
நல்லாத்து மந்தன்னை நன்கு காப்பார் நாளும் - கண்

— ஐயாத்துரை பாகவதர்

29

ஆனந்தபைரவி — ஆதிதாளம்

பல்லவி

கர்த்தரைத் துதித்துப் பாடுங்கள் நம்மை ரட்சிக்கும்
கன்மலையைப் போற்ற வாருங்கள்

அனுபல்லவி

தூய சந்நிதி முன் வந்து
துத்தியங் கர்த்தரே என்று
நேய நெஞ்சராய் மகிழ்ந்து
நேர் கடன்களை நிறைந்து - கர்த்

சரணங்கள்

1. வற்றுத வாழத்தை வரைந்தார் - பூமியில் எங்கும்
வானெட்டும் பர்வதம் நிரைத்தார்
மற்றுள்ள யாவையும் படைத்தார் - ஆதியந்தமாய்
மாண்பாய் ஆளுகை செய்கிறார்

நீங்கள் அவர்முன் பணிந்து
நீசப் பாவத்தை உணர்ந்து
ஏங்கித் தலை குனிந்து
ஏற்ற விண்ணப்பம் புரிந்து - கர்த்

2. நம்முடைய தேவன் அவரே - நம்மைப் போஷிக்கும்
நல்ல மேய்ப்பரும் அவரே
தம் கையின் ஆடுகளாக - மேய்ச்சலைக் காட்டி
தாபரித்துக் காப்பாற்றுகிறார்

இன்றே தேவ வாக்கைக் கேட்டு
ஈனச் செய்கை எல்லாம்விட்டு
நன்றே துதியென்று கண்டு
நாதரை வணங்கிக் கொண்டு - கர்த்

3. வனத்திற் சென்ற முற்பிதாக்கள் - வஞ்சனை செய்து
வாதையால் மாண்டு போனார்கள்
கனத்த காலம் பாடுபட்டார் - கானான் தேசத்தை
காணுமற் ஜீவனை விட்டார்

பிதாவுக்கும் சுதனுக்கும்
பிழைநீக்குஞ் சுத்தாவிக்கும்
சதாகாலம் புகழ் செல்லும்
சபைகளே ஆமேன் சொல்லும் - கர்த்

— டீ. பீ. நயில்ஸ்

30

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

சுந்தரப் பரமதேவ மைந்தன் யேசுக்கிறிஸ்துவுக்குத்
தோத்திரப் புகழ்ச்சி நித்திய கீர்த்தனம் என்றும்

அனுபல்லவி

அந்தரம் புவியும் தந்து சொந்த ஜீவனையும் ஈந்து
ஆற்றினர் நம்மை ஒன்றுய்க் கூட்டினர் - அருள்முடி
சூட்டினர் கிருபையால் தேற்றினரே துதி துதி - சுந்தர

சரணங்கள்

1. பாதகப் பசாசால் வந்த தீதெனும் பவத்தால் நொந்த
பாவிகளான நம்மை உசாவி மீட்டாரே
வேத பிதாவுக்குகந்த ஜாதியாகக் கூட்ட வந்த
மேசியாவைப் பற்றும் விசுவாச வீட்டாரே
கோதணுகா நீதிபரன் பாதமதின் ஆதரவில்
கூடுங்கள் பவத்துயர் போடுங்கள் ஜெயத்தைக்
கொண்டாடுங்கள்
துதி சொல்லிப் பாடுங்கள், பாடுங்கள் என்றும் - சுந்தர

2. விண்ணிலுள்ள ஜோதிகளும் எண்ணடங்காச் சேனைகளும்
விந்தையாய்க் கிறிஸ்துவைப் பணிந்து போற்றவே
மண்ணிலுள்ள ஜாதிகளும் நண்ணும் பல பொருள்களும்
வல்லபரன் எனத்துதி சொல்லி ஏத்தவே
அண்ணலாம் பிதாவுக் கொரே புண்ணிய குமாரனைக்
கொண்டாடிட அவர்பதம் தேடிட வெகுதிரள்கூடிட
துதி புகழ்பாடிட பாடிட என்றும் - சுந்தர

— மரியான் உபதேசியார்

31

சங்கராபரணம் ஆதிதாளம்

திபதைகள்

1. சீர்மிகு வான்புவி தேவா தோத்ரம்
சிஷ்டிப்பு யாவையும் படைத்தாய் தோத்ரம்
ஏர் குணனே தோத்ரம் அடியார்க்
கிரங்கிடுவாய் தோத்ரம் - மா நேசா

2. நேர்மிகு அருள் திரு அன்பா தோத்ரம்
நித்தமு முனக் கடியார்களின் தோத்ரம்
ஆர்மனனே தோத்ரம் உனது
அன்பினுக்கே தோத்ரம் - மா நேசா

3. ஜீவன் சுகம் பெலன் யாவுக்கும் தோத்ரம்
தினம் தினம் அருள் நன்மைக்காகவும் தோத்ரம்
ஆவலுடன் தோத்ரம் உனது
அன்பினுக்கே தோத்ரம் - மா நேசா

4. ஆத்தும நன்மைகட் காகவும் தோத்ரம்
அதிசய நடத்துதற் காகவும் தோத்ரம்
சாற்றுகிறேம் தோத்ரம் உனது
தகுமன்புக்கே தோத்ரம் - மா நேசா

5. மாறுய் பூரண நேசா தோத்ரம்
மகிழொடு ஜெபமொழி மாலையின் தோத்ரம்
தாராய் துணை தோத்ரம் இந்தத்
தருணமே கொடு தோத்ரம் - மா நேசா

— வி. மாசிலாமணி

32

சங்கராபரணம் ஆதி தாளம்

பல்லவி

சீர்திரியேக வஸ்தே நமோ, நமோ – நின்
திருவடிக்கு நமஸ்தே, நமோ, நமோ!

அனுபல்லவி

பார்படைத்தாளும் நாதா. பரமசற் பிரசாதா
நாருறுந் தூயதேவா நமோ, நமோ, நமோ!

சரணங்கள்

1. தந்தைப் பராபரனே நமோ, நமோ, - எனமத்
தாங்கி யாதரிப்போனே நமோ, நமோ!
சொந்தக் குமாரன் தந்தாய், சொல்லரும் நலமீந்தாய்,
எந்தவிர் போக்குமெந்தாய், நமோ, நமோ, நமோ!

2. எங்கள் பவத்திணசா நமோ, நமோ, - புது
எருசலேம் நகர் ராசா - நமோ, நமோ!
எங்கும் நின் அரசேற, எவரும் நின் புகழ் கூற
துங்க மந்தையிற் சேர, நமோ, நமோ, நமோ!

3. பரிசுத்த ஆவிதேவா நமோ, நமோ, - திட
பலமளித் தெமைக்காவா - நமோ, நமோ!
கரிசித்துத்தா நற்புத்தி, கபடற்ற மனசுத்தி,
திருமொழி பற்றும் பக்தி நமோ, நமோ, நமோ!

— ஞா. சாமுவேல்

33

தேசிகதோடி ஆதிதாளம்

பல்லவி

தூயர் தூயர் தூயரெனத் தூதர் தினம்
போற்றும் பரி
சுத்தரான தேவனைத் துதிப்போமே

சரணங்கள்

1 நேயமொடெங்கள் பாவம் போக்கவும்
நீசரை தேவபுத்திர ராக்கவும்
நித்திய குமாரனே இத்தரைக் கீந்தாரே

2. அடியார் பிழை பொறுத்தன்புடன்
ஆதரித்தாரே மிக இன்புடன்
அல்லும் பகலும் நாம் சொல்லுவோம் துத்தியம்

3. அந்தமும் ஆதியும் இன்றியே
அன்பு பரிசுத்தம் நீதியொன்றியே,
அத்தனுல கோரை நித்தமும் காக்கிறார்.

— எல் வி கிளறன்ஸ்

34

குந்தலவராளி ஆதிதாளம்

கண்ணிகள்

1. தெய்வன்பின் வெள்ளமே திருவருள் தோற்றமே,
மெய்ம் மனதானந்தமே !
செய்யநின் செம்பாதம் சேவிக்க இவ்வேளை
அய்யா, நின் அடி பணிந்தேன்

2. சொந்த முனதல்லால் சோரவழி செல்ல
எந்தாய், துணிவேனே யான் ?
புந்திக்கமலப் பொற் பூமாலை கோத்து உன்
பதந்தனைப் பிடித்துக் கொள்வேன்

3. பாவச் சேற்றில் பல வேளை பலமின்றி
தேவே தவறிடினுங்,
கூவி விழித்துன்தன் மார்போடணைத் தன்பாய்
யாவும் பொறுத்த நாதா

4. மூர்க்ககுணம்' கோபம்' மோகம், சிற்றின்பமும்
மேற்கொள்ளும் மாம்ச ஏக்கம்
தாக்கி யான் தடுமாறித் தியங்கிடும் வேளையில்
தூக்கித் தற்காத் தருள்வாய்

5. ஆசை' பாசம், பற்று, ஆவலாய் நின்திருப்
பூசைப்பீடம் படைப்பேன்;
மோச வழிதனை முற்று மகற்றியென்
நேசனே நினைத் தொழுவேன்

6. மரணமோ, ஜீவனே, மறுமையோ, பூமியோ,
தருணமோ, வருங்காலமோ,
வேறு சிருஷ்டியோ, உயர்ந்ததோ, தாழ்ந்ததோ
பிரித்திடுமோ தெய்வன்பை

— எஸ். யேசுதாசன் (பெரியண்ணன்)

35

பல்லவி

தேவனைத் துதியுங்கள் எப்பொழுதும்
தேவனைத் துதியுங்கள், ஆ..... ஆ - தேவனை

சரணங்கள்

1. அவர் வல்லமை விளங்கும் ஆகாயவிரிவை
பார்த்துத் துதித்திடுங்கள் - எப்பொழுதும் - தே

2. அவர் வல்லமை மிகுந்த கிரியைகளுக்காக
அவரைத் துதித்திடுங்கள் - எப்பொழுதும் - தே

3. அவர்மாட்சிமை நிறைந்த மகத்துவத்திற்காக
அவரைத் துதித்திடுங்கள் - எப்பொழுதும் - தே

4. அவரை எக்காளத் தொனியுடனே துதியுங்கள்
வீணைச் சுரத்துடனே - எப்பொழுதும் - தே

— கொன்வென்சன் பாடல்

36

அம்சத்வனி ஆதிதாளம்

பல்லவி

பாடித் துதி மனமே - பரனைக் கொண்
டாடித் துதி தினமே

அனுபல்லவி

நீடித்த காலமதாகப் பரன் எமை
நேசித்த பட்சத்தை வாசித்து வாசித்து -பா

சரணங்கள்

1. தீர்க்கதரிசிகளைக் கொண்டு முன்னறச்
செப்பின தேவபரன் இந்தக் காலத்தில்
மார்க்கமதாக் குமாரனைக் கொண்டு
வழுத்தின அன்பை விழித்துத் தியானித்து - பா

2. சொந்த ஜனமான யூதரைத் தள்ளித்
தொலையிற் கிடந்த புறச் சாதியாம் எமை
மந்தையிற் சேர்த்துப் பராபரன் தம்முடை
மைந்தர்களாக்கின சந்தோசத்துக்காக - பா

3. எத்தனை தீர்க்கர் அனேக அப்போஸ்தலர்
எத்தனை போதகர்கள் ரத்தச் சாட்சிகள்
எத்தனை வேண்டுமோ அத்தனையுந் தந்திங்(கு)
இத்தனையாய்க் கிருபை வைத்த நம்கர்த்தனை - பா

—வேதநாயகம் சாத்திரியார்

37

சங்கராபரணம் ஆதிதாளம்

1. பூலோகவாசரே, கர்த்தரைப் போற்றிப் பாடுங்கள்:
மேலோனை ஆராதிக்க வென்று இன்பாய்ச் சேருங்கள்.

2. கத்தர் தாமே நம்மை உண்டாக்கினர் நாமல்லவே:
நித்தம் நம்மை போசிக்கும் மேய்ப்பரென்று வாழ்த்துங்கள்

3. வாசல்களில் நீர் துதியோடு பிரவேசித்து
தேசார் மெய்த்தேவ நாமத்தை தோத்திரிப்பீராக,

4. தெய்வீகப் பிரகாரங்களில் மகிழ்ந்து நின்று
மெய்த்தேவ வாக்கைச் சீராய்க்கேட்டுப்பற்றிக் கொள்ளுங்கள்

5. கத்தரின் கிருபை என்றென்றைக்கும் உள்ளதென்று
பக்தரின் பூசனை செய்து, நித்தம் பாராட்டுங்கள்.

6. தலைமுறை தலைமுறைக்கும் அவரின் உண்மை
மலைக்கொப்பாய் நிலைக்குமென்று மாண்பாய்ப் பாடுங்கள்.

7. பிதாவுக்கும் குமாரனுக்கும் ஆவிக்கும் மேன்மை
சதாகாலங்களிலும் உண்டாவதாக, ஆமென்.

— டீ. பீ. நயில்ஸ்

38

பல்லவி

போற்றி துதிப்போம் எம் தேவ தேவனைப்
புதிய கிருபையுடனே
நேற்றும் இன்றும் என்றும் மாறா
யேசுவை நாம் என்றும் பாடித் துதிப்போம் -யேசு

சரணங்கள்

1. ஆ... யேசுவென்னும் நாமமே - என்
ஆத்துமாவின் கீதமே ... என் நேசர் யேசுவை
நான் என்றும் ஏத்தி மகிழ்ந்திடுவேன்
~~மகிழ்ந்திடுவேன்~~
புகழ்ந்திடுவேன்

2. கோரப் பயங்கரமான புயலில்
கொடிய அலையின் மத்தியில்
காக்கும் கரம் கொண்டு மார்பில் சேர்த்தணைத்த
அன்பை என்றும் பாடுவேன். -யேசு

3. யோர்தான் நதிபோன்ற சோதனையிலும்
சோர்ந்தழிந்து மாளாதே
ஆர்ப்பின் ஜெயத்தொனியோடே பாதுகாத்த
அன்பை என்றும் பாடுவேன். - யேசு

4. தாய் தன் பாலகனையே மறப்பினும்
நான் மறவேன் என்று சொன்னதால்
தாழ்த்தி என்னையவர் கையில் ஈந்துசீவ
பாதை என்றும் ஓடுவேன் - யேசு

5. பூமியகிலமும் சாட்சியாகவே
போங்க ளென்ற கட்டளையதால்
ஆவி ஆத்துமாவும் தேகம் யாவுமின்று
ஈந்து தொண்டு செய்குவேன். - யேசு

39

சங்கராபரணம் சாபுதாளம்

பல்லவி

வந்தனம், வந்தனமே! தேவ துந்துபி கொண்டிதமே!
—இது
வரையில் எமையே வளமாய்க் காத்த எந்துரையே
மிகத் தந்தனமே.

சரணங்கள்

1. சந்ததஞ் சந்ததமே, எங்கள் தகு நன்றிக் கடையாளமே
- நாங்கள்
தாழ்ந்து வீழ்ந்து சரணஞ் செய்கையில் தயைகூர் சுரர்பதியே.

2 சருவ வியாபகமும் எமைச் சார்ந்து தற்காத்ததுதே: - எங்கள்
சாமி பணிவாய் நேமிதுதி, புகழ் தந்தனமே நிதமே

3. சருவ வல்லபமதும் எமைத்தாங்கினதும் பெரிதே: - சத்ய
சருவேசுரனே, கிருபாகரனே உன்சருவத்துக்கும் துதியே

4. உன்தன் சர்வ ஞானமும் எங்களுள்ளிந்திரியம் யாவையும்
பார்த்தால்
ஒப்பே தருங்காவலே உன்னருளுக்கோ தரும் புகழ்துதிதுதியே

5. மாருப் பூரணனே, எல்லாவருடங்களிலும் எந்தனே
- உன்றன்
வாக்குத் தவறுதருளிப் பொழிந்திட்ட வல்லாவிக்குந் துதியே

— வே. மாசிலாமணி ஐயர்.

40

சங்கராபரணம் ஆதி (திஸ்ரகெதி)

பல்லவி

வாரீரோ நாமெல்லாருங் கூடி,
மகிழ் கொண்டாடுவோம்:- சற்றும்
மாசிலா நம் இயேசு நாதரை
வாழ்த்திப் பாடுவோம்.

சரணங்கள்

1. தாரகம் அற்ற ஏழைகள் தழைக்க, நாயனர் -இந்தத்
தாரணியிலே மனுடவதாரம் ஆயினர்:

2. மா கதியை இழந்திங்கு வறியர் ஆன நாம், -அங்கே
மாட்சி உறவேண்டியே அவர் தாழ்ச்சி ஆயினர்:

3. மாகொடிதான சாவதின் வலிமை நீக்கியே - இந்த
மண்டலத்தினின் றுயிர்த்தவர் விண்டலஞ் சென்றார்:

4. பாவிகட் காய்ப் பரனிடம் பரிந்து வேண்டியே - அவர்
பட்சம் வைத்துறும் தொழும்பரை ரட்சைசெய்கிறார்

— யோண்பாமர்

41

Come let us join our cheerful songs
(M. H. B.

1. வாரும் நாம் விண் தூதரோடு
வாழ்த்தி நிற்போமாக:
கோடா கோடி சுத்தர் சேர்ந்து
துதிப்பார் ஒன்றுக

2. மீட்பர் முடி பெற்றுரென்று
போற்றுவார்கள் அங்கே:
நமக்காய் மரித்தரென்று
புகழ்வோம் நாம் இங்கே

3. கனம் பெலம் என்றுமுள்ள
நாதராம் யேசுவே
எல்லா மாண்பும் ஏற்றுக்கொள்ள
பாத்திரவான் நீரே

4. விண்ணை ஆளும் மீட்பருக்கு
நித்த துதியாக,
சிருட்டியாவும் ஒன்றுகச் சேர்ந்து
வாழ்த்துச் சொல்வதாக.

— ஐசக் வே
டீ. பீ. நயி

42

Praise my soul, the King of Heaven (M. H. B. 1
8, 7, 8, 4, 7.

1. மோட்சபரன் முன்னேவந்து - தீட்சை செய் என்மன
ஆட்சி அவர்க்கே அளித்தல் - மாட்சியான காட்சியே
போற்றும் போற்றும் - போற்றும் போற்றும்
மாற்றமில்லா வள்ளலே

2. உந்தனருள் எம் முன்னோர்க்குச் - சந்ததம் அளித்தையே
மந்தையாயெம்மை மதித்தெம் - சொந்தமான தந்தையே,
போற்றும் போற்றும் - போற்றும் போற்றும்
ஆற்றல் தரும் அன்பனே

3. நையலர் நாம் என்றுணர்ந்து - கையிலேந்திக் காத்தெமை
வெய்யோன் பணி வேண்டலர் நின் - றுய்யச் செய்த
துய்யனே!

போற்றும் போற்றும் - போற்றும் போற்றும்
தேற்றல் அருள் தெய்வத்தை

4. விண்டலத்து வேந்தர் வீழ்ந்து - தெண்டனிட்டுப் பணிய
மண்டலம் அனைத்தும் வாழ்த்தும் - அண்டவாணர்
ஆண்டவா

அல்லேலுயா, - அல்லேலுயா,
சொல்லரிய சோதியே.

—கென்றி பிரான்சிஸ் லயிற்
ஏ. எம். கே. குமாரசுவாமி

43

When all thy mercies (M. H. B. 413)
8, 7, 8, 7.

1. நீர்தந்த நன்மை யாவையும் - நினைத்துக் கர்த்தரே
மகிழ்ச்சியோடு என்றைக்கும் - நான் துதி செய்வேனே

2. குழந்தைப் பருவமுதல் - குறைவில்லாமலே
எனக்களித்த நன்மைகள் - ஏராளமானதே

3. என்னோடு வாலிபத்திலும் - இருந்தீர் தேவரீர்
இக்கட்டுண்டான காலத்தும் - விழாமல் தாங்கினீர்

4. அனேகமான தீமைகள் - அண்டாமல் தடுத்தீர்:
மகமாறில்லாத நன்மைகள் - கர்த்தாவே பொழிந்தீர்

5. இம்மையில் என்றும் தாழ்மையாய் - தெய்வன்பைநிகழ்ப்பேன்
மறுமையில் வணக்கமாய் - உம்மையே போற்றுவேன்.

—ஜே. அடிசன்
(இந்திய மொழிபெயர்ப்பு)

44

When upon life's billows (S. S. R. 7 4 5)
P. N.

1. சூறைபோலத் தீமை சூழுங்காலத்தில்
ஆற்றியின்றி நீ பதைக்கும் நேரத்தில்
ஈவைஎல்லாம் எண்ணு சொல்லி ஒவ்...வொன்...றுய்
அப்போ தேவ ஈவு ஏராளம் என்பாய்

ஈ...வை எண்ணு, சொல்லி ஒவ்...வொன்...றுய்
ஈ...வை எண்ணு ஏராளம் என்...பாய்
ஈ...வை எண்ணு, சொல்லி ஒவ்வொன்றுய்
அப்போ தேவ ஈவு, ஏராளம் என்பாய்

2. தேவை தொல்லைகளால் வாட்டம் கொண்டாயா?
உன் சிலுவை பாரமென்று கண்டாயா?
ஈவை எல்லாம் எண்ணு, உன் துயர் மாறும்.
உன் துதிக்கீதங்கள் மென்மேலும் ஏறும்,

3. பொன் வெள்ளி உனக்கில்லாமற் போனாலும்
வான் செல்வம் உனக்கு நித்தபேறாகும்
ஈவை எல்லாம் எண்ணு' மோட்சத்தைப் போலும்
மாளிகை இல்லையே பூமியின் மேலும்

4. என்ன வன்மம் வாது, கேடு வந்தாலும்
தேவனே நம்பித் திடன்கொள் மென்மேலும்
ஈவை எல்லாம் எண்ணு, தேவன் முன் செல்வார்
தேவதூதர் உன்னை என்றும் தாங்குவார்.

— டி. பி. நயில்ஸ்.

மனந்திரும்புதல், பாவமன்னிப்பு

45

காம்போதி — ஆதிதாளம்

பல்லவி

அற்புதம்! பாவி நான் மீட்கப்பட்டேன்

அனுபல்லவி

சற்றுகிலும் கிருபைபெற
முற்றும் பாத்திர னைபோதும் - அற்

சரணங்கள்

1. உலகத்தின் சிற்றின்ப பாசங்களும்
பலவித மாமிச சிந்தைகளும்
பாவியென் னிதயத்தை வதைக்கும்போது
பாவவி மோசனர் கிருபை கூர்ந்தார் - அற்

2. மாய்மால வேஷத்தைத் தரித்துக்கொண்டு
வாய்ப் பேச்சி னல்மாத்ரம் பூசை செய்தேன்
நீண்ட செபங்களைச் செய்வதினல்
மீண்டும் மோட்சம் போகக் காத்திருந்தேன் - அற்

3. நான்செய்த தீவினை உணர்ந்து என்றன்
வானபி தாவண்டை ஓடிவந்து
மெய் மனஸ் தாப அழுகையுடன்
''ஐயனே! ரட்சியும்'' என்றவுடன் - அற்

4. இந்தமா தீட்சையை நம்பாயோ நீ
வந்துபார், மீட்பரின் சிலுவையண்டை
ஓடுகின் றவிந்தச் சிவந்தநதி,
தேடிவ ருவோர்க்கு உயிரைத்தரும் -அற்

— இரட்சண்யசேனைப் பாடல்

46

மணிரங்கு — திஸ்ர ஏகதாளம்

பல்லவி

இரங்கும், இரங்கும், கருணைவாரி!
இயேசு ராசனே! - பவ
நாச நேசனே

சரணங்கள்

1. அடியேன் பாவக் கடி விஷத்தால்
அயர்ந்து போகின்றேன் - மிகப்
பயந்து சாகின்றேன் - இரங்

2. நெஞ்சமு மெனை வஞ்சன் என்ன
நெருக்கு தேயையா ! - மிகக்
கருக்கு தேதுய்யா – இரங்

3. திரம் கொண்டாவி வரங் கொண்டுய்யச்
சிறுமை பார், ஐயா - ஏழை
வறுமை தீர், ஐயா

4. தீமை அன்றி வாய்யை செய்யத்
தெரிகிலேன், ஐயா. - தெரிவை
புரிகிலேன் - ஐயா - இரங்

5. பாவி ஏற்றும் கவி மன்முட்டைப்
பரிந்து கேள், ஐயா, - தயை
புரிந்து மீள், ஐயா - இரங்

—ஏ. வேதக்கண்

47

முகாரி — ஆதிதாளம்

பல்லவி

ஆரும் துணை இல்லையே, எனக்
காதியாம் திருப்பாலா: - உன்தன்
ஐந்து காயத்தின் அடைக்கலம் கொடுத்
தாளுவாய், ஏசுநாதா

அனுபல்லவி

சீர்உலாவு பூங்காவில் ஓர்கனி - தின்ற பாதகம் மாற்றவே
சிலுவை மீதினிலே உயிர்விடும் - தேவனே, என்சுவாமி - ஆரும்

சரணங்கள்

1. முந்து மானிடர் தந்த தீவினை முழுவதும் அறவேண்டியே
முள்முடியுடன் குருசில் ஏறிய, முன்னவா, கிருபை கூர்வையே
சிந்தும்உன் உதிரத்தில் என்வினை தீர்த்திரட்சியும், ஐயனே:
தீயபாவி எனக்கு வேறொரு செயலிடம் துணை இல்லையே!

2 தந்தை தாயரும், மைந்தர் மாதரும் சகலரும் உதவார்களே
சாகும் நாளதில் நீ அலால் எனைத் தாங்குவார்களும் உண்டுமோ
சொந்தம் நீ எனக்கன்றி வேறொரு சொந்தமானவர் இல்லையே
சுற்றமும், பொருள் அத்தமும் முழுபத்தமே, எனதத்தனே

3. கள்ளனையினும் வெள்ளனையினும் பிள்ளை நான் உனக்கல்லவோ
கர்த்தனே, வலப்பக்கமேவிய கள்ளனுக் கருள் செய்ததேயே
தள்ளி என்னைவிடாமல் உன்னடி தந்து காத்தருள் அப்பனே
தயவாய் ஒருகுருசில் ஏறிய சருவ ஜீவ தயா பரா

4. நன்றி அற்றவனெனிலும் எனைக் கொன்று போடுவதாகுமோ?
நட்டமே படும் கெட்ட மைந்தனின் கிட்ட ஓடின தில்லையோ?
கொன்ற வர்க் கருள் செய்யும் என்று பிதாவை நோக்கிய
கொற்றவா
குற்றம் ஏது செய்தாலும் நீ எனைப் பெற்றவா பொறுத்தாள்
வையே

5. பக்தியேதுமிலாது மாயசுகத்தை நாடிய பித்தனுய்
பாழிலே என்றன் நாள் எலாங் கெடுத் தேழையாகினேன்
என்செய்வேன்?
சத்துருவான பிசாசினுல் வரும் தந்திரம் கொடிதல்லவோ
தஞ்சம் அற்றவன் ஆகினேன் உனதஞ்சல் கூறும் அனுதியே.

—வேதநாயகம் சாத்திரியார்

48

காம்போதி ஆதிதாளம்

பல்லவி

இயேசுவே கிருபாசனபதியே! - கெட்ட
இழிஞன் எனை மீட்டருள்
இயேசுவே கிருபாசன பதியே!

சரணங்கள்

1. காசினியில் உன்னையன்றித் தாசனெனக்கா தரவு
கண்டிலேன் சருவவல்ல மண்டலாதிபா!
நேசமாய் ஏழைக்கிரங்கி மோசமணுகாது காத்து
நித்தனே எனைத்திருத்தி வைத்தருள் புத்தி வருத்தி,
– யேசுவே

2. பேயுடைச் சிறையதிலுங் காயவினைக் கேடதிலும்
பின்னமாகச் சிக்குண்டதுர்க் கன்மி ஆயினேன்!
தீயரைமீட்கும் பொருளாய் நேயமுற்றுதிரம் விட்ட
தேவனேயெ னைக்கண்நோக்கித் தீவினைய னைத்தும் நீக்கி
– யேசுவே

3 சிறைப்படுத்தினவற்றைச் சிறையாக்கி விட்ட வதி
தீரமுள்ள எங்களுப காரவள்ளலே!
குறையே முனையண்டினேர்க் கிறைவா எனைச்சதிக்குங்
குற்றங்கள் அறவே தீர்த்து முற்றமுடி யக்கண்பார்த்து
– யேசுவே

4. பொல்லா வுலகமதில் நல்லார் எவருமில்லை
புண்ணியனே! உன்சரணம் நண்ணி அண்டினேன்.
எல்லார்க்குள் எல்லாம் நீ அல்லோ எனக்குதவி
இந்நாள் அருள்புரிந்து, உன்னுவி யைச்சொரிந்து
- யேசுவே

— யோன் பாமர்

49

Jesus my Lord to thee I cry (S. S. R. 476)
8, 8, 8, 6.

1. யேசுவே, உம்மை நோக்குவேன்
உம் அருளைப் பற்றிக் கொள்வேன்
இன்றே உம்மிடம் வருவேன்
என்னை ஏற்றுக் கொள்ளும்

என்னை ஏற்றுக் கொள்ளும்
என்னை ஏற்றுக் கொள்ளும்
என் பதிலாய் நீர் மரித்தீர்
அன்பாய் ஏற்றுக் கொள்ளும்

2. நான் ஓர் பாவி என்றறிவீர்
பாவி நண்பர் அல்லவா நீ:
என்மேல் இரங்கும் தேவரீர்,
என்னை ஏற்றுக் கொள்ளும்

3. என்னில் நன்மை ஒன்றும் இல்லை
என் தவங்கள் எல்லாம் தொல்லை
நம்புவேன் உமது சொல்லை
என்னை ஏற்றுக் கொள்ளும்

4. மீட்பரே என் கேட்டை நீக்கும்
என் துன்பத்தை முற்றுய் மாற்றும்
உம் ஆவியால் என்னைத் தேற்றும்
என்னை ஏற்றுக் கொள்ளும்

— டீ. பீ. நயில்ஸ்

50

பல்லவி

உம்மைப் போல் யாருண்டு
எந்தன் யேசு நாதா
இந்தப் பார் தலத்தில்
உம்மைப் போல் யாருண்டு
பாவப் பிடியினில் சிக்கி நான் உழன்றேன்
தேவா தம் அன்பிலே மன்னித்தீர்

சரணங்கள்

1. உலகம், மாமிசம், பிசாசுக்கடியில்
அடிமையாகவே பாவி நான் இருந்தேன்
நிம்மதி இழந்தேன் தூய்மையை மறந்தேன்
மனம்போல் நடந்தேன் ஏமாற்றம் அடைந்தேன்
என்னையா தேடினீர்? ஐயா யேசுநாதா
உம்மை மறந்த ஓர் துரோகி நான்
என்னையா தேடினீர் ஐயா யேசுநாதா
அடிமை உமக்கே இனிநான்

2. இன்றைக்கு நான் செய்யும் இந்த தீர்மானத்தை
என்றைக்கும் காத்திட ஆவியால் நிரப்பும்
நொறுக்கும், உருக்கும் உடையும் வனையும்
உமக்கே உகந்த தூய சரீரமாய்
ஐம் பொறிகளையும் உமக்குள் அடக்கும்
யேசுவே ஆவியால் நிரப்பும்
வெற்றி வாழ்க்கையுள்ள மகிழ்திகழ
அக்கினி என் உள்ளம் இறக்கும்

3. வீட்டிலும் ஊரிலும் செல்லுமிடமெங்கும்
சோதனை வந்திடில் கத்தாநீர் காத்திடும்
மேசியா வருகை வரையில் பலரை
சிலுவைக்கருகில் அழைக்க ஏவிடும்
முழங்காலில் நிற்க வேதத்தை அறிய
தினந்தோறும் தேவா உணர்த்தும்
உமக்கும் எனக்கும் இடையிலே எதுவும்
என்றுமே வராமல் காத்திடும்.

51

தன்யாசி ஆதிதாளம்

பல்லவி

எத்தனை திரள் என் பாவம் என்தேவனே!
எளியன்மேல் இரங்கை யனே

அனுபல்லவி

நித்தம் என் இருதயம் தீயதென் பரனே
நிலைவரம் எனில் இல்லை: நீ என் தாபரமே - எத்

சரணங்கள்

1. பத்தம் உன்மேல் எனக்கில்லை என்பேனு?
பணிந்திடல் ஒழிவேனு?
சுத்தமுறுங் கரங்கால்கள், விலாவினில்
தோன்றுது காயங்கள், துய சினேகா!

2. எந்தன் அநீதிகள் என்கண்கள் முனமே
இடைவிடா திருக்கையிலே
உந்தன் மிகுங் கிருபை ஓ! மிகவும் பெரிதே
உத்தம மனமுடையோய்: எனை ஆளாய்: - எத்

3. ஆயங் கொள்வோன் போல், பாவ ஸ்திரீபோல்,
அருகிலிருந்த கள்வன் போல்,
நேயமாய் உன் சரண், சரண்என வணங்கினேன்
நீ எனக்காகவே மரித்தனை பரனே! - எத்

4. கெட்ட மகன்போல் துட்டனாய் அலைந்தேன்
கெடு பஞ்சத்தால் நலிந்தேன்:
இட்டமாய் மகன் எனப் பாத்திரன் அல நான்
எனை ரட்சித்திடல் உன்தன் நிமித்தமே அப்பனே - எத்

— டி பலவேந்திரம்

52

குறிஞ்சி — ரூபகதாளம்

பல்லவி

என்ன என் ஆனந்தம்! என்ன என் ஆனந்தம்!
சொல்லக் கூடாதே!
மன்னன் கிறிஸ்து என் பாவத்தை எல்லாம்
மன்னித்து விட்டாரே!

சரணங்கள்

1. கூடுவோம் ஆடுவோம் பாடுவோம் நன்றாய்
மகிழ் கொண்டாடுவோம்;
நாடியே நம்மைத் தேடியே வந்த
நாதனைப் போற்றிடுவோம் - என்ன

2. பாவங்கள் சாபங்கள் கோபங்கள் எல்லாம்
பரிகரித்தாரே:
தேவாதி தேவன் என் உள்ளத்தை எல்லாம்
தேற்றியே விட்டாரே - என்ன

3. அட்சயன் பட்சமாய் இரட்சிப்பை எங்களுக்
கருளினதாலே
நிட்சயம் சுவாமியைப் பற்றியே சாட்சி
பகர வேண்டியதே - என்ன

— கொன்வென்சன் பாடல்

53

முகாரி — சாப்புதாளம்

பல்லவி

ஐயையா! நான் வந்தேன் - தேவ
ஆட்டுக்குட்டி! வந்தேன்

சரணங்கள்

1. துய்யன் நீர் சோரி பலியெனக் காய்ச்சிந்தித்
துஷ்டன் எனை அழைத்தீர், - தயை
செய்வோம் என்றே: இதை அல்லாது போக்கில்லை:
தேவாட்டுக்குட்டி வந்தேன்: - ஐயை

2. உள்ளக் கறைகளில் ஒன்றெனுந் தானுய்
ஒழிந்தால் வருவேன், என்று - நில்லேன்:
தெள் உம் உதிரம் கறை யாவும் தீர்த்திடும்:
தேவாட்டுக்குட்டி, வந்தேன் - ஐயை

3. அந்தகன், ஏழை நிர்ப்பந்தன் யான், பார்வையும்
ஆஸ்தி மனச் சுகமும் - நீர்
சிந்தை மகிழ்ந்தீயும், எந்தெந்த நன்மையும்,
தேவாட்டுக்குட்டி, வந்தேன் - ஐயை

4. ஏற்றுக்கொண்டு மன்னிப் பீந்து சுத்திகரித்
தென்னை அரவணையும், - மனம்
தேற்றிக் கொண்டேன் உன்தன் வாக்குத்தத்தங்களால்
தேவாட்டுக்குட்டி, வந்தேன் - ஐயை

5. மட்டற்ற உம் அன்பினுலே தடை யாவும்
மாறி அகன்றனவே, - இனி
திட்டமே உன்தன் உடமை யான் என்றென்றும்:
தேவாட்டுக்குட்டி, வந்தேன். - ஐயை

— ஏ. வேதக்கண்

54

முகாரி — சாப்புதாளம்

பல்லவி

ஐயையா, நான் பாவி, - என்னை
ஆளுந்த யாபரனே!

சரணம்

1. பொய்யாமு லகவுல் லாசத்தி னுல் மனம்
போனவழி நடந்தேன்: - யே
சையா, அபயம் அபயம்! இரங்குமே
சையா, என் தாதாவே - ஐயை

2. எத்தனை சூதுகள், எத்தனை வாதுகள்,
எத்தனை தீதுகளோ? - என
தத்தனே! என் பிழை அத்தனை யும்பொறுத்
தாண்டரு ளுங்கோவே - ஐயை

3. வஞ்சமோ, கரவோ, கபடோ, மாய்
மாலமோ இரண்டகமோ? - மனச்
சஞ்சலம் நீக்கி, எனக்கருள் செய்யும்
சமஸ்தநன் மைக்கடலே - ஐயை

4 பொய்யும், புரட்டும், உருட்டும், திருட்டும்,
பொறுமையும், ஆணவமும் - விட்
டுய்யும்படி அருள் செய்வாய், அறுதி ஓர்
ஏக திரித்துவனே - ஐயை

5. உன்னை எவற்றிலும் பார்க்கச் சினேகித்
துனதடியார்களையும், - நான்
என்னைச் சினேகிக்குமாப் போல் சினேகிக்க
ஏவும், பராபரனே! - ஐயை

— வேதநாயக சாஸ்திரியார்

55

எதுகுலகாம்போதி ஆதிதாளம்

பல்லவி

கிருபை புரிந்தெனை ஆள்; - நீபரனே!
கிருபை புரிந்தெனை ஆள்: - நிதம்

சரணங்கள்

1 திருவருள் நீடுமெய்ஞ் ஞான திரித்து
வரில்நர ஞசிய மாதுவின் வித்து

2. செய்திடும் பாவமெல் லாமகல் வித்து
உய்திடவே மிக வுந்தயை வைத்து கிரு

3. தந்திர வான்கடி யின்சிறை மீட்டு
எந்தைம கிழ்ந்துன்றன் அன்புபா ராட்டு -கிரு

4. தீமையு றும்பல ஆசையை நீக்கி
சாமி! என்னையுமக் காலயம் ஆக்கி -கிரு

5. அம்பர மீதுறை வானவர்போற்ற
கெம்பீர மாய்விசு வாசிகள் ஏத்த -கிரு

— உபதேசிகர் மதுரநாயகம்

56

மோகனம் சாப்புதாளம்

பல்லவி

சருவேசுரா ஏழைப்பாவி என் பேரிலே
தயவாய் இரும், சுவாமி

அனுபல்லவி

திரியேக பரதேவா, நெறி மேவும் ஒரு யோவா,
சித்தம் இரங்கிக் காத்து கிறிஸ்தின் முகத்தைப் பார்த்து

சரு -

சரணங்கள்

1. தந்தை நின் ஒன்றுனை மைந்தன் தனைக் கொடுத்தித்
தகமை உலகை நேசித்தீர், உம்
சொந்தக் கிருபை தனைச் சிந்தித்துணர மறை தொகுத்
தெனக் குபதேசித்தீர்:
இந்தப் பெரிய நேசம் புத்திக் கொளியதாக்கும்,
எந்தப் படியும் என் நிர்ப்பந்தம் அனைத்தும் போக்கும்
- சரு

2. தேவரீர்க் கேற்காத தீவினை பலபல செய்தும் என்வினை
பொறுத்தீர் – நீர்
யாவும் அறிந்திருந்தும், கோபித்துக் கைவிடாதென்னன்றி
கேட்டை மறுத்தீர்:
சீவனே, உமக்கிந்தப் பாவி பதில் என் செய்வேன்?
மேவி அடி தொழாமல் ஆவி எங்ஙனம் உய்வேன்
– சரு

3. நெஞ்சில் தெய்வ பயம் கொஞ்சமேனும் இல்லாமல் நீதி
வழியைக் கடந்தேன், கெட்ட
வஞ்ச உலக வாழ்வை மிஞ்சத் தேடி, பேயின் மனதுக்
கேற்க நடந்தேன்:
பஞ்ச பாவி கூவிக் கெஞ்சும் செபத்தைக் கேளும்,
தஞ்சம் என்றேன் உனக்கே: அஞ்சல் என்றெனை ஆளும்
- சரு

— வேதநாயக சாஸ்திரியார்

57

பல்லவி

தவறிப்போன ஆட்டைத் தேடி
மேய்ப்பன் போகிறார்
கவலையோடு கண்ணீரோடு
தேடி அலைகிறார்

சரணங்கள்

1. பொறியில் விழுந்த ஆட்டைத்தூக்கி
மடியில் கிடத்தியே
காயம் கட்டி மார்பில் இட்டு
தூக்கி நடக்கிறார் - கவலையோடு

2. கழியில் புரண்ட ஆட்டைத் தூக்க
குழியில் இறங்கினார்
சேற்றில் வீழ்ந்து கறைபடிந்து
தூக்கி எடுக்கிறார் - கவலையோடு

3. தவறிப்போன ஆட்டைப் போல
அலைந்தேன் உலகிலே
நல்ல மேய்ப்பன் என்னை மீட்க
தன்னைக் கொடுத்தார் - கவலையோடு.

— K. S. அருள்ராசா.

58

செஞ்சுருட்டி ஆதிதாளம்

பல்லவி

திருப்பாதம் சேராமல் இருப்பேனே - நான்
தெய்வத்தைத் தேடாமல் பிழைப்பேனே?

சரணங்கள்

1. அருட்கடலாம் ஈசன் அடியவர் பாசன்!
உருக்கம் நிறைந்த விண்ணுயிரான நேசன்! - திரு

2. ஆவியும் ஆத்மமும் ஆண்டவர் பங்கே
பூவில் அவரல்லாமல் புகலிடம் எங்கே? - திரு

3. சத்திய மார்க்கமும் சகலமுமான
நித்திய ஜீவனும் நிமலனுமான - திரு

4. ஆறுதல் தேறுதல் அளித்திடும் சேயன்
கூறு மகிமையில் சேர்த்திடும் தூயன் - திரு

5. உலையில் மெழுகுபோல் உருகுதென் நெஞ்சம்
மலையாதுன் திருவடி வணங்கினேன் தஞ்சம் - திரு

— சா. பரமானந்தம் ஐயர்.

59

Just as I am without one plea (M. H. B. 353)
8, 8, 8, 6

1. நான் பாவிதான்: ஆனலும் நீர் - மாசற்ற இரத்தம் சிந்தினீர்
"வா," என்று என்னை கூப்பிட்டீர் - என் மீட்பரே, வந்தேன்

2. நான் பாவிதான்: என்நெஞ்சிலே - கறை பிடித்திருக்குதே:
என் கறை நீங்க இப்போதே - என் மீட்பரே, வந்தேன்

3. நான் பாவிதான்; பயத்தினுல் அலைந்து பாவப்பாரத்தால்,
அழிந்து மாண்டுபோவதால் - என் மீட்பரே, வந்தேன்

4. நான் பாவிதான்: மெய்யாயினும் - சீர், நேர்மை, செல்வம்.
மோட்சமும்
உம்மாலே பெற்று வாழவும் - என் மீட்பரே, வந்தேன்

5. நான் பாவிதான்: இரங்குவீர் - அனைத்துக் காத்து இரட்சிப்பீர்
அருளாம் செல்வம் அளிப்பீர் - என் மீட்பரே, வந்தேன்

6. நான் பாவிதான்: அன்பாக நீர் - நீங்காத் தடைகள் நீக்கினீர்;
உமக்குச் சொந்தமாக்கினீர் - என் மீட்பரே, வந்தேன்.

— சாலற் எலியற்
— டீ. பீ. நயில்ஸ்

60

காம்போதி ரூபக தாளம்

பல்லவி

நின்பாதம் துணை அல்லால், வேறொரு துணையில்லை
நித்ய பரம போதா!

அனுபல்லவி

என் பாவம் போக்கியே, கிருபை புரியும், சுவாமி!
ஏக வஸ்துவான ஏசுக்கிறிஸ்து நாதா!

சரணங்கள்

தேவரீர்க் கேற்காத குற்றஞ் செய்திருந்தாலும், சித்தம் இரங்கி வாரும்
மேவி எனது வினையாவும் அகல, இந்தவேளை எனையும் சேரும்;
பாவிக்குதவியாக மனுவேலே! நீர் பட்டபாடனைத்தையும் பாரும்
ஆவலாக உனை அடைந்து சரண் புகுந்தேன்
ஆபத்தை நீக்கும், ஐயா! இப்போ திரங்கி மெய்யாய் - நின்

— வேதநாயக சாஸ்திரியார்

61

மோகனம் சாப்புதாளம்

பல்லவி

பாவியாகவே வாறேன்: பாவம் போக்கும்
பலியாம் என்யேசுவே, வாறேன்
பாவியாகவே வாறேன்

சரணங்கள்

1. நீ வா. உன்பாவம் என்னால்
நீங்கும் என்று சொன்னீரே:
தேவா உம் வாக்கை நம்பி
சீர்கேடன் நீசனும் நான் - பாவி

2. பாவக்கறை போமோ என்
பாட்டால்? உம் பாட்டாலன்றி
போவதில்லை என்றே
பொல்லாத பாவியே நான் - பாவி

3. பேய்மருள் உலகுடல்
பேராசையால் மயங்கிப்
போயும் அவற்றோடு
போரில் அயர்ச்சியாய் நான் - பாவி

4. சீவ செல்வ ஞான
சீல சுகங்கள் அற்றேன்
தாவென்று வேண்டியே
சாவில் சஞ்சரித்த நான் - பாவி

5. துன்பங்கள் நீக்கி உன்னைத்
தூக்கி அணைப்பேன் என்றீர்
இன்ப வாக்குத் தத்தத்தை
இன்றைக்கே நம்பியேநான் - பாவி

6. உம்மைச் சேர வொட்டாமல்
ஊன்றிய தடை யாவும்
உம்மன்பால் நீங்கி நல்
உயிர் அடைந்தோங்கவே நான் - பாவி

— ஈ. வெ

62

மோகனம் ஆதிதாளம்

பல்லவி

மன்னிப்பு மன்னிப்பு மன்னிப்பு தேவா
மன்னிப்பு மன்னிப்புத் தாருமே இறைவா
மன்னிப்புத் தாருமே இறைவா

சரணங்கள்

1. ஆண்டவர் ஆன்மாவை விரும்புகிறார்
மாண்டிட்ட ஆன்மாவைத் தேடுகின்றார்
அண்டிடும் பாவிக்கு அருளுகின்றார் - நேரில்
வேண்டிடும் துரோகிக்கு இரங்குகின்றார்

2. என் சொத்தைத் தந்திடும் என்றுகேட்டான்
தன் சொத்தைப் பெற்றவன் பயணமானான்
தன் இஷ்டம் போலங்கே செலவு செய்தான் - அவன்
தன் வாழ்வைப் பாவத்தில் மூழ்கடித்தான்

3. பன்றிகள் மேய்த்தவன் தவிடு உண்டான்
தன்தந்தை அன்பினைக் கனவு கண்டான்
மன்னிப்புக் கேட்டங்கே ஓடிவந்தான் - தந்தை
மன்னித்து மகனாக அணைத்து ஏற்றார்

4. குற்றங்கள் இல்லையே என்று சொன்னால்
நம்மைத்தான் ஏமாற்றி நலிந்திடுவோம்
குற்றங்கள் அனைத்தையும் எடுத்துரைத்தால் - தேவன்
குற்றத்தை மன்னித்து வாழ்வளிப்பார்.

பரிந்து வேண்டல்

63

சுத்தசாவேரி — ஆதிதாளம்

பல்லவி

அருட்பெரும் சோதி, நீ அடியேனை மீட்டே - உன்
திருவரம் தருவாயே!

அனுபல்லவி

மருள்கொண்டு மாய்கிறேன் மானிலந் தனிலே
அருள் தந்து காப்பாயே, - அருட்

சரணங்கள்

1. அல்லல் விளையகற்றும் அரிய குமாரன் நீ,
தொல்லுலகை ரட்சித்த கொல்கொதா வீரன் நீ,
செல்வம் அளிக்கும் நல்ல தெய்வ குபேரன் நீ,
புல்லன் எனக்கு வாய்த்த சொல்லரிய பொக்கிஷம் நீ, - அருட்

2. வன் நெஞ்சேனை இழுத்த தீன தயாளன் நீ,
புன் செயலை அழிக்கும் இன்சொல் இறைவன் நீ,
மன்பதையை ரட்சித்த மாண்புடை யேசு நீ,
என் மனதுக் குகந்த அன்பின் சொரூபம் நீ, - அருட்

3. இத்தரை யோர்க்கு வேண்டும் சுத்த சுவிசேஷம் நீ,
புத்துயிரை அளிக்கும் நித்திய சீவன் நீ,
முத்தி நெறியைக் காட்டும் மூலப் பரம்பொருள் நீ,
பித்தன் எனக்கு வாய்த்த சித்த சிகாமணி நீ - அருட்

— ஜ. ரீ. யேசுசகாயம்.

64

I need thee every hour (M. H. B. 457)

6, 4,

1. கர்த்தா நான் ஓர், ஏழை நீர் என் ஆஸ்தி,
உம் சத்தம் தொனிக்க உண்டாம் ஆற்றி.

உம் தயை என்தேவனே எப்போதும் வேண்டுமே,
ஆசீர்வாதம் தாருமே என் மீட்பரே.

2. என் வேண்டலைக் கேட்டு என்னைத் தாங்கும்,
அப்போ சோதனையை நெஞ்சம் வெல்லும்.

3. இன்பதுன்பம் எல்லாம் நன்மையாக்கும்
விரைவுடன் வந்து என்னைப் பேணும்.

4. மெய்ஞ்ஞானம் போதிக்க என்னில் தங்கும்
வான் செல்வங்கள் தந்து என்னைத் தேற்றும்.

5. உம்மை என்றும் சேவை விண் தூயரே,
என்னில் வாசம் பண்ணும், என் அன்பரே.

— அ. ஷே. ஹோக்ஸ்
— டீ. பீ. நயில்ஸ்

65

உசேனி

ஆதிதாளம்

பல்லவி

தேவா, இரக்கமில்லையோ? - யேசு
தேவா, இரக்கமில்லையோ?

அனுபல்லவி

சீவா, பரப்ரம ஏகோவா, திரித்துவத்தின்
மூவாள் ஒன்றுக வந்த தாவிதின் மைந்தன், ஒரே தேவா !

சரணங்கள்

1. எல்லாம் அறிந்த பொருளே, - எங்கள்
இல்லாமை நீக்கும் அருளே, - கொடும்
பொல்லா மனதுடைய கல்லான பாவிகளைக்
கொல்லா தருள் புரியும், நல்லாயன் யேசுநாதா! - தேவா!

2. எங்கும் நிறைந்த சோதியே, - ஏழைப்
பங்கில் உறைந்த நீதியே, - எங்கள்
சங்கடமான பாவ சங்கதங்களை நீக்கும்
துங்க இஸ்ருவேலின் வங்கிஷ கிரீடாதிபதி - தேவா

3. வேதாந்த வேத முடிவே, - செக
ஆதாரம் ஆன வடிவே, - ஐயா
நாதாவும் எமைப்பெற்ற பாதாவும் நீயே, யேசு
நாதா, ரட்சியாய்: வேறே ஆதாரம் எமக்கில்லை - தேவா!

— வேதநாயக சாஸ்திரியார்

66

ஆனந்தபைரவி ஆதி

பல்லவி

தேவா, சபைக்குயிர் ஈவாய்
தெய்வருள் பொழிவாய், தேவசுத்தாவியே

சரணங்கள்

1. தீவந்த நாவுகளால்
வா எங்கள் உள்ளில் சேர்ந்து
ஆவியின் மழை தாராய்
ஆனந்த வான் பரனே - தேவா

2. வா எங்கள் ஆறுதலே
வான் நின்று வந்த தேவே
ஆவியின் மழை தாராய்
ஆனந்த வான பரனே - தேவா

3. பாவத்தின் பாரத்திலே
வீழ்கின்ற எங்கள் வாழ்வில்
ஆவியின் மழை தாராய்
ஆனந்த வான் பரனே -தேவா

4. சோர்கின்ற நேரத்திலே
சீவன் தா இன்பமாக்கி
ஆவியின மழை தாராய்
ஆனந்த வான் பரனே - தேவா

— க. பே. முத்தையா (விடி வெள்ளி)

67

சாமா ஆதிதாளம்

பல்லவி

பாதம் ஒன்றே வேணும் - இந்தப்
பாரில எனக்கு மற்றேதும் வேண்டாம் - உன்
பாதம் ஒன்றே வேணும்.

சரணங்கள்

1. நாதனே, துங்க மெய் வேதனே, பொங்குநற்
காதலுடன் துய்ய தூதர் தொழுஞ்செய்ய - பாதம்

2. சீறுபுயலினல் வாரிதி பொங்கிடப்
பாரில் நடந்தாற்போல் நீர்மேல் நடந்த உன் - பாதம்

3. வீசும் கமழ் கொண்ட வாசத் தைலத்தை
ஆசையுடன் மரியூசிப் பணிந்த பொற் - பாதம்

4. போக்கிடம் அற்ற எம் ஆக்கினை யாவையும்
நீக்கிடவே மரந்தூக்கி நடந்தநற் - பாதம்

5. நானிலத்தோர் உயர் வான் நிலத் தேறிட
ஆணி துளைத்திடத்தானே கொடுத்த உன் - பாதம்

6. பாதம் அடைந்தவர்க் காதரவாய் பிர
சாதம் அருள், யேசுநாதனே என்றும் - பாதம்

— எஸ் எஸ். எரேமியா

அர்ப்பணம்

68

Love divine all love's excelling
(M. H. B. 431) 8, 7, D

1. அன்பின் ரூபி மோட்சானந்தம் பாரில் சய வந்தீரே:
எங்கள் ஏழை நெஞ்சில் வாசம் பண்ணி மருள் தீர்ப்பீரே
யேசுவே, நீர் பரிதாபம் அன்புமாய் இருக்கிறீர்:
பாரத்துக்கங் கொண்ட உள்ளம் வந்து தேற்றல் செய்குவீர்

2. உமது நல் ஆவி தாரும், எங்கள் நெஞ்சு பூரிப்பாய்
உம்மிற் சார நீரே வாரும், சுத்தநேச வடிவாய்
பாவ ஆசை எல்லாம் நீக்கி அடியாரை இரட்சியும்:
விசுவாசத்தைத் துவக்கி முடிப்பவராய் இரும்.

3. சர்வ வல்லவரே, வாரும் நாங்கள் உமதாலயம்:
எங்களுக்குத் தயைதாரும், என்றும் விலகாதேயும்,
என்றும் உம்மை ஸ்தோத்திரித்து வானோர்போலச்
சேவிப்போம்
குறைவற்ற அன்பைப் பெற்று ஒழியாமல் துதிப்போம்.

4. நாங்கள் மோட்ச வீட்டிற் சேர்ந்து கறை பிழை இன்றியே
உன்தன் சாயல் பெற்று வாழ்ந்து தேவ அன்பில் மூழ்கியே
எங்கள் கிரீடம் உன்தன் பாதம் வைத்துப் போற்றும்
வரைக்கும்,
தாதா, அடியாரை நித்தம் மறு ரூபமாக்கிடும்,

— சால்ஸ் உவெஸ்லி

ச. கூவி

69

All to Jesus I surrender (S. S. R. 601)

8. 7, 8. 7.

1. இயேசுவுக்கெல்லாம் நான் நேர்வேன்,
நான் எல்லாம் ஈவேன் பற்றுய்:
என்றும் இயேசுவை நேசித்து
நம்பிச் சீவிப்பேன் முற்றுய்

நான் எல்லாம் நேர்வேன்: நான் எல்லாம் நேர்வேன்:
இயேசுநாதரே உமக்கு நான் எல்லாம் நேர்வேன்,

2. இயேசுவுக்கெல்லாம் நான் நேர்வேன்,
ஒப்புவிப்பேன் நான் என்னை,
சிற்றின்பத்தை நான் நாடாமல்,
இயேசுவே, நோக்கும் என்னை,

3. இயேசுவுக் கெல்லாம் நான் நேர்வேன்,
மீட்பரே என்னில் தங்கும்
ஆவியின் வரத்தைத் தந்து
என்னை உம்மில் ஒன்றுக்கும்

4. இயேசுவுக் கெல்லாம் நான் நேர்வேன்,
இயேசுவில் நான் பூரிப்பேன்;
கர்த்தரே பெலத்தை ஊட்டி
உத்தமன் ஆக்கும் என்னை

5. இயேசுவுக்கெல்லாம் நான் நேர்வேன்,
இயேசுவில் நான் பூரிப்பேன்;
மா ரட்சிப்பின் பூரணத்தால்
இயேசுவே வாழ்க என்பேன்.

— டீ. பீ. நயிலஸ்

70

குன்ரேஸ் ரூபகதாளம்

பல்லவி

இயேசு சுவாமி! ஏழையென்னை ஈகிறேனையா,

அனுபல்லவி

என்று மென்னைத் தொண்டனாக ஏற்றிடு தூயா! - இயேசு

சரணங்கள்

1. தந்தையும் நீ, தாயரும் நீ, தமர்களும் நீயே,
தஞ்சமென்றுனையடைந்தேன், தயைபுரிவாயே - இயேசு

2. கானலை நீரென்று மாயுங் கடுவனமான் போல்
காசினிமீதே யுலைந்து கடுகினே னுன்பால் - இயேசு

3. இவ்வுலக மேன்மை செல்வம் யாவும் விழலே,
இன்பமுன்றன் பாதமென்று மேத்தித் தொழலே - இயேசு

4. பாவியெனை மீட்பதற்காய்ப் பாடுபட்டாயே,
பாதசேவை செயவெனக்குப் பலமளிப்பாயே - இயேசு

5. நேச மீட்பர்க் காயுலகில் நிந்தை யுற்றாலும்
நித்திய சீவ கிரீடம் நிசம் பெறலாகும் - இயேசு

— யாழ்ப்பாணப் பாடல்

71

சங்கராபரணம் சாப்புதாளம்

பல்லவி

என்னை ஜீவபலியாய் - ஒப்புவித்தேன்.
ஏற்றுக் கொள்ளும், யேசுவே!

அனுபல்லவி

அன்னை தந்தை யுந்தன் சன்னிதி முன்னின்று
சொன்ன வாக்குத்தத்த மல்லாது, இப்போது - என்னை

சரணங்கள்

1. அந்தகாரத்தி னின்றும் - பாவப்பேய்
அடிமைத் தனத்தி னின்றும்
சொந்த ரத்தக் கிரயத்தால் எனைமீட்ட
எந்தையே, உந்தனுக்கிதோ! படைக்கிறேன் - என்னை

2. ஆத்ம சரீரமதை - யுமக்கு
ஆதீனமாக்கி வைத்தேன்:
பாத்ரமதாய் அதைப் பாவித்துக்கொள்ளக்
காத்திருக்கிறேன்: கருணைசெய், தேவா - என்னை

3. நீதியி னுயுதமாய் - அவயவம்
நேர்ந்து விட்டேன் உமக்கு:
ஜோதி பரிசுத்த ராலய மாகவே
சொந்தமாய்த் தந்தேன் என்தன் சரீரத்தை - என்னை

72

மணிரங்கு திஸ்ர ஏகதாளம்

கண்ணிகள்

1. என்றன் ஜீவன் சொந்த மாகத்
தத்தம் செய்கிறேன் - ஜீவன் தந்த நாயகா

2. என்றன் நிமிஷம் நாட்கள் யாவும்
தத்தம் உமக்கே - உம்மை என்றும் போற்றவே

3. என்றன் வெள்ளி தங்க மெல்லாம்
பாதத்தில் வைத்தேன் - என்றன் சொந்தம் சூன்யமே

4. எனது புத்தி யுத்தி யாதி
மனதின் தத்துவம் - யாவும் உமது பாத்தியம்

5. என்றன் சித்தம் உன்றன் சித்தம்
நித்த முமதே - என்றன் சொந்த நாதனே

6. என்தன் இதயந் தந்தே னுன்சிங்
காச னமாக - என்றும் வந்து தங்கவே

7. நீயெப் பொழுதும் என்னை முழுதும்
சொந்தமாகவே - ஏற்றுக் கொள்வாய் நாயனே

— ஜே. எம். டேவிட்

73

பல்லவி

எனக்கொத்தாசை வரும் பர்வதம் நேராய்
என் கண்களே ஏறெடுப்பேன்

சரணங்கள்

1. வானமும் பூமியும் படைத்த
வல்ல தேவனிடமிருந்தே
எண்ணுக்கடங்கா நன்மைகள் வருமே
என் கண்களே ஏறெடுப்பேன் - எனக்கொத்தாசை

2. மலைகள் பெயர்ந் தகன்றிடினும்
நிலைமாறி புவியதிர்ந்திடினும்
மாறிடுமோ அவர் கிருபை எந்நாளும்
ஆறுதல் எனக்கவரே - எனக்கொத்தாசை

3. என் காலைத் தள்ளாட வொட்டாரீ
என்னைக் காக்கும் தேவன் உறங்கார்
இஸ்ரவேலைக் காக்கும் நம்தேவன்
இராப்பகல் உறங்காரே - எனக்கொத்தாசை

4. வலப்பக்கத்தில் நிழல் அவரே
வழுகாமல் காப்பவர் அவரே
சூரியன் பகலில் சந்திரன் இரவில்
சேதப் படுத்தாதே எனக்கொத்தாசை

5. எத்திங்கும் என்னை அணுகாமல்
ஆத்துமாவைக் காக்கும் என்தேவன்
போக்கையும் வரத்தையும் பத்திரமாக
காப்பாரே இது முதலாய் - எனக்கொத்தாசை

74

Take my life and let it be (M H. B 400)
7, 7, 7, 7.

1. என்தன் சீவன், யேசுவே, சொந்தமாக ஆளுமே
என்தன் காலநேரமும் நீர் கையாடியருளும்.

2. என்தன் கை பேரன்பினால் ஏவப்படும், என்தன் கால்
பணி செய்ய விரையும், அழகாக விளங்கும்.

3. என்தன் நாவு இன்பமாய் உம்மைப்பாடவும், என்வாய்
மீட்பின் செய்தி கூறவும் ஏதுவாக்கியருளும்

4. என்தன் ஆஸ்தி தேவரீர் முற்றும் அங்கீகரிப்பீர்;
புத்தி, கல்வி யாவையும் சித்தம் போற் பிரயோகியும்

5. என்தன் சித்தம் யேசுவே, ஒப்புவித்துவிட்டேனே;
என்தன் நெஞ்சில் தங்குவீர், அதை நித்தம் ஆளுவீர்.

— எவ். ஆர். கவ்கல்
(இந்திய மொழி பெயர்ப்பு)

75

முகாரி அடதாளம்

பல்லவி

என் சிலுவை எடுத்தே, என் யேசுவே!
இச்சணம் பின்னே வாறேன்

அனுபல்லவி

இன்நில மீதினில் எனக்காயுயிர் விட்டீர்
இரட்சகரே! எனக்குள்ள யாவும் விட்டு - என்

சரணங்கள்

1. உலகும்மை விட்டிடினும் - உம் தயையால்
உம்மை நான் பின் செல்லுவேன்
அலகை என் மேல் பாய்ந்து அதிகமாய் எதிர்த்தாலும்
அஞ்சாமல் போர் செய்து அவனை மேற்கொண்டு நான் - என்

2 என்றன் சுதந்திரத்தை - இழக்கினும்
சொந்தம் நீரே எனக்கு
பந்து சனங்களும் பற்றுறு நேசரும்
பகைத்துப் பழிப்பினும் பங்கு நீரல்லவோ - என்

3. பாடுகள் பட்டிடுவேன் - உம்மோடுநான்
பாரச் சிலுவை சுமப்பேன்
ஆடுகளுக்காக அரிய சீவன் தந்த
அன்பான மேய்ப்பரே. ஆடுகளை மேய்ப்பேன் - என்

4. ஆசை மேற்கொள்ள விடேன் - கெட்டலோக
பாச மணுகவிடேன்
ஈசன் லோகத்திலென்றும் நேசமுடனே தங்கி
மாசு களற உம்தன் தாசனுய் விளங்கிட - என்

— வி. சந்தியாகு

76

Hear the pennies dropping (M. S. H. 114)

6, 5, 6, 5,

1. தர்மக் காசைப் பாரும் விழும் ஓசை கேள்
யேசுவுக்கு யாவும் நேசமாயீவோம்
ஓசை, ஓசை, ஓசை, ஓசை, சாசின் ஓசை கேள்
யேசுவுக்கு யாவும் நேசமாயீவோம்

2. சிறியோர் நமக்கு செம்பும் பொக்கிஷம்
பெரியோராலுலும் ஈவோம் கனகம் - ஓசை

3, எங்கள் சொந்தக் காசை யேசுநாதர்க்கே
தந்தோம் நல் உதார சிந்தையோடுமே - ஓசை

1. சிறியோர் ஈந்ததை ஏற்றுக் கொள்ளுமே
சிறிதான விதை சித்தியாகுமே - ஓசை

— இந்திய மொழி மாற்றம்

77

What shall I render to my God

(M. H. B. 399) C. M.

1. தேவன் தந்த நன்மைக்காக, என்ன பதில் செய்வேன்?
பெற்ற நன்மை யோடுகூட, பின்னும் தரக் கேட்பேன்

2. நான் இரட்சிப்பின் பாத்திரம் துதியுடன் ஏற்பேன்,
ஒப்புக்கொண்டு அவர் வரம், மேன்மைப் படுத்துவேன்

3. அவர் சனங்கள் முன்பாக, நேர்கடன் செலுத்தி,
வைப்பேன் பீடத்தின் மேலாக எந்தன் எல்லா ஆஸ்தி

4. தேவே, நான் உமதடியான், என் செல்வம் உமக்கே,
உம் குடும்பம் பிறந்தவன், மீட்பாலும் உமதே

5. நும் கை என்னைச் சிருட்டித்து, பாவத்தைப் போக்கிற்று
கிர்பை, பாவக் கட்டவிழ்த்து உம்மோடு கட்டிற்று

6. கிர்பைக் கடலாம் கர்த்தரை, எனதாய்க் கூறுவேன்.
செலுத்தித் துதிப் பலியை, அவரிடம் செல்வேன்.

7. தேவைப் போற்றுங்கள் சுத்தரே! மன்னித்தார் நம்பாவம்
மோட்சம் சேருமட்டும் நாமே பாடுவோம் விண்கீதம்

— சால்ஸ் உவெஸ்லி
டீ. வேலுப்பிள்ளை

78

A charge to keep I have (M. H, B. 578)
S. M.

1. தேவனைத் துதித்து எனது ஆன்மாவை
மோட்சம் சேர்க்க முயல்வது என் முழுக் கடமை

2. காத்து என் காவலே நல் விழிப்புடனே,
உம் சொற்படி செய்ய, என்னை ஏவும் எசமானே.

3. தேவ பார்வைக் கேற்க, நேர்மை பூணச் செய்யும்:
நற் கணக்கை ஒப்புவிக்க தொண்டனுக் கருளும்

4. விழித்துச் செபித்து, உம்மிற் சார்ப் பண்ணும்.
வஞ்சகம் செய்யில், மரித்து நான் அழிவேன் என்றும்.

— சால்ஸ் உவெஸ்லி
டீ. பீ. நயில்ஸ்

79

O what shall I do my Saviour to praise
(M. H. B. 420) 10, 10, 11, 11.

1. மீட்பரைப் போற்ற நான் என்ன செய்வேன்,
தயை பாராட்டி உம்மைத் துதிப்பேன்,
தம்மில் நம்புவோரின் ஆன்மாவை அவர்
மீட்டுக் காக்கும் பெலன், நன்மையுள்ளவர்!

2 நீர் மீட்டுக் கொள்வோர் மகா பாக்கியர்,
உம்மில் மகிழ்வோர் பேரின்பம் கொள்வர்:
உம் முகத்தொளியில் சென்று களிப்பார்,
இயேசுவின் தயவை இன்னும் துதிப்பார்

3. உம் நாமத்திலே என்றும் மகிழ்வார்,
உம் நீதியிலே நிலைத்து நிற்பார்,
கழுவிச் செந்நீரில் நீதி அணிந்து,
தேவ சமூகத்தில் நிற்பார் துணிந்து.

4. நீர் அவர் கீர்த்தி, பெலனுமாவீர்
நானும் விரும்பி நோக்க நீர் செய்தீர்,
புதுச் சென்மமாசிச் சீவிக்கும் வாழ்வை,
என் தலைஉயர்த்தி ஈடேறும் நாளை.

5. இயேசு கர்த்தரை அரணாய்க் கொள்வேன்,
அவர் வார்த்தையை நம்பி நான் நிற்பேன்,
தயையுள்ள கர்த்தர், யாவும் தாம் செய்வார்,
என் மீட்பர் இராசர், சுத்தன் ஆக்குவார்.

6. காண்பேன், என் தேவே, தொண்டரின் இன்பம்,
தேர்வேன் உடனே, உம் அந்தரங்கம்:
துக்கம் நீங்கி உம்மில் நான் இன்பம் கொள்வேன்,
பக்தர் சந்தோசத்தில் என் பங்கடைவேன்.

— சார்ல்ஸ் உவெஸ்லி

டீ. பீ. நயில்ஸ்

80

கமாஸ் ரூபகதாளம்

பல்லவி

விந்தைக் கிறிஸ்தேசு ராசா
உந்தன் சிலுவை என் மேன்மை

அனுபல்லவி

சுந்தரம் மிகும் இந்தப் பூவில்
எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும் - விந்தை

சரணங்கள்

1. திரண்ட ஆஸ்தி, உயர்ந்த கல்வி
செல்வாக்குகள் மிக இருப்பினும்
குருசை நோக்கிப்பார்க்க எனக்
குரிய பெருமை யாவும் அற்பமே - விந்தை

2. உம் குருசே ஆசிக்கெல்லாம்
ஊற்றும், வற்று சீவநதியாம்,
துங்க இரத்த ஊற்றில் மூழ்கி
தூய்மை அடைந்து மேன்மையாகினேன் - விந்தை

3. சென்னி, விலா, கை, கால் நின்று
சிந்துததோ துயரோடன்பு:
மன்னு இதைப்போன்ற காட்சி
என்னுளீலுமே எங்கும் காணேன் - விந்தை

4. இந்த விந்தை அன்புக்கீடாய்
என்ன காணிக்கை ஈந்திடுவேன்
எந்த அரும் பொருள் ஈடாகும்?
என்னை முற்றிலும் உனக்களிக்கிறேன் - விந்தை

— வி சந்தியாகு

81

நவரோஸ் ஆதிதாளம்

கண்ணிகள்

1. வந்தாளுமே, என்னுளுமே,
உன் நாமமே என் தாபமே,
இன்னேரமே கண்பாருமே!

2. என்மேசையா, உன்னுசையே
கொண்டாசையாய் நான் பேசவே
உன்னுசிதா. நல்நேசமாய்!

3. இப்பாரிலே உன் பேரையே
தப்பாமலே நான் பாடியே
எப்போதுமே கொண்டாடுவேன்!

4. சத்துருக்கள் சதி செய்ய.
நித்தமுமே நெருக்குகிறார்
அத்தனேதான் அடைக்கலம்!

5. தேவாவியே வரந்தாரும்
இப்பாவியின் பயம் தீரும்
உம் சோதியின் ஒளி வீசும்!

— வேதநாயகம் சாஸ்திரியார்

வழிபாடு நிறைவு, மங்களம்

82

மத்தியமாவதி
சங்கராபரணம் ஆதிதாளம்

1. அனுக்ரக வார்த்தையோடே - இப்போ - து
அடியாரை அனுப்புமையா
மனதில் தயவுறும் மகத்துவபரனே
வந்தனம் உமக்காமென்

2. நின்திரு நாமமதில் - கேட்ட
நிர்மலமாம் மொழிகள்
சந்ததம் எமதகம் மிக பலனளித்திடர்
சாமி நின்னருள் புரிவாய்

3. தோத்திரம் புகழ் மகிமை கீர்த்தி
துதிகனம் தினமுமக்கே
பாத்திரமே அதிசோபித பரனே!
பாதசரண் ஆமென்!

— ஜே. சிங்கு (நெய்யூர்)

83

ஆனந்தபைரவி ஆதிதாளம்

பல்லவி

இன்னமும் நாம் யேசு பாதத்தில் - சந்திக்கும்வரை
என்றும் கத்தருன்னைக் காப்பாரே

அனுபல்லவி

தன்னுடைய காவலுன்மேல் - தப்பாமல் வைத்துத் தற்
காத்துத்
தன்னிருகரத்தால் உன்னைத் தாங்கியே காத்துக்கொண்டு
இன்

சரணங்கள்

1. தன்னிரு சிறகுகளின் கீழ் - உன்னை மறைத்து
தாங்கித் தயவோடு காப்பாரே!
இன்னமும் திருமன்னவை - என்றும் உனக்களித்து
இன்பமோடே உன்னைத்தாங்கி - எல்லாத் தீங்குக்குந் தற்
காத்து - இன்

2. சீவியத்தின் பாரம் உன்னையே வதைத்திடாமல்
சீருடனே சுத்தன் காப்பாரே!
பாவ சோதனைகள் உன்மேல் - படரிந்து பிடித்திடாமல்
பாலித்தணைத்தே உன்னையே - பட்சமோடே பாதுகாத்து
- இன்

3. ஆண்டவரின் அன்பின் கொடிதான் - உன்மேல் பறந்து
ஆட, மகிழ்ந் தானந்தங் கொள்வாய்;
நீண்டிடும் ஆயுளளித்து - நிதமும் சுகத்தைத் தந்து
நீண்டகாலமாக உன்னை - நேசித்துப் பரிபாலித்து - இன்

— எஸ். ஜே. சிங்

84

Lord behold us with thy blessing
(M, H, B, 8 7 0) 8, 7, 8, 7, 4, 7

1. கர்த்தரே, ஆசிசொரிந்து, அடியாரை அனுப்பும்,
உமதருள் மீட்பைத் தந்து நாம் பூரிக்கச் செய்திடும்,
இவ்வனத்தில், நம்மை வழிநடத்தும்

2. வேதவாக்கின் தொனிக்காக, உம்மைப் போற்றித்துதிப்
போம்,
மீட்பின் வரங்களுக்காக, தவித்து வேண்டிக்கொள்வோம்
என்றென்றைக்கும், எம்முடன் தங்கும் என்போம்

3. நீர் இப்பூமியிலிருந்து எம்மை அழைக்கும்போது,
தூதர் செட்டையாற் பறந்து, மீட்பரைத் தரிசித்து
அவரோடு, ஆழ்வோமாக மகிழ்ந்து

— எச். ஜே. புக்கல்
ஜே. பென்யமின்

85

Praise God from whom all blessing flow
(M. H. B. 943) L. M.

சர்வ சீவ தயாபரர்
பிதா சுதன் ஆவி, இவர்
மாந்தர் தூதர்கள் ஒன்றுக
இவரைப் போற்றுவாராக!

— தோமஸ் கென்
பிற்றர் பேலிவல்

86

சுருட்டி ஆதிதாளம்

1. சீர் யேசு நாதனுக்கு ஜெயமங்களம். ஆதி
திரியேக நாதனுக்குச் சுபமங்களம்
பாரேறு நீதனுக்கு, பரம பொற் பாதனுக்கு
நேரேறு போதனுக்கு, நித்திய சங்கீதனுக்கு - சீர்

2. ஆதி சருவேசனுக்கு, ஈசனுக்கு மங்களம்,
அகிலப் பிரகாசனுக்கு, நேசனுக்கு மங்களம்,
நீதி பரன் பாலனுக்கு, நித்திய குணாளனுக்கு
ஓதும் அனுகூலனுக்கு, உயர் மனு வேலனுக்கு - சீர்

—வேதநாயகம் சாத்திரியார்

87

சங்கராபரணம் சாப்புதாளம்

பல்லவி

சுப ஜெய மங்களமே நித்ய சுப ஜெய மங்களமே
சுகமே-தரவே-புவிமீ- துயிர்த்த சுதனேசு நாதருக்கே!

சரணங்கள்

1. தீர்க்க ருரைத்தனரே - இன்று
யேசு உயிர்த்தனரே,
செகதீஸ் -பரனர் -சுதனர் -கிறிஸ்து
செயமா யெழுந்தவர்க்கே - சுப

2. தூதர் சங்க முழங்க - வானம்
சோதி யிலைலங்க
துரிதமாய்ப் -பரனர் -களிகூர்ந் -திடவே
தொனியா யெழுந்தவர்க்கே - சுப

3. அங்கங் குளிர்ந்திடவே - உல
கெங்கும் மகிழ்ந்திடவே
அடியா -ரின்சா -லின்கூ -ரொடித்து
அகில மெழுந்தவர்க்கே - சுப

4. காலையிலே எழுந்து - நிதம்
கத்தனையே நினைத்து
கரமே -குவித் -துதிபா -டிடவே
காலை யெழுந்தவர்க்கே - சுப

5. ஆனந்தம் பாடிடவும் - பரன்
அன்பைக் கொண்டாடிடவும்
அசையா -நிலையோ -டெழுந்து -தொழவே
அருள் கூர்ந்திடுபவர்க்கே - சுப

6. எக்காளமே தொனிக்க - பக்தர்
யாவருமே யெழும்ப
இனிதாய் -அரசா -ளவுமேயுலகில்
எழு மிம்மானு வேலர்க்கே - சுப

— அ. ஜே. பிச்சைமுத்து

88

1. சுந்தரதேவ ராஜகிறிஸ்து சுவாமிக்கே ஜெயமங்களம்
அந்தர வான்புவி தந்தபரன் ஆனந்தர்க்கே மங்களம்
விந்தையாகவே புவிவந்த மேசையா
தினமுந்தன் அடியார்க்கருள் தந்து காரையா

2. நித்திய சீவ சத்திய தேவே நின்னருளீய வந்திடவே
துத்தியம் பாடிட மிகவே, தங்கும் புகழ் சாற்றிடவே,
கத்தனே யுந்தன் பரிசுத்த பாதமே
தினம்காத்து நிற்கின்றோம் நற்கருணை செய்யுமே.

3. மங்களமே செயமங்களமே, மாமன்னன் யேசு கிறிஸ்துவுக்கே
இங்கிதமே புகழ் சங்கீதமே, என்றென்றும் புகழ் மங்களமே
பாசமலர் தந்தெமை ஆசீர்வதித்தாய்
நன்னேசமாய் நீடுழிகாலமே காப்பாய்.

— வேதநாயகம் சாத்திரியார்

89

Go labour on spend and be spent
(M. H. B. 580) L. M.

1. போ வேலை செய், முயன்று செல்
பிதா சித்தம் செய்தல் இன்பம்,
உன் கத்தர் சென்ற பாதையில்
தொண்டன் நீயும் செல்ல வேண்டும்.

2. போ வேலைசெய், வீண் அல்லவே
மண்ணில் நட்டம் விண் லாபமாம்
புகழார் உன்னை மண்ணோரே,
ஆயின் கத்தர் புகழ் உண்டாம்

3. போ வேலை செய், பகல் மங்கும்
இராக்காலம் விரைந்திடும்
செய் நீ வேலை, தூக்கம் வேண்டாம்
அப்போதான் ஆன்மாக்கள் தப்பும்.

4. இருளே மண்ணோரின் நிலை
சாகிறார் நம்பிக்கை அற்று
இருட்டை நீக்கும் தீபத்தை
வாங்கி லோகமெங்கும் வீசு

5. சோராமல் நீ விழி, செபி
மீட்பைக் கூறும் ஞானம் பெற்று
லோக வீதிகளில் ஓடி
அலைந்தோன் உட்செல்ல ஏவு

6. முயற்சிசெய், வரும் இன்பம்
ஓய்வு, வீடும் பின் கிடைக்கும்,
மணவாளன் சாம சத்தம்
'இதோ வந்தேன்' என்று கேட்கும்

— கோறேசியஸ் பொனர்
யோண் கில்னர்

90

சங்கராபரணம் **ஆதிதாளம்**

பல்லவி

மங்களம் சதா - செய - மங்களம் வேதா!
எங்கள் துங்கமங்களர்க்கு - மங்களம் சதா

சரணங்கள்

1. அணைத்துக் காத்தவா உலகனைத்தும் படைத்தவா
இணையில்லா பிதாவுமக்கு மங்களம் சதா - மங்களம்

2 யேசுநாயகா – எம் - நேசநாயகா
மாசில்லாத சுதனுமக்கு மங்களம் சதா - மங்களம்

3. ஞானவாரியே - திரு - வானமாரியே!
ஆனந்த சுத்தாவியுமக்கு மங்களம் சதா - மங்களம்

— ஞா. சாமுவேல் ஐயர்

91

Saviour again to Thy dear name
(M. H. B. 691) 10, 10, 10, 10.

1. மீட்பரே இப்போ பிரியும்போது,
வாழ்த்துவோம் உம் நாமத்தைப் புகழ்ந்து
உம் அருள் தந்து நம்மை அனுப்பும்
என்று மன்றுடிக் கேட்போம் யாவரும்

2. வீட்டுக்குப் போகையில் அருள் தாரும்
அங்கே நம்மோடே எப்போதும் தங்கும்
பாவம் யாவையும் விலக்கி முற்றுய்
உம் அடியாரைக் காத்திடும் அன்பாய்.

3. உம் அருள் தந்து இரா முற்றுக
இருட்டை மாற்றும் வெளிச்சமாக,
எவ்வித் நாச மோசங்கள் வந்தும்,
உமது பிள்ளைகளைக் காத்திடும்

4. அருள் தாரும் இம்மைச் சீவியத்தில்
ஆற்றித்தேற்றும் நமது துக்கத்தில்
பின்பு நம்மை அழைக்கும் வேளையில்
சேர்த்துக் கொள்ளும் மோட்ச மகிமையில்

— யோண் எலர்ரன்
ஈ. எஸ். அடம்ஸ்

திரித்துவம், கடவுள் - தந்தை மகிமை

92

Now thank we all, our God (M. H. B. 10)
6, 7, 6, 7, 6, 6, 6, 6

1. அற்புதமாய் நம்மை - காப்பாற்றிடும் கர்த்தாவை
அனேக நன்மையால் - ஆட்கொண்ட நம்பிரானே
இப்போது ஏகமாய் - எல்லோரும் போற்றுவோம்:
மாநன்றி கூறியே - சாட்டாங்கம் பண்ணுவோம்

2. தயாபரர் என்றும் - நம்மோடிருப்பாராக
கடாட்சம் காட்டியே - மெய்வாழ்வை ஈவாராக
மயக்கும் வேளையில் - நேர் பாதை காட்டுவார்
இம்மை மறுமையில் - எத்தீங்கும் நீக்குவார்

3. வானுதி வானத்தில் - மாண்பாக அரசாளும்
பிதா குமாரனும் - ஆவியுமாம் ஏகர்க்கும்:
விண்ணேரும் மண்ணேரும் - நீடூழி காலமே
புகழ்ச்சி தோத்திரம் - செலுத்து வார்களே.

— மாட்டின் றிங்காட்
(இந்திய மொழி பெயர்ப்பு)

93

சங்கராபரணம் ஆதிதாளம்

ஆகமங்கள் புகழ்வேதா, நமோ நமோ!
வாகுதங்கு குருநாதா, நமோ நமோ!
ஆயர் வந்தனைசெய் பாதா, நமோ நமோ! - அருளுபா

மாகமண்டல விலாசா, நமோ நமோ!
மேகபந்தியி னுலாசா நமோ நமோ!
வான சங்கம விஸ்வாசா நமோ நமோ! - மனுவேலா

நாகவிம்ப முயர்கோலா, நமோ நமோ!
காகமும் பணிசெய் சீலா! நமோ நமோ!
நாடும் அன்பர் அனுகூலா நமோ நமோ! - நரதேவா

ஏகமந்திரமுறு பூமா, நமோ நமோ!
யூத தந்திரவதி சீமா, நமோ நமோ!
யேசு வென்ற திருநாமா நமோ நமோ! - இறையோனே

— வேதநாயக சாஸ்திரியார்

94

சங்கராபரணம் — ரூபகதாளம்

1. சத்தாய் நிஷ்களமாய் ஒரு சாமிய மும்மிலதாய்
இத்தாய் ஆனந்தமாய்த் திகழ்கின்ற திரித்துவமே
எத்தால் நானடியேன் கடைத்தேறுவன் என்பவந்தீர்ந்
தத்தா - உன்னையல்லால் எனக்கார் துணை யாருறவே

2. னம்மா விக்குருகி உயிரீந்து புரந்ததற்கோர்
கைம்மா றுண்டுகொலோ? கடைகாறுங் கையடையாய்ச்
சும்மாரட்சணை செய் சொல்சுதந்திரம் யாதுமிலேன்
அம்மான்! உன்னையல்லால் எனக்கார்துணை யாருறவே?

3. திரைசேர் வெம்பவமாம் கடல்மூழ்கிட தீயரெமைக்
கரைசேர்த் துய்க்க வென்றே பிணையாயினை கண்ணினியான்
பரசேயன் பற்றுகிலேன் எனைப்பற்றிய பற்றுவிடாய்
அரசே! உன்னையல்லால் எனக்கார்துணை யாருறவே

4. தாயே, தந்தைதமர் குரு சம்பத்து நட்பெவையும்
நீயே எம்பெருமான், கதி வேறிலை நிண்ணயங்காண்:
ஏயே, என்றிகழும் உலகோடெனக் கென்னுரிமை?
ஆயே, உன்னையல்லால் எனக்கார்துணை யாருறவே?

5. மையார் கண்ணிருண்டு செவி வாயடைத் துக்குளறி
ஐயால் மூச்சொடுங்கி யுயிராக்கைவிட் டேகிடுநாள்
நையேல் கைநெகிழேன் உனைநானுண் டஞ்சலென
ஐயா உன்னையல்லால் எனக்கார்துணை யாருறவே?

— எச். ஏ கிருஸ்ணபிள்ளை

95

குறிஞ்சி ஆதிதாளம்

1. திரிமுதல் கிருபாசனனே சரணம்!
செகதல ரட்சக தேவா, சரணம்!
தினம் அனுதினம் சரணம்; - கடாட்சி
தினம் அனுதினம் சரணம் - சருவேசா!

2. நலம் வளர் ஏக திரித்துவா, சரணம்!
நமஸ்கரி உம்பர்கள் நாதா, சரணம்!
நம்பினேன், இதுதருணம்; - தருணம்
நம்பினேன், தினம் சரணம் – சருவேசா!

3. அருவுருவே! அருளரசே! சரணம்
அன்று மின்று மென்றும் உள்ளாய், சரணம்!
அதிகுணனே! தருணம்: – கிரணமொளிர்
அருள் வடிவே! சரணம் - சருவேசா!

4. நித்திய தோத்திர நிமலா, சரணம்:
நிதி இஸ்ரவேலரின் அதிபதி, சரணம்:
நீதா, இது தருணம்; - கிருபைக்கொரு
ஆதாரா சரணம் – சருவேசா.

டீ. சத்தியநாதன் பிள்ளை

96

Let us with a gladsome mind (M. H. B.18)
7, 7, 7, 7

1, தேவராசாவைப் போற்றும், துதிக்கீதத்தைப் பாடும்:
அவர் தயை கிடைக்கும், சதாகாலம் நிலைக்கும்

2. சூரியனைப் படைத்தார்: சுற்றி ஓடக்கற்பித்தார்:
அவர் தயை கிடைக்கும், சதாகாலம் நிலைக்கும்

3. உண்டாக்கிச் சந்திரனை, ஆளச்செய்தார் இரவை
அவர் தயை கிடைக்கும், சதா காலம் நிலைக்கும்

4. வளர்க்கத் தானியத்தைச் சொரிகிறார் மழையை:
அவர் தயை கிடைக்கும் சதா காலம் நிலைக்கும்

5. செழிப்பாக்கி வயலை, தருகிறார் விளைவை,
அவர் தயை கிடைக்கும், சதாகாலம் நிலைக்கும்

6. மிகுபலன் ஈகிறார், களத்தை நிறைக்கிறார்:
அவர் தயை கிடைக்கும் சதா காலம் நிலைக்கும்

7. தந்து ஆன்ம உணவை, பின்பு ஈவார் மோட்சத்தை
அவர் தயை கிடைக்கும், சதா காலம் நிலைக்கும்

8. வாழ்த்து வோம் நம்ராசரை, மண்விண் வாழ்த்துமே
உம்மை
பிதா, சுதன்: ஆவியே வாழ்த்துவோம் நாம் நித்தமே

— ஜோண் மில்ரன்
ஜோண் இல்னர்

97

All people that on earth do dwell (S. S. R. 9)
Duke St. L. M.

1. பூலோகத்தாரே யாவரும்
கர்த்தாவிற் களி கூருங்கள்;
அவருக்கே மா தோத்திரம்
கெம்பீரமாகப் பாடுங்கள்

2. யேகோவாதான் தாம் மெய்த் தேவனே;
நாமல்ல அவர் சிருட்டித்தார்.
நாம் சனம், அவர் ராசாவே;
நாம் மந்தை, அவர், மேய்ப்பனர்.

3. கெம்பீரித் தவர் வாசலை
கடந்து போய் பிரகாரத்துள்,
சிறந்த அவர் நாமத்தை
கொண்டாடித் துதிசெய்யுங்கள்

4. கத்தர் எம்மீது தயாளர்
இரக்கம் என்றும் உள்ளவர்:
அவர் அநாதி நித்தியர்:
என்றும் மாறுத சத்தியர்.
திருச்சபைக் கீதங்கள், C. S. I. 1950 வெளியீடு

98

Praise to the Lord the almighty
14, 14, 4, 7, 8,

1. போற்றிடு ஆன்மமே சிருட்டி கர்த்தாவாம் வல்லோனை:
ஏற்றிடு உனக்கு இரட்சிப்பு சுகமானோனை!
கூடிடுவோம்
பாடிடுவோம், பரனை
மாண்பாய்ச் சபையாரெல்லோரும்.

2 போற்றிடு யாவையும் ஞானமாய் ஆளும் பிரானை;
ஆற்றலாய்க் காப்பாரே தம்செட்டை மறைவில்நம்மை
ஈந்திடுவார்
ஈண்டு நாம் வேண்டும் எல்லாம்;
யாவும் அவர் அருள் ஈவாம்.

3. போற்றிடு காத்தனை ஆசீர்வதிக்கும் பிரானை
தேற்றியே தயவால் நிரப்புவார் உன் வாழ்நாள்:
பேரன்பராம்
பராபரன் தயவை
சிந்திப்பாய் இப்போ தெப்போதும்.

4. போற்றிடு ஆன்மமே என் முழு உள்ளமே நீயும்
ஏற்றிடும் கர்த்தரை சீவ ராசிகள் யாவும்;
சபையாரே.
சேர்ந்தென்றும் சொல்லுவீரே
வணங்கி மகிழ்வாய் ஆமென்.

99

All hail the power of Jesus' name (M. H. B. 91)
D. S. M.

1. போற்றுங்கள் எல்லோரும் சேர்ந்து
இயேசுவின் துதியை:
அவர் முன் தூதரே தாழ்ந்து
மேற் சூட்டும் முடியை

2. விண்மீன்களே முடிசூட்டி
ஏத்துங்கள் பதியை;
வான சேனைகளைக் கூட்டி
மேற்சூட்டும் முடியை

3. இரத்தச் சாட்சிகளே நீர்
கூறி அவர் மாண்பை;
ஈசாய் முளையைப் போற்றுவீர்
மேற்சூட்டும் முடியை

4. புறச்சாதியார் எண்ணுங்கள்
உம் துக்க மிடியை:
செலுத்தி நன்றித் துதிகள்
மேற்சூட்டும் முடியை

5. எச்சாதி குலமுஞ்சேரும்
அவர் காலடியை:
ஆர்ப்பரித்து நீர் எல்லோரும்
மேற்சூட்டும் முடியை

6. விண்ணோருடன் நாம் ஒன்றுக
போற்றி நம் கத்தரை
எந்நாளும் துதிப்போமாக
மேற் சூட்டி முடியை.

— ஏ. பெறனற்
டீ. பீ. நயில்ஸ்

100

O Worship The King (MHB 8)

10, 10, 11, 11

1. வானின் வேந்தரைப் போற்ற வாருங்கள்;
அவரின் அன்பை பாடி வாழ்த்துங்கள்;
கேடயம் போல் நின்று நம்மைக் காக்கிறார்;
ஒளியைத்தரித்து மாண்பை அணிந்தார்.

2. மகாவல்லவராய், யாவும் ஆளுவார்;
மேகங்கள் மேலாய் ஏறிச் செல்கிறார்;
அவரின் முனிவு இடிபோற் கொல்லும்;
அவரின் விரைவு காற்றையும் வெல்லும்.

3 தேவே, பூமியை நன்முய் தாபித்தீர்:
நிறை செல்வத்தை அதிலே வைத்தீர்;
பேராத படிக்கு ஆதாரம் இட்டீர்:
ஆழத்தை அதற்குப் போர்வை ஆக்கினீர்.

4. உம் ஆதரிப்பை யார் சொல்லக்கூடும்!
அதின் வாசனை காற்றில் பரம்பும்:
அதொளியாய்த் தோன்றி: நதியாய்ப்பாயும்
மழையாய் இறங்கி, பனியாய்ப் பெய்யும்

5 நாங்கள் அற்பரும் ஈனரும் என்போம்
ஆயின் எப்போதும் உம்மில் நம்புவோம்:
உம்தயை யாவையும் நம்மேற் சொரிந்தீர்:
நம் கர்த்தர் நண்பரும் மீட்பரும் ஆனீர்

6 சர்வ வல்லவரே நீர் நமதன்பர்:
உம்மை விண்ணோரே ஏத்தித் துதிப்பர்:
மானிடராம் நாமும் உம்மைப் புகழ்வோம்;
உம் கீர்த்தி எந்நாளும் நம்நாவிற் தங்கும்.

— ரெபேட் க்ரூன்ட்
டீ. பீ. நயிஸ்ஸ்

101

My God, How Wonderful Thou Art (MHB 73)
C. M.

1. விண்ணோர்கள் போற்றுந் தேவனே,
உம் மேன்மை அற்புதம்;
பளிங்கு போலத் தோன்றுமே
உம் கிருபாசனம்.

2. நித்தியானந்த தயாபரா,
அல்பா ஒமேகாவே:
மாதுயர் போற்றும் ஆண்டவா
ராசாதி ராசாவே!

3. தேவா, உம் ஞானம் வல்லமை
அளவிறந்ததே:
உம் மகா பரிசுத்தத்தை
துதித்தல் இன்பமே

4. அன்பின் சொரூபி தேவரீர்,
நான் பாவியாயினும்,
என் நீச நெஞ்சைக் கேட்கிறீர்
உம் சொந்தமாகவும்.

5. மேலோக நித்திய பாக்கியத்தை
நான் பெற்று வாழுவேன்
உம் திவ்விய இன்பமுகத்தை
கண்ணுற்றுப் பூரிப்பேன்.

—எவ்: டபிள்யூ. ஃபேபர்
டீ. பீ. நயில்ஸ்

படைப்பு, பராமரிப்பு

102

1. இரட்சா பெருமானே, பாரும்
புண்ணிய பாதம் அண்டினேம்:
சுத்தமாக்கிச் சீரைத் தாரும்,
தேடிவந்து நிற்கின்றோம்
இயேசுநாதா, இயேசுநாதா,
உன்தன் சொந்தமாயினேம்

2. மேய்ப்பன்போல முந்திச் சென்றும்
பாதுகாத்தும் வருவீர்:
சீவ தண்ணீரண்டை என்றும்
இளைப்பாறச் செய்குவீர்:
இயேசு நாதா இயேசுநாதா
மேய்ச்சல் காட்டிப் போசிப்பீர்

3. நீதிப் பாதை தவறுமல்
நேசமாய் நடத்துவீர்;
மோசம் பயமுமில்லாமல்
தங்கச் செய்து தாங்குவீர்
இயேசுநாதா இயேசுநாதா
ஒரு போதும் கைவிடார்

4 சீவ கால பரியந்தம்
மேய்த்தும் காத்தும் வருவீர்:
பின்பு மோட்ச பேரானந்தம்
தந்து வாழச் செய்குவீர்.
இயேசுநாதா இயேசுநாதா
ஊழிகாலம் வாழ்வளிப்பீர்.

நவஜீவனம் - வெளியீடு. 1982.

103

1. உந்தன் சித்தம் போல் நடத்தும்
அத்தாவே நீர் நித்தம் என்னை
எந்தன் சித்தம் போல வேண்டாம்
என் பிதாவே என் யேகோவா

2. இன்பமான வாழ்க்கை வேண்டேன்
இனிய செல்வம் சீரும் வேண்டேன்
துன்பமற்ற சுகமும் வேண்டேன்
நின் தொண்டு செய்யும் அடியேன்

3. மேகத்தம்பம் அக்கினித்தம்பம்
ஆம் இவற்றுல் நீர் நடத்தி
அனுதினம் என்னேடிருப்பீர்
ஐயனே கடைக்கணியே

4. நேர் சமனும் உம் வழியோ
சிறுதூரமோ மா தொலையோ
எவ்விதத் துயர் கடலோ
ஏழையின் வாழ்வு எதிலும் - உந்தன்

104

பல்லவி

என்னை மறவா யேசு நாதா
உந்தன் தயவால் என்னை நடத்தும்

சரணங்கள்

1. வல்ல சீவ வாக்குத்தத்தங்கள்
வரைந் தெனக்காய் ஈந்ததாலே தோத்திரம்
ஆபத்திலே அரும் துணையே
பாதைக்கு நல்ல தீபமிதே - என்னை

2. பயப்படாதே வலக்கரத்தாலே
பாதுகாப்பேன் என்றதாலே தோத்திரம்
பாசம் என்மேல் நீர் வைத்ததினுல்
பறிக்க இயலா தெவருமென்னை - என்னை

3. தாய் தன் சேயை மறந்துவிட்டாலும்
மறவேன் உன்னை என்றதாலே தோத்திரம்
வரைந்தீரன்றே உம் உள்ளங்கையில்
வல்லவா எந்தன் புகலிடமே - என்னை

4. என்னை முற்றும் ஒப்புவித்தேனே
ஏற்று என்றும் நடத்துவீரே தோத்திரம்
எப்படியும் உம் வருகையிலே
ஏழை என்னைச் சேர்த்திடுமே - என்னை

105

பல்லவி

காலையும் மாலையும் வேளையும் கர்த்தரை
கருத்துடன் பாடிடுவோம்

அனுபல்லவி

பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் எனத்தூதர்
பாடிடும் தொனி கேட்குதே

சரணங்கள்

1. கத்தர் என் வெளிச்சம் சீவனின் பெலனும்
கிருபையும் இரட்சிப்புமானார்
அஞ்சிடாமல் கலங்காமல் பயமின்றி திகிலின்றி
அனுதினம் வாழ்ந்திடுவேன் - காலையும்

2. ஒன்றை நான் கேட்டேன் அதையே நாடுவேன்
என்றும் தம் மகிமையைக் காண
சீவனுள்ள நாளெல்லாம் ஆலயத்தில் தங்குவதை
வாஞ்சித்து நாடிடுவேன் - காலையும்

3. எந்தன் முகத்தை தேடுங்கள் என்று
என் கத்தர் சொன்னதினாலே
தம்(நின்)முகத்தை தேடுவேனே கூப்பிடும் என்சத்தம் கேட்டு
தயவாக பதிலளிப்பார் - காலையும்

4. தகப்பனும் தாயும் கைவிட்டாலும் என்
கத்தர் என்னை சேர்த்துக் கொள்வார்
எந்தன் உள்ளம் திரமாகத் திடமாகக் கர்த்தருக்கே
என்றென்றும் காத்திருக்கும் - காலையும்

106

ஜீவனுள்ள தேவனே வாரும்
சீவபாதையிலே நடத்தும்
சீவ தண்ணீர் ஊறும் ஊற்றிலே
சீவன் பெற என்னை நடத்தும்

தேவனே நீர் பெரியவர் தேவனே நீர் பரிசுத்தர்
தேவனே நீர் நல்லவர் தேவனே நீர் வல்லவர்

1. ஆதி அந்தமற்ற தேவனே
அல்பா ஒமேகா என் சீவனே
தூதர் போற்றும் தூயதூயனே
துதிகளில் மகிழும் ராசனே - தேவனே

2. பாவிகள் துரோகிகள் ஐயா
பாவ ஆதாம் மக்களே தூயா
பாதகர் எம் பாவம் போக்கவே
பாதகன் போல் தொங்கினீரல்லோ! - தேவனே

3. ஐந்து கண்ட மக்களுக்காக
ஐந்து காயமேற்ற நேசரே
நொந்துருகி வந்த மக்கள் மேல்
நேச ஆவி வீசச் செய்குவீர் - தேவனே

4. வாக்குத் தத்தம் செய்த தேவனே
வாக்கு மாறு உண்மை நாதனே
வாக்கை நம்பி வந்து நிற்கிறேம்
வல்ல ஆவி மாரி ஊற்றுவீர் - தேவனே

5. நியாயத்தீர்ப்பின் நாள் நெருங்குதே
நேசர் வரக் காலமாகுதே
மாயலோகம் நம்பி மாண்டிடும்
மானிடரை மீட்க மாட்டீரோ - தேவனே

அன்பு, அருள்

107

உசேனி ஏகதாளம்

பல்லவி

இயேசு நேசிக்கிறார் யேசு நேசிக்கிறார்
யேசு என்னையும் நேசிக்க யான்பெற்ற
தென்ன மாதயவோ

அனுபல்லவி

நீசனுமென்னைத்தான் யேசு நேசிக்கிறார்
மரிலாத பரன் சுதன் தன் முழு
மனதால் நேசிக்கிறார்

சரணங்கள்

1. பரம தந்தை தந்த - பரிசுத்த வேதம்
நரராம் ஈனரை நேசிக்கிறரென
நவில லாச்சரியம்

2. வேதத் தாச்சரியம் - வேகுவாய்த் தோணுகிலும்
நாதன் சேயென்னை நேசித்த செய்தியென்
நாளுமாச் சரியம்

3. நாதனை மறந்து - நாட்கழித்துலைந்தும்
நீதன் யேசென்னை நேசிக்கிறரெனல்
நித்தமாச் சரியம்

4. ஆசை யேசுவென்னை - அன்பாய்நேசிக்கிறார்
அதை நினைத்தவர் அன்பின் கரத்துள்ளே
ஆவலாய்ப் பறப்பேன்

5. இராசன் யேசுவின்மேல் - இன்பகீதம் சொலில்
ஈசன்மே செனைத்தான் நேசித்தாரென்ற
இணையில் கீதம் சொல்வேன்.

108

பல்லவி

உம்மைப்போல யாரே உலகிலே
என்னை நேசித்தாரோ - யேசையா!

அனுபல்லவி

அன்னையைப்போலே அமுதூட்டி வளர்த்தாயே - உம்

சரணங்கள்

1. தொங்கு சிலுவைக்காட்சி கண்டேன் நெஞ்சம் துடிக்குதய்யோ
பஞ்சமா பாவி என்தஞ்சம் உன் ஐந்து காயமல்லோ - உம்

2. பாவ ஆழியிலே அமிழ்ந்து மூழ்கும் வேளையிலே
தாவி எனை மீட்ட என் அன்பே வாழ்வில் மறப்பேனே - உம்

— ஐ. ரீ. யேசுகாயம். (சின்னண்ணன்)

109

தேசிகதோடி ஆதிதாளம்

பல்லவி

துதிமிகு மதிசய சுகுண சம்பூரண
தூயதேவே யெனை நோக்குவாய்

சரணங்கள்

1. கதியருளும் புண்ணிய நாதனே
காத்து ரட்சை செய்யும் நீதனே
சுத்தனே-அத்தனே-நித்தனே-பரிசுத்தனே துதி

2. அன்பருக் கடைக்கலமும் நீயே
ஆன்ம ரட்சண்ய வழியும் நீயே
ஆதியே, நீதியே, ஓதும் மெய்ப்பரஞ் சோதியே - துதி

3. அதிகமாய் அருள்மாரி பெய்குவாய்,
அன்பில் நாம் மூழ்கிடச் செய்குவாய்
ஆயனே, தூயனே, பாவிகள் நேயனே - துதி

4. கற்பாறையாம் உள்ளம் மாற்றுவார்
கடினமற ஆவி ஊற்றுவாய்
காரணா, பூரணா, போதமெய் ஆரணா - துதி

5. உடல் உள்ளம் பொருள்யாவும் ஈயவும்,
உனது தொண்டிலே மனம் சாயவும்
ஊக்கமும், பெலமும், ஆக்கிக் கண்நோக்குவால் - துதி

நீதி, நிறைவு

110

பல்லவி

அநாதி தேவன் உன் அடைக்கலமே
அவர் நித்திய புயங்கள் உன் ஆதாரமே

அனுபல்லவி

இந்தத் தேவன் என்றென்றுமுள்ள
சதாகாலமும் நமது தேவன்
மரண பரியந்தம் நம்மை நடத்திடுவார்

சரணங்கள்

1. காருண்யத்தாலே இழுத்துக் கொண்டார்
தூய தேவ அன்பே
இவ்வனந் தரத்தில் நயங்காட்டி உன்னை
இனிதாய் வருந்தி அழைத்தார் - இந்த

2. கானகப் பாதை காரிருளில்
தூய தேவ ஒளியே
அழுகை நிறைந்த பள்ளத்தாக்குகளை
அரும் நீரூற்றாய் மாற்றினீரே - இந்த

3. கிருபை கூர்ந்து மனதுருகும்
தூய தேவ அன்பே
உன் சமாதானத்தின் உடன்படிக்கைதனை
உண்மையாய்க் கர்த்தர் காத்துக் கொள்வார் - இந்த

4. இப்புவி யாத்திரை கடந்திடுவாய்
தூய தேவ தயவால்
கடும் கானகத்தில் கர்த்தர் மார்பினிலே
கிடைக்கும் இளைப்பாறுதலே - இந்த

111

பல்லவி

என்ன தியாகம்! என் கல்வாரி நாயகா
என்னையும் உம்மைப் போல் மாற்றிடவோ - என்ன

சரணங்கள்

1. விண்தூதர் போற்றிடும் உம் - பிதாவையும்
விட்டிறங்கி வந்தீரே

மாட்டுக் கொட்டிலோ வாஞ்சித்தீ ரய்யா! / ரையா
மானிடர் மேல் அன்பினால் - என்ன

2. தலையைச் சாய்த்திடவும் - உமக்கு ஓர்
தலமோ எங்கும் இல்லை
உம் அடிச்சுவட்டில் நான் செல்லவோ
முன்பாதை காட்டினீரே - என்ன

3. தாய் தந்தை வீடும் நாடும்
தனக்குள்ள தெல்லாம் வெறுத்து
அனுதினம் குருசைச் சுமந்தோரல்லோ
அப்போஸ்தலர் என்றீரே - என்ன

4. பாடுகளல்லோ உம்மை மகிமையில்
பூரணமாய்ச் சேர்த்ததே
உம்மோடு நானும் பாடு சகிப்பேன்
என் சீவனையும் வைத்தே - என்ன

112

I am thine o Lord (M. H. B. 746)
10, 7, 10, 7.

1. கர்த்தரே, நான் உம்முடைய பிள்ளை
என்றெண்ணி வருகிறேன
ஆயின், பக்தி மூலம் தேடி உம்மை
சேவிக்க நாடுகிறேன்

2. என்னைக் கிட்டக் கிட்டவாய் இழும்
உம் சிலுவை அண்டைக்கு
என்னைக் கிட்டக் கிட்ட கிட்டவாய் இழும்
உமது மார்பண்டைக்கு

3. கத்தரே, கிருபைப்பலம் தந்து
என்னை மெய்த் தொண்டன் ஆக்கும்,
என் நெஞ்சம் நம்பிக்கையாற் பூரித்து
உம்மில் நிலைக்கப்பண்ணும்

4. நான் உமது சந்நிதி வணங்கி
நிறை மகிழ்வு பெற்றேன்:
உம்மை என் நண்பனாய் நான் பாராட்டி
செபத்தில் தாகங் கொண்டேன்

5. காணமாட்டேன் உம் அன்பின் ஆழத்தை
ஆற்றை நான் தாண்டுமட்டாய்
காணமாட்டேன் உம் இன்பின் உச்சத்தை
உம்மில் நான் ஆறுமட்டாய்

பிரான்சஸ் அலிஸ்ஸான்,
டீ. பீ, நயிஸ்ஸ

113

பல்லவி

ஆர்ப்பரித்து நான் ஆனந்தங்கொள்வேன்
ஆண்டவர் சமூகம் என்னைத் தேற்றுதே
துன்பங்கள் யாவுமே துரிதமாய் நீங்குதே
இன்ப யேசு நாமத்தில்

சரணங்கள்

1. சந்தோச கீதம் என்னில் பொங்குதே
சர்வவல்ல யேசு என்னை நேசித்தார்
பெற்றதாம் நன்மைகள் ஒவ்வொன்றுய் எண்ணியே
பேரன்பு பொங்க என்றும் பாடுவேன் - ஆர்ப்பரித்து

2. பேரின்ப கீதம் என்னில் பொங்குதே
போன நாட்கள் என்னைக் கத்தர் தாங்கினார்
சோதனை சூழ்ந்து என் நம்பிக்கை குன்றினும்
சோர்ந்தழியாமல் என்றும் காத்ததால் - ஆர்ப்பரித்து

3. ஆனந்தக் கீதம் என்னில் பொங்குதே
ஆரவாரத்தோடே யேசு தோன்றுவார்
ஆவலாய் விழித்தே ஆவியில் செபித்தே
ஆயத்தமாய் நான் காத்து நிற்பதால் - ஆர்ப்பரித்து

114

பல்லவி

தேவ கிருபை என்றுமுள்ளதே
அவர் கிருபை என்றுமுள்ளதே
அவரைப் போற்றித் துதித்துப் பாடி
அல்லேலூயா என்றுர்ப்பரிப்போம்

சரணங்கள்

1. நெருக்கப் பட்டோம் மடிந்திடாமல்
கத்தர்தாம் நம்மைக் காத்ததாலே
அவர் நல்லவர் அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே - தேவ

2. சத்துரு சேனை தொடர்ந்து சூழ்கையில்
பக்தனும் தாவீதின் தேவன் நமக்கு
முன் சென்றுரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே - தேவ

3. அக்கினி சோதனை பட்சிக்க வந்ததும்
மூட்செடி தன்னில் தோன்றிய தேவன்
பாதுகாத்தாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே - தேவ

4. காரிருள் போன்ற கஷ்டங்கள் வந்ததும்
பாரினில் அவர் என் பாதையின் ஒளியாய்
என்னை நடத்தினர் அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே - தேவ

பொறுமை, தாங்குதல்

115

பல்லவி

கர்த்தரை நம்பியே சீவிப்போம்
கவலை கஷ்டங்கள் தீர்ந்திடும்
கைவிடா காத்திடும் பரமனின்
கரங்களை நாம் பற்றிக் கொள்வோம்

சரணங்கள்

1. சீவ தேவன் பின் செல்வோம்
சீவ ஒளிதனை கண்டடைவோம்
மனதின் காரிருள் நீங்கிடவே
மா சமாதானம் தங்கும்

2. உண்மை வழி நடந்திடும்
உத்தமனுக் கென்றும் கர்த்தர் துணை
கண்கள் அவன்மீது வைத்திடுவார்
கருத்தாய் காத்திடுவார்

3. உள்ளமதின் பாரங்களை
ஊக்கமாய் கர்த்தரிடம் சொல்வோம்
இக்கட்டு நேரத்தில் கூப்பிடுவோம்
இயேசு வந்து தாதரிப்பார்

4. அன்பு மிகு அண்ணலிவர்
அருமை யேசுவை நெருங்குவோம்
தம்மண்டை வந்தோரைத் தள்ளிடாரே
தாங்கி அணைத்திடுவார்

5. நீதிமானின் சிரசின் மேல்
நித்திய ஆசீர் வந்திறங்குமே
கிருபை நன்மைகள் தொடருமே
கேட்பது கிடைக்குமே

6. இம்மைக்கேற்ற இன்பங்களை
நம்மை விட்டே முற்றும் அகற்றுவோம்
மாறுத சந்தோசம் தேடிடுவோம்
மறுமை இராச்சியத்தில் - கத்தரை

116

Rock of ages cleft for me (M- H. B. 498)
7, S

1. பிளவுண்ட மலையே! புகலிடம் தாருமே
பக்கம் பட்ட காயமும், பாய்ந்த செந்நீர் வெள்ளமும்
பாவ தோசம் யாவையும் நீக்கும்படி அருளும்

2. கண்ணீர் நித்தம் சொரிந்தும், (ஓயாத்) / தொய்யாத் தவம் புரிந்தும்
பாவம் நீங்கமாட்டாதே: நீரே மீட்பர் ஏகரே!
செந்நீர் பட்டசிலுவை நான் சேர்ந்து, சார்வேன் உம்மை

3. நிழல்நேர் இவ்வாழ்விலே, கண்மூடும் என் சாவிலே
விண்ணுக் கேறும் நேரத்தில் நடுத்தீர்வைத் தினத்தில்
பிளவுண்ட மலையே! புகலிடம் தாருமே

— ஏ. எம். ரொப்வேடி
பீற்றர் பேசிவல்

117

பல்லவி

ஆ..... இயேசுவின் மகா அன்பிதே
அதின் ஆழம் அறியலாகுமோ
இதற் கிணையேதும் வேறில்லையே
இணையேதும் வேறில்லையே

சரணங்கள்

1. மாறிடா எம்மா நேசரே - ஆ
மாறுதவர் அன் பென்னுளுமே
கல்வாரிச் சிலுவை மீதிலே
காணுதே இம்மா அன்பிதே - ஆ ! இயேசுவின்

2. பாவியாக இருக்கையிலே - அன்பால்
பாரில் உன்னைத் தேடிவந்தாரே
நீசன் என்றுன்னைத் தள்ளாமலே
நேசனாக மாறிடவே - ஆ! இயேசுவின்

3. உள்ளத்தால் அவரைத் தள்ளினும் - தம்
உள்ளம் போலே நேசித்ததினால்
அல்லல் யாவும் அகற்றிடவே
ஆதி தேவன் பலியானாரே - ஆ! இயேசுவின்

4. ஆவியால் அன்பைப் பகிர்ந்திட - தூய
தேவனின் விண் சாயல் அணிய
ஆவியாலே அன்பைச் சொரிந்தார்
ஆவலாய் அவரைச் சந்திக்க - ஆ! இயேசுவின்

118

1 முள்ளுள்ள புதர்களின் மத்தியில்
ஒரு ரோஜா புஷ்பம் போலவே
மா சௌந்தர்ய மானவரே
இயேசு நாதனே எம் தேவனே
வாழ்த்துவோம் எங்கள் தேவனை
ஜீவ நாட்களிலும் மறு யாத்திரையிலும்
நன்றியோடே நாம் பாடிடுவோம்

2. இதயம் வெம்பி கசந்து நொந்து
மனகிலேசம் அடைந்திடுங்கால்
மனப்புண்ணில் எண்ணெய் தடவி
மன ஆறுதல் தந்திடுவார் - வாழ்த்துவோம்

3. தந்தை தாயும் என் சொந்தமானோரும்
கைவிட்டாலும் அவர் மாறிடார்
துன்பத்தில் எம்மைத் தாங்கிடுவார்
இன்பங்கள் எமக் கீந்திடுவார் - வாழ்த்துவோம்

கடவுள் - மைந்தன்
நாமம், மகிமை

119

பல்லவி

ராஜாதி ராஜனும் இயேசு ராஜன்
பூமியில் ஆட்சி செய்வார்
அல்லேலூயா, அல்லேலூயா
தேவனைத் துதியுங்கள்

சரணங்கள்

1. அல்லேலூயா, கர்த்தரையே ஏகமாய்த் துதியுங்கள்
அவர் நடத்தும் செயல்களெல்லால் பார்த்தோரே துதியுங்கள்
வல்லமையாய்க் கிரியைசெய்யும் வல்லோரைத் துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக் கொள்ளும் ஏசுவைத் துதியுங்கள்

2. தம்பூரோடும், வீணையோடும் கர்த்தரைத் துதியுங்கள்
இரத்தத்தினால் பாவங்களைப் போக்கினார் துதியுங்கள்
எக்காளமும் கைத்தாளமும் முழங்கிடத் துதியுங்கள்
எக்காலமும் மாறுதவர் இயேசுவைத் துதியுங்கள்

3 சூரியனே சந்திரனே தேவனைத் துதியுங்கள்
ஒளியதனை எங்கள் உள்ளம் அளித்தோரைத் துதியுங்கள்
அக்கினியே கல்மழையே படைத்தோரைத் துதியுங்கள்
அக்கினியாய் கல்மனதை உடைப்போரைத் துதியுங்கள்

4. பிள்ளைகளே வாலிபரே தேவனைத் துதியுங்கள்
வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே, பிரபுக்களே தேவனைத் துதியுங்கள்
செல்வங்களை இயேசுவுக்காய் செலுத்தியே துதியுங்கள்

5. ஆழ்கடலே சமுத்திரமே தேவனைத் துதியுங்கள்
அலையலையாய் ஊழியர்கள் எழும்பினார் துதியுங்கள்
தூதர்களே, முன்னோடிகளே, தேவனைத் துதியுங்கள்
பரலோகத்தை மீட்கப்பட்டோர் நிரப்புவார் துதியுங்கள்

120

பல்லவி

அன்பன் இயேசுவின் நாமத்திலே - இன்று
இன்பமாய் நாம் மகிழ்வோம்

அனுபல்லவி

பாவியை மீட்டார் பரமசுதன்,
ஆவியை ஈந்தார் அருட் குமரன்
காசினிமீதில் கருணை பெற்றோமே
ஆவியில் மகிழ்ந்து நாம் அக மகிழ்வோம்

சரணங்கள்

1. மாமிச சிந்தை மகாமரணம் - ஜீவ
ஆவியின் சிந்தை சமாதானம்:
அச்சாரமாய் ஆவி அருளினரே,
உச்சித வரங்களும் உவந்தனரே,
எச்சரித் துணர்த்தும் சத்திய ஆவியை
இச்சணம் ஏந்தி நாம் ஆர்ப்பரிப்போம்

2 நம் பட்சத்தில் தேவனிருந்தால் - இங்கு
நம்மை விரோதிப்பவன் யாரோ:
சொந்த மைந்தனே அன்பாய் ஈந்த பரன்
எந்த நன்மையும் இன்பாய் ஈந்திடாரோ?
துன்பம் பசி மோசம் பட்டயம் மரணம்
அன்பனே விட்டெமைப் பிரித்திடுமோ?

3. மேகம் போல் சாட்சி சூழ்ந்து நிற்க - கெட்ட
பாவப் பாரம் நெருங்குமோ?
வேகமாய் இயேசுவண்டை ஓடிடுவோம்,
தாகமாய் ஈசன் அன்பை நாடிடுவோம்,
ஜெகத்தினில் மாந்தர் ஜெயம் பெலம் பெற்றோம்
அகமகிழ்ந் தார்ப்பரித் தானந்திப்போம்

ஐ. ரீ. யேசுசகாயம்

121

பல்லவி

ஆத்துமமே ! என் முழு உள்ளமே
உன் அற்புத தேவனையே ஸ்தோத்திரி
பொங்கிடுதே என் உள்ளத்திலே
பேரன்பின் பெரு வெள்ளமே

சரணங்கள்

1. ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே
அருமையாய் இயேசு நமக்களித்த
அளவில்லாக் கிருபை பெரிதல்லவோ?
அனுதின ஜீவியத்தில்

2. கருணையாய் இதுவரை கைவிடாமலே
கண்மணி போல் எம்மைக் காத்தாரே
கவலைகள் போக்கிக் கண்ணீர் துடைத்தார்
கருத்துடன் பாடிடுவோம் - ஆத்துமமே

3. படகிலே படுத்து உறங்கினலும்
கடும்புயல் அடித்துக் கவிழ்த்தினலும்
கடலையும் காற்றையும் அமர்த்தி யெமைக்
காப்பாரே அல்லேலூயா - ஆத்துமமே

4. பரிசுத்த வான்களின் பாடுகளெல்லாம்
அதி சீக்கிரமாய் முடிகிறதே
விழிப்புடன் கூடித் தரித்திடுவோம்
விரைந்தவர் வந்திடுவார் - ஆத்துமமே

122

O for a thousand tongues to sing (M. H. B. 1)
C. M

1. ஆயிர நாவு வேண்டும், நான்
என் மீட்பரைப் போற்ற:
என் தேவராசர் மாண்புஞ் வான்
தயை, அன்பும் சாற்ற !

2. என் எசமானே, என் தேவே,
உம் நாம கீர்த்தியை
கூறி, எங்கும் பரப்பவே
தாரும், உம் துணையை

3. இயேசு ! பயம் மாற்று நாமம்;
துக்கம் போக்கும் நித்தம்;
பாவி காதில் இன்ப நாதம்;
சீவன், சாந்தம், சொஸ்தம்

4. பேசுவார் கேட்டு அச்சத்தம்,
செத்தோர் மீண்டும் வாழ்வார்,
துக்க முள்ளோர் கொள்வார் இன்பம்:
ஏழைகள் நம்புவார்

5. தீர்ந்த பாவ சக்தி போக்கி,
வன் சிறை மீட் டேற்பார்,
திரு ரத்தத்தாற் சீராக்கி,
என்னைச் சுத்தஞ் செய்வார்

6. கேளும் மந்தர், ஊமர் போற்றும்
கட்டவிழ்ந்த நாவால்
கண்ணற்றோர் மீட்பரைப் பாரும்
ஊனர் துள்ளும் இன்பால்

123

பல்லவி

இயேசு இராசனின் திருவடிக்கே
சரணம் சரணம் சரணம்
ஆத்ம நாதனின் மலரடிக்கே - சரணம்

சரணங்கள்

1. மாதூயர் தூயர் எனப் போற்றிடும் - விண்
தூதரோடே நாமும் போற்றுவோம்
மாதேவசபை பூவில் வாழ்த்தவே
சரணம் சரணம் சரணம் - இயேசு

2. ஆயனே தூய அருள் நாதனே - மெய்
வேதனே திவ்ய வாசனே - என்
சீவனே ஆத்ம நேசனே
சரணம் சரணம் சரணம் - இயேசு

3. துன்ப துயரம் சூழும் வேளையும் - மெ கு
கஷ்ட நஷ்டம் வரும் நாளிலும்
அன்பருக் கருள் தரும் இன்பமே
சரணம் சரணம் சரணம் - இயேசு

4. ஆடுபோல அடிக்கப்பட்டீரே - அன்பால்
தேடி எமை மீட்க வந்தீரே - எங்கள்
ஜீவ பலியாக மாண்டீரே
சரணம் சரணம் சரணம் - இயேசு

124

Jesu, the very Thought of thee (M H B 108)
C. M.

1. இயேசுவே, உம்மை நினைக்கில்
என் நெஞ்சம் மகிழும்;
ஆயின் உம்முகத்தைப் பார்க்கில்
ஆனந்தம் கதிக்கும்

2. உம் நாமத்தை அன்றி, வேறு
இனிய ஓசையை,
என் நெஞ்சு, ஞாபகம், நாவு
அறிய மாட்டாதே

3. நீரே நைந்தோர்க்கு நம்பிக்கை
பக்தர்க்கு மகிழ்வு
நீர் தாமே வீழ்ந்தோர்க்குத் தயை,
தேடு வோர்க்கு அன்பு

4. இந்த நன்மைகள் பெற்றோரின்
மகிழ்வை யார் சொல்வார்?
இயேசுவின் அன்பைக்கண் டோரின்
இன்பை மற்றோர் காணார்

5. இயேசுவே நம் மகிழ்ச்சியும்
செல்வமுமாய் இரும்;
இயேசுவே, நீர் இன்றும் என்றும்
நம் மாண்பாய் விளங்கும்

— கிளயவோ பேனட்
ஈ. றிக்

125

How sweet the Name of Jesus sounds (M. H. B. 99)
C. M.

1. இயேசு நாமம் இன்பதொனி
விசுவாசி காதில்;
துக்கம் ஆற்றி, காயம் மாற்றி,
நீக்கும் அவன் திகில்

2. ஆன்ம நோயைக் குணமாக்கி,
நெஞ்சின் நோவை மாற்றும்;
நம் ஆவியின் பசிநீக்கி
அதின் தொய்வை ஆற்றும்

3. மகிழ் நாமம், என்கன்மலை,
அதுவே என் தஞ்சம்;
ஒதுக்கிடம், பண்டசாலை,
குறைவற்ற செல்வம்

4. இயேசுவே, நீர் என் நாயகன்,
அன்பன் ஆசான் என்பேன்;
என்வழி, சத்தியம், சீவன்
என்றும்மைத் துதிப்பேன்

5. நெஞ்சின் அனல் இழந்து
நான் வருந்தும் போது,
உமது சாயலைப் பார்த்து
எழும்பும் என் வாழ்த்து

6. எச்சணமும் என் சுவாசம்
உம் அன்பைக் கூறட்டும்;
என் சாவில் உமது நாமம்
என் நெஞ்சைத் தேற்றட்டும்

— ஜோன் நியூட்டன்
டீ. பீ. நயில்ஸ்

126

தோடி ரூபக தாளம்

பல்லவி

இயேசு ராசா ! - எனை - ஆளும், நேசா

சரணங்கள்

1 அற்பு தப்பரஞ் சோதியே! சீலை
வெற்பி லோங்கிய நீதியே! - எனக்
காக மாதய வாக மானிட
ரூக மாமரி யாளிடம் வந்த, - இயேசு ராசா

2 ஐயா! என்மனம் ஆற்றி உன
தடிமை என்றெனைத் தேற்றி - குண
மாக்கி ஐயம் நீக்கி கை
தூக்கி மெய்ப்பாக்கி யங்கொடு, - இயேசு ராசா

3. சுத்த திரித்துவ வஸ்துவே! சுவி
சேட மகத்துவ கிறிஸ்துவே! - பரி
சுத்த னேகரி சித்தெனை இரட்சித்
தடிமை கொள் நித்தியந் தோத்திரம் - இயேசு ராசா

4. மங்களம் ஈசாவே! வளமிகு
சங்கை யின்ரா சாவே! - நரர்
வாழ்வே மன்னுவே மெய்த்
தேவே யுமக் கோசன் னுவே - இயேசு ராசா

— வேதநாயக சாஸ்திரியார்

127

பல்லவி

இயேசு என்ற திருநாமத்திற்கு
எப்போதுமே மிக ஸ்தோத்திரம்

சரணங்கள்

1. வானிலும், பூவிலும் மேலான நாமம்
வல்லமையுள்ள நாமமது
தூயர் சொல்லித் துதித்திடும் நாமமது - இயேசு

2. வேதாளம், பாதாளம் யாவையும் ஜெயித்த
வீரமுள்ள திரு நாமமது,
நாமும் ஜெயித்திடுவோமிந்த நாமத்திலே, - இயேசு

3. பாவத்திலே மாளும் பாவியை மீட்க
பாரினில் வந்த மெய் நாமமது
பரலோகத்தில சேர்க்கும் நாமமது, - இயேசு

4. உத்தம பக்தர்கள் போற்றித் துதித்திடும்
உன்னத தேவனின் நாமமது,
உலகெங்கும் ஜொலித்திடும் நாமமது, - இயேசு

5. சஞ்சலம், வருத்தம், சோதனை நேரத்தில்
தாங்கி நடத்திடும் நாமமது
தடை முற்றும் அகற்றிடும் நாமமது, - இயேசு

— பொதுப்பாடல்

128

பியாக் ஆதிதாளம்

பல்லவி

இயேசுவையே துதிசெய் நீ மனமே
இயேசுவையே துதிசெய், - கிறிஸ்து

சரணங்கள்

1. மாசணுகாத பராபர வஸ்து
நேசகுமாரன் மெய்யான கிறிஸ்து - இயேசு

2. அந்தரவான் தரையும் தரும் மைந்தன்
சுந்தர மிகுந்த சவுந்தரா நந்தன் – இயேசு

3. எண்ணின காரியம் யாவு முகிக்க
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க - இயேசு

— வேதநாயக சாஸ்திரியார்

129

பல்லவி

இயேசுவின் பாதம் பூசை செய்திடுவோம்
செபநறு மலராலே;
அர்ச்சனை செய்வோம் அன்பரின் நாமம்
பிரார்த்தனை முறையாலே

சரணங்கள்

1. நாற்பது நாளாய் நசரேயா வனத்தில்
நயந்து செபித்தாய் நீ,
தோற்கடித்த பேய் மேற்கொள்ளா தெம்மை
ஊற்றிடும் உமதாவி - கிறிஸ்து

2. செபமொழி வாசகம் திருவாய் மலர்ந்த
தபகுரு கிறிஸ்தரசே,
துயருடன் வந்துன் அருள்முகம் கண்டோம்
தயவுடன் அணைப்பாயே – அன்பாய்

3. உலகம் பேய் மரணம் தோற்கடித்தாயே
நிலவிய செபத்தாலே,
கவலை கொள்ளாதீர் கருத்துடன் செயியும்
நிலையுற்ற சாந்தி பெற்றீர் – என்ற

— ஐ. ரீ. யேசுசகாயம்

130

My Heart and Voice I Raise (M. H. B. 115)
6, 6, 8, D.

1. என் உள்ளம் ஓசையும், மேசியாவைப் போற்றும்:
மேசியா மேன்மையுள்ளவர்,
சர்வாண்ட கர்த்தராம், வல்ல வாக்கிணற் தாம்
சிஷ்டியை உருவாக்கினர்

2. அடிமை வேஷமாய் நம்கொடும் சாபமாய்,
கல்வாரியிற் தோன்றினரே:
ஓர் பலியாய் நின்றார், தம்ரத்தம் சிந்தினர்,
சிறைத்தளை தவிர்த்தாரே

3. விசயர் ஏறினர், மாற்றாரைத் தாம் வென்றார்
தோற்ற சேனை கட்டிக் கொண்டார்
அவ்வாட்சி அழித்தார், மேசியா ஆளுவார்
என்று மாற்றார் சாட்சி சொல்வார்

4. இரக்கம் தயையாய், ஞான நீதி அன்பாய்,
சர்வசாதியாரை ஆள்வார்:
மேசியாவைச் சேர்ந்தோர் மீட்பைக்கிட்டக்காண்போர்:
மகா ரட்சிப்பை உணர்வார்

5. வாழ்க நம் ராசாவே! ஆட்சிவர்த்திக்குமே,
உம்மாண்பு காண்பார்கள் யாரும்,
பேராழி அளவும், உம் நீதி பெருகும்,
பூமி முற்றுய்ச் சுத்தமாகும்

— பெஞ்சமின் ரோட்ஸ்
ஜோன் கில்னர்.

131

பல்லவி

எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்
யேசுவே உம்மை நான் துதிப்பேன் துதிப்பேன்
எந்த வேளையிலும் துதிப்பேன்

சரணங்கள்

1. ஆதியும் நீரே - அந்தமும் நீரே
ஜோதியும் நீரே - என் சொந்தமும் நீரே - எந்த

2. தாய் தந்தை நீரே - தாதியும் நீரே
தாபரம் நீரே - என் தாரகம் நீரே - எந்த

3. வாழ்விலும் நீரே - தாழ்விலும் நீரே
வாதையில் நீரே - என் பாதையில் நீரே - எந்த

4. வானிலும் நீரே - பூவிலும் நீரே
ஆதியில் நீரே - என் ஆபத்தில் நீரே - எந்த

5. துன்பத்தில் நீரே - இன்பத்தில் நீரே
இன்னலில் நீரே - மாறுதவர் நீரே - எந்த

6. ஞான வைத்தியராம் - ஔஷதம் நீரே
ஆத்ம நேசராம் - என் நண்பரும் நீரே- எந்த

7. ஞானமும் நீரே - கானமும் நீரே
நியாயமும் நீரே - என் நாதனும் நீரே - எந்த

8. ஆறுதல் நீரே - ஆதாரம் நீரே
ஆசையும் நீரே - என் ஆனந்தம் நீரே - எந்த

9. மீட்பரும் நீரே - மேய்ப்பரும் நீரே
மேன்மையும் நீரே - என் மகிமையும் நீரே - எந்த

10. தேவனும் நீரே - ஜீவனும் நீரே
ராஜனும் நீரே - என் சர்வமும் நீரே - எந்த

132

பல்லவி

இயேசு நல்லவர் இயேசு நலலவர்
இயேசுவைப் போல் வேறு நேசரில்லையே

சரணங்கள்

1. கர்த்தரைப் பாடியே போற்றிடுவோமே
கருத்துடன் துதிப்போம் இனிய நாமமதே
கடலின் ஆழம்போல் கருணையோடிரக்கம்
கரையில்லை அவரன்பு கறையற்றதே

2. கொடுமையோர் சீறல் பெருவெள்ளம் போல
அடிக்கையில் மோதியே மதில்களின் மீதே
பெலனும் இவ்வேழைக்கும் எளியோர்க்கும் திடனுய்
வெயிலுக்கு ஒதுங்கும் விண் நிழலுமானார் - இயேசு

3. போராட்டம் சோதனை நிந்தை அவமானம்
கோரமாய் வந்தும் கிருபையில் நிலைக்க
தேவ குமாரன் விசுவாசத்தாலே நான்
சீவித்துச் சேவிக்க இடமளித்தார் - இயேசு

4. கல்லும் முள்ளுகளுமுள்ள கடினப் பாதையிலே
கலக்கங்கள் நெருக்கங்கள் அகமதை வருத்த
எல்லையில்லா எதிர் எமக்கு வந்தாலும்
வல்லவர் இயேசு நம்முன் செல்கிறார் - இயேசு

133

நாதநாமக்கிரியை — ஏகதாளம்

பல்லவி

கும்பிடுகிறேன், நான் கும்பிடுகிறேன் - எங்கள்
குருயேசு நாதர் பதங் கும்பிடுகிறேன்

சரணங்கள்

1. அம்புவி படைத்தவனைக் கும்பிடுகிறேன் - எனை
ஆண்டவனை மீண்டவனை கும்பிடுகிறேன்:
நம்புமடியார்க் கருளைக் கும்பிடுகிறேன்; - பவ
நாசனைக் கிருபாசனனைக் கும்பிடுகிறேன்;
தம்பமெனக் கானவனைக் கும்பிடுகிறேன் - நித்ய
சருவ தயாபரனைக் கும்பிடுகிறேன்:
உம்பர் தொழும் வஸ்துவையே கும்பிடுகிறேன்: - தொனித்
தோசன்னு வோசன்னுவென்று கும்பிடுகிறேன்:

2. ஒரு சருவேசுரனைக் கும்பிடுகிறேன்: - ஒன்றும்
ஒப்பதில்லா மெய்ப்பொருளைக் கும்பிடுகிறேன்:
திருவுருவானவனைக் கும்பிடுகிறேன்; - தவிது
சிம்மாசனுதிபனைக் கும்பிடுகிறேன்;
குருவென வந்தவனைக் கும்பிடுகிறேன்; - யூதர்
குல குல தேவதையைக் கும்பிடுகிறேன்;
அருமை யிரட்சகனைக் கும்பிடுகிறேன்; - என
தாத்துமாவின் நேசன்றனைக் கும்பிடுகிறேன்

— வேதநாயக சாஸ்திரியார்

134

கமாஸ் ஏகதாளம்

பல்லவி

சாந்த சுத்தவடிவே, சுப சுந்தர யேசு

அனுபல்லவி

பாவத்தைப் போக்கி, பாவியைக் கூட்டி,
பரிசுத்த மாக்கி, பரனிடம்சேர்த்த - சாந்த

சரணங்கள்

1. சாரோன் ரோஜா புஸ்பமே, சாலேமின் மாதுவின்
சௌந்திர ஜோதி நாயனே,
சிலுவையில் தொங்கி சீவனை விட்டாய்,
சிறியேனிப் பாவியை சீஷனுய்க் கொண்டாய் - சாந்த

2. பாவப் பரிகாரியே; பரிதபிக்கும் பாவியை
பற்றிச் சேர்க்கும் பாசமே,
பேதை யான் பதறி பின்வாங்கும் போது
பேரன்பாய் பிழையைப் பொறுத் தாதரிக்கும் - சாந்த

3. கடைமட்டும் காத்திடு; கருணைக்கண் பார்த்து
கால் தள்ளாது நாட்டிடு;
கஷ்டக் கவலைக் கடல் கொந்தளித்தும்,
கர்த்தா, கமல காலடி கைவிடேன் - சாந்த

— ச. யேசுதாசன்

135

பல்லவி

ஆ..... அற்புதமே அவர் நடத்துதலே
ஆனந்தமே பரமானந்தமே நன்றியால்
உள்ளமே மிகப் பொங்கிடுதே நாம்
அல்லேலூயா துதி சாற்றிடுவோம்

சரணங்கள்

1. துதித்துப் பாடிட பாத்திரனே
துங்கவன் இயேசுவின் நாமமதே
துதிகளின் மத்தியில் வாசஞ் செய்யும்
தூயனே நேயமாய் ஸ்தோத்தரிப்போமே

2. கடந்த நாட்களில் கண்மணிபோல்
கருத்துடன் நம்மைக் காத்தாரே
கர்த்தரையே நம்பி ஜீவித்திட
கிருபையும் தந்ததால் ஸ்தோத்தரிப்போமே

3. அக்கினி ஊடாய் நடந்தாலும்
ஆழியின் தண்ணீரைக் கடந்தாலும்
சோதனையோ மிகப் பெருகினாலும்
ஜெயம் நமக்கானதால் ஸ்தோத்தரிப்போமே

4. இந்த வனந்தர யாத்திரையால்
இன்பராம் இயேசு நம்மோடிருப்பார்
போகையிலும் நம் வருகையிலும்
புகலிட மானதால் ஸ்தோத்தரிப்போமே

5. வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார்
வாருமென்றே நாம் அழைத்திடுவோம்
வானத்திலே ஒன்று சேர்ந்திடும் நாள்
விரைவில் நெருங்கிட ஸ்தோத்தரிப்போமே

136

சூரியகாந்தம் ரூபகதாளம்

பல்லவி

துதிதங்கிய பர மண்டல சுவிசேடக நாமம்!
சுப மங்களமிகு சம்பிரம சுப சோபன ஷேமம்!

சரணங்கள்

1. அதிசுந்தர நிறை கொண்டுயர் அருள் மோக்கிஷ தீபன்,
கதி உம்பர்கள் தொழும் இங்கித கருணைப் பிரதாபன்.

2. மந்தை ஆயர் பணிந்து பாதம் மகிழ்ந்து வாழ்த்திய அந்தனர்;
நிந்தையாய் ஒரு கந்தை மூடவும் வந்த மாபரி சுத்தனர்,

3. சாதாரண வேதாகம சாஸ்திர சுவிசேஷன்,
கோதே புரி ஆதாமுடை கோத்திரத் திரு வேஷன்

4. விண்ணுடரும் மண்ணுடரும் மேவும் திருப் பாதன்,
பண்ணுதுவர் கண்ணும் வளர் பரமண்டல நாதன்

— வேதநாயக சாஸ்திரியார்

137

கரிகாம்போதி **ஆதிதாளம்**

பல்லவி

தேன் இனிமையிலும் இயேசுவின் நாமம்
திவ்ய மதுரமாமே; - அதைத்
தேடியே நாடி ஓடியே வருவீர்,
திருச்சபை யாளரே!

சரணங்கள்

1. காசினி தனிலே நேசம தாகக்
கஷ்டத்தை உத்தரித்தே பாவக்
கசடதை அறுத்துச் சாபத்தைத் தொலைத்தார்
கண்டுணர் நீ மனமே !

2. பாவியை மீட்கத் தாவியே உயிரைத்
தாமே ஈந்தவராம் - பின்னும்
நேமியாங் கருணை நிலவரமுண்டு
நிதந்துதி என் மனமே!

3. காலையிற் பனிபோல் மாயமாயுலகம்
உபாயமாய் நீங்கிவிடும் – என்றும்
கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு
கருத்தாய் நீ மனமே!

4. துன்பத்தி லின்பம் தொல்லையில் நல்ல
துணைதரும் நேசரிடம் - நீ
அன்பதாய்ச் சேர்ந்தால் அணைத்துனைக் காப்பார்
ஆசைகொள் நீ மனமே

5. பூலோகத் தாரும் மேலோகத்தாரும்
புகழ்ந்து போற்றுநாமம் - அதைப்
பிடித்துக் கொண்டால்தான் பேரின்ப வாழ்வைப்
பெறுவாய் நீமனமே

— ஏ. சவரிமுத்து

138

பைரவி

ஆதிதாளம்

பல்லவி

தோத்திரஞ் செய்வேனே - ரட்சகனே
தோத்திரஞ் செய்வேனே

அனுபல்லவி

பாத்திரமாக்க இம்மாத்திரங் கருணை வைத்த
பார்த்திபனே, யூத கோத்திரனே என்றும் - தோத்

சரணங்கள்

1. அன்னை மரி சுதனே, - புல்மீது
அழுதுக் கழுதவனே,
முன்னணை மீதுற்ற சின்னக் குமாரனே.
முன்னுரை நூற்படி, இந்நிலத் துற்றோனே - தோத்

2. கந்தை பொதிந்தவனே, - வானோர்களும்
வந்தனை புரிபவனே
வந்தாயர்க்கானந்த மாட்சி யளித்தோனே,
வான பரன் என்னும் ஞான குணவானே . தோத்

3. செம்பொன் னுருவானே, - தேசிகர்கள்
தேடுங் குருவானே,
அம்பர மேவிய உம்பர் குழாங்களோ
டன்பு பெற நின்று பைம்பொன் மலர் தூவி - தோத்

— டீ. சத்தியநாதன் பின்னே

139

பல்லவி

பாவிக்கு நேசராரே
இயேசு மனு வேலரே

சரணங்கள்

1. மாசற்ற தேவனுர் மைந்தப்ர தாபரே
இயேசுக் கிறிஸ்து நாதரே ஆசை மனுவேலரே

2. பிரயாசத்தோரே பாரஞ் சுமந்தாரே
கிருபைக் கண்ணுள்ளோரே இயேசு மனுவேலரே

3. நெரித்த நாணல் முறியார் பொரிந்த திரியவியார்
நிர்ப்பந்தரைத் தள்ளாரே இயேசு மனுவேலரே

4. கெட்ட குமாரரிக்குக் கிருபைப் பிதா வந்தார்
இட்ட பிரசாதத்தாரே இயேசு மனுவேலரே

140

Praise Him, Praise Him. (S. S. R. 208)
12, 10, 12, 10, 12, 10, 12, 10

1. போற்றும், போற்றும் புண்ணிய நாதரைப் போற்றும்
வானோர் கூடிப் பாடவும் இன்பமாய்,
பாரிலேயும் நாம சங்கீர்த்தனம் செய்ய
மாந்தர் யாரும், வாரும் ஆனந்தமாய்,
நேச மேய்ப்பன் கரத்தில் ஏந்துமாறு
இயேசு நாதர் நம்மையும் தாங்குவார்
போற்றும், போற்றும், தேவ குமாரனைப் போற்றும்,
பாது காத்து நித்தமும் போஷிப்பார்,

2. போற்றும், போற்றும், புண்ணிய நாதரைப் போற்றும்,
பாவம் போக்கப் பாரினில் ஜென்மித்தார்;
பாடுபட்டுப் ப்ராணத் தியாகமு மாகி
வான லோக வாசலைத் திறந்தார்;
மா கர்த்தாவே, ஸ்தோத்திரம் என்றும், என்றும்,
வாழ்க, வாழ்க, ஜெகத்து ரட்சகா!
அருள் நாதா, மாசணுகா பரஞ்சோதி,
வல்ல தேவா; கருணை நாயகா

3. போற்றும், போற்றும், புண்ணிய நாதரைப் போற்றும்
விண்ணும் மண்ணும் இசைந்து பாடவும்,
போற்றும், போற்றும்; மீட்பர் மகத்துவமாக
ஆட்சி செய்வார் நித்திய காலமும்
இயேசு ராஜா, மாட்சிமையோடு வந்து
இயேசு ஸ்வாமி, பூமியில் ஆளுமேன்;
லோகம் எங்கும் நீதியின் செங்கோலே ஓச்சி
ஜோதியாகப் பாலனம் பண்ணுமேன்.

— ஜி. பீ. நயிஸ்லி

141

சூரியகாந்தம் ரூபகதாளம்

பல்லவி

விசுவாசியின் காதில்பட, இயேசு என்ற நாமம்
விருப்பாயவர் செவியில் தொனியினிப்பாகுது பாசம்

சரணங்கள்

1. பசித்த ஆத்துமாவைப் பசியாற்றும் மன்னுவதுவே;
முசிப்பாறுதல் இளைத்தோர்க்கெல்லாம் முற்றுமந்தப்பெயரே,

2. துயரையது நீக்கிக் காயமாற்றிக் குணப்படுத்தும்;
பயங்கள் யாவும் யேசுவென்றுல், பறந்தோடியே போகும்

3. காயப்பட்ட இருதயத்தைக் கழுவிச் சுத்தப்படுத்தும்;
மயக்கமுள்ள நெஞ்சையது மயக்க மின்றி விடுக்கும்

4. என் ஆண்டவா, என் ஜீவனே, என் மார்க்கமே, முடிவே!
என்னுல் வருந்துதியை நீரே ஏற்றுக்கொள்வாய், தேவே.

— பாளயக் கோட்டைப்பாடல்

142

1. ஸ்தோத்திரம் இயேசுநாதா உமக்கென்றும்,
ஸ்தோத்திரம் இயேசு நாதா !
ஸ்தோத்திரம் செய்கிறேம் நின்னடியார்
திருநாமத்தி னுதரவில்.

2. வான தூதர் சேனைகள் மனைகர
கீதங்களால் எப்போதும்;
ஓய்வின்றிப் பாடித் துதிக்கப் பெறும்.
மன்னவனே உமக்கு

3. இத்தனை மகத்துவமுள்ள பதவி
இவ்வேழைகள் எங்களுக்கு
எத்தனை மாதயவு நின் கிருபை
எத்தனை ஆச்சரியம்.

4. நின் உதிரமதினால் திறந்த நின்
ஜீவ புது வழியாம்;
நின் அடியார்க்குப் பிதாவின் சந்நிதி
சேரவுமே சந்ததம்.

5. இன்றைத் தினமதிலும் ஒருமித்துக்
கூடவும் நாமத்தினால்;
தந்த நின் கிருபைக்காய் உமக்கென்றும்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே.

6. நீரல்லால் எங்களுக்கு, பரலோகில்
யாருண்டு ஜீவநாதா!
நீயேயன்றி இகத்தில் வேறெயொரு
தோட்டமில்லை பரனே.

பிறப்பு

143

1. அன்பின் தெய்வம் பாரினிலே
மானிடராயினர் பாடுவீரே வான
சேனைகளும் துதி பாடுகிறீரே
மனுக்குலமாய் நாமும் பாடிப்பணிவோமே
ஆனிடை மேய்ப்பரும் பாடுகிறார்
ஞானியரும் தேடிக் கண்டு கொண்டார்
முன்னணையில் தேவ பாலகனை
மன்னர் மன்னரும் பணிந்து கொண்டார்
வார்த்தை மாமிசமாய் வந்த நாளிதிலே
நன்றியுடன் நாமும் பாடிப் பணிவோமே

2. ஏவை சாபம் தீர்க்க வந்த
மேசியா இவரே பாடுவீரே
ஏசாயா தீர்க்கும் முன்பு பாடி வைத்தாரே
நேச பரனை நாம் பாடிப் பணிவோமே
ஏழைகள் பலன் கொண்டு பாடுகிறார்;
எளியவர் திடம் கொண்டு போற்றுகிறார்;
சேனைகளின் கர்த்தர் பிறந்தாரென்று
எருசலேம் வாசிகளும் அகமகிழ்ந்தார்
பெரு வெள்ளத்துக்குத் தப்பும்
அடைக்கலமாய் வந்த
பெரு நிழலை நாமும் பாடிப் பணிவோமே

3. ஆமேன் என்று கருத்துணர்ந்து
ஆண்டவன் யேசுவைப் பாடுவீரே
ஆறுதல் அடைந்தோர் கண்டு பாடுகிறீரே
அவருடன் சேர்ந்து நாம் பாடிப் பணிவோமே
பக்தர்கள் வசனித்துப் பாடுகிறார்;
பாவலர் புதுக்கவி பாடுகிறார்;
ஆதி அந்தம் இல்லா அற்புதனை
அன்புடன் அடியவர் பாடுகிறார்
நத்தார் என்னும் இன்பத் திருநாளிலே
பாவியின் நேசரைப் பாடிப் பணிவோமே.

சரணங்கள்

144

1. அதிகாலையில் பாலனைத் தேடி
செல்வோம் நாம் யாவரும் கூடி
அந்த மாடடையும் குடில் நாடி
தேவப் பாலனைப் பணிந்திடப் பாடி
வாரீர், வாரீர், வாரீர் நாம் செல்வோம்

2. அன்னை மரியின் மடிமேலே
மன்னன் மகவாகவே தோன்ற
விண்தூதர்கள் பாடல்கள் பாட
விண்மார்க்கமாய் நாம் செல்லுவோம் – வாரீர்

3. மந்தை ஆயர்கள் யாவரும் அங்கே
அந்த முன்னனை முன்னிலை நின்றே
நம் சிந்தனை குளிர்ந்திடப் போற்ற
அந்தக் காட்சியைக் கண்டிடலாமே - வாரீர்

145

பல்லவி

அருள் நிறை வள்ளல் அவனி மீதிலே
அவதாரமானார் அல்லேலூயா

அனுபல்லவி

திருப்பாத மலர்தனை தினம் தொழுதேற்றும்
திகழ் ஜோதி வேதம் உலகினில் சாற்றும் - அருள்

சரணங்கள்

1. வானிலோர் விண்மீன் வழிகாட்டத் தோன்றிட
ஞானிகள் மூவர் பின்னேயே சென்றிட
சத்திரம் வரை ஜோதி முன்னின்று விரைந்திட
சகலரும் ஆர்ப்பரித் தானந்தம் கொண்டிட - அருள்

2. ஏரோதரசன் ஏங்கிடவே மனம்
ஏசையனேயே போற்றினரே - ஜனம்
தூபவர்க்கம் தங்கம் வெள்ளைப்போளமும்
தூக்கிச் சென்றூர் தேவகாணிக்கையாகவே - அருள்

146

சங்கராபரணம் **ஆதிதாளம்**

பல்லவி

ஆரிவராராரோ - இந்த
அவனியோர் மாதிடமே
ஆவிடை குடிலிடை மோனமாயுதித்த இவ்
வற்புத பாலகனர்?

சரணங்கள்

1. பாருரு வாகு முன்னே – இருந்த
பரம்பொருள் தானிவரோ!
சீருடன் புவி, வான், அவை பொருள் யாவையுஞ்
சிருட்டித்த மாவலரோ? - ஆரிவ

2. மேசியா இவர்தானே? - நம்மை
மேய்த்திடும் நரர் கோனே?
ஆசையாய் மனிதருக்காய் மரித்திடும் அதி
அன்புள்ள மனசானே? - ஆரிவ

3. தித்திக்கும் தீங்கனியோ? - நமது
தேவனின் கண்மணியோ?
மெத்தவே உலகிருள் நீக்கிடுமதிசய
மேவிய விண்ணொளியோ? - ஆரிவ

4. பட்டத்துத் துரைமகனே? - நம்மைப்
பண்புட னாள்பவனே?
கட்டளை மீறிடும் யாவர்க்கும் மன்னிப்புக்
காட்டிடுந் தாயகனே? - ஆரிவ

5. ஜீவனின் அப்பமோதான்? - தாகம்
தீர்த்திடும் பானமோதான்?
ஆவலாயேழைக ளடைந்திடு மடைக்கல
மானவரிவர் தானே? - ஆரிவ

வி. மாசிலாமணி

147

இந்துஸ்தானி சாப்புதாளம்

பல்லவி

இயேசு ராசனே யன்றித் தேவ அவதாரம்
காசினியி லுண்டோ !

சரணங்கள்

1. பாசமாய்ப் பாவியின் பாவங்களை நீக்கி
மோசமின்றி ரட்சிக்க - இயேசு
நேசனேயன்றி இக்காசினி மீதவ
தாரம் செய்த தார் சொல்லும்? - இயேசு

2. பொற்புறு தேவ அவதாரமாகிய
சற்குரு இயேசுவைப் போல் - வேறே
நற்குரு இப்புவி எக்குருவுமில்லை
மிக்க உழன்று பாரும் - இயேசு

3. பாவப் பயங்கரச் சாபத் தண்டனையை
மேவச் சுமந் தொழித்து - தாமே
ஜீவபலியாகி ஏகரட்சையதை
வாகா யுண்டாக்குவித்த - இயேசு

4. சொற்படி முன்னுளில் அற்புதமாயெழுந்
திப்புவி சீஷரோடு - தங்கி
வெற்பேறி விண்ணேகி இப்போதும் சீவிப்போர்
தற்பரன் இயேசு ஒன்றே - இயேசு

— ஏ. வி. டோசன்

148

பல்லவி

இவ்வளவாய் எம்மில் அன்பு வைத்தாரே
அன்பின் தெய்வத்தைப் பாடுவீரே

சரணங்கள்

1. பாவிகளாகிய மனுக்குலம் அதனை
நல்வழிப்படுத்தும் நோக்கமாய்
அவர் தம் ஏக புதல்வனைத் தந்து
இம்மானு வேலனுய் எமக்களித்தார்

2. வானமும் வையமும் வணங்கிப் பணிந்திடும்
பாலகன் இயேசுவைப் பாடுவீரே,
வார்த்தை மாமிசமாகிய நாளிதில்
நன்மை கண்டோ மென்று பாடுவீரே

3. யேசுவென்னும் திருநாமத்தைச் சொல்லும்
பேசும் பாவப் பயம் நீங்கும்
காசினிக்கே ஒரு கலங்கரை விளக்காய்
காலமெல்லாம் எமைக் காத்திடுவார்

4. போற்றும் போற்றும் புண்ணியன் இவரே
வாழ்த்துக்கள் பாடி வணங்கிடுவோம்
ஓரு குலமாய் உலகனைத்துமே சேர்ந்து
உன்னதன் யேசுவைப் பாடுவீரே.

149

மியாகு — சாப்புதாளம்

பல்லவி

என்ன அதிசயம், என்ன அதிசயம்
என்ன அதிசயம் பார்,
பார் பார், பார் - என்ன

அனுபல்லவி

மின்னுது, மின்னுது, மின்னலொ ளிபோல
மன்னன் கிறிஸ்துவின் மானிட தேகம்
பார், பார், பார் - என்ன அதிசயம் பார்

சரணங்கள்

1. பெத்தலேம் சத்திரம் சித்தம தாகவே
அத்தனி ருப்பதைப் பார் - அவர்
பெற்றவர் பக்கத்தில் நித்திரை செய்கிற
சித்திர வித்தையைப் பார்:
கர்த்தாதி கர்த்தனும் காரண மானிடன்
பத்தரின் வாசன் பரம ராசன்
பார், பார், பார் என்ன அதிசயம் பார்

2. மாட்டுக்கொட்டிலில் தேட்டங் கொண்டவர்
மகிமை ரட்சகராம் - எமை
மீட்டுவிடவே நாட்டங் கொண்டவர்
மேதினி வேந்த ராம்
கூட்டங்கள் கூடி, பாட்டுக்கள் பாடி,
ஆட்டங்களாடி யகம கிழ்ந்து
பார், பார், பார் என்ன அதிசயம் பார்

3. கந்தைத் துணிகளைச் சொந்தம தாகவே
எந்தை யணிவதைப் பார் - ஆட்டு
மந்தையின் ஆயர்கள் விந்தையதாகவே
வந்து பணிவதைப் பார்
இந்தப் புவியோரைச் சொந்தமாய்ச் சேர்க்கவே
நிந்தையின் கோலமெடுத்த பரனே
பார், பார், பார் - என்ன அதிசயம் பார்

— சாலொமன் செல்லத்துரை.

150

பல்லவி

கர்த்தரின் நாமம் சொல்லும் போது களிப்புத் தோன்றுதே
நெஞ்சத்தில் வளர்ந்த அகந்தையெல்லாம் தன்னுலே மறையுதே
மன்பதை பாவம் தீர்க்கவந்த மாணிக்க நெஞ்சமே
என்றுமே என்றுமே உமக்கு நாங்கள் இனிமேல் தஞ்சமே

சரணங்கள்

1 அன்பாய் நாங்கள் கூடும்போது அன்பாய் வாருமே
சிதறிப்போன மனுக்குலத்தைச் சேர்த்துவைக்கவே
மோட்சத்தின் வாசல் திறக்கவந்த மன்னருள் மன்னரே
நாட்டுக்கும் எங்கள் வீட்டுக்கும் நீடு மகிழ்ச்சி தருவீரே

2. கண்ணே உறங்கு என்றதொனி காதில் கேட்குதே
கடுங்குளிரினில் நடு இரவினில் நல்ல ஓசையே
தாயின் மடியில் தஞ்சமானார் தரணி நாயகன்
தாழ்ந்து விழுந்து வணங்கிச் சென்றார் ஆயர் கூட்டமே.

151

ஹம்சத்வனி ஆதிதாளம்

பல்லவி

சீரேசு பாலன், ஜெய மனுவேலன்
சீர் நாமத்தை தினமே போற்றுவோமே

அனுபல்லவி

பாராளும் வேந்தன் பகரொண்ணு மைந்தன்
தாராள மாகத் தானே மனுவான - சீரேசு

சரணங்கள்

1. எண்ணரும் பெருமான் ஏழை சாயலாக
மண்ணி லேகின மாட்சிமை யாலே,
விண்ணவர்கள் போற்ற, வானக்கவி சாற்ற
வண்ணம்பாடி நாம் மகிழ்ந்திட வேண்டாமோ? - சீரேசு

2. உன்னத பரனுக் கொப்பில்லா மகிமை
இந்நிலத்தினில் மெய்ச் சமாதானம்,
மன்னுயிர்கள் மீது மா பிரியம் ஓங்க
தன்னுயிர் தந்த தயவை என்ன சொல்வோம் - சிரேசு

2. பாவப் பிணியாலே பாதகரைப் போலே
சாபத்தை நம்மேல் நாம் தேடினோமே,
கோபத்தைச் சுமக்க குவலயத்தை மீட்க
தீபமாய் வந்த மகத்வ மைந்தனை - சிரேசு

4. நித்தனே, என் பாவம் எத்தனை யானாலும்
சித்தம் உருகிச் சீர்கூற வேணும்,
அத்தனே, உன்பாதம் அண்டினேன் இப்போதும்;
பத்தியாய் உனைப் பகருவேன் எப்போதும் - சிரேசு

— எஸ். பரமானந்தம்.

152

1. சோபன கீதங்கள் இன்புடன் பாடியே
நாளிதில் மகிழ்ந்திடுவோம் - ஒரு
பாலகனைத் தெய்வம் பாரினில் தோன்றினார்
பார்த்தி பனைப் பணிந்தே

2. வானவர் வலம் வந்து வந்தனை செய்கிறார்
ஆயரும் அடி பணிந்தார் - ஒரு
தாரகை பின்சென்று ஞானியர் மூவரும்
கண்டு வணங்கினரே

3. பெத்தலேகேம் மென்னும் சித்திர நாட்டிலே
சத்திரத்தின் தொழுவில் - ஒரு
பத்திரமுமின்றி நித்திரை செய்கிறார்
இத்தரை மீட்பவரே

4. நன்றியுடன் நாமும் நாளிதிற் கூடியே
பாடிப் பணிந்திடுவோம் - ஒரு
அடிமையெனத் தம்மை எமக்கெனவே ஈந்தார்
அன்பைக் கொண்டாடிடுவோம்.

153

As with Gladness men of old (M. H. B. 132)

1. காரகை ஒன்றைக் கண்டு - சோதிடர் இன்பங் கொண்டு
திக்கறிந்து பின் சென்றார்; - தேவபாலனைக் கண்டார்,
அவ்விதம் விண்கர்த்தரே, - நம்மையும் நடத்துமே.

2. ஆவலாய் அவர் வந்து - சூழநின்று சேவித்து
உம் அருளைப் பெற்றனர்; - நெஞ்சம் தேறிச்சென்றனர்;
அவ்விதம் போற்ற நாமும், - எப்போதும் நம்மை ஏவும்.

3. முன் அவர்கள் உமது - பாதத்தண்டை பணிந்து
காணிக்கைவைத்தார் யாரும்; - அவ்விதம் நாம் எல்லோரும்
நம் ராஜரின் முன்பாக - காணிக்கை வைப்போமாக.

4. யேசுவே, நம்மை என்றும் - நற் பாதையில் நடத்தும்;
நம் ஆன்மாவை ஈற்றிலே - சேர்த்துச் சோதி வானிலே;
உம் ஒளியில் எப்போதும் - பூரிக்கும் வாழ்வைத் தாரும்

5. அந்த வான் தேசத்திலே - சாயங்காலம் இல்லையே;
நித்த சூரியனுய் நீர் - எப்போதும் துலங்குவீர்;
வாழும்போது வானிலே - வாழ்த்துவோம் நாம் ராஜாவை,

— உவில்லியம் சற்தர்டன் டிக்ஸ்
டூ. பீ. நயில்ஸ்

154

1. தீனதயாளா திரு மனுவேலா
தீயரை மீட்க வந்தாய்,
வானவியாபி மானிடர் பாசம்
வாணைத் துறக்கச்செய்தோ!
ஈனர் இஃதாலருள் பெற்றோம்,
ஈச னுவகையும் அடைந்தோம்,
ஊனுடலாவி உன்ன துவாக
உன்னத பேறு பெற்றோம்

2. சாஸ்வத தேவே சற்குரு கோவே,
தாசரைத் தேடி வந்தாய்,
ஈஸ்வர னருளே இங்கிதமாக
இம்மையும் காணச் செய்தாய்,
கண்டுணர்ந்தோம் கனிவதனம்;
நன்றுணர்ந்தோம் நறுமொழியே,
துன்பமகற்றித் தூய்மை இயக்க
அன்புடன் ஆளெமை நீ.

3. கள்ளனென்றுலும் வெள்ளனென்றுலும்
கனிவுடன் மனமுவந்தே
பிள்ளை நானென்றே பீடனமகற்ற
பெருந்தகை குரு சுறைந்தாய்;
தேசுடனிலங்கும் நின் முகமே
மாசுற வாட இக்ஷணமே
வீசுமுன் அன்பு மேதினி காண
ஆசி அருண்மாரியாம்

4. வாரிதி வானும் வளமாய் வகித்த
வல்ல பரன் சுதனுர்
பாரினில் நரனுய்ப் பாடுறுகாட்சி
பண்ணவன் பார்த்திலனே?
சாகரம் சமைத்தவன் மகனே?
தாகம் என்றெலித்தல் தகுமோ?
தக்ஷணையாகத் தன்னையே படைக்கும்
அக்ஷரன் அவனுமோ?

5. ஆதி நல்வார்த்தை ஆணகமடைந்து
அன்புட் னவனிதனில்
நீதி நிழற்றும் நின்மலனுக
நீசரைத் தேடி வந்தான்,
பூவுலகென்றுமே போற்ற
மூவுலகும் துதி முழங்கும்;
தந்தை சுதனும் தார்மிகனுவி
சிந்தை வைத் தேத்திடுவோம்.

— ஏ. எம். கே. குமாரசுவாமி.

155

பல்லவி

அல்லேலூயா - அல்லேலூயா
அல் - லேலூயா
பொற் கரனே ஓமேகாவே

சரணங்கள்

1. ஸ்தோத்திரம் பாடிப் போற்றுவோம்
ஸ்தோத்திரம் யேசு ராஜனுக்கே
ஆதியு மந்தமு மில்லோனே
அரூபனே உமக்கென்றும் ஸ்தோத்திரம்

2. பொன்னகர் மன்னன் பூவில் வந்தார்
புல்லணை மீதிலே ஸ்தோத்திரம்
பட்சமுற்று எந்தன் பாரம் தீர்த்த
பெத்தலே வாசனே ஸ்தோத்திரம்

3. மாயலோகம் உலகை மறந்து நானும்
மன்னவா உம் அன்பில் மகிழ்ந்திட
மயங்காமல் நீர் இந்த தாரணியில்
மனுவான அன்புக்காய் ஸ்தோத்திரம்

4. மங்களமே சீயோன் மணாளா
மாறுத பூரண சீராளா
மங்கிடா நித்திய வாசனே
மாசற்ற அன்புக்காய் ஸ்தோத்திரம்.

— கொன்வென்சன் பாடல்

156

பியாகீ ஆதிதாளம்

கண்ணிகள்

1. நமக்கொரு பாலன் நானிலந் தனிலே
நாடி வந்தார், இதோ பாரீரோ
நாமவர் பாதம் சென்றுமே பணிவோம்
நண்பரே, நீவிர் வாரீரோ

2. அவருடைய நாமம் அதிசயமானவர்
ஆலோசனைக் கர்த்தர் என்றுரே;
ஆமாம், அதிசயம்! அவர் அடிபணிவோம்
அன்பரே நீவிர் வாரீரோ

3. நித்தியரான சமாதான பிரபு
நீணிலம் வந்தார் பாரீரோ;
துத்தியம் அவர் பதம் நித்தியம் சொல்வோம்
நேசரே நீவிர் வாரீரோ

4. பெத்தலை நகரில் புத்திரன் உதித்த
புதுமை இதென்ன? பாரீரோ;
பேசரும் அன்பர் தாசருக்காயே
தாழ்விடம் வந்தார், பாரீரோ;

5. சந்தோஷமெமக்கு சமாதானம் புவிக்கு
தந்திட்டார் இன்று பாரீரோ;
தாசருமன்பால் நேசருக்காயே
தந்திட்டா ரென்று பாரீரோ.

— யாழ்ப்பாணப் பாடல்

157

தேசிகதோடி ரூபக தாளம்

1. நல்ல யேசு நாத சுவாமி நத்தார் தினமிதாம்;
நாங்கள் யாரும் கூடி, நாடி, நடனமாடுவோம்

2. செல்வ யேசு இராசன் பிறந்த திவ்விய நாள் இதாம்;
தெருக்கள் தோறும் மகிழ் கொண்டாடி திரிந்து பாடுவோம்

3. எல்லையில்லா இன்ப முள்ள இந்த நாளிலே
யேசு பாலன் இணையடிகள் ஏந்தி -வாழுவோம்

4. தொல்லை விட்டுத் துரித மிட்டுத் துதிகள் பாடுவோம்;
தூய, தூய நேய பால னடிகள் நாடுவோம்

5. தேவ தூதர் கானம் பாடத் தேச தேசர்கள்
தேடிவந்து தேவ பாலனை நாடி நின்றனர்

6. வாழ்க யாரும் பாலரால் வானும் பூமியும்
வந்திணைந்து இன்று நீங்கள் வாழ்க, வாழ்கவே

— எஸ். ரீ. ஆணல்ட்.

158

பல்லவி

பரன் மகன் பாரினிலே பாலகனாய் உதித்தார்
வாரும் நன்னாளிதிலே பாடிப் பணிந்து
அஞ்சலி செய்திடுவோம்

சரணங்கள்

1. பாவத்தில் மாழும் பாவியைக் காக்க
பாரினில் தெய்வம் மனுவானாரே
விண்ணவர் வானில் பாடுகின்றாரே
அண்ணலைத் துதித்து வாழ்த்துகின்றாரே

2. ஆயரும் தேடிப் பணிந்து கொண்டாரே
ஞானியரும் இன்பம் கொண்டாடுறாரே
மூவுலகாளும் மாதவன் அன்பை
பூவுலகோரே நீர் பாடுவோம் வாரும்

3. சந்தேகம் வேண்டாம் வந்து நீர் பாரும்
சொந்தம் போலெம்மைத் தேடி வந்தாரே
மந்தைக் குடிலும் கந்தை உடையும்
விந்தை இதனை நீர் சிந்தித்துப் பாரும்

4. கல்வி யறிவும் செல்வச் சிறப்பும்
பொல்லாப் பாவப்பேயை வெல்லுமோ சொல்லும்
புல்லணை மீது பாலனாய் வந்த
நல்ல நாதர் இயேசு செய்தாரே பாரும்.

159

பல்லவி

பாரில் மாந்தர்க்காகத் தேவன் பாலனுயினர் - உயர்
பரம சேஷ ராகம் பாடிப் பரவி ஏத்தினர்

சரணங்கள்

1. பொன்னுலகும் இந்நிலமும் புரக்கும் வல்லவன் - புவி
முன்னணையிற் புல்லணையுற ழுழங்கி யார்த்தனர்
- பாரில்

2. உன்னதத்திற் தேவன் மீதிலுற மகிமையும் - இந்த
மண்ணிற் சமாதானம், மனுவேல் மகிழ்ச்சி என்றனர்
- பாரில்

3. காபிரியேல், மீகாவேல் சேரக் கனத்த தூதுவர் - அங்கே
காட்சி காணும் இடையர் முன்பு களித்தே ஆடினர்
- பாரில்

4. மண்டலத்தோர் மகிழ்ச்சிகூர மன்னுநற் செய்தி - இன்று
மன்னன் தாவீது மகவாய்க் கிறிஸ்து வந்தாரென்றனர்
- பாரில்

160

சரசாங்கி **திஸ்ர ஏகதாளம்**

பல்லவி

பெத்தலையிற் பிறந்தவரைப்
போற்றித்துதி, மனமே - இன்னும்

சரணங்கள்

1. சருவத்தையும் படைத்தாண்ட சருவவல்லவர் - இங்கு
தாழ்மையுள்ள தாய்வயிற்றில் தலைசாய்க்கலானார் - பெத்

2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவமைந்தனர் - இங்கு
பங்கமுற்ற பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறார் - பெத்

3. முன்பு அவர் சொன்னபடி முடிப்பதற்காக - இங்கு
மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே - பெத்

4. இந்தடைவாய் அன்புவைத்த எம்பெருமானே - நாம்
எண்ணமுடன் போய்த் துதிக்க ஏகிடுவோமே - பெத்

— யோண் பாமர்

161

போர்த்துக்கீஸ் ஏகதாளம்

பல்லவி

பெத்தலகே மூரோரம் சத்திரத்தை நாடி
கர்த்தன் யேசு பாலனுக்குத் துத்தியங்கள் பாடி
பத்தியுடன் உத்தமரே கூடும்

சரணங்கள்

1. எல்லையில்லா ஞானபரன் வெல்லமல்ல யோரம்
புல்லணையிலே பிறந்தார், இல்லையெங்கும் வீரம்,
தொல்லுலகு அவ்விருட்டு நேரம் - பெத்

2. வான்புவியின் ராசனுக்கு மாட்டகந்தான் வீடோ!
மனுவேற்கு வாய்த்தமெத்தை வாடின புற் பூண்டு
தானே, பழங் கந்தையல்லோ மானே - பெத்

3. அந்தரத்திற் பாடுகின்றார் தூதர்சேனை கூடி;
மந்தை ஆயரோடுகிறார் பாடல்கேட்கத் தேடி;
இந்த இரவில் என்ன மோசம் - பெத்

4. ஆட்டிடைய ரஞ்சுகிறார் அவர்மகிமை காண,
சூட்டுமுடிக் காபிரியேல் சொன்னசெய்தி கேட்க
நாட்டமுடன் ரட்சகரைக் காண - பெத்

— யாழ்ப்பாணப் பாடல்

162

Hark the Herald Angels Sing M. H. B 117

பல்லவி

கேள் தூதர் பாடும்பாட்டை
வாழ்த்துவார்கள் ராசாவை

சரணங்கள்

1. மண்ணிற் சாந்தம் இரக்கம் - தோன்றியார்க்கும்
இரட்சிப்பாம்;
கேள் தூதர் பாடும் பாட்டை - வாழ்த்துவார்கள் ராசாவை
மேல்வானோர் போற்றுங் கிறிஸ்து - நித்த தேவன் உகந்து
இந்தக்காலம் தோன்றினர் - கன்னியிடம் பிறந்தார்!

2. வானோர் போற்றும் கிறிஸ்துவே - லோகம் ஆளும் நாதரே
ஏற்றகாலம் தோன்றினீர் – கன்னியிடம் பிறந்தீர்
நரரூபம் தரித்தார் – இம்மானுவேல் எம்மீட்பர்
பாரும் மனுரூபியை – வாழ்த்தும் அவதாரத்தை

3. வாழ்த்தும் சாந்த வேந்தனே! - வாழ்த்தும் ஞாயாதித்தனே
அவர் செட்டையின் கீழே - ஆரோக்கியம் தோன்றுமே,
வானம் விட்டு நீங்கினர் - நம்மை மீட்கப் பிறந்தார்;
வந்தார் நம்மை இரட்சிக்க - மறுசென்மம் அருள

4. மண்ணோர் நாடும் நேசரே - வந்து நம்மில் வாழ்வீரே
கன்னி தந்த சுதன் நீர் - சர்ப்ப சிரம் நசிப்பீர்
இரண்டாம் வான் ஆதாமே - அன்பில் நம்மை ஏவுமே;
மனுரூபம் அழியும் - தெய்வரூபம் பதியும்.

— சார்ல்ஸ் உவெஸ்லி
பிற்றர் பேசிவல்

163

O Come All ye Faithful (M. H. B. 118)

1. மெய்ப்பக்தரே வாரும்
மகிழ்ந்து எல்லோரும்
பெத்லகேமுக்குச் செல்வோம் விரைவாய்;
விண்ணோர் தேவனை
முன்னணையிற் காண்போம்;
நம் கர்த்தரின் முன் தாழ்வோம்
நம் கர்த்தரின்முன் தாழ்வோம் ஏகமாய்

2. மண்ணோரை ரட்சிக்க
இன்று நீர் பிறந்தீர்;
உம்மைப் போற்றித்துதிப்போம் நித்தமாய்;
ஆதி வார்த்தையே
மாம்சத்தில் ஜென்மித்தீர்;
நம் கர்த்தரின்முன் தாழ்வோம்
நம் கர்த்தரின்முன் தாழ்வோம் ஏகமாய்

3. தேவாதி தேவே
ஒளியின் ஒளியே
கன்னியிடம் பிறந்தீர் தாழ்மையாய்;
மெய்யான தேவன்
மனுவாய்ப் பிறந்தார்;
நம் கர்த்தரின்முன் தாழ்வோம்
நம் கர்த்தரின் முன் தாழ்வோம் ஏகமாய்

4. உன்னத தேவே
மாட்சி பெற்றீர் என்று
விண் தூதரே, பாடும் கம்பீரமாய்!
வானோர் யாவரும்
புகழ்ந்து பாடுங்கள்!
நம் கர்த்தரின்முன் தாழ்வோம்
நம் கர்த்தரின்முன் தாழ்வோம் ஏகமாய்.

— டீ. பீ. நயில்ஸ்
பொதுப்பாடல்

164

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

வாரும் வாழ்த்துவோம் - இயேசுவை
வாரும் வாழ்த்துவோம்

அனுபல்லவி

வாரும், நரரை மீட்கவென்று
வல்லமைத் தேவன் மனிதனுனர்
வாழ்த்துவோம், வாழ்த்துவோம்
வாழ்த்துவோம், என்றும் வாழ்த்துவோம் - வாரும்

சரணங்கள்

1. ஆனந்தம் கொள்வோம் - யாவரும்
ஆனந்தம் கொள்வோம்
ஆனந்தம் புவியோடு வானுல
காள்பவர் மண்ணிலவதரித்தனர்
ஆனந்தம், ஆனந்தம்
ஆனந்தம், என்றும் ஆனந்தம் - வாரும்

2. பாடிப் போற்றுவோம் - இயேசுவைப்
பாடிப் போற்றுவோம்
பாடுவோர் பரத்தினில் மகிமையும்
பாரினிற் சமாதானமுமெனப்
பாடுவோம், பாடுவோம்,
பாடுவோம், என்றும் பாடுவோம் - வாரும்

3. மகிழ் கொண்டாடுவோம் - மானிடர்
மகிழ் கொண்டாடுவோம்
மகிழுவோம் மரணந்தகாரத்தில்
வதிந்தவர்க் கருணோதயமென
மகிழுவோம், மகிழுவோம்,
மகிழுவோம் என்றும் மகிழுவோம் - வாரும்

— அலன் ஆபிரகாம்.

165

செஞ்சுருட்டி திஸ்ர ஏகதாளம்

பல்லவி

வானம் பூமியோ? பராபரன்
மானிடன் ஆனாரோ? என்ன இது?

அனுபல்லவி

ஞானவான்களே, நிதானவான்களே - என்ன - என்ன இது? -வானம்

சரணங்கள்

1. பொன்னகர தாளும், உன்னதமே நீளும்
பொறுமைக் கிருபாசனத்துரை
பூபதி வந்ததேததிசயம்? ஆ! என்ன இது? - வானம்

2. சத்திய சருவேசன், துத்திய கிருபைவாசன்
நித்திய பிதாவினோர்
மகத்துவக் குமாரனே இவர்? ஆ! என்ன இது? - வானம்

3. மந்தைக் காட்டிலே மாட்டுக் கொட்டிலிலே
கந்தைத் துணியைப் பொதிந்த சூட்சி
நிந்தைப் பாவிகள் சொந்தக் கண்காட்சி! - ஆ! என்ன இது
- வானம்

4. வேறே பேரல்ல, சுரர் விண்ணவர் யாருமல்ல
மாறில்லாத ஈறில்லாத வல்லமைத் தேவனே
புல்லில் கிடக்கிறார்! ஆ! என்ன இது? - வானம்

5. சீயோனின் மாதே, இனி கூணந்தரியாதே
மாயமென்ன? உனக்குச் சொல்லவோ?
வந்தவர் மணவாளனல்லவோ? - ஆ! என்ன இது? - வானம்

— வேதநாயக சாஸ்திரியார்

166

பல்லவி

ஆ... ஆ... ஆனந்தமே
அன்பன் இயேசு புவிவந்தனரே
ஆ... ஆ... ஆனந்தமே
இன்பமாய் நாம் இன்று போற்றிடவே

சரணங்கள்

1. வானிலே கண்ட அதிசயக் காட்சியை
ஆயர் பலர் கண்டு போற்றினரே
தூதர் கணங்களும் துதித்தலுடனே
தேவனைப் போற்றி அகமகிழ்ந்தார் - ஆ... ஆ...

2. விண்ணவர் வாழ்த்திட கீதங்கள் ஆர்த்திட
மண்ணுலகோர் ஒன்றுப்பாடிடவே
கன்னி மா மரியும் களிப்புடனே - அன்று
மன்னவனை மிகப் போற்றினரே - ஆ... ஆ...

3. ஆட்டிடையரும் நடு இரவினில்
தூதரைக் கண்டு பயப்படவே
பயப்படாதிருங்கள் உங்களுக்காக
ராஜன் பிறந்தார் பெத்தலையில் - ஆ... ஆ...

4. சாஸ்திரி மூவர் தாரகை கண்டு
பொன் வெள்ளி தூப வர்க்கத்துடன்
சாஷ்டாங்கஞ் செய்து தேவனைப் பணிந்து
அகமகிழ்வுடன் சென்றனரே - ஆ... ஆ...

167

குறிஞ்சி ஏகதாளம்

பல்லவி

வாரும் நாங்கள் யாரும் கூடி
வாழ்த்துவோமே இயேசையாவை

அனுபல்லவி

வான சேனை சூழ்ந்து நின்று
வணங்கி நித்தம் வாழ்த்துகிறார் - வாரும்

சரணங்கள்

1. மத்தளம் தாளம் வீணை மற்றும் கீதவாத்யமுடன்
நல்ல நல்ல கீதம் பாடி நண்பர்களே நாம் துதிப்போம்

2. எல்லையில்லா அன்பு வைத்த எம்பெருமான் இயேசுதுரை
பாலகரை நின்றழைத்துப் பட்சமாக அணைத்தனரே

3. எங்களுக்கு உள்ளதெல்லாம் எங்கள் பரன் இயேசுநிமை
எங்கள் குரல் ஓசைதானும் சொந்தமல்லோ இயேசுவுக்கு

4. அன்பர் இயேசு நாதர் பாதம் இன்பமுடன் நாமடைந்தால்
அணைத்துக் கையில் ஏந்திடுவார் ஆசீர்வாதம் தந்திடுவார்

— ஜே. சி. ஸ்ரிக்னி.

168

Once in Royal Davids City (M. H. B. 859)

1. ராஜன் தாவீ தூரிலுள்ள - மாட்டுக்கொட்டில் ஒன்றிலே
கன்னிமாதா பாலன் தன்னை - முன்னணையில் வைத்தாரே;
மாதா, சாந்த மரியாள்தான் - பாலன், யேசுகிறிஸ்துதான்

2. வானம் விட்டு பூமி வந்தார் - மகா தேவ தேவனே;
அவர் வீடோ மாட்டுக் கொட்டில் - தொட்டிலோ
முன்னணையே!
ஏழையோடு ஏழையாய் - வாழ்ந்தார் பூவில் தாழ்மையாய்

3. ஏழையான மாதாவுக்கு - பாலகனுக்கு கீழ்ப்படிந்தார்
பாவிய காலம் எல்லாம் அன்பாய் - பெற்றோர்க்கு
அடங்கினார்
அவர்போல் கீழ்ப்படிவோம் - சாந்தத்தோடு நடப்போம்

4. பாலர்க்கேற்ற பாதை காட்ட - பாலகனாக வளர்ந்தார்;
பலவீன மாந்தர்போல - துன்பம் துக்கம் சகித்தார்;
இன்ப துன்ப நாளிலும் - துணை செய்வார் நமக்கும்

5. நம்மை மீட்ட நேசர் தம்மை - கண்ணால் கண்டு களிப்போம்
அவர்தாமே மோட்சலோக - நாதர் என்று அறிவோம்
பாலரை அன்பாகவே - தம்மிடத்தில் சேர்ப்பாரே.

சிசில் பிரான்ஸிஸ் அலெக்சாந்தர்.
இந்திய மொழிபெயர்ப்பு

திருப்பணி

169

குன்ரேஸ் ரூபகதாளம்

பல்லவி

அளவிடக் கூடாதுன் னன்பை
இன்ப யேசுவே,

அனுபல்லவி

அன் பினகலம் நீள முயர மாழ மறிந்தவ ருண்டோ - அள

சரணங்கள்

1. கேடுகெட்ட பாவிசெய்த கேடுகள் தீர
பாடுபட்டு மரித்துயிர்த்துப் பரலோகஞ் சென்றுயே - அள

2. மித்துருஜீ வணைமீட்க மாளாரே மாந்தர்
சத்துருக்காய் ஜீவன் விட்டாயே சச்சிதானந்தா - அள

3. திருவிலாவி லிரத்தமென்னை மீட்கச் சிந்தினாய்
உருகி யெரியுதே யென்ற னுள்ளமன்பினால் - அள

— சாலொமன் செல்லத்துரை

170

தோடி ரூபகம்

பல்லவி

இயேசு என்றதுமே எனக்கோர்
இன்பம் பிறக்குதம்மா,
காசினியி லவர்போல் எவரையும்
கண்ட தில்லையம்மா

சரணங்கள்

1. பேசத் தொடங்கினுலோ பேச்செல்லாம்
பேரின்பம் சொட்டுதம்மா,
பார்க்கத் தொடங்கினுலோ பார்வை எல்லாம்
பாவியின் மேலேயம்மா - இயேசு

2; குஷ்டரோகி யவனைக் கையினுல்
கூசாமல் தொட்டராம்மா,
கஷ்டப்படுவோரைக் கண்டதும்
கண்ணீர் வடித்தராம்மா - இயேசு

3. சிலுவை மீதினிலே ரத்தத்தைச்
சிந்தி மரித்தாரம்மா,
உலகை மீட்டிடவே ஆண்டவர்
அன்புடன் மாண்டாரம்மா - இயேசு

4. கல்லறை விட்டெழுந்தே உலகில்
காட்சியளித்தாரம்மா,
வல்லசுத் தாவியினைத் தரவே
வானில் எழுந்தாரம்மா - இயேசு

— கொன்வென்ஷன் பாட்டு

171

காம்போதி ஆதிதாளம்

பல்லவி

எப்படியும் பாவிகளை ஒப்புரவாக்கிக் கொள்வதற்
கிப் புவியிலே யுதித்தார்; அற்புதந்தானே

அனுபல்லவி

மெய்ப்பரம் புனிதுந்தந்த தற்பரன் அனுதினிதா
நற்புதல்வ ணேயேசு நாதகிரு பாகரனுர் - எப்

சரணங்கள்

1. மட்டில்லாப் பொருள் அனைத்துந் திட்டமாகவே படைத்து
இட்டமாய் அனுக்கிரகித்த சிஷ்டிகன் தானே;
கட்டளையிட்ட கற்பனைவிட்டொரு சர்ப்பத்தின்வாயில்
பட்டுநர கத்துக்காளாய்க் கெட்டழிந்த பேர் என்றுலும்
- எப்

2. அச்சயன் மோசேயைக்கொண் டன்றெச்சரித் தெழுதித்தந்த
உச்சித கற்பனை கடந் திச்சையினுலே
துர்ச்சனப் பசாசைக்கூடி மிச்சமாய்ப் பாவங்கள் செய்து
நிச்சயங் கெட்டுப் போனுர்கள்; ரட்சிக்கக்
கூடாதென்றுலும் - எப்

3. தாக்கிய பராபரன் உண்டாக்கிய அனந்தசெல்வப்
பாக்கியங்கள் அனைத்தையும் போக்கடித்துமே
யோக்கியந் தெய்வ புத்திர சிலாக்கியம் எல்லாம் இழந்து
பேய்க்கடிமை ஆட்கள் கேட்டை நீக்குதற் கேலா
தென்றுலும் - எப்

— வேதநாயக சாஸ்திரியார்

172

பல்லவி

ஐயா இந்தத்தூரம் என்னை நேசிக்கிறீரா, நேசிக்கிறீரா
ஐயா எந்தன்மீது நீர் இரங்குகிறீரா, இரங்குகிறீரா

சரணங்கள்

1. பாவி என் வீடுவர நான் பாத்திரனல்ல அதால்
இங்கிருந்தே மொழியும் என் புதல்வன் சுகமடைவான்
என் புதல்வன் சுகமடைவான் - ஐயா

2. நீர் எந்தன் வீடுவர அன்பு யேசுவே முடியாது
வார்த்தையதை அருளும் என் பார்த்திபன் குணமாவான்
என் பார்த்திபன் குணமாவான் - ஐயா

3. நோயது வாட்டிறது என் பாடுகள் ஆழ்த்திறது
உம் ஆசியைத் தாருமையா பாவி ஆசையுடன் பணிந்தேன்
ஆசையுடன் பணிந்தேன் - ஐயா

— கே. எஸ். அருள்ராஜா

173

Tell me the old old story (M. H. B. 161)

பல்லவி

வான் கதையை எனக்கு
வான் கதையை எனக்கு
வான் க்தையை எனக்கு
விபரமாய்ச் சொல்லும்

சரணங்கள்

1. வான் கதையை எனக்கு விபரமாய்ச் சொல்லும்;
இயேசு நாதரின் அன்பை விளக்கமாய்க் காட்டும்;
நான் ஓர் மந்தன் என்பதை எண்ணித் தயவாக,
பாலருக்குப் போலவே சொல்லும் தெளிவாக

2. மெல்ல மெல்லவாய்ச் சொல்லும், அப்போ நான்
உட்கொள்வேன்;
மீட்பின் ஞான போதத்தை பாடமாய்ப் படிப்பேன்;
நான் மறந்துபோகாமல் திரும்பவுரு சொல்லும்;
பனிபோலும் வற்றலால் சொல்லும் அதை மேலும்

3. செவ்வையாய் அக்கதையை ஆறி ஆறிச் சொல்லும்;
இயேசு நாதர் எனக்கு ரட்சகர் என்றென்றும்;
மேலும் அந்தக் கதையை ஞாபகப் படுத்தும்;
ஆபத்தில் அதெனக்கு ஆறுதல் உண்டாக்கட்டும்

4. என் ஆத்துமத்தைக் கெடுக்கும் ஆசை இச்சைகளை
நான் மேற்கொள்ளும்படிக்கு சொல்லும் அக்கதையை;
ஆவியின் சிந்தை பெற்று நான் தேட மோட்சத்தை
மேலும் எனக்குச் சொல்லும் அந்த வான்கதையை

— கதறீன் ஹங்கே
டீ..பீ. நயில்ஸ்

174

பல்லவி

வாச லண்டை நின்று ஆசையாய்த் தட்டும்
நேசர் இயேசுவுக் குன்னுள்ளம் திறவாயோ?
பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்
வாவென்று உன்னை அழைக்கிறாரே

சரணங்கள்

1. ஆதரிப்பார் யாரு மில்லையென் றெண்ணி
ஆதரை மீதினில் அலைந்திடுவாயோ?
காணுத ஆட்டைத் தேடிவந்த மேய்ப்பர்
கண்டுன்னை மந்தையில் சேர்த்திடுவார்

2. வழியும் சத்தியமும் ஜீவனும் இயேசு
வாசலும் மேய்ப்பனும் நாதனும் இயேசு
இயேசுவல்லால் வேறு இரட்சிப்பு இல்லை
இரட்சண்ய நாள் இன்றே வந்திடாயோ? - வாச

175

பல்லவி

ஜெய ஜெய இயேசு, ஜெய ஜெய இயேசு
ஜெகத்து இரட்சகனே

அனுபல்லவி

மாமரி பாலா, மனுவேலா, மனுக்குமரா

சரணங்கள்

1. தினம் தினம் போற்றி மங்களம் பாடி
மனுக்குலத்தோர் நாம் ஆனந்திப்போமே,
தரிசனம் தந்து, ஆசிசொல்வாய்,
திரியேகா - அருள்நாதா - சற்குண - போதகனே

2. நறுமலர் கொண்டு பொற்பாதம் போற்றி,
நாதனே நாங்கள் பணிந்திடுவோமே,
அருட்பிர காசா பாவிகள் நேசா
அன்பேநீ - என் அமுதே - அன்பரின் - ஆருயிரே

3. ஐந்தப்பம் கொண்டு அநேகரை ஊட்டி,
ஊமைக்குப் பேச்சும் முடவுக்கு நடையும்
திருக்கரத்தாலே நடப்பித்தாயே,
வாராய்நீ-அருள்தாராய்- சரண்புகுவேன்- இயேசையாவே

— ஏ. சி. தம்பிராசா

திருப்பாடு, மரணம்

176

பல்லவி

அதோ கல்வாரியின் காட்சி கண்டிடுதே - இப்போ
உந்தன் உள்ளம் உருகிடாதோ - அதோ

சரணங்கள்

1. பாவக்கோலமாகத் தொங்குகிறார் - நீசனை
உன்னையவர் மீட்டிடவே - பாவ
சாபம் நீங்கிடவே ரோகம் ஏற்றிடவே
உன்னை அழைக்கிறாரே

2. தாகமேறியவர் வாடுகிறார் - உன்னைத்
தானே அன்பாய் நோக்குகிறார் - ஆவலாய்
அவரின் தாகம் தீர்த்திடவே நீயும்
தேடி வந்திடாயோ? - அதோ

3. தேகமெல்லாம் காயமாகியதே - உந்தன்
ரோகம் ஏற்றதிலுலல்லவோ - பாசமாய்
அவர் பாதத்தை நாடியே வருவாய்
ஆவலாய் அழைக்கிறாரே - அதோ

4. பாதகரின் கொடுந் துரோகமதை - என்
பிதாவே மன்னியும் என்றுரைத்தார் - பொல்லாப்
பாதகனும் உன்னை மீட்டுக்கொள்வதற்காய்
கர்த்தர் இயேசு தொங்குகிறார் - அதோ

5. பூமி எங்கும் இருள் மூடியதே - தந்தை
தாமும் தம் வதனம் மறைத்தனரே - உன்னை
தேவ ஆசனத்தில் ஏற்றுக் கொள்வதற்காய்
தாமும் சம்மதித்தாரே - அதோ

177

பல்லவி

அந்தோ கல்வாரியில் அருமை இரட்சகரே
சிறுமை அடைந்தே தொங்குகிறார்

சரணங்கள்

1. மகிமை மாட்சிமை மறந்திழந்தோராய்
கொடுமைக் குரூசை தெரிந்தெடுத்தாரே
மாயலோகத் தோடழியாது நான்
தூய கல்வாரியின் அன்பை அண்டிடவே - அந்தோ

2. அழகுமில்லை சௌந்தரியமுமில்லை
அந்தக் கேடுற்றார் எந்தனை மீட்க
பல நிந்தைகள் சுமந்தாலுமே பதினாயிரம்
பேரிலும் சிறந்தவரே - அந்தோ

3. முள்ளில் முடியும் செவ்வங்கி அணிந்தும்
கால் கரங்கள் ஆணிகள் பாய்ந்தும்
குருதி வடிந்தவர் தொங்குகிறார்
வருந்தி மடிவோரை மீட்டிடவே - அந்தோ

4. சிலுவைக் காட்சியைக் கண்டு முன்னேறி
சேவையே புரிவேன் சீவனும் வைத்து
என்னைச் சேர்த்திட வருவேன் என்றார்
என்றும் உண்மையுடன் நம்பி வாழ்ந்திடுவேன் - அந்தோ

178

பல்லவி

ஆணிகள் பாய்ந்த கரங்களை விரித்தே
ஆவலாய் யேசுன்னை அழைக்கிறாரே

சரணங்கள்

1. பார்திருமேனி வாரடியேற்றவர்
பாரச் சிலுவை தனைச் சுமந்து சென்றனரே
பாவமும் சாபமும் சுமந்தாரே உனக்காய்ப்
பயமின்றி வந்திடுவாய் - ஆணிகள்

2. மயக்கிடுமோ இன்னும் மாயையின் இன்பம்
நயத்தாலே உந்தனை நாசமாக்கிடுமே
உணர்ந்திதையுடனே உன்னதனண்டை
சரண் புகுவாய் தருணம் - ஆணிகள்

3. கிருபையின் வாசல் அடைந்திடு முன்னே
மரணத்தின் சாயலில் இணைந்திடுவோமே
உருவாக்கியே புது சிருஷ்டியில் வளர
கிருபையும் ஈந்திடுவாய் - ஆணிகள்

4. யேசுவல்லாது இரட்சிப்புத் தருவோர்
இரட்சகர் வேறு இகமதிலுண்டோ?
அவர் வழி சத்தியம் ஜீவனுமாமே
அவரே உன் நாயகரே - ஆணிகள்

179

1. உருகாயோ நெஞ்சமே நீ – குருசினில் அந்தோ பார்
கரங் கால்கள் ஆணியேறி - திருமேனி நையுதே

2. தாகம் மிஞ்சி நாவறண்டு - தங்கமேனி மங்குதே
ஏகபரன் கண்ணயர்ந்து - எத்தனையாய் ஏங்குறூர்

3. மூவுலகுந் தாங்குந் தேவன் - மூன்று ஆணி தாங்கிடவோ
சாகும் வேளை வந்திப்போது - சிலுவையில் தொங்குறூர்

4. வல்லபேயை வெல்ல வானம் - விட்டுவந்த தெய்வம் பாராய்
புல்லரீதோ நன்றி கெட்டு - புறம்பாக்கி ஞரன்றே

5. மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை - மாய்க்க வந்த மன்னவராம்
இந்நிலமெல்லாம் புரக்க - ஈனகுரு சேறினர்.

பண்டிதர் சத்தியவாசம்

180

உந்தன் சிலுவையிலே – அன்பின் கிருபையிலே
வாழ்வை நானடைந்தேன் – புது
வாழ்வை நானடைந்தேன்

பாவத்தில் கையாய் பிடிபட்டேன் – நீர்
பலியாக மாண்டீர்
ஆபத்தில் உனையே அழைத்துநின்றேன் - எனக்கு
ஆறுதலாகி வந்தீர்

எந்தன் தேவன் நீரல்லோ - எந்தன் ராஜன் நீரல்லோ
எந்தன் பாவம் மாய்த்தவரே - எந்தன் தாகம் தீர்த்தவரே

ஆயத்தை வாங்கி நின்றிருந்தேன் – உன்
அழைப்பால் வந்து சேர்ந்தேன்
பாவத்தை போக்கி என்னைச் சேர்த்தீர் - உன்
பாசத்தை என்ன சொல்வேன் – எந்தன்

அறியேன் அறியேன் என்றிருந்தேன் - என்னை
அன்பாலே நோக்கி நின்றீர் - என்னில்
அன்பாய் உள்ளாயா என்று கேட்டாய்
என் அழுகையில் உன்னைக் கண்டேன் – எந்தன்

பாவலர் கிரான்ஜீவன்.

181

புன்னகவராளி ஆதிதாளம்

பல்லவி

எங்கே சுமந்து போகிறீர்? சிலுவையை நீர்
எங்கே சுமந்து போகிறீர்?

சரணங்கள்

1. எங்கே சுமந்து போறீர்? இந்தக்கா னலிலும
தங்க முழுதும் நோக, ஐயா! என் யேசுநாதா; – எங்

2. பாவியி னுலேவந்த பாரச் சுமையோ? இதை
ஆவலு டனெடுத்து ஆவிது டிக்கவும் நீர் - எங்

3. தோளிற்பா ரமழுந்த, தூக்கப்பெ லமில்லாமல்
தாளுந்தத் தளிக்கவே, தாபசோ பமுறநீர் - எங்

4. கைகள் அயர இரு கண்கள் இருள, திரு
மெய்யுங் கருக, நாவும் மெத்த வறண்டு போக - எங்

5. மாசணு காத சத்ய வாசக ரேயுமது
தாசரைக் காக்கவோ தாங்காச் சுமை எடுத்து - எங்

— அணுவியார் இயேசுதாசன்

182

பல்லவி

என்தேவனே, தேவனே, ஏன் என்னை நீர் கைவிட்டீர்?
என் ஜெபத்தைக் கேளாமல், ஏன் நிற்கிறீர் தூரமாய்

சரணங்கள்

1. பகல் முற்ருய்க் கூப்பிட்டும் பலனற்றுத் தூங்கினேன்
இகலோரின் நிந்தையாள் இராவிலுங் கூப்பிட்டேன் - என்

2 நம்முடைய முன்னோர்கள் நம்பி உம்மைப் போற்றினர்,
உம்மை நோக்கிக் கூப்பிட்டு ஊழிகாலஞ் சீவித்தார் - என்

3. என்னைப் பார்க்கும் யாவரும் ஏகமாய் நகைக்கிறார்,
சன்னை பண்ணித் தூஷித்துச் சாலவும் பகைக்கிறார் - என்

4. நான் உமது நாமத்தில் நம்பி என்றும் பூரித்தேன்
வான்பரா! என் ஆபத்தில் வல்லதுணை தாருமே - என்

5. சிங்கம் போன்ற பாதகர் சீறி என்மேற் பாய்கிறார்
பங்கமின்றி நானுய்ய, பாதை காட்டிக் காத்திடும் - என்

2. பாவியி னுலேவந்த பாரச் சுமையோ? இதை
ஆவலு டனெடுத்து ஆவிது டிக்கவும் நீர் - எங்

3. தோளீற்பா ரமழுந்த, தூக்கப்பெ லமில்லாமல்
தாளுந்தத் தளிக்கவே, தாபசோ பமுறநீர் - எங்

4. கைகள் அயர இரு கண்கள் இருள, திரு
மெய்யுங் கருக, நாவும் மெத்த வறண்டு போக - எங்

5. மாசணு காத சத்ய வாசக ரேயுமது
தாசரைக் காக்கவோ தாங்காச் சுமை எடுத்து - எங்

— அண்ணுவியார் இயேசுதாசன்

182

பல்லவி

என்தேவனே, தேவனே, ஏன் என்னை நீர் கைவிட்டீர்?
என் ஜெபத்தைக் கேளாமல், ஏன் நிற்கிறீர் தூரமாய்

சரணங்கள்

1. பகல் முற்ருய்க் கூப்பிட்டும் பலனற்றுத் தூங்கினேன்
இகலோரின் நிந்தையாள் இராவிலுங் கூப்பிட்டேன் - என்

2 நம்முடைய முன்னோர்கள் நம்பி உம்மைப் போற்றினர்,
உம்மை நோக்கிக் கூப்பிட்டு ஊழிகாலஞ் சீவித்தார் - என்

3. என்னைப் பார்க்கும் யாவரும் ஏகமாய் நகைக்கிறூர்,
சன்னை பண்ணித் தூஷித்துச் சாலவும் பகைக்கிறூர் - என்

4. நான் உமது நாமத்தில் நம்பி என்றும் பூரித்தேன்
வான்பரா! என் ஆபத்தில் வல்லதுணை தாருமே - என்

5. சிங்கம் போன்ற பாதகர் சீறி என்மேற் பாய்கிறூர்
பங்கமின்றி நானுய்ய, பாதை காட்டிக் காத்திடும் - என்

6. தண்ணீரைப்போல் ஊற்றுண்டு, தாகமிஞ்சி வாடினேன்
எண்ணமற்ற பாதகர் ஏறுமாறாய் வாதித்தார் - என்

7. என் வஸ்திரம் பங்கிட்டு, என் உடைட் சீட்டுப்போட்டார்
வன்பர் என் கைகால்களை வலிகொள்ளக் குத்தினார் - என்

8. நாய்கள் போன்ற தீயர்கள் நாசஞ் செய்ய யோசித்தார்
ஓய்தலின்றி வாதித்து ஓர்மங்கொண்டு பூரித்தார் - என்

9. ஆயினும் என் கர்த்தரே, ஆற்றி தந்து ரட்சிப்பீர்;
வாய்திறத்து போற்றுவேன், வாழ்நாள் முற்றுஞ் சேவிப்பேன்
- என்

10. சகோதரர் முன்னே நின்று சாட்சிசொல்லித் தேற்றுவேன்
மகோற்சவம் நான் கொண்டாடி மாண்பாய் உம்மைப்
போற்றுவேன் - என்

11. சகலரும் பூரித்து சாந்தகுணர் ஆகுவார்
நிகரற்ற நேசத்தில் நிலைபெற்றுவாழுவார் - என்

12. உம்முடைய நீதியை லோகமெங்கும் கூறுவார்
செம்மையான பாதையில் சேதமின்றிச் செல்லுவார் - என்

— டீ. பீ. நயில்ஸ்

183

நாதநாமக்கிரியை — சாப்புதாளம்

பல்லவி

ஏங்குதே என்னகந்தான். துயர்
தாங்குதில்லை முகந்தான்

அனுபல்லவி

பூங்காவில் கனிந்தேங்கி நீர் மன்றுட
ஓங்கியே உதிரங்கள்
நீங்கியே துயர் கண்டு - ஏங்குதே

சரணங்கள்

1. மேசியா வென்றுரைத்து, யூத
ராசனென்றே நகைத்து,
தூஷணித்தே யடித்து, நினைக்குட்டி
மாசுகளே சுமத்தி
ஆசாரமின்றியே ஆசாரியனிடம்
நீசர்கள்செய் கொடும் தோஷமது கண்டு - ஏங்

2. யூதாஸ் காட்டிக் கொடுக்க, சீமோன்
பேதுரு மறுதலிக்க
சூதாயெரோதே மெய்க்க வெகு
தீ தாயுடை தரிக்க
நாதனே, இவ்விதம் நீதமொன்றில்லாமல்
சோதனையாய்ச் செய்யும் வேதனையைக் கண்டு – ஏங்

3. நீண்ட குரு செடுத்து, எருசலேம்
தாண்டி மலையடுத்து
ஈண்டல் பின்னேதொடுத்து அவரின் மேல்
வேண்டும் வசை தொடுத்து
ஆண்டவர் கை காலில் பூண்டிடும் ஆணியால்
மாண்டதினுல் நரர் மீண்டதென்றுலுமே - ஏங்

— றைற்றர் தேவசகாயம்

184

செஞ்சுருட்டி ஆதிதாளம்

பல்லவி

ஏன் இந்தப் பாடுதான்? – சுவாமி
என்ன தருவேன் இதற் கீடு நான்?

அனுபல்லவி

ஆனந்த நேமியே - எனை ஆளவந்த குரு சுவாமியே - ஏன்

சரணங்கள்

1. கெத்சேமனே யிடம் ஏகவும் - அதின்
கெழு மலர்க் காவிடை போகவும்
அச்சயனே, மனம் நோகவும் – சொல்
அளவில்லாத் துயரமாகவும் - ஏன்

2. முழந்தாள் படியிட்டுத் தாழவும் - மும்
முறை முகம் தரைபட வீழவும்
மழுங்கச் சினம் உமைச் சூழவும் - கொடு
மரண வாதையினில் மூழ்கவும் - ஏன்

3. அப்பா, பிதாவே, என்றழைக்கவும் - துயர்
அகலச் செய்யும், என்றுரைக்கவும்
செப்பும் உன் சித்தம் என்று சாற்றவும் - ஒரு
தேவதூதன் வந்து தேற்றவும் - ஏன்

4. ஆத்துமத் துயர் மிக நீடவும் - குழம்
பாக உதிர வேர்வை ஓடவும்
சாத்திர மொழிகள் ஒத்தாடவும் - உந்தன்
தாசரும் பதந்தனே நாடவும் - ஏன்

— அண்ணவியார் யேசுதாசன்

185

பலலவி

ஓசன்ன பாடுவோம் இயேசுவின் தாசரே
தாவீதின் குமாரனுக்கு உன்னதத்தில் ஓசன்ன

சரணங்கள்

1. சின்னமறி மேலேறி அன்பர் பவனி போகிறார்
என்றுமவர் என்னகத்தில் வந்து அரசாளுவார்

2. முன்னும் பின்னும் சாலேம் பாலர் இன்பமாகப் பாடினர்
அன்று போல இன்று நாமும் அன்பர் துதி பாடுவோம்

3. சிறியோரும் பெரியோரும் குருத்தோலை பிடித்தே
ஓசன்னா ஓசன்னா என்று ஆர்ப்பரித்துப் பாடினார்

4. பாலர் கீதம் நேசர் கேட்டு பாசமுடன் மகிழ்ந்தார்
பாலர் நாமும் பாடியவர் பாதமுத்தி செய்குவோம்

5. குருத்தோலை ஞாயிற்றில் நாம் குருபாதம் பணிவோம்
திரு ஆவி அருள்பெற்று திரியேகா போற்றுவோம்.

186

பல்லவி

ஓசன்னா பாடுவோம் யேசுராசர்க்கே
ஓசன்னா பாடுவோம் உன்னதனுக்கே

சரணங்கள்

1. இயேசு நாதர் வேந்தனாக எருசலேம் சேர்கிறாரே
ஈசனுடைய சித்தப்படி இங்கிதமாய்த் தோன்றினாரே

2. குருத்தோலைகள் பிடித்து கும்புகும்பாக நடித்து
பெருத்த தொனியாகவே பொற்பதனை போற்றினாரே

3. வேதபாரகர் மயங்க பாதகர் எல்லாம் கலங்க
தேவதூதர்கள் மகிழத் தேவாலயம் இலங்க

4. பாலகரெல்லாரும் கூடிப் பண்புடன் இயேசுவைப் போற்ற
ஞாலமீதிற் தேவனது ஞானத்தை வெளிப்படுத்த

187

பல்லவி

கல்வாரி மாமலையில் தியாகத்தின் வேந்தனே
பாதகன் போல் தொங்கி சிலுவையில் மரித்தாரே

சரணங்கள்

1. பன்னிரு வயதில் ஆலயத்தில் அன்று
அறிஞர்கள் புகழ்ந்தவரை
கரங்களை விரித்தே கல்வனைப்போல்
கழு மரத்தினில் கண்டேனே - கல்வாரி

2. திருமணப் பந்தியில் கனி ரசமே
அன்று அருளிய திருமகனே
குருதி சிந்தி கடற்காடியினை இன்று
பருகிடக் கண்டேனே - கல்வாரி

3. கண்ணீரே சிந்திய மனிதருக்கு
அருள் பண்ணிய திருமகனே
மண்ணின் மாந்தர்க்காக தன்னுயிரை
இன்று மாய்த்திடக் கண்டேனே - கல்வாரி

188

குறிஞ்சி ஆதிதாளம்

கண்ணிகள்

1. குருசினில் தொங்கிய குருதியும் வடிய
கொல்கொதா மலை தனிலே - நம்
குரு யேசு சுவாமி படுந் துயர், பாவி
கொள்ளாய் கண் கொண்டு

2. சிரசினில் முள்முடி உறுத்திட, அறைந்தே
சிலுவையில் சேர்த்ததையோ! தீயர்
திருக் கரங் கால்களில் ஆணிகளடித்தார்
சேனைத் திரள் சூழ

3. பாதகர் நடுவில் பாவியினேசன்
பாதகன் போல் தொங்க - யூத
பாதகர் பரிகாசங்கள் பண்ணிப்
படுத்திய கொடுமைதனை

4. சந்திர சூரிய சகல வான் சேனைகள்
சகியாமல் நாணுதையா - தேவ
சுந்தர மைந்த னுயிர்விடு காட்சியால்
துடிக்கா நெஞ்சுண்டோ?

5. ஈட்டியால் சேவகன் எட்டியே குத்த
இறைவன் விலாவதிலே - அவன்
தீட்டிய தீட்சைக் குருதியும் ஜலமும்
திறந்தூற்றேடுது, பார்

6. எருசலேம் மாதே, பதறி நீ யழுது
ஏங்கிப் புலம்பலேயோ? - நம்
எருசலேயதிபன் இளமணவாளன்
எடுத்த கோலமிதோ?

— எஸ். ஜீ. யேசடியோன்.

189

பலலவி

சிலுவை சுமந்த உருவம்
சிந்தின இரத்தம் புரண்டோடியே
நதி போலவே பாய்கின்றதே
நம்பியே இயேசண்டை வா

சரணங்கள்

1. பொல்லா உலக சிற்றின்பங்கள்
எல்லாம் அழியும் மாயை
காணுய் நிலையான சந்தோசம் பூவினில்
கர்த்தாவின் அன்பண்டை வா - சிலுவை

2. ஆத்தும மீட்பைப் பெற்றிடாமல்
ஆத்ம நஷ்ட மடைந்தால்
லோக முழுவதும் ஆதாய மாக்கியும்
லாபம் ஒன்றுமில்லையே - சிலுவை

3. பாவ மனித ஜாதிகளைப்
பாசமாய் மீட்க வந்தார்
பாவப் பரிகாரி கர்த்தர் இயேசுநாதர்
பாவமெல்லாம் சுமந்தார் - சிலுவை

190

பல்லவி

சிலுவை நிழலில் அனுதினம் அடியான்
சாய்ந்திளைப் பாறிடுவேன்

அனுபல்லவி

சிலுவையின் அன்பின் மறைவில்
கிருபையின் இனிய நிழலில்
ஆத்தும நேசரின் அருகில்
அடைகிறேன் ஆறுதல் மனதில் - சிலுவை

சரணங்கள்

1. பாவப்பார சுமையதால் சோர்ந்தே
தளர்ந்ததென் ஜீவியமே ஆ...ஆ...
சிலுவை அண்டை வந்ததினால்
சிறந்த சந்தோஷம் கண்டதினால்
இளைப்படையாது மேலோகம்
ஏகுவேன் பறந்து வேகம் - சிலுவை

2. எவ்வித கொடிய இடருக்கும் அஞ்சேன்
இயேசுவைச் சார்ந்து நிற்பேன் ஆ... ஆ...
அவனியில் வியாகுலம் வந்தால்
அவரையே நான் அண்டிக் கொண்டால்
அலைமிக மோதிடும் அந்நாள்
ஆறுதல் அளிப்பதாய்ச் சொன்னார் - சிலுவை

3. இன்பஞ் சுரந்திடும் திருமொழிகேட்டே
இன்னல்கள் மறந்திடுவேன் ஆ... ஆ...
திருமறை இன்னிசை நாதம்
தேனிலு மினிய வேதம்
தருமெனக் கனந்த சந்தோஷம்
தீர்க்குமென் இதயத்தின் தோஷம் - சிலுவை

191

பல்லவி

திருப்பாதம் நம்பிவந்தேன்
கிருபை நிறை இயேசுவே
உமதன்பைக் கண்டடைந்தேன்
தேவ சமூகத்திலே

சரணங்கள்

1. இளைப்பாறுதல் தருந் தேவா
களைத்தோரைத் தேற்றிடுமே
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம்
சுகமாய் அங்கு தங்கிடுவேன் - திருப்பாதம்

2. என்னை நோக்கிக் கூப்பிடு என்றீர்
இன்னல் துன்ப நேரத்திலும்
கருத்தாய் விசாரித்து என்றும்
கனிவோடென்னை நோக்கிடுமே - திருப்பாதம்

3. மனம் மாற மாந்தன் நீரல்ல
மன வேண்டுதல் கேட்டிடும்
எனதுள்ளம் ஊற்றி ஜெபித்தே
இயேசுவே உம்மை அண்டிடுவேன் - திருப்பாதம்

4. என்னைக் கைவிடாதிரும் நாதா
என்ன நிந்தை நேரிடினும்
உமக்காக யாவும் சகிப்பேன்
உமது டெலன் ஈந்திடுமே - திருப்பாதம்

5. உம்மை ஊக்கமாய் நோக்கிப் பார்த்தே
உண்மையாய் வெட்கம் அடையேன்
உமது முகப் பிரகாசம்
தினமும் என்னில் வீசிடுமே - திருப்பாதம்

6. சத்துரு தலை கவிழ்ந்தோட
நித்தமும் கிரியை செய்திடும்
என்னைத் தேற்றிடும் அடையாளம்
இயேசுவே இன்று காட்டிடுமே — திருப்பாதம்

7. விசுவாசத்தால் பிழைத்தோங்க
வீர பாதை காட்டினீரே
வளர்ந்து கனி தரும் வாழ்வை
விரும்பி வரம் வேண்டுகிறேன் — திருப்பாதம்

192

பல்லவி

அற்புதமான நேசந்தான், அவரன்பு எனக்கு
தேவ குமாரன் எனக்காய் உதிரம் சிந்தினார்

சரணங்கள்

1. தேவ அன்பின் பெருக்கைப் பார்!
மேல் வீட்டை இயேசு விட்டார்
உலகத்துக்கு வர;
பாதகமுள்ள மனிதனை பாவத்தினின்று மீட்க

2. நிந்தை எனக்காய்ச் சகித்தார்
பாவப் பாரஞ் சுமந்தார்
மன்னிக்கும் படியாக;
பாவம், பயம், தேவ கோபம் யாவற்றையும் நீக்க

3. பேயின் வலைகள் கிழிந்திட
சாவின் கூர் ஒடிந்திட
என் நேசர் மரித்தார்;
பரி சுத்தமாய்ச் சிவிக்க இரட்சிப்பைத் திறந்தார்.

— இரட்சணிய சேனைப்பாடல்

193

பவனிராசன் இயேசுவருகிறார் - இந்த
பாரைமீட்க என்று வருகிறார்
எழுந்துவா - எழுந்துவா
விரைந்துவா - விரைந்துவா

உன்னைத்தேடி ஓடிவருகிறார் - அதில்
உண்மைகளைக் காணவிழைகிறார் - அவர்
எண்ணம் போல மாறவிருப்பமா? - இயேசு
உன்னை அழைக்கும் சத்தம் கேட்டுவா - எழுந்துவா

ஆளுகின்ற அரசன் வருகிறார் - அவர்
ஆட்சியில் நற்பிரசை நீயடா
மாட்சிமையைச் சுமந்து வருகிறார் - அந்த
மன்னன் கிறித்து வண்டை நீயும்வா - எழுந்துவா

வறுமை நீக்கப் பவனி வருகிறார் - நல்ல
வாழ்வுதர தேடிவருகிறார்
நிலைமையாவும் மாற்றவருகிறார்
நிச்சயம் உனைமீட்க வருகிறார் - எழுந்துவா

தூதர்பாட விரைந்துவரும் யேசுவை - உயர்
துதிகள் பாடி ஏற்றுக் கொள்ளு நேசரை
ஓசன்ன என்று உயர் கீதங்கள் - அருள்
மழையைப் பொழியும் நல் மேகங்கள் - எழுந்துவா

பாவலர் கிரான்ஜீவன்

194

முகாரி

ஆதிதாளம்

பல்லவி

பாருங்கள், தொடர்ந்து வாருங்கள் கொல்கொதா
பாதையிற் கோதையரே!

அனுபலலவி

ஆருங் காணவே ஆட்டு வாசல் கடந்து மலே
மேட்டில் நடந்தனந்தங் கோட்டிகள் பாடுகின்ருர் -பா

சரணங்கள்

1. பொன்னுய் ஒளிரு மேனி மண்ணுய் மடியுதே,
புங்க உடலெல்லாம் புழுதிகள் படியுதே,
நன்னய மலர்க் கண்கள் கண்ணீர்கள் வடிக்குதே
நாவும் அஸ்தியும் காய்ந்து சாவுமே பிடிக்குதே, - பா

2. பாவியைத் தேடி வந்த பாதங்கள் பொரியுதே
பட்சத்திலுல் விரித்த கைகளும் நெரியுதே
நாபிக்கமலம் பற்றிச் சோபித்துக் கரியுதே
நடையுமுடையுந் தொய்ந்து சதைகளும் சரியுதே - பா

3. திருமுக அருள் ஒன்றுந் தெரியாத டைந்ததே
செங்குரு திகளெல்லாம் பொங்கி வடிந்ததே
சருவ வல்லபம் குன்றித் திறையும் நிறைந்ததே
ஜகமும் பரமுந் துக்க சாகரத் தழுந்துதே - பா

4. துன்ப துரிதத்திலும் அன்பையே பொழிகின்ருர்
துட்டர்கள் அதற்காக திட்டுகள் மொழிகின்ருர்
அன்பாய்ப் பிழைக்கத் தமதாவியைக் கொடுக்கின்ருர்,
அந்தோ நசரேத்தையர் நொந்தடி எடுக்கின்ருர் - பா

— வேதநாயக சாஸ்திரியார்

195

நாத நாமக்கிரியை — சாப்பு தாளம்

பல்லவி

பாவி நான் என்ன செய்வேன், - கோவே
சீவன் நீர் விட்டதற்காய்?

அனுபல்லவி

தேவ தேசத்திலுல் மேவிச் சிலுவையில்
தாவி உயிர் விட்டு, சீவித்த தென்கொலோ - பாவி

சரணங்கள்

1. நாடி எனைத்தயவாய் - மணஞ்செய்யத்
தேடி வந்தீர், அரசே;
ஆடுகளுக்காக நீடி உயிர் தர
பாடுபட்டுக் குரு சூடிறந்தீர், அன்றே - பாவி

2. வாரால் அடிக்கப்பட்டு - குட்டுண்டு
வாதைப்பட் டெண்ணம் அற்றீர்
சீரா! மனுடவதாரா! சருவாதி
காரா! பரம குமாரா! ஓலோலமே - பாவி

3. குற்றமற்ற மீட்பர் - பலக்கட்டன்
முற்றும் அறத் தீர்ப்பார்;
கொற்றவர்க்கும், கல்வி கற்றவர்க்கும் சுரர்
மற்றவர்க்கும் அளவற்ற கிருபையே - பாவி

வேதநாயக சாஸ்திரியார்

196

பல்லவி

பாரீர்; கெத்சமனே பூங்காவிலென் நேசரையே
பாவியெனக்காய் வேண்டுதல் செய்திடும் சத்தம் தொனித்திடுதே

சரணங்கள்

1. தேகமெல்லாம் வருந்தி சோகமடைந்தவராய்
தேவாதி தேவன் ஏகசுதன் படும் பாடுகள் எனக்காயே
- பாரீர்

2. அப்பா இப்பாத்திரமே நீக்கும் நின் சித்தமானால்
எப்படியுமும் சித்தம் செய்ய என்னைத் தத்தம் செய்தேன்
என்றுரே - பாரீர்

3. இரத்தத்தின் வேர்வையாலே மெத்தவுமே நனைந்தே
இம்மனுவேலன் உள்ளம் உருகியே வேண்டுதல் செய்தனரே
- பாரீர்

4. மும்முறை தரைமீதே தாங்கொண்ணு வேதனையால்
முன்னவன் தாமே வீழ்ந்து ஜெபித்தாரே பாதகர் மீட்புறவே
- பாரீர்

5. அன்பின் அருள் மொழியால் ஆறுதல் அளிப்பவர்
துன்ப வேளையில் தேற்றுவாரின்றியே நொந்து அலறுகின்றார்
- பாரீர்

6. என்னையும் தம்மைப் போல மாற்றும் இம் மாநேசத்தை
எண்ணி யெண்ணியே உள்ளம் கனிந்து நான்; என்றுமே
வாழ்ந்திடுவேன் - பாரீர்

197

பல்லவி

பொன் இயேசு தம்பிரான் நல்லோரு ரஷகன்
என்னை சினேகித்துத் தன் ஜீவன் விட்டார்

சரணங்கள்

1. சுவர்க்க சிங்காசனம், தாதனின் மார்பதும்
தூதன்மார் சேவையும் விட்டெனக்காய்
தாசனைப் போலவர் ஜீவித்து, பாவியென்
சாபம் சிரசினில் ஏற்றுக்கொண்டார் - பொன்

2. தள்ளையைப் போலென்றே டன்புள்ள ரஷகன்
கொள்ளைக்காரன்போலக் குருசில் மாண்டார்;
உள்ள முருகுதே நெஞ்சு தகருதே
கண்ணும் நிறையுதே, ரஷகனே - பொன்

3. பாவஞ் செய்யாதென்னைக் காத்திட வல்லவென்
சர்வேஸ்வரா கையில் ஒப்படைத்தேன்
ராப்பகல் நீ யென்னை வீழ்ந்து தவறுமல்
சொப்பனத்திலுங்கூடக் காத்திடுவாய் - பொன்

— சாது கொச்சுக்குஞ்ஞ

198

கரகரப்பிரிய ஆதிதாளம்

பல்லவி

மரித்தாரே கிறிஸ்த் இயேசு
உனக்காகப் பாவி - உனக்காகப் பாவி

சரணங்கள்

1. லோகத்தின் பாவத்தைத் தேகத்திற் சுமந்த
லோலாயத் தைச்சிலு வையிலே பாராய் - மரி

2. மகத்தான தண்டனை நிவிர்த்திப்ப தற்கே
மாபாடு பட்டுத்த ரித்தது பாராய் - மரி

3. மன்னிப்புண் டாக்கவே மத்தியஸ்த ராகி
வாதைக்குள் ளானரே தாமேநீ பாராய் - மரி

ஈ. பாக்கியநாதன்.

199

When I survey the wondrous cross (M. H. B. 182)
L. M.

1. மகா தெய்வ ராசா மாய்ந்த
சிலுவையை நோக்குங்காலம்
லோக செல்வம் மாயமென
தள்ளுவேனே அகங்காரம்

2. கிறிஸ்து சிந்தும் ரத்தம் சார்ந்து
பொருள் இன்பம் இவை நீங்கி
எல்லாம் அவரென்று கண்டு
நாங்கள் பற்றச் செய்யும் ஸ்வாமி!

3. அன்பு துக்கம் என்னும் இவை
அவர் தேகம் மூழ்கப்பாரும்
இது போன்ற அன்பு தயை
முள்ளுமுடி இல்லையாகும்

4. சர்வலோகம் ஆளும் வரம்
வேண்டுவாரோ தயாநிதி?
எல்லையில்லாத் தெய்வநேசம்
கேட்கும் தேகம் பொருள் ஆவி.

ஐசக் வொற்ஸ்.
இந்திய மொழிபெயர்ப்பு

200

Children of Jerusalem M. H. B. 837
7, 7, 7, 7.

பல்லவி

கேள் பாலர் பாடுகிறார்
வாழ்க ராஜா! என்கிறார்

சரணங்கள்

1. முன்னே சீயோனின் பாலர்
யேசுவைப் போற்றிச் சென்றார்;
பாலரே இப்போ நாமும்
மீட்பரின் மாண்பைச் சொல்வோம்

2. யேசுவின் அன்பைப் பெற்றோம்
தேவ வாக்கை நாம் கற்றோம்
கண்டோம் மோட்ச பாதையை
வாழ்த்துவோம் நம் தேவனை

8. பெற்றூர், ஆசார் நேசரும்
ஏகமாய்ப் பாட வாரும்;
போர் ஓசன்ன வான் மட்டாய்
ஏறும் அப்போ கீதமாய்.

ஜோன் ஹென்லி
டீ. பீ. நயில்ஸ்

201

கமாசு

சாப்புதாளம்

பல்லவி

மேசி யாயேசு ராசனூர் - எமை
மீட்க வேபலி யாயினூர் - எமை மீட்கவே

சரணங்கள்

1. பாவி ரட்சையைப் பெற்றி டப்பல
வழிக ளில்லையே லோகத்தில்
சீவ ரத்தமே யாமொரே வழி
சிறந்த நல்வழி தானிதே - மேசி

2. தேடி யேயெமை வந்த ரட்சகர்
சிந்தும் ரத்தமோ எங்களை
மூடிய பவம் போக்க வேமிகப்
போது மேமிகப் போதுமே - மேசி

3. அடியன் பாவ அறிக்கை செய்வனே
அழுகை யோடவர் முன்னிலே
சுணன் நான் விசுவாசம் பேசுவின்
இனிய நற்பதம் வைக்கிறேன் - மேசி

4. சன னுமெனின் பாவம் யாவுமே
யேசு வோடறைற் யுண்டன;
யேசு என்பரன் நீதி யென்னுடை
நீதி யென்றினிப் பாடுவேன் - மேசி

சி. யோசேப்பு

202

What can wash away my stain S. S. R.874
7, 7, 7, 7.

பல்லவி

சீவ நீராய்ப் பாயும், பாவமெல்லாம் தீர்க்கும்
ஒப்பற்ற ஊற்றுகும், இயேசு சிந்தின ரத்தந்தான்

சரணங்கள்

1. யாது என் கறை நீக்கும்? இயேசு சிந்தின ரத்தந்தான்;
யாதென்னைச் சொஸ்தமாக்கும்? இயேசு சிந்தின ரத்தந்தான்

2. என்னைச் சுத்தஞ் செய்வது இயேசு சிந்தின ரத்தந்தான்;
என் மன்னிப்புக்கு ஏது, இயேசு சிந்தின ரத்தந்தான்

3. நிவிர்த்தி வேறில்லையே, இயேசு சிந்தின ரத்தந்தான்;
சுயபுண்யம் இல்லையே, இயேசு சிந்தின ரத்தந்தான்

4. என் திடம் சமாதானம், இயேசு சிந்தின ரத்தந்தான்;
என் நீதியின் ஆதாரம், இயேசு சிந்தின ரத்தந்தான்

இந்திய மொழிபெயர்ப்பு

203

1. வருத்தப் படுபவர்க்கும் பாரம் சுமப்பவர்க்கும்
ஆதரவாய் உள்ளோனே ஐயா என் இயேசு நாதா
உலகம் எனை வதைக்க அலகை எனைத் தொடர
சிலுவை அடியில் வீழ்ந்தேன் இரட்சகா இயேசு நாதா

2. செய்வதி தென்றறியா திவர் பிழை மன்னித்திடும்
அப்பா பிதாவே என்றுய் இரட்சகர் இயேசு நாதா
கள்ளமில்லாத கள்வன் மெல்ல ஜெபித்ததுவும்
இன்றே பரதீஸ் என்றுய் இரட்சகா இயேசு நாதா

3. தாயே அதோ உன் மகன் யோவான் இதோ உன் அன்னை
தாய் போல் அணைப்பாய் என்றுய் இரட்சகா இயேசு நாதா
என் தேவனே தேவனே ஏன் என்னைக் கைவிட்டீரோ
என்றேங்கி நைந்தழுதாய் இரட்சகர் இயேசு நாதா

4. முள்ளாணி வெய்யில் நிந்தை நையு, உன்னை வதைக்க
தாகம் எனக்கு என்றுய், இரட்சகா இயேசு நாதா
தொல்வினை தீர்க்கும் இரட்சை நல் நிறைவேற்றிய பின்
எல்லாம் முடிந்ததென்றுய் இரட்சகா இயேசு நாதா

5. சித்தமுவந்திச் சணம் ஒப்பித்தேன் உன் கரத்தில்
அப்பா என் ஆவி என்றுய் இரட்சகா இயேசு நாதா
இரத்தத்தில் மூழ்கி நின்றேன் பித்தன் உயிர் பிழைத்தேன்
நித்தம் உம் தொண்டு செய்வேன் இரட்சகா இயேசுநாதா

204

பல்லவி

வாழ்நாள் முழுதும் உம்மைப் போற்றுகிறேன்
எந்தன் ஆருயிர் ஆண்டவரே
நன்றியால் உம்மை நான் என்றும் வாழ்த்துகிறேன்
பலியால் என்னை மீட்டவரே

சரணங்கள்

1. பாரிய சிலுவையிலே கொடும் பாவியாய் மாண்டவரே
சிந்திய இரத்தமெல்லாம் என் மேனியில் ஓடுதையா
என்னை முற்றுமே மாற்றுதையா – வாழ்

2. நீர் சிந்திய கண்ணீரே நீர் கெஞ்சிய வார்த்தைகளே
என் இதயத்தில் பதிந்தமையால் புதிதாகவே மாறியதே
புதிதாகவே மாறியதே – வாழ்

3. எனக்காய்ப் பலியானவரே எனக்காகவே மாண்டவரே
என்னையே நான் தருவேன் வாழ்நாளெல்லாம் நான்வருவேன்
வாழ்நாளெல்லாம் நான் வருவேன் – வாழ்

உயிர்த்தெழுதல்

205

ஏகதாளம்

கண்ணிகள்

1. அதிகாலையில் மகதலேனுள் மகிப்ன் யேசைத் தேடியே
மதியுடனே கமழும் கந்தம் மணமும் கையிலேந்தியே
ஜோதிசமாதியை-வெகு-கெதியில் சேர்ந்தனள்

2. தனிமையாக அழுதுநின்று தயங்கி மனம் வாடினுள்
குனிந்து கல்லறையுட் கண்ட சுரர்களோடு பேசினுள்
ஞானியை மானியை-அவள்-நலிந்து தேடினுள்

3. மனமிரங்கும் கருணையாளன் "மதியே யாரைத் தேடுகிறாய்,
என உரைத்தும் அவளும் காண " கனமிகும் என் கர்த்தனை
வானனைக் காணுமே-நீர்-வைத்தீரோ" என்றுள்.

4. "மரியாளே" யென் றருமை நாதன் தெரியக் காட்சியீந்தனர்
பிரியமே "ரபூனி" என்றே பேசி மகிழ்ந்து சாடினுள்
பூரித்தாள் ஊரிற்றான்-இப்-புதுமை கூறினுள்

5. மரியாளைப்போல் உளங் கனிந்து அதிகாலையில் ஓடினோர்
பரிவுறும் மெய்ப் பரமஜோதி தரிசனம் கண்டே வாழ்வார்
ஆறியே தேறியே-அவர்-அன்பில் மூழ்குவார்

ஏ. வி. டோசன்

206

The Strife is o'er, the battle done
(M. H. B. 215) 88, 8, 4

1. அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா!
இப்போது போர் முடிந்தது,
சிறந்த வெற்றி ஆயிற்று,
செய கெம்பீர நாள் இது. - அல்லேலூயா!

2. இயேசுவெம் சாவை மேற்கொண்டார்,
பாதாளச் சேனையை வென்றார்,
உயர்ந்த நாமம் அடைந்தார். - அல்லேலூயா!

3. இந்நாள் எழுந்த வேந்தரே,
என்றைக்கும் அரசாள் வீரே!
களித்து ஆர்ப்பரிப்போமே - அல்லேலூயா!

4. எல்லோரும் உம்மைப் போற்ற நீர்
மரித்துயிர்த்திருக்கிறீர்,
சாகாத சீவன் அருள்வீர் அல்லேலூயா!

பொதுப்பாடல்
இந்திய மொழிபெயர்ப்பு

207

Christ the Lord is risen today (M. H. B. 204)
7, 7, 77

1. இன்று கர்த்தர் உயிர்த்தார்! - கல்லறை விட்டெழுந்தார்!
போற்றுவார் விண்ணோர் யாரும்; - வாழ்த்துவோம்
மண்ணோர் நாமும்
அல்லேலூயா

2. அன்பின் செயல் முடித்தார், - போரில் வெற்றி அடைந்தார்
அந்தகாரம் நீங்கிற்று; - மீட்பு நிறை வேறிற்று

3. வீணே காவல், முத்திரை; - கிறிஸ்து வென்றார் நரகை,
சாவைச் செயித் தெழுந்தார், - விண்ண வாசலைத் திறந்தார்

4. எம்பிரான் எழுந்தாரே! - சாவே, உன் கூர்மை எங்கே?
காட்டினார் தம் பலத்தை - செயித்தார் பாதாளத்தை

5. கிறிஸ்துவுடன் உயர்வோம் - எம் நாதன்பின் செல்லுவோம்
கொள்வோம் அவர் ரூபத்தை - சேர்வோம் நாமும்
வானத்தை

6. மன்னரே, மாட்சி பெற்றீர்! - நித்த சீவனைத் தந்தீர்;
உம்மை நம்பிச் சீவிப்போம் - என்றும் போற்றிச்
சேவிப்போம்

— சால்ஸ் உவெஸ்லி
டீ. பி. நயில்ஸ்

208

பியாகு ஆதி

பல்லவி

எழுந்தார் இறைவன் - ஜெயமே ஜெயமெனவே
எழுந்தார் இறைவன்

சரணங்கள்

1. விழுந்தவரைக் கரையேற்ற - பாவத்
தழுந்து மனுக்குலத்தை மாற்ற - விண்ணுக்
கெழுந்து நாம் அவரைப் போற்ற - எழுந்தார்

2. செத்தவர் மீண்டும் பிழைக்க - உயர்
நித்திய ஜீவனை அளிக்கத் - தேவ
பக்தர் யாவரும் களிக்க - எழுந்தார்

3. கருதிய காரியம் வாய்க்க - தேவ
சுருதி மொழிக ளெல்லாம் காக்க - நம்
இருதிறத்தாரையும் சேர்க்க - எழுந்தார்

4. சாவின் பயங்கரத்தை ஒழிக்கக் - கெட்ட
ஆவியின் வல்லமையை அழிக்க - இப்
பூவின்மீது சபை செழிக்க - எழுந்தார்

5. ஏதும் தீவினை செய்யாத் தூயன் - எப்
போதுமே நன்மை புரிநேயன் - தப்
பாது காத்திடும் நல்லாயன் - எழுந்தார்

பரமானந்தம் ஐயர்

209

Thine be the glory (M. H. B. 213)
10, 11, 11, 11.

பல்லவி

உந்தன் மகிமை - சுந்தரப்பரா
விந்தையான வெற்றி - விண்ணின் ஜயமே

சரணங்கள்

1. உன்னதன் மகிமை - சுந்தரப்பரா
விந்தையான வெற்றி - விண்ணின் ஜயமே
நிந்தையான சாவை - நிர்மூலமாக்கி
கந்தைகள் களைந்து - கர்வமிலங்க

2. கல்லுருண்டோட - வல்லபரனுர்
அல்லல், திகில் போக்கி - அன்பாயழைக்க
துல்லிபமாய் நாமும் - துத்தியம் பாடி
நல்ல நாதன் பேரில் - நற்பதமடைவோம்

3. தேவாதி தேவன் - திருச் சுதனுர்
மூவா முதலான - முன்னவன் மகன்,
சாவாச் சீவன் தந்த - சாஸ்வத நாதன்,
ஏவற்பணி ஏற்றோம் - இன்பமென்றுமே

— எட்மன் லூயி பட்றி
ஏ. எம். கே. குமாரசாமி

210

கௌரி

ஆதிதாளம்

பல்லவி

கர்த்தாதி கர்த்தன் உயிர்த்தான் - உலக முய்யக்
கர்த்தாதி கர்த்தன் உயிர்த்தான்

அனுபல்லவி

சித்தமுவந்து தூதர் அத்தன் பதந்துதிக்க -
எத்தினமு மலகை மெத்த மனம்வருந்த - கர்த்தாதி

சரணங்கள்

1. நித்திய ஜீவ பதத்தை - ளவரும் பெற்று
மெத்து மானந்த மடைய
பத்த ருவந்துபல அர்ச்சனைகள் புரிய -
உத்தமர் களாயுல குற்றசீ டர் பொருந்த - கர்த்தாதி

2. சாவின் கூரையும் முறித்து - சகல பவ
நோயின் வேரையு மறுத்து
ஆவி தணித்துலக வாசைகளி லுழன்றோர் -
மேவிப் பரன்மெய்வழி தாவிக் கதியடைய - கர்த்தாதி

3. வெற்றிக் கொடியைப் பிடிப்போம் - தினமும் பரன்
நற்று தியையே நவில்வோம்
பற்றி யாவுமறுத்துக் குற்றமகற்றி வாழ -
முற்றுங் கருணைசெய்த கொற்றவன் யேசுபிரான்-கர்த்தாதி

— யாழ்ப்பாணப் பாடல்

211

பல்லவி

கீதம் கீதம் ஜெயஜெய கீதம் கைகொட்டிப் பாடிடுவோம்
இயேசு ராஜன் உயிர்த் தெழுந்தாரல்லேலூயா
ஜெயமென்று ஆர்ப்பரிப்போம்

சரணங்கள்

1. பார் அதோ கல்லறை மூடின பெருங்கல்
புரண்டுருண்டோடுது பார் - அங்கு
போட்ட முத்திரை காவல் நிற்குமோ
தேவ புத்திரர் சந்நிதிமுன்

2. வேண்டாம், வேண்டாம் அழுதிட வேண்டாம்
ஓடி உரைத்திடுங்கள் - தாம்
கூறின மாமறை விட்டவர் கல்லறை போங்கள்
கலிலேயாவுக்கு

3. அன்னை காய்பா ஆரியர் சங்கம் அதிரடி
கொள்ளுகிறார் - இன்னு
பூத கணங்கள் இடி ஒலிகண்டு பயந்து நடுங்குகிறார்

4. வாசல் நிலைகளே உயர்த்தி நடவுங்கள் வருகிறார்
ஜயவீரன் - உங்கள்
மேளவாத்தியம் கைமணி பூரிகை எடுத்து முழக்கிடுங்கள்

212

குந்தலவராளி ஆதி

பல்லவி

திருச்சுதன் இயேசு தம்முயிர் துறந்தார் - தாம்
தேவ நீதியாக உயிர்த் தெழுந்தார்

அனுபல்லவி

அரும்பலியாகத் தம்மை அவனியோர் பாவம் போக்க
ஒரேதரம் ஒப்புவித் துயிர்த்தெழுந்தார் அன்பின்-திருச்சுதன்

சரணங்கள்

1. ஏசு உயிர்த் தெழும்பவில்லை என்றால் - வீசு
வாசம் நம்பிக்கை முற்றும் அற்றிருப்போம்
மாசு கடலில் மூழ்கி மயங்கி அமிழ்ந்திருப்போம்
மனுவை எழுப்பவே உயிர்த்தெழுந்தார் மீட்பர் - திருச்சுதன்

2. தாரணிதனில் என்றும் ஏசுவுக்கு - மெய்ச்
சாட்சி களாயிருப்போம் சந்தோஷமாய்
வீரராய் அவரோடு விண் உன்னதங்களில் நாம்
வீற்றிருக்கும்படி உயிர்த்தெழுந்தார் மன்னன் - திருச்சுதன்

வே. சந்தியாகு ஐயர்

213

பல்லவி

யூதராஜசிங்கம் உயிர்த் தெழுந்தார்
உயிர்த் தெழுந்தார் நரகை ஜெயித்தெழுந்தார்

சரணங்கள்

1. வானத்தின் சேனைகள் துதித்திடவே
துதித்திடவே திறனே மதித்திடவே

2. மரணச் சங்கிலிகள் தெறிபட்டன
தெறிபட்டன நொடியில் முறிபட்டன

3. எழுந்தார் என்ற தொனி எங்கும் கேட்குதே
எங்கும் கேட்குதே பயத்தை என்றும் நீக்குதே

4. மாதர் தூதரைக் கண்டக மகிழ்ந்தார்
அக மகிழ்ந்தார் பரனே அவர் புகழ்ந்தார்

5. உயிர்த்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை
மரிப்பதில்லை இனி மரிப்பதில்லை

214

யமன் கல்யாணி ஆதிதாளம் (திஸ்ரகெதி)

1. மங்களம், மங்களம், யெகோவா,
சந்ததம் எங்களைக் காக்க வா
மங்களம் மங்களம் யேசுவே
மாந்தர்க்காய் மரணத்தை ஜெயித்தோனே

2. கல்லறை மீதுற்ற கன்னியர்
கர்த்தரைக் காணது கலங்கிட
மெல்லியர்க்குத் தேவ தூதர்கள்
மெய்யான செய்தியை கூறினர்

3- பாதாளம் இறங்கிய மூன்றும் நாள்
பாரிற் திரும்பினீர் பாவிக்காய்,
பாழும் மரணமுன் கூர் எங்கே?
பாதாளமேயுன் ஜெய மெங்கே?

4. ஆனந்தம், ஆனந்தம், மாந்தர்க்கே
ஆர்ப்பரிப்போம் அன்பின் கிரிகைக்கே,
ஆனந்தம் ஆனந்தம் தூயர்க்கே
அல்லேலூயா பாடும் சேனைக்கே

— பி. கே. சோமசுந்தரம்

பரமேறுதல்

215

டப்பா ஏகதாளம்

பல்லவி

மனுச்சாதியின் மிகு பாவத்தின் பயல் நீக்கின யேசுவே
அனுகூலித்துப் பரலோகத்தில் அருள்மீட்பராய் வாழ்கவே.

சரணங்கள்

1. நரர் யாவர்க்கும் உயர்வானுக்கும் நடை போதிக்க வந்தீர்
வரப்பேறுகள் நமதாவிக்கு வருவாசலும் ஆனீர்.

2. முழு வேதத்தின் முறை காண்பிக்கும் முதற் சத்தியம் ஆனீர்
பழுதற்றமெய்ச் சுவிசேஷத்தின் பதிஞானமும் ஆனீர்.

3. மனுச் சாதியின் பாவச் சாவுக்கு மறு சீவனுய் வந்தீர்
அனுதாபராய்ப் பதில்யாகத்தால் அருட்சீவனைத் தந்தீர்.

4. இருட் பூமிக்கு ஒளி காலித்து இடர் நீக்கவே வந்தீர்
மருள் மாறவும் பொருள் தேறவும் மனம் ஆறவும் செய்தீர்

5. வெறு நெஞ்சதனை பசியாறறட வெகுசெல்வங்கள் ஈந்தீர்
நறும் அப்பமாய் நிதம் போஷிக்கும் நயபோசனம் ஆனீர்

6. அரும்யாகத்தால்நரரைமீட்டபின் அதிவிண்ணுக்குச் சென்றீர்
பரலோகத்தில் உமதன்பர்க்காய்ப் பலிவேண்டுதல் செய்கிறீர்

7. எமதாவியின் துயர் வேளையில் நயவாறுதல் செய்கிறீர்
உமதன்பரின் உளம் பூரிக்க உயர்வான்று சேர்வீர்.

8. எனதன்பரே நிதம் வாழுங்கள் எனச் சொல்லுவீர் நீர்தாம்
மனப் பூரிப்பும் சன்மாட்சியும் மகிழ் காட்சியும் உண்டாம்.

— டீ. பீ. நயினர்ஸ்.

216

Crown him with many crowns (M. H. B. 271)

DSM

1. தேவாட்டுக் குட்டிக்கு பன்முடி சூட்டிடும்
இன்னிசையாய் பேரோசையாய் விண்கீதம் முழங்கும்
உள்ளமே போற்றிடு உனக்காய் மாண்டோராம்
சதாகாலமும் அவரே ஒப்பற்ற வேந்தராம்

2. அன்பார்ந்த கர்த்தர்க்கு பன்முடி சூட்டிடும்
கை கால் விலாவின் காயங்கள் விண்ணிலும் விளங்கும்
பார்ப்பரோ தூதரும் ஏறிட்டக் காயங்கள்
பணிவரே சாஷ்டாங்கமாய் மூடுவர் தம் கண்கள்

3. சமாதானக் கர்த்தர் பன்முடி சூட்டிடும்
போர் ஓய்ந்து ஜெயஸ்தோத்திரமே பூமியை நிரப்பும்
ஆள்வார் என்றென்றைக்கும் ஆளும் எவ்விடமும்
விண்லோக பாக்ய சிறப்பு விளங்கி வளரும்

4. ஆண்டாண்டு ஆள்வோர்க்கு பன் முடி சூட்டிடும்
சராசரங்கள் சிருஷ்டித்தோர் உன்னத தெய்வமும்
பாவிக்காய் ஆருயிர் ஈந்த என் மீட்பரே
சதா நித்திய காலமாய் உமக்குத் துதியே

மத்தியு பிறிஜ்ஜஸ்,

217

Hail, Thou once despised Jesus! (M. H. B. 228)

8, 7, 8, 7. D

1. வாழ்க யேசு! எம்மை மீட்க
வாதைப் பாடுகள் பட்டீர்;
எம் பாவப் பாரத்தை நீக்க
மோட்ச மாட்சியை விட்டீர்;

மீட்பரே, மகா நேசத்தால்!
எம் பாசத்தைப் போக்கினீர்;
தூய சோரியின் பலத்தால்
எம்மை நீதரீ ஆக்கினீர்,

2. எம் பாவங்களைச் சுமந்த
பஸ்கா ஆட்டுக்குட்டி நீர்;
மாந்தரை ரட்சிக்க வந்த
தெய்வீக நண்பர் ஆனீர்;
பாவ மன்னிப்பை எல்லோரும்
உம்மாலே பெற்றுக்கொள்வார்
சீர் அடைந்த மாந்தர் யாரும்
மோட்ச வாசர் ஆகுவார்.

3. வாழ்க யேசு! மாண்பைப்பெற்று,
விண்ணில் வீற்றிருக்கிறீர்;
தந்தையின் பக்கத்தில் நின்று,
நேச வேண்டல் செய்கிறீர்;
நீசர்க்காய்ப் பரிந்து பேசி,
மோட்ச வாழ்விற் சேர்க்கிறீர்;
தீயரின் மன்னிப்பை நாடி,
என்றும் வாது செய்கிறீர்.

218

God is gone up on high (M. H. B. 219)
6. 6. 6. 6. 8. 8.

பல்லவி

மண்ணோர் கூடி, இன்பமாய்ப் பாடும்
வான் ராசாவின் மாண்பைப் போற்றும்.

சரணங்கள்

1. வெற்றித் தொனியோடு - வானம் சென்றார் கர்த்தர்;
தூதர் இன்பங் கொண்டு - எக்காளம் ஊதுவார்!

2. மாம்சம் பெற்று மண்ணில், - விண்ணில் ஆளுகிறார்
நம்மைத் தமதன்பில் - நிலைக்கச் செய்கிறார்;

3. பிதா, சுதனுக்கு - வல்லமை கொடுத்தார்;
வான தூதர் அவர்க்கு - வாழ்த்துச் சொல்லுகிறார்;

4. ஆசனத்திலிருந்து - ஆளுகை செய்கிறார்;
மாற்றுரைச் செயித்து - நிர்மூலமாக்குவார்;

5. சாத்தான், லோகம், பாவம் - எனும் நம் மாற்றுரை
இயேசு வென்று, நிதம் - ஆளுவார் லோகத்தை;

6. திவ்விய நீதியை - லோகம் பெறுமட்டும்.
ஆனந்த கீதத்தை - பாடுவோம் யாவரும்.

— சால்ஸ் உவெஸ்லி
ஜே வி. பென்யமின்

மகிமையின் வருகை

219

1. அழகிற் சிறந்த கோமானே யான் எப்போ காண்பேனே
பழவினை தீர்த்த புண்ணியனைக் கண்டெப்போ மகிழ்வேனே.

2. மதிவடிவான மன்னவனையிம் மண்டல மீதினிலே
துதிசெய்யப் பாவத் திரளது நீங்கும் தேவாசீ ரோங்கும்

3. பதினாயிரம் பேராயினு மிவரே அழகிற் சிறந்தவராம்
கதிதந்தெனையே கண்மணி போலக் கருத்தாய்க் காப்பவராம்

4. பூதலத்தில் யான் வேறொருவரை இப்படிக் கண்டிலனே
ஓதவுமறியேன் உன்னதவன்பை ஓயாத் துதி சொல்வேன்

5. இப்படிக் கொத்த பூரணனை இப் பூமியில் கண்டதுண்டோ
செப்பிடப் பாதம் வெண்கலமாமே ஜோதிவடிவாமே.

6, சுரரும் நரரும் போற்றுதற்கரிய சுந்தர நாயகனும்
வரம் அளித்தே பத்தரைக் காக்கும் வல்லபரன் சுதனும்

7. ஆசைக்கினைந்த நேசரின் நாமம் யேசுகிறிஸ் தென்பதாம்
காசினியெங்கும் கேட்டறியாத கர்த்தன் திருப்பெயராம.

— பாகவதர் வேதநாயகம்

220

பல்லவி

முன் செல்லுவோம் இயேசுவிடம்
மேகம் மீதில் வேகம் வாருரே
சீயோனில் நாம் சேர்ந்திடவே
சீக்கிரமாய் எழுந்திடுவோம்.

சரணங்கள்

1. ஆயத்தமாய் இருப்பவரே
ஆட்கொண்ட இயேசு வாருர்
மா மகிபன் நாதனையே
பாடி மகிழ்ந்திடுவோம். - முன்செல்லு

2. மீட்கப்பட்டோர் குதித்தெழுந்தே
மேசியாவைத் துதிக்க
ஆயிரமாம் தூதர்களும்
ஆனந்தமாய் பாடிட - முன்செல்லு

3. எக்காளமும் தொனித்திடுதே
ஏகமாய் கூடிடுவோம்
தாமதமேன் பாவியுன்னை
தற்பரன் அழைக்கிருரே. - முன்செல்லு

221

பல்லவி

இயேசு சீக்கிரமாய் வருகிருர்
ஆசையுடன் விழித்திருங்கள்.

சரணங்கள்

1. அடையாளங்கள் அகிலமெல்லாம்
தடையின்றிக் காட்டுகின்றன
நடை உடைகளைச் சரிப்படுத்துங்கள்
முடை ஏதுமின்றி விழித்திருங்கள் - இயேசு

2. சாயங்கால வேளையிலோ
மாய நடு ராத்திரியிலோ
சேவல் கூவும் நேரத்திலோ
காலையிலோ விழித்திருங்கள், - இயேசு.

3. ஆயத்தமாக இருங்கள்
ஆண்டவரைச் சந்தியுங்கள்
நியாயந் தீர்க்கப் படவிருங்கள்
ஆயனுக்காக விழித்திருங்கள். - இயேசு.

4. பரிசுத்தர் களாயிருங்கள்
திருச் சித்தப்படி நடந்திடுங்கள்
மரித்தாலும் அவரில் மரியுங்கள்
பிழைத்திருக்கையில் விழித்திருங்கள். - இயேசு

222

பல்லவி

திறவுண்ட வாசல் அடைபடுமுன்
நொறுங்குண்ட மனதாய் முன் செல்வோர் யார்?
நாட்கள் கொடியதாய் மாறிடுதே
காலத்தை ஆதாயம் செய்திடுவோம்

சரணங்கள்

1. இருள் சூழும் காலம்
இனி வருதே
அருள் உள்ள நாட்கள்
பயன்படுத்தும்
திறவுண்ட வாசல் அடைபடுமுன்
நொருங்குண்ட மனதாய் முன் செல்வார் யார்?

2. தரிசு நிலங்கள் அநேகம் உண்டு
தரிசனம் பெற்றோர் நீர் முன் வருவீர்
பரிசாக இயேசுவை அவர்களுக்கும்
அளித்திட அன்பினுல் எழுந்து செல்வீர் - திறவுண்ட

3. எத்தனை நாடுகள் இந்நாட்களில்
கர்த்தரின் பணிக்குத்தான் காதடைந்தார்
திறந்த வாசல் இன்று உனக்கெதிரில்
பயன்படுத்தும் மக்கள் ஞானவான்கள். - திறவுண்ட

4. விசுவாசிகள் எனும் கூட்டமுண்டு
அன்பு ஒன்றே அவர் நடுவில் உண்டு
ஒரு மனம் ஒற்றுமை அங்கு உண்டு
என்று சொல்லும் நாட்கள் இன்று வேண்டும். - திறவுண்ட

5. இனிவரும் நாட்களில் நமது கடன்
வெகு அதிகம் விசுவாசிகளே!
நம்மிடை உள்ள ஐக்கியமே
வெற்றியும் தோல்வியும் ஆக்கிடுமே - திறவுண்ட

6. இயேசுவே எங்கள் உள்ளங்களை
அன்பெனும் ஆவியால் நிறைத்திடுமே
இந் நாட்டின் எல்லாத் தெருக்களிலும்
இயேசுவின் நாமமும் விரைந்திடுமே. - திறவுண்ட

223

அசாவேரி — திஸ்ரஏகதாளம்

பல்லவி

எனது கர்த்தரின் ராஜரீக நாள்
எப்போ வருகுமோ?
ஏங்கும் என் கலி நீங்கி மகிழ்ச்சி
எப்போ பெருகுமோ?

அனுபல்லவி

மனுசுதனின் அட்டியாளம் விண்ணில் காணும் என்றுரே;
வல்லமையோடு மகிமையாய்த் தோன்றி வருவேன் என்றுரே.

சரணங்கள்

1. தேவ தூதரின் கடைசி எக்காளம் தொனி முழங்கவே
ஜெகத்தில் ஏசுவைப்பற்றி மரித்தோர் உயிர்த்தெழும்பவே
ஜீவனுள்ளோரும் அவருடன் மறுரூபமாகவே,
ஜெகத்தில் பக்தர்கள் கர்த்தரிடத்துக்கு எழுந்து போகவே.

2. ஜாதிகளுக்கு கொடியாய் ஈசாவின் வேரன் தேறுவார்
சகலரும் அவர் கொடியின் கீழ் வந்து பணிந்து சூழுவார்;
நீதியாய்த் தானே மேசியா எங்கும் ஆளுகை செய்வார்;
நித்தம் பிரபுக்களும் நியாயமாய் அவர் துரைத்தனம்
- செய்வார்

3. எருசலேமி லிருந்து ஜீவ நதிகள் ஓடுமே;
ஏழைகள் மன மகிழ்ந்து கர்த்தரை ஏத்திப் பாடுமே;
வருஷமாயிரம் அளவும் பூமியில் பலன்கள் நீடுமே;
வான ராச்சிய சேனைகள் யாவும் வந்து கூடுமே

4. சஞ்சலங்கள் தவிப்புகள் யாவும் ஓடிப் போகுமே;
சந்தோஷத்தோடு மகிழ்ச்சியும் வந்து சார்ந்து பிடிக்குமே;
நெஞ்சமகிழ்ந்து நீதிமான்களின் வாய் துதிக்குமே;
நித்திய ஜீவனைப்பெற என்றன் மனம் துடிக்குமே.

5. சீக்கிரமாக வருகிறேன் என்று சொல்லி விட்டாரே!
ஜீவ விருட்சந்தன்னில் அதிகாரம் தருவேன் என்றாரே;
பாக்கியமுள்ள சுவிசேஷத்தைக் கைக்கொள்ளச் சொன்னாரே;
பார்க்கப் பார்க்க நல் வேதவாக்கியம் தோன்றும் என்றாரே.

— பானையங்கோட்டைப் பாடல்

224

பல்லவி

சாலேமின் ராஜா சங்கையின் ராஜா
சுவாமி வாருமேன் சுவாமி வாருமேன்
இந்தத் தாரணி மீதினில் ஆளுகை செய்திட
சடுதி வாருமேன்.

சரணம்

1. சீக்கிரம் வருவோம் என்றுரைத்துப் போன
செல்வக் குமாரனே
இந்தச் சீயோனின் மாதுகள் தேடித்திரிகின்ற
செய்தி கேளீரோ
- சாலேமின்

2. எட்டி எட்டி உம்மை அண்ணாந்து பார்த்துக்கண்
பூத்துப் போகுதே
நீரெங்கட்கு நல்கிய வாக்குத்தத்தம் நிறை
வேறலாகுதே
- சாலேமின்

— தோமஸ் தங்கராசா

225

Jesus shall reign (M. H. B 272)

L. M.

1. சூரியன் தோன்றும் திக்கெங்கும்
இயேசு ஆண்டுகொள்வார் என்றும்,
அவர் ராச்சியம் பரம்பி
நிலை நிற்கும் ஒழிவின்றி,

2. அவர் நிமித்தம் எப்போதும்
செபங்கள் செலுத்தப்படும்;
அவர் நாமம் நற்தூபமாய்
எழும்பும் சதாகாலமாய்

3. அன்பு பெற்ற சர்வதேசர்
அவரை வாழ்த்திப் போற்றுவார்;
பாலர் தாமும், வாழ்க என்னும்
நமஸ்காரம் செய்வார் என்றும்.

4. அவர் ஆள இன்பம் தேங்கும்
சிறைப்பட்டோர் தளை நீங்கும்,
இளைத்தோர் ஆற்றி அடைவார்
வறிஞர் வாழ்வு பெறுவார்.

5. அவரால் சொஸ்தம் உண்டாகும்
கேடும் சாவும் முற்றுய் நீங்கும்
ஆதி தந்தை விட்ட இன்பம்
மீண்டும் தோன்றும் அவர் மூலம்.

6. எங்கள் ராசாவைத் துதிக்க
நாம் எல்லோரும் சேர்வோமாக
சேனைதூதரே நீங்களும்
மாந்தருடன் பாட வாரும்

— ஐசக் வொற்ஸ்
பீற்றர்பேசிவல்

226

பல்லவி

துதிமிகு கன நிறை நாதன்
நடுவானில் தோன்றிடுவார்
இதுவரை இருந்த துன்பமில்லை
இனி என்றுமே ஆனந்தம்.

சரணங்கள்

1. தளகர்த்தனும் யேசு நின்று
பலன் ஈந்திடுவார் அன்று
அவர் ஆவியினுல் புதுப் பெலனடைந்து
செயல் வீரராய் நின்றிடுவோம். - துதி

2. புவி மீதினில் சரீர மீட்பு
என்று வருமெனக் காத்திருக்கும்
நாம் மகிழ்ந்திடவே அவர் வந்திடுவார்
மண வாட்டியாய் மாறிடுவோம். - துதி

3. தேவதூதர் எக்காளமுடன்
ஆரவாரத் தொனிகேட்க
அவர் திருபையிலுல் மறுரூபமாக
நம்மைத் தம்முடன் சேர்த்திடுவார். - துதி

227

மோகனம் ஆதி

பல்லவி

வரவேணும் எனதரசே
மனுவேல் இஸ்ரவேல் சிரசே

அனுபல்லவி

அருளே தயம் ஒளிர் பிரகாசா
அசரீரி ஒரே சருவேசா

சரணங்கள்

1. வேதா, கருணைகரா மெய்யான பராபரா
ஆதார நிராதரா அன்பான சகோதரா
தாதாவும் தாய் சகலமும் நீயே
நாதா, உன் தாபரம் நல்குவாயே - வர

2. படியோர் பவமோசனே பரலோக சிம்மாசனு
முடியாதருள் போசனு முதன் மா மறை வாசனு
இடையர் குடிலிடை மேவி எழுந்தாய்
இமையவர் அடிதொழ மேன்மையின் எந்தாய் - வர

3. வானோர் தொழும் நாதனே மறையாகம போதனே
கானுவின் அதிதினே கலிலேயா வினேதனே
ஞானுகரமே நடுநிலை யோவா
நண்பா உன்னத நன்மையின் மகாதேவா - வர

— வேதநாயகம் சாஸ்திரியார்

கடவுள்-தூயஆவி; வருகை

228

சங்கராபரணம் சாப்புதாளம்

பல்லவி

ஆவியை மழைபோல ஊற்றும் - பல
சாதிகளே யேசு மந்தையிற் கூட்டும் - ஆவி

அனுபல்லவி

பாவிக்காய்ச் சீவனே விட்ட கிறிஸ்து!
பரிந்து நீர் பேசியே இறங்கிடச் செய்யும் - ஆவி

சரணங்கள்

1. அன்பினுற் சீவனே விட்டீர் - ஆவி
அருண்மாரி பொழியவே பரலோகஞ் சென்றீர்
இன்பப் பெருக்கில் மகிழ்ந்து மகிழ
ஏராள மானச னங்களைக் கூட்டும் - ஆவி

2. சிதறுண் டலைகிற ஆட்டை - எங்கும்
தேடிப்பி டித்துநீர் தோளிற்சுமந்து
பதறுதே நான் தானுன் பத்தாவாம்யேசு
பாக்கிய ரென்றுமெய் வாக்கை அருளும் - ஆவி

3. ஸ்தோத்திரக் கீதங்கள் பாடி - எங்கும்
சுவிசேஷ ஜெயத்தையே நிதம் நிதம் தேடிப்
பாத்திரராக அநேக ரெழும்பப்
பரிசுத்த ஆவியின் அருள்மாரி யூற்றும் - ஆவி

பிரசங்கி அருளானந்தம்

229

பைரவி — சாப்புதாளம்

பல்லவி

ஆவியை யருளுமே சுவாமி - எனக்
காயுயிர் கொடுத்த வானத்தி னரசே!

சரணங்கள்

1. தீபத்துக் கெண்ணெயைச் சீக்கிர மூற்றும்
திரியவி யாமலே தூண்டியே யேற்றும்,
பாவ அசூசங்கள் விலக்கியே மாற்றும்,
பரிசுத்த வரந்தந் தென் இதயத்தைத் தேற்றும் - ஆவி

2. உலர்ந்த எலும்பாகிக் கிடக்கிறேன் பாவி,
உன்னத பெலனுக்கா யுழலுதென் ஞவி,
மலர்ந்தென்னை நோக்குமென் தெய்வத சீவி
மண்ணுல கவையாவும் வெறும்பச்ச நாபி - ஆவி

3. நற்கனி தேடிவருங் காலங்க ளல்லவோ?
நாலைரு கனியற்ற பாழ்மர மல்லவோ?
முற்பனி முகங்காணு வெம்பயிரல்லவோ?
முழு நெஞ்சும் விளைவற்ற உவர்நில மல்லவோ? - ஆவி

4. திரியேக தேவா! திரள் திரள் தோத்திரம்,
சேனைவா னவர்தொழும் யோவா இஸ் தோத்திரம்
முரசொடு வருமிம் மானுவேல் தோத்திரம்,
மூவரி லொருவராம் ஆவியே தோத்திரம், - ஆவி

— பிரசங்கி அருளானந்தம்

230

சங்கராபரணம் — ஆதிதாளம்

பல்லவி

ஆவியின் ஞானஸ்நானம் தாரும் யேசுவே,
அக்கினியின் ஞானஸ்நானம் தாரும் யேசுவே

சரணங்கள்

1. பாவ ஆசை வேரோடற - ஊற்றும் ஆவியை,
பாவ சக்தி மாண்டகல - ஊற்றும் ஆவியை - ஆவி

2. என்னையாளும் சுயம்மாள ஊற்றும் ஆவியை,
தன்னைத்தேடும் நேசம்சாக - ஊற்றும் ஆவியை - ஆவி

3. உள்ளம் முற்றும் சுத்தமாக - ஊற்றும் ஆவியை,
வெள்ளமாயன்பு பாய்ந்தோட - ஊற்றும் ஆவியை - ஆவி

4. அன்பும்மேல் நிரம்பிப்பாய - ஊற்றும் ஆவியை,
இன்புடனுமைச் சேவிக்க - ஊற்றும் ஆவியை - ஆவி

5- தேவசித்தம் ஏற்றுக்கொள்ள - ஊற்றும் ஆவியை,
தேவவாக்கை நான் கைக்கொள்ள - ஊற்றும் ஆவியை - ஆவி

6. செப ஆவி மென்மேலோங்க - ஊற்றும் ஆவியை,
அகம் நின்றே ஊறித் தேங்க - ஊற்றும் ஆவியை - ஆவி

7. மானிடர் மேலன்புண்டாக - ஊற்றும் ஆவியை,
ஆன்ம தாகமுள்ளோனுக - ஊற்றும் ஆவியை

8. எம்தேச முயிரடைய - ஊற்றும் ஆவியை,
உம் ராஜ்ஜியம் சீக்கிரம்வர - ஊற்றும் ஆவியை - ஆவி

— என் ஜி. நத்தானியேல்

231

குறிஞ்சி ரூபகதாளம்

1. இந்தவேளை யினில் வந்தருளுந்தேவ ஆவியே! இப்போ
தெங்கள்மீ திறங்கி தங்கிவரந்தாரும், ஆவியே!

2. அந்தணர் தம்மிடம் விந்தை செய்தசத்ய ஆவியே, முன்
ஆச்சரியமாகக் காட்சிதந்த ஞான ஆவியே!

3. ஆரும றியாத ஆறுதல் செய்திடும் ஆவியே! இங்கு
அஞ்ஞான மகற்றி மெய்ஞ்ஞானம் புகட்டும், ஆவியே!

4 சித்தமிரங்கிரோ நித்தியராகிய ஆவியே - அருள்
சீவ வழிகாட்டி, பாவம கற்றிடும், ஆவியே!

5. வாரும், வாரும், கண்பாரும் பரிசுத்த ஆவியே! - இன்று
வந்து சபைமீதில் தந்தருளும் வரம், ஆவியே!

6. தேற்றர வாளரென் றேத்திப் புகழ்ந்திடும் ஆவியே - நிதம்
சித்தம்வைத் தென்மீதில் முற்றும் புரந்திடும், ஆவியே

232

கரகரப்பிரிய ஆதிதாளம்

பல்லவி

வரவேணும் பரனுவியே
இறங்குஞ் சுடராய் மேவியே

அனுபல்லவி

மருளாம் பாவம் மருவிய எனக்கு
வானுக்கினியால் ஞானத்திட்சை தர - வரவே

சரணங்கள்

1. பலமான எப்பாவமும் பாழாத்கும் மாநோய்களும்
வலிய கொடும் ரோகமும் மாம்ச சிந்தையோடுமே,
பலிபீடத்தில் என்னைப் பலியாக வைத்தேன்
எலியாவின் ஜெபத்துக் கிரங்கிய வண்ணம் - வரவே

2. என்றன் பாவம்யாவையும் எரிக்கும் வகைதேடியும்
எங்கும் இந்த லோகத்தில் எத்தியுமே காண்கிலேன்
என்றன் செயலால் யாதொன்றும் முடியா
தின்றே வானுக்கினி வரவேணும் - வரவே

3. குடிகொள் எந்தப் பாவமும் அடியோடே தொலைத்திடும்
தடுத்தாட் கொள்ளும் தோஷமும் சாம்பலாகச் செய்திடும்
படிமிசை காற்றுக்குப் பறந்தோடும் சாம்பல்போல்
அடியேன் யேசுவுக்கென்றும் பணிசெய்ய - வரவே

— வி. சந்தியாகு

233

Come Holy Ghost all quickening fire
(M. H. B. 299) 8, 8, 8 D.

1. வாரும் அக்கினி சுத்தாவி
இன்பமாய் என்னில் தரித்திடும்
மா வாஞ்சையால் என்னைத் தாவி
உம்மை என் நெஞ்சில் ஸ்தாபியும்
என் ஆன்மம் ஆலயமாக்கும்
உம் சமூகம் அங்கே நாட்டும்

2. உணர்ந்தால் நான் உம் அருளை
உம்மில் நான் சீவிக்கில் மேலும்
வெளிப்படுத்தி நீர் உம்மை
என் நெஞ்சிலே நிலைத்திடும்
உம் அற்பம் என் செல்வமாகும்
அப்போ மென்மேல் அருள்தாரும்

3. என் சாந்தம் சீவன் ஆற்றியே
நீர் என் செல்வம் சர்வம் ஆனீர்
என் மைந்தத்துவ சாட்சியே
மன்னிப்பை நிசமாக்குவீர்
நீரே என் மீட்பரின் முத்திரை
ஈந்தீர் மோட்ச அச்சாரத்தை

4. தேவே மோட்ச அச்சாரத்தை
மேலும் தந்து மிக நன்குய்
சாட்சியிட்டு உம் தோற்றத்தை
எனக்குக் காண்பியும் அன்பாய்
உம் சமூகத்தை உணர்த்தும்
முத்திரையைப் பதித்திடும்

— சால்ஸ் உவெஸ்லி
டீ. பீ. நயில்ஸ்

234

Come O Come
8, 7, 8, 7, 4, 7.

1. வாரும் தெய்வ ஆவி வாரும்
எங்கள் ஆத்துமத்திலே
எங்களுக் குயிரைத் தாரும்
வாரும் சுத்த ஆவியே
ஞான தீபம்
ஸ்வாமி நீரே ஏற்றுமே

2. எங்கள் நெஞ்சில் நல்ல புத்தி
தெய்வ பக்தி தோன்றவே
அதை நீர் குணப்படுத்தி
தப்பு சிந்தை யாவுமே
மாற்ற வாரும்
நல்ல தெய்வ ஆவியே

3. நெஞ்சு எங்களில் கலங்கி
நாயகனே இரட்சியும்
என்று கெஞ்சும் போதிரங்கி
ஆற்றித் தேற்றிக் கொண்டிரும்
துன்பம் நீங்க
நீர் சகாயராய் இரும்

235

பல்லவி

வாழ்த்துவோம் வாழ்த்துவோமே - எங்கள்
வான பரன் சுதனே

அனுபல்லவி

வாழ்வினிலே சுப நாளிது ஆனந்தம்
வாழ்த்துவோம் வாழ்த்துவோமே - அல்லேலூயா - வாழ்

சரணங்கள்

1. பெந்தக்கொஸ்த் பண்டிகையில் சீஷர்
சிந்தையில் ஒன்றுபட்டு - அங்கே
வந்தனை செய்திருந்தார் அன்பின்
மூன்சொன்ன வாக்கைப் பெற்றார் - அல்லேலூயா - வாழ்

2. அடித்தது பெருங்காற்று வானில்
இடித்தது பெருமுழக்கம் - வீடு
திரப்பிய ததிசயமே அவர்மேல்
தரித்ததே அனல் நாவாய் - அல்லேலூயா - வாழ்

3. பல பல மொழிகளிலே பரமன்
நலபெலம் நவின்றனரே - நின்றோர்
அவரவர் மொழிகேட்டுத் திகைத்து
பர பரப் பெய்தினரே - அல்லேலூயா - வாழ்

4. தீர்க்கதரிசி யோவேல் உரைத்த
தார்ப்பரியம் இதுவே - பேதுரு
பதிலைரு பேருடனே பகர்ந்தார்
அதிரடி அவரடைந்தார் - அல்லேலூயா - வாழ்

5. இருதயம் நொருங்குண்டு கலங்கி
பெருந்திரள் கரைந்தழுதார் - அன்று
ஒரு மூவாயிரம்பேர் இயேசுவின்
திருநாம தீட்சை பெற்றார் - அல்லேலூயா - வாழ்

6. ஒருமனதாய்ச் செபிப்போம், உள்ளதெல்லாம்
ஒன்றாக அனுபவிப்போம், தரித்து
திருமறையைப் படிப்போம் இயேசுவின்
திருநாமத்தைத் துதிப்போம் - அல்லேலூயா - வாழ்

— ஐ. ரீ. யேசுசகாயம்

வழிகாட்டல்

236

Gracious Spirit dwell with me (M. H. B. 291)
77, 77, 77

1. அருள்ஆவி, வந்திடும்; அருள் என்னிலும் தோன்றும்;
உம்சீவன் என் நெஞ்சிலே, தோன்றும்படி செய்யுமே;
அப்போ, நான் திடன்கொள்வேன், கிறிஸ்துவின்
புகழ் சொல்வேன்

2. உண்மை ஆவி, வந்திடும்! உண்மை என்னிலும் தோன்றும்:
உணர்த்தி மெய்ஞ்ஞானத்தை, விளக்கும் என் நெஞ்சத்தை
அப்போ தேவ நண்பனுய், நான் நடப்பேன் உண்மையாய்

3. தயை ஆவி, வந்திடும், தயை என்னிலும் தோன்றும்;
சோதனை வரும்போது நீர் என் நெஞ்சை மறைத்து,
அருள் வரும்பொழுதே திறவும் தேவாவியே!

4. வல்ல ஆவி, வந்திடும்! வன்மை என்னிலும் தோன்றும்;
அப்போ நான் சோர்வற்றேனுய்; வெல்வேன் தீமையை
முற்றுய்
திடநம்பிக்கை கொள்வேன், என் ஓட்டத்தை முடிப்பேன்

5. சுத்தஆவி, வந்திடும் சுத்தம் என்னிலும் தோன்றும்,
தீமையை நான் வெறுப்பேன், நன்மையை நாடிச்செல்வேன்
போற்றி உமதருளை, வாழ்த்துவேன் என்தேவனை

— தோமஸ் ரோக்லின்ச்
ஜோன் கில்னார்

237

பல்லவி

ஒன்றே ஒன்றுதான் – அன்பு
என்றும் தேவைதான் – அது
இல்லையெனில் வாழ்வினிலே
துன்பம் துன்பம் தான்

அனுபல்லவி

இறைவன் அருளும் வரந்தான்
மனித உறவில் தெரியும் – ஒன்றே

சரணங்கள்

1. செல்வம் எத்தனை சேர்ந்தாலும்
பேரும் புகழும் வந்தாலும்
அன்பு நம்மில் இல்லையென்றால்
நாமும் வாழ்ந்து பயனென்ன – ஒன்றே

2. இறைவன் மக்கள் நாமெல்லாம்
ஆயிரம் பிரிவுகள் பேசுவதா
பேதம் நம்மில் உண்டென்றால்
அன்பைப் பேசி பொருளென்ன – ஒன்றே

— ஜோசப் சந்திரசேகரம்

238

Lord I hear of Showers of Blessing (M.H.B. 321)
8-7, 8, 7, 3

1. கர்த்தா! எங்குமுள்ளார்க் கருள்
பொழிந் தீரென்று கேட்டோம்!
சொஸ்தம் தரும் மழை பெய்கில்,
சில துளி விழட்டும்,
என்மேலும், என்மேலும், சிலதுளி விழட்டும்

2. அருட்பிதா! நீங்காதிரும்,
பாவ நெஞ்சன் ஆலையும்;
நீர் நீங்கக் கூடுமாயினும்,
அன்பாய் உம் அருள்தாரும்,
எனக்கும், என்க்கும், அருள்தாரும் எனக்கும்

3. தயா மீட்பர்! நீங்காதிரும்,
நான் உம்மிற் சேரவிடும்;
உம் பிரீதி பெறவேண்டும்;
மற்றோரைப் போற் கூப்பிடும்,
என்னையும், என்னையும், நீர்கூப்பிடும் என்னையும்

4, வல்ல ஆவி! நீங்காதிரும்,
குருடன் காணச் செய்யும்.
யேசின் புண்ணிய சாட்சியாகும்,
வல்ல வாக்கைச் சொல்லிடும்,
எனக்கும், எனக்கும், வாக்கைச் சொல்லும் எனக்கும்

— எலிசபெத் கொட்ணர்
ஜோண் கில்ணர்

239

மணிரங்கு — திஸ்ர ஏகதாளம்

பல்லவி

தீயமனதை மாற்ற வாருந்தூய ஆவியே!
கன நேய மேவியே

சரணங்கள்

1. மாய பாசத் தழுந்தி வாடி மாளுஞ் சாவிதால்; –மிக
மாயும் பாவி நான்

2. தீமைசெய்ய நாடுதென்றன் திருக்கு நெஞ்சமே; மருள்
தீர்க்கும் தஞ்சமே,

3. பரத்தை நோக்க மனம் அற்றேனே பதடிதான், ஐயா; – ஒரு
பாவி நான் ஐயா,

4. புதிய சிந்தை, புதிய ஆசை புதுப்பித்தாக்கவே – அதைப்
புகழ்ந்து காக்கவே

5. ஏக்கத்தோ டென்மீட்பைத் தேடி, இரந்து கெஞ்சவே– தினம்
இதயம் அஞ்சவே

6. கிறிஸ்துமீது நாட்டங்கொண்டு கீதம் பாடவே; – அவர்
கிருபை தேடவே,

7. தேவ வசனப் பாலின்மீது தேட்டம் உன்னவே; – மிகு
தெளிவு துன்னவே,

8. ஜெபத்தின்தாகம் அகத்தில் ஊறி ஜெபித்துப்போற்றவே
– மிகச்
சிறப்பாய் ஏத்தவே

— உ. சற்குணம்

240

சங்கராபரணம் ஏகதாளம்

1. நன்மை மூலனே – நம்நேய சீலனே
மைந்தர் பேரிலிந்தவேளை வந்திறங்குமேன்

2. போர் அதிகமாய் – மும்முரிக்குதே,
சோர்வடையா ஆவியைநீர் ஊற்றிக்காத்திடும்

3. ஆத்துமாமிக தத்தளிக்குதே,
காத்து என்னை ஆற்றி இப்போ தேற்றவாருமேன்

4. துன்பம் வந்தாலோ – துயரமின்றியே
இன்பமாய் நிலைத்துநிற்க வந்திறங்குமேன்,

5. இருளாய்த் தோன்றுதே – அருளைத்தாருமேன்
பரத்தின் சோதி எனக்குள் வீசக் கிருபைகூருமேன்

6. எந்தன் நம்பிக்கை – உம்மில்தான் ஐயா!
நம்பி என்னை முற்றுமாகத் தத்தம்செய்கிறேன்

— இரட்சணியசேனைப் பாடல்

241

Come Holy Ghost our souls inspire
(M. H. B. 779) L. M.

1. வந்தாளும் வல்ல ஆவியே
வானத்தின் வரம் அருள்வீர்;
எந்தை பிதாவின் ஏவலால்
ஏழ் வரமீயும், ஈசனே

2. வானத்தினின் றுன்னுவியை
வாரிதியாக, வல்லவா
ஞானத்தின் போஜனமதாய்
ஞாலத்திலூற்றி நல்குவீர்

3. ஏங்கித் திகைக்கும் எங்களை
ஏற்று நின்னரு ளீவையே;
தீங்கணுகா தெமைக் காத்து
திவ்விய பாதை காட்டுமே

4. தந்தை, தனயன், ஆவியே
விந்தை சிறந்த விண்ணவா,
எந்தை பிரானே என்றென்றும்
மந்தையாய் நாங்கள் மகிழ்வோம்

நித்யானந்த நின்மலா,
சச்சிதானந்த சாஸ்வதா

— ஏ. எம். கே. குமாரசுவாமி
9-ம் நூற்றாண்டுப் பாடல்

வரங்கள், கனிகள்

242

பல்லவி

அருள்துதி - சொல்லுவோமே - எங்கள்
அருவினை வெல்லுவோமே
அகமே நிறைவாய் உறவே இறங்கி
அறிவாய் ஆளவர்க்கே

சரணங்கள்

1. மேலறை வீட்டினிலே - அன்று
மேவி யிறங்கினரே
மிகவே அடியார் களிகூர்ந்திடவே
அனலாய் அமர்ந்தவர்க்கே - அருள்

2. அச்சம் அகன்றதுமே - அங்கே
அன்பு வழிந்ததுவே
அடியார் தலைமேல் பெலமாய் இறங்கி
அனலாய் அமர்ந்தவர்க்கே - அருள்

3. தீர்க்கர் உரைப்படியே - யாரும்
தேவ பெலன் பெறவே
திருநேர் சபையே உயிர்வாழ்ந்திடவே
அனலாய் அமர்ந்தவர்க்கே - அருள்

4. ஆவி களிப்புறவே - நெஞ்சின்
ஆவல் நிறைந்திடவே
அருவாய் நிறைவாய் உயிராய் இறங்கி
அனலாய் அமர்ந்தவர்க்கே - அருள்

5. ஆற்றல் நிறைந்திடவே - எங்கள்
ஆவி யுயிர்த்திடவே
அனைவோருலகில் அருள் சேர்ந்திடவே
அனலாய் அமர்ந்தவர்க்கே - அருள்

6. பாவ மகன்றிடவே - அன்பு
பாரில் நிறைந்திடவே
பலமாய்ச் சபைமேல் வருவார் துதியே
அனலாய் அமர்ந்தவர்க்கே - அருள்

243

There shall be showers of blesing (S.S.R.306)
8, 8, 7, 7.

பல்லவி

தேவன்பின் வெள்ளம்
தேவன்பின் வெள்ளம் தேவை;
கொஞ்சம் ருசித்த என் உள்ளம்
கெஞ்சுதே இன்னும் தேவை

சரணங்கள்

1. அருளின் மாமழை பெய்யும்
என்று வாக்களித் தோரே
மாரியாய்ப் பெய்திடச் செய்யும்
உலகத்தின் இரட்சகரே!

2. கற்பாறைபோற் பாவி உள்ளம்
கடினப் பட்டதையா;
பரிசுத்தாவியின் வெள்ளம்
கரைக்க வல்லதையா

3. "வெட்டாந்தரை நிலந்தானும்
ஏதேன்போல் மாறும்" என்றீர்
சாபத்துள்ளானமுட் பூண்டும்
கேதுரு வாகும் என்றீர்

4. ஏழை என்குறைகள் யாவும்
தீர்த்திடும், இரட்சகரே;
யுத்தத்தில் முன்செல்ல ஏவும்
சேனைத்தள கர்த்தரே

இந்திய மொழிபெயர்ப்பு

244

பல்லவி

ஆனந்தங் கொள்வோம் அகமகிழ்வுடனே
ஞான வரந்தரும் ஆவியின் அனுபவமே

அனுபல்லவி

வானசுடர் ரூபியே சத்ய மோனதூய ஆவியே - எங்கள்
தீனதயா நிதியே

சரணங்கள்

1. துன்பத்தில் இன்பம் பயம்தரு நோயில்
என்சுகமும் தைரியமும் எனக்கு நீரே
காரிருள் சூழும்வேளை என்பேரொளி நீரல்லவோ - என்
ஆருயிர் நாயகனே - ஆனந்

2. குறைவினில் நிறைவே தனிமையில் உறவே
அறிவீன னென் பேரறிவாக வந்தீர்
அடிமையின் சுதந்திரமே, உடைந்த இருதய அவுட்தமே-என்
மிடிமையில் திரவியமே - ஆனந்

3. கஷ்டத்தில் நயமே பெலவீனன் பெலமே
வெட்கத்தில் என் மகிமையின் கிரீடம் நீரே
மரணத்தில் ஜீவன் நீரே கொடுநரகத்தில் மோட்சம் நீரே
தருணமும் எல்லாம் நீரே - ஆனந் - எல்லா

ஐ. ரீ. யேசுதாசன்

245

பல்லவி

வானம் திறந்தருளும் பல தானங்களை யிந்நேரமிதில்
வானவனே ஞானமுள்ள வல்லகுரு நாதனே
தேனிலும் மதுரம் திவ்விய ஆசீர்வாதங்கள்

சரணங்கள்

1. சத்தியமும் ஜீவனுமாய் நித்தமுமே வாழ்ந்திடும்
கர்த்தனே எங்கட்குக் கரம்தந்து என்றும் தாங்கிடும்
சுத்தமாய் நடப்பதற்கும் சுத்தஆவி தந்திடும்
சித்தமோடு இந்தவேளை வந்திறங்கிடும்

2. என்னை முற்றும் மாற்றிட உன்னத பெலனூற்றிடும்
இன்னும் இன்னும் ஈசனேயும் நல்வரங்க ளீந்திடும்
கண்ணிகளிற் சிக்கிடாமல் கண்மணிபோல் காத்திடும்
கன்மலையும் மீட்பருமென் காவலும் நீரே

3. சுய மாடம் பரம் முற்றும் சுட்டெரிக்க வேணுமே
தயவு தாழ்மை யினவி தந்தருள வேணுமே
மாயமான யாவினின்றும் மனமதைப் பேணுமே
ஆயனே அடியார்களின் அடைக்கலமே

4. அதிக மதிக மன்பில் அமிழ்ந்தி அனுதினம்
புதிய நாவுகளாலும் புகழ்ந்துமைப் போற்றிட
அதிசயமே அகத்தின் குறைகளை கற்றியே
இது சமய முன்னத பெலனீந்திடும்

கொன்வென்ஷன் பாடல்

246

பல்லவி

சுத்தபரன் சுத்த ஆவியே நின்மா மகிமை
சொல்லவரம் எனக் கீவையே

அனுபல்லவி

மெத்தவும் அசுத்தன் நானே
மேவினேன் நின் பாதந்தானே
சுத்தமனம் கெஞ்சுவேனே
உன்னேயல் லாலழிவேனே

சரணங்கள்

1. அடியேன் புத்தி பலத்தினுல் என் ஆத்ம மீட்பர்
அருளேப் பெறவும் போகுமோ?
மிடியுறும் ஏழைச் சிஷ்டிதான் மனந்திரும்பி
விசுவாசங் கொள்ளலாகுமோ?

கடினம் என் மனங்கல்லு
கர்த்தா ஒரு வார்த்தை சொல்லு
திடசீவன் வரக் கொல்லு
சேவடி நீ சேர்த்துக் கொள்ளு

2. சுவிசேஷத்தின் தொனியினுல் எனேயழைக்கும்
சுகிர்தந்தனே யானறிந்தேன்
உவந்தளிக்கும் வரங்களால் என் இதயத்துக்
கொளி தருவதை உணர்ந்தேன்

அவமாகா மெய்விஸ்வாசம்
அதனுல் தூய்மை நன்னேசம்
கவர்ந்துனைத் தொழும் பாசம்
கனிந்தளித்தாய் நல்வாசம்

3. நித்தமும் பாவம் பொறுக்கிருய் திருச்சபையில்
நீதி தீர்வை நாளிலே யன்பாய்ச்
செத்த விசுவாசிகளேயும் என்னேயும் உடல்
ஜீவ னுடெழுப்புவாய் இன்பாய்

நித்திய ஜீவன் தருவாய்
நின்மலன் இயேசுவை மெய்யாய்ப்
பக்தியாகவே மனம் வாய்
பற்றினோர்க்கு மாதயவாய்

247

ஹரிகாம்போதி ரூபகம்

பல்லவி

நல்லாவி ஊற்றும் தேவா
நற்கனி நான்தர நித்தம் துதிபாட
நல்லாவி ஊற்றும் தேவா

சரணங்கள்

1. பெந்தே கொஸ்தே நாளில்
உந்தனுவி ஈந்தீரே
இந்த வேளையில் இறங்கிடுவீரே
விந்தை செய் விண் ஆவியே - நல்லாவி

2. மெத்த அசுத்தன் நானே
சுத்தாவி கொண்டென்னையே
சித்தம் வைத்தென்றும் சுத்தம் செய்வீரே
சத்திய பரிசுத்தனே - நல்லாவி

3. ஆவியின் கனி ஒன்பதும்
மேவி நான் தந்திடவும்
ஜீவிய மெல்லாம் புவிமீதிலே
சுவிஷேச பணி யாற்றவும் - நல்லாவி

4. பாவம் செய்யா திருக்க
பாரில் சாட்சி பகர
பார் மீட்க வந்த பரமனையே
பாரோர்க்கு எடுத்துரைக்க - நல்லாவி

— தோமஸ் தங்கராசா

248

பல்லவி

வானத்திலிருந்து வையகம் எழுந்து
புனித ஆவியே வருக
ஞானத்தின் ஒளியை மனதினில் ஏற்றும்
மாசற்ற அன்பே வருக

சரணங்கள்

1. உயிருக்கு உயிரே வாழ்வுக்கு வாழ்வே
உண்மையின் வடிவே வருக
பயிருக்கு மழையே பார்வையின் ஒளியே
பரமனின் அருளே வருக

2. கிழ்த்திசை வானில் வாழ்த்திசை பாடும்
காலைக் கதிரே வருக
ஆழ்கடல் மீதினில் அலையுடன் ஆடும்
ஆனந்த நிலவே வருக

3. மனிதனின் மனதில் மணியெனத் துலங்கும்
மாணிக்க விளக்கே வருக
இனியநல் வாழ்வை உவப்புடன் வழங்கும்
இன்னருட் பெருக்கே வருக

திருச்சபை - ஐக்கியம்

249

பல்லவி

அன்பும் நட்பும் எங்குளதோ
அங்கே இறைவன் இருக்கின்றார்

சரணங்கள்

1. கிறிஸ்துவின் அன்பு நம்மையெல்லாம்
ஒன்றாய்க் கூட்டிச் சேர்த்ததுவே
அவரில் அக்களித்திடுவோம் யாம்
அவரில் மகிழ்ச்சி கொள்வோமே
சீவிய தேவனுக் கஞ்சிடுவோம்
அவருக் கன்பு செய்திடுவோம்
நேரிய உள்ளத் துடனே யாம்
ஒருவரை ஒருவர் நேசிப்போம்

2. எனவே ஒன்றாய் நாமெல்லாம்
வந்து கூடும் போதினிலே
மனதில் வேற்றுமை கொள்ளாமல்
விழிப்பாய் இருந்து கொள்வோமே
தீய சச்சரவுகள் ஒழிந்திடுக
பிணக்குகள் எல்லாம் போய் ஒழிக
நமது மத்தியில் நம் இறைவன்
கிறிஸ்து நாதர் இருந்திடுக

3. முத்தியடைந்தோர் கூட்டத்தில்
நாமும் ஒன்றாய்ச் சேர்ந்து மனம்
மகிழ்ந்து கிறிஸ்து இறைவா நின்
மகிமை வதனம் காண்போமே
முடிவில்லாமல் என்றென்றும்
நித்திய காலம் அனைத்திற்கும்
அளவில்லாத மாண்புடைய
பேரானந்தம் இதுவேயாம்.

250

பல்லவி

அன்பாலே நாம் ஒன்றுகிணைம்
எந்நாளுமே இறைமைந்தரே
நம் சொந்தம், பந்தம், இன்பம்

சரணங்கள்

1. நம் நாதர் நல்லாயன் யேசு
நம் நல்வாழ்வின் துணையாக வந்தார்
வழியாகவே ஒளியாகவே, உயிராகவே ஆனார்

2. நீயென்றும் நானென்றும் இல்லை
இனி அவர் அன்பில் நாம் ஒன்று ஆனேம்
இனிதாகவே, கனிவாகவே, துணையாகவே ஆனார்

3. காரிருள் தன்னில் ஒளி ஈந்த அண்ணல்
எம் அகவாழ்வின் சுடராக வந்தார்
மொழியாகவே, இனமாகவே, உறவாகவே ஆனார்

— இந்திய பாடல்

251

இயேசுவின் குடும்பம் ஒன்று உண்டு
அன்பு நிறைந்திடும் இடம் உண்டு
உயர்வுமில்லை அங்கு தாழ்வுமில்லை
ஏழை இல்லை பணக்காரன் இல்லை

இராஜாதி இராஜா யேசு
என்றென்றும் ஆண்டிடுவார்

1. பாவமில்லை அங்கு சாபமில்லை
வியாதியில்லை கடும் பசியுமில்லை

2. இன்பம் உண்டு சமாதானம் உண்டு
வெற்றியுண்டு துதிபாடல் உண்டு.

252

The Churches one foundation (M. H. B. 701)
7, 6, 7, 6

1. சபையின் அத்திபாரம் - நம் மீட்பர் கிறிஸ்துவே;
சபையின் சென்மாதாரம் - அவரின் வார்த்தையே;
தம் மணவாட்டியாக - வந்ததைத் தேவனர்;
தமக்குச் சொந்தமாக - மரித்ததைக் கொண்டார்

2. எத்தேசத்தார் சேர்ந்தாலும் - சபை ஒன்றே ஒன்றும்;
ஒரே விசுவாசத்தாலும் - ஒரே இரட்சிப்புண்டாம்;
ஒரே தெய்வீக நாமம் - சபையை இணைக்கும்;
ஓர் திவ்விய ஞானகாரம் - பக்தரைப் போஷிக்கும்

3. புறத்தியார் விரோதம் - பயத்தை உறுத்தும்,
உள்ளானவரின் துரோகம் - கிலேசப்படுத்தும்;
பக்தர் ஓயாத சத்தம் - எம்மட்டும்? என்பதாம்;
இராவில் நினைத்த துக்கம் - காலையில் களிப்பாம்

4. மேலான வானகாட்சி - கண்டாசீர்வாதத்தை,
பெற்று, போர் ஓய்ந்து, வெற்றி - சிறந்து, மாட்சிமை
அடையும் பரியந்தம் - இன்ன உழைப்பிலும்
நீங்காத சமாதானம் - மெய்ச்சபை வாஞ்சிக்கும்.

— எஸ். ஜே. ஸ்ரோன்.
இந்திய மொழிபெயர்ப்பு

253

Let Him to whom we now belong (M. H. B. 832)
C. M

1. சர்வாதீனரே உமது - உரித்தை ஸ்தாபியும்;
நமது நெஞ்சில் வசித்து - அன்பினால் நிரப்பும்

2. செந்நீர்க்கிரயம் கொடுத்து - நம்மை மீட்ட தேவே!
உமக்கென்று நாம் பிழைத்து - மரிக்க வேண்டுமே

3. நம்மை உமது தொண்டராய், - இயேசுவே, ஏற்றிடும்;
நாம் உமது மகிமைக்காய் – சீவிக்கச் செய்திடும்

4. நமது தேகம், ஆன்மாவும் - உமக்கே கொடுப்போம்
நமதென்று சொல்லும் யாவும் – உமதாகும் என்போம்

— சால்ஸ் உவெஸ்லி
டீ. பீ நயில்ஸ்

254

All praise to our redeeming Lord (M. H. B.745)
C. M.

1. நம்மை அருளால் நிறைத்த - மீட்பரைத் துதிப்போம்;
வாக்குத்தத்த வரம்பெற - அவரிடம் செல்வோம்

2. நாம் ஒருவர் மற்றவரை – அன்பினுல் தேற்றுவோம்;
பெற்றுக்கொள்ள நம்பலனை – கைகோத்துச் செல்லுவோம்

3. ஒருவன் பெற்ற வரத்தை - மற்றோரும் சுவைப்போம்;
எல்லோர் நெஞ்சிலும் கிருபை – ஆரூய்ப்பாயக் காண்போம்

4. நம் சொற்களும் சிந்தைகளும் – இனிதாய் இணங்கும்;
இயேசு பேரில் அவையாவும் – இசைவாய்ப் பொருந்தும்

5. ஒருவர் மற்றோர்க்குச் சொல்லும் – அநுபவ சாட்சி,
செறிந்து எல்லோர் நெஞ்சிலும் – தந்திடும் மகிழ்ச்சி

6. இங்கே இயேசுவில் நம் ஐக்யம் - தித்திக்கில் இவ்விதம்,
அது விண்ணில் தரும் இன்பம் – எவ்வளவு உச்சம்

— சால்ஸ் உவெஸ்லி
ஜே. வி. பெஞ்சமின்

255

ஆனந்த பைரவி ஆதிதாளம்

பல்லவி

புத்தியாய் நடந்து வாருங்கள் – திருவசனப்
பூட்டைத் திறந்து பாருங்கள்

அனுபல்லவி

சத்தியத்தைப் பற்றிக் கொண்டு
தன்னைச் சுத்தி பண்ணிக் கொண்டு
நித்தமும் செபம், தருமம்
நீதி செய்து, பாடிக் கொண்டு – புத்தி

சரணங்கள்

1. ஒன்றான பிதாவின் மக்களே – கிறிஸ்தின் ரத்தத்
தொன்றுடன் சகோதரர்களே
குன்றாத சுதந்தரர்களே – நீங்கள் எல்லாரும்
கோதில்லாத நீதி மான்களே;
முக்கியமானதை நாட முன்னவன் சொன்ன சொற்படி
மெய்க்கிறிஸ் திருப்பிடத்தின் மேலானதை நாடித்தேடி
– புத்தி

2. அன்பு கூர்ந்திருக்கச் சொன்னாரே – கிறிஸ்து நம்மை
ஐக்கியமாய்ப் போகச் சொன்னாரே;
இன்பமாய் நடக்கச் சொன்னாரே - ஆவியில் ஒன்றாய்
இசைவாகப் பேசச் சொன்னாரே
பண்பில்லா மிருகம்போ லும் பாவப்பேயின் மக்கள் போலும்
துன்பம், பொய், வன்மம், பகை, துரோகம்
செய்யாமல் நல்ல - புத்தி

3. ஆவியை அடக்காதிருங்கள்; கர்த்தர் சொல்வதை
அசட்டை செய்யாமற் பாருங்கள்;
சீவனையடையத் தேடுங்கள் – யேசுக் கிறிஸ்தின்
சிந்தையைத் தரித்துக் கொள்ளுங்கள்
மேவிச் செபம் மன்றாட்டு விண்ணப்பம் வேண்டுதலோடு
தாவியேசு வைப்பிடித்து தளராநடையோ டுன்னி
- புத்தி

— உபதேசியார் மரியான்

ஞானஸ்நானம்,

பூரண அங்கத்துவம்

256

அன்புள்ள ஆண்டவரே - நான்
பண்புள்ள பாலகனாய் – என்றும்
தென்புடன் வாழ்ந்திடவே – உம்
அன்பினைத் தந்திடுமே

இந்தப் பாரினில் சிறு ஒளியாய் – என்னை
ஆக்கிடும் இயேசுநாதா – நான்
செல்கின்ற இடமெல்லாம் – ஒளி
வீசிடச் செய்யும் சதா

மணம் வீசும் சிறுமலராய் – பிறர்
இன்புறச் செய்திடுமே
துக்கத்தில் ஆழ்ந்தவரை – மாற்றும்
பாடலாய் ஒலிக்கச் செய்யும்

கை கொடுக்கும் கோலாய் – நான்
என்றென்றும் விளங்கச் செய்யும்
மெய்யான வழியினிலே – நம்
அயலாரை உதவச் செய்யும்

என்றென்றும் ஏறெடுப்போம் – உம்
பேரின்ப வீட்டினையே
கண் கொண்டு பார்த்திடுமே – இந்தப்
பாலரைக் காத்திடுமே.

— விபுலானந்தா மூர்த்தி

257

சங்கராபரணம் ஆதி தாளம்

பல்லவி

இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும்
கர்த்தாவே!

அனுபல்லவி

உந்தம் ஞானஸ்நானத்தால் உமக்குப் பிள்ளையாய் வந்த
– இந்த

சரணங்கள்

1. பிள்ளைகள் எனக்கதிக பிரியம் வரலாமென்று
உள்ளமுருகிச் சொன்ன உத்தம சத்தியனே – இந்த

2. பாலரைக் கையிலேந்திப் பண்பாய் ஆசீர்வதித்த
சிலமாயின்றும் வந்தா சீர்வாதம் செய்யுமையா – இந்த

3. உமக் கூழியஞ் செய்யவும் உம்மைச் சிநேகிக்கவும்
உமது ஆவியைத் தந்து உம்முடை மந்தை சேர்த்து – இந்த

4. உலகமும் பேய் பசாசும் ஒன்றும் தீது செய்யாமல்
நலமாய் இதைக் காத்தாளும், நன்மைப் பராபரனே – இந்த

5. விசுவாசத் தோடேயுந்தம் மேய்ப்புக் குள்ளேயடங்கி
பசிய மரம்போல் தெய்வ பக்தியிலே வளர – இந்த

— பி. டேவிட்

258

See Israel's Gentle Shepherd Stand (M H. B. 751)
C. M.

1. இஸ்ரவேலின் சாந்த மேய்ப்பர்
இப்போ, தயை செய்வார்;
நம் பாலரைத் தம் கரத்தில்
அன்பாய் ஏந்திக் கொள்வார்

2. "பிள்ளைகள் என்னிடம் வர
தடை பண்ணு திரும்
மோட்சம் அவருக்கே தகும்"
என்று சொன்னார் மேலும்

3. கர்த்தரே, நம் குழந்தையை
உமக்கென்றே நேர்வோம்,
நம்மைப் போல், நம்பாலரையும்
ஏற்றுக் கொள்ளும் என்போம்.

— பிலிப் டொட்றிஜ்
பீற்றர் பேசிவல்

259

O happy day that fixed my choice (M. H. B 744)
L. M.

பல்லவி

களிநாள், களிநாள்
என்பாவந் தீர்த்தார் யேசுவே
விளித்து வேண்டல் செய்வதே
என் செல்வம் நல்ல இன்பமே,
களிநாள், களிநாள்;
என் பாவந்தீர்த்தார் யேசுவே

சரணங்கள்

1. இயேசுவைப் பற்றிக் கொண்டநாள்
சந்தோஷமான தினமே,
என் நெஞ்சம் களி கூர்வதால்
என் சீவன் பூர்த்தியாகுமே

2. தெய்வ தொண்டன் ஆவேன் என்று
இப்போ நான் சங்கற்பம் செய்வேன்
சந்நிதானம் சேர்ந்து நின்று
மகிழ்ந்து துதி பாடுவேன்

3. செய்தாயிற்று; நான் ஓர் தொண்டன்
கர்த்தர் என் எசமான் என்பேன்
அவர் சத்தம் கேட்ட வுடன்,
நான் அவருக்குப் பின் செல்வேன்

4. இனிமேல், என் துக்க நெஞ்சு
கலங்காமல், ஆற்றித் தேறும்;
என் கர்த்தர் என் செல்வமென்று,
விலகாமல் பற்றிக் கொள்ளும்

5. இன்று செய்த சங்கற்பத்தைத்
தினந்தோறும் அனுஷ்டிப்பேன்
சமாதான மரணத்தை
அடைந்து மோட்சம் சேருவேன்.

— பிலிப் டொட்றிஜ்
இந்திய மொழிபெயர்ப்பு

260

பல்லவி

இயேசு எந்தன் வாழ்வில் பெலனானார்
எனக்கென்ன ஆனந்தம்

சரணங்கள்

1. எந்தன் வாலிப காலமெல்லாம்
எந்தன் வாழ்க்கையின் துணையானார்
உம் நாமமே தழைத்தோங்க
நான் வாழுவேன் உமக்காக

எந்தன் இதயமே உமைப் பாடும்
எந்தன் நினைவுகள் உமதாகும் - இயேசு

2. பெருந் தீமைகள் அகன்றோட
பொல்லா மாயைகள் மறைந்தோட
உமதாவியின் அருள் காண
வரும் காலங்கள் உமதாகும்

உம் நாமமே தழைத்தோங்க
நான் பாடுவேன் உமக்காக - இயேசு

261

பல்லவி

ஆ... ஆ... ஆனந்தமே பரமானந்தமே
இது மாபெரும் பாக்கியமே
இந்தப் பார்தலத்தின் சொந்தக் காரரவர்
எந்தன் உள்ளத்தில் சொந்தமானார் - ஆ... ஆ..,

சரணங்கள்

1. மகிழ்வோம், மகிழ்வோம் தினம் அக மகிழ்வோம்
இயேசு ராஜன் நம் சொந்தமாயினர்
இந்தப் பார்தலத்தின் சொந்தக் காரரவர்
எந்தன் உள்ளத்தில் சொந்தமானர் ஆ... ஆ...

2. சின்னஞ்சிறு வயதில் என்னைக் குறித்து விட்டார்
தூரம் போயினும் மீட்டுக் கொண்டார்
தமது ஜீவனை எனக்கும் அளித்து
ஜீவன் பெற்றுக்கொள் என்றுரைத்தார் - ஆ... ஆ...

3. எந்தச் சூழ்நிலையும் அவர் அன்பினின்று
என்னைப் பிரிக்காது காத்துக் கொள்வார்
என்னை நம்பி அவர் தந்த பொறுப்பதனை
அவர் வரும் வரை காத்துக் கொள்வேன் - ஆ... ஆ...

4. அவர் வரும் நாளினில் என்னைக் கரம் அசைத்து
அன்பாய்க் கூப்பிட்டுச் சேர்த்துக் கொள்வார்
அவர் சமூகமதில் அங்கே அவருடனே
ஆடிப்பாடியே மகிழ்ந்திடுவேன் - ஆ... ஆ...

262

மோகனம் ஏகதாளம்

பல்லவி

பாலர் நேசரே! - மிகப் - பரிவு கூர்ந்திந்தப்
பாலரை யேந்தி - ஆசீர் - வதியும் யேசுவே!

சரணங்கள்

1. பாலர் வந்திடத் தடை பண்ணுணு தென்றீர்
சால வந்தருள் தந்து தலைமேற் கை வைப்பீர் - பாலர்

2. வான ராச்சியம் இவர் வசத்த தென்றீரே,
ஞானஸ் நானத்தால் - உமது நாமம் சூட்டுவீர் - பாலர்

3. பகை, விரோதம், பொய், கோபம், பாவம் யாவுமே
அகலவே யென்றும் வந்து ஆளும், யேசுவே - பாலர்

4. தேவ பாலரே, நீருஞ் சிறிய பிள்ளையாய்
மேவி னீரதால் உமை வேண்டினேனையா - பாலர்

— எஸ். எஸ் எரேமியா

263

சூரியகாந்தம் ரூபகதாளம்

பல்லவி

திரளாமெனின் பவம் நீங்கிய திருநாளெனின் பெருநாள்;
தினம் யேசென மகிழற்கருள் செயலாவது திருநாள்

சரணங்கள்

1. அதி பாதக னெனை யேசுவின் - அடிமையெனத் தருநாள்
அதியின்பமே இதையென்மன - மார்க்குஞ் சொலல் முறையே

2. இன்றே முதல் என்றுமவர் – என்தேவனே, நானே
என் தேவனின் தொண்டனவர் - சித்தமெனின் சித்தம்

3 மனமேயினி எம் யேசுவின் - பதத்திலீளைப்பாறு
பரனேயினி யொருநாளுமே – விடனேயுனின் தணையால்

4. இந்தென்னிலை என்னுயுளில் - என்று மனுட்டிப்பேன்
இந்தென்னுயிர் போம் போதிலும் - வந்துன்னருள் தாதா

— யாழ்ப்பாணப் பாடல்

264

There is a friend for little children

1. பாலரே, ஓர் நேசர் உண்டு விண் மோட்ச வீட்டிலே;
நீங்கா இந்நேசர் அன்பு ஓர் நாளும் குன்றுதே;
உற்றாரின் நேசம் யாவும் நாள் செல்ல மாறினும்,
இவ்வன்பர் திவ்ய நேசம் மாறுமல் நிலைக்கும்

2. பாலரே, ஓர் வீடு உண்டு விண்மோட்ச நாட்டிலே;
பேர் வாழ்வுண்டாக இயேசு அங்கர சாள்வாரே,
ஒப்பற்ற அந்த வீட்டைநாம் நாட வேண்டாமோ?
அங்குள்ளோர் இன்ப வாழ்வில் ஓர் தாழ்ச்சிதானுண்டோ!

3. பாலரே ஓர் கிரீடம் உண்டு விண்மோட்ச வீட்டில், நீர்
நல் மீட்பரின் பேரன்பால் பொற்கிரீடம் அணிவீர்;
இப்போது மீட்பைப் பெற்று மா நேசர் பின்சென்றால்
இவ்வாடா ஜீவகிரீடம் அப்போது சூடுவார்

4. பாலரே, ஓர் கீதம் உண்டு விண்மோட்ச வீட்டிலே,
மா ஜெய கீதம் பாட ஓர் வீணையும் உண்டே,
அந்நாட்டின் இன்பம் எல்லாம் நம் மீட்பர்க்குரிமை;
நீர் அவரிடம் வாரும், ஈவார் அவ்வின்பத்தை.

— இந்திய மொழிபெயர்ப்பு

திருவிருந்து

265

பிலஹரி — ரூபகதாளம்

பல்லவி

அருமை ரட்சகா கூடிவந்தோம் உம(து)
அன்பின் விருந்து அருந்த வந்தோம்

அனுபல்லவி

அறிவுக் கெட்டாத ஆச்சரியமான
அன்பை நினைக்க, - அருமை

சரணங்கள்

1. ஆராயும் எமதுள்ளங்களை - பல
வாறுன நோக்கம் எண்ணங்களை
சீராய் சுத்தமானதா யுட்கொள்ள நீர்
திருவருள் கூரும் - அருமை

2. ஜீவ அப்பமும் பானமும் நீர் - எங்கள்
தேவை யாவையும் திருப்தி செய்வீர்;
கோவே! மா பயபக்தியாய் விருந்து
கொண்டாட இப்போ, - அருமை

3. உமதன்பின் பிரசன்னம் பெற்றோம் - உம
தொளிமுக தரிசன முற்றோம்;
சமாதானம், அன்பு, சந்தோஷமும் எமில்
தங்கச் செய்திடும் - அருமை

4. கிருபை விருந்தின் இந்த ஐக்கியம் - பூவில்
கிடைத்தற்கரிய பெரும் பாக்கியம்:
அரும் பிரியத்தோ டெங்களை நேசிக்கும்
குருவே வந்தனம், - அருமை

5. எங்கட்காயுமை ஒப்புவித்தீர் - கொடும்
ஈனச் சிலுவையில் மரித்தீர்
பொங்கும் பேரன்பை எங்கும் தெரிவிப்போம்
புண்ய நாதரே! - அருமை

6. பந்திக் கெஜமான் இயேசுவே - எமைச்
சொந்தமாய் வரவழைத் தீரே
உந்தன் கிருபை, வல்லமை பெற்றுமக்கு
ஊழியம் செய்ய - அருமை

வீ. சந்தியாகு

266

I am trusting Thee Lord Jesus (M. H. B. 521)
8, 5, 8, 3

1. அருள்நாதா, நம்பி வந்தேன் - நோக்கக் கடவீர்;
கைம் மாறின்றி என்னை முற்றும் - இரட்சிப்பீர்

2. தஞ்சம் வேண்டி நம்பிவந்தேன் - திருப்பாதத்தில்;
பாவ மன்னிப்பருள்வீர் இந் - நேரத்தில்

3. தூய்மை வேண்டி நம்பிவந்தேன் - உப்தம் ஆவியால்;
சுத்திசெய்வீர் மாசில்லாத - ரத்தத்தால்

4. துணைவேண்டி நம்பிவந்தேன் - பாதை காட்டுவீர்;
திருப்தி செய்து நித்தம் நன்மை - நல்குவீர்

5. சக்திவேண்டி நம்பி வந்தேன் - ஞான பெலனும்;
அக்கினி நாவும் வல்ல வாக்கும் ஈந்திடும்

6. இயேசுநாதா, நம்பி வந்தேன் - தவறுமலே
என்னை என்றும் தாங்கிநின்று - காப்பீரே

— எவ். ஆர். ஹவகோல்
டீ. பீ. நயில்ஸ்

267

In memory of the Saviour's love (M. H. B.762)

M. C

1. இயேசுவின் அன்பை நினைந்து
திருவிருந் துண்போம்;
நைந்த நெஞ்சராகித் தாழ்ந்து
இவ்விருந்திற் சேர்வோம்

2. இந்த அப்பம் பக்தருக்கு
ஆன்ம உணவாகும்
மீட்பின் ரத்தத்தை இப்பானம்
ஞாபகப் படுத்தும்

3. அவர் கொடியின் கீழாக
நின்று நாம் துதிப்போம்
வான் விருந்தில் வாஞ்சையாக
நம்பிக் காத்திருப்போம்

— தோமஸ் கொற்றறில்
ஜே. எம். ஒஸ்போன்

268

Have you been to Jesus (S. S. R. 379)

11, 9

பல்லவி

கழுவப்..... பட்டீரா?
செந்நீரில் உட்சுத்தம் பெற்றீரா?
வஸ்திரம் வெண்மையா? தூயர் ஆனீரா?
செந்நீரில் கழுவப்பட்டீரா?

சரணங்கள்

1. இயேசுவின் செந்நீரில் கழுவப்பட்டீரா?
மீட்பரால் உட்சுத்தம் பெற்றீரா?
அவரில் முற்றுய் நீர் நம்பிக் கொண்டீரா?
செந்நீரில் கழுவப்பட்டீரா?

2. இயேசுவின் தொண்டராய் நீர் நடப்பீரா?
செந்நீரில் கழுவப் பட்டீரா?
அவரால் மன்னிப்பைப் பெற்றுக் கொண்டீரா?
செந்நீரில் கழுவப் பட்டீரா?

3 இயேசுவைச் சந்திக்கும் எத்தனம் உண்டா?
நல் ஆடை உடுத்து நிற்பீரா?
மோட்சத்துக்கேற்ற சீர் பெற்றுக் கொண்டீரா?
செந்நீரில் கழுவப் பட்டீரா?

4. அழுக்குக் கந்தையை அகற்றிப் போடும்,
செந்நீரில் கழுவப் படுங்கள்!
பாவத்தைப் போக்கும் வான் ஊற்றண்டைவாரும்
செந்நீரில் கழுவப் படுங்கள்

டீ. பீ. நயில்ஸ்

269

சங்கராபரணம் ரூபகதாளம்

பல்லவி

கர்த்தரின் பந்தியில் வா – சகோதரா
கர்த்தரின் பந்தியில் வா

அனுபல்லவி

கர்த்தரன் பாய்ச்சொந்த ரத்தத்தைச் சிந்தினை
காரணத்தை மனப் பூரணமாயெண்ணி - கர்த்

சரணங்கள்

1. சீவ அப்பமல்லோ? – இறிஸ்தின்
திருச்சரீர மல்லோ,
பாவ மனங் கல்லோ - உனக்காய்ப்
பகிரப்பட்ட தல்லோ;
தேவகுமாரனின் சீவ அப்பத்தை நீ
தின்று அவருடன் என்றும் பிழைத்திட – கர்த்

2. தூரமாய் நில்லாதே - பாவத்தைத்
தொடர்ந்து பின் செல்லாதே,
பார்மோ பொல்லாதே - அழிவின்
பாதையில் நில்லாதே;
வாரம் வைத்துனக்கு நேரதாயிச் சிந்துண்ட
மாசற்ற ரத்தத்தின் நேசத்தைப் பானஞ்செய் - கர்த்

3. அன்பின் விருந்தாமே - கர்த்தருடன்
ஐக்கியப் பந்தியாமே
துன்பம் துயர் போமே - இருதயம்
சுத்த திடனுமே;
இன்ப மிகுந்தேவ அன்பின் விருந்துக்கு
ஏது தாமதமும் இல்லா திப்போதே வா - கர்த்

— உபதேசியார் மரியான்

270

Be thou the bread of life (M. H. B. 309)

6, 4, 6, 4D

1. சீவனின் அப்பமே, தேவ நாதா
ஆவியில் அருளும் அற்புதனே
சீவ வார்த்தையான திருநூலே
பாவி தேடுகின்றேன் பரிசுத்தா

2. நீரே சீவ அப்பம், நின்மலனே
நேரே நடத்திடும் நின் வார்த்தையால்
சீராகச் சேர்த்தெனைத் தேவலோகம்
வீரா, கடாட்சிப்பீர்; விண்ணவனே

3. நின்னுவி யாலெனை நிரப்புவீர்
மன்னுவாம் வார்த்தையின் வாசனைதான்
எந்நாளும் என்முன்னே இலங்கவே
முன்னவா நின்னருள் மூதறிவே

4. வெல்லியா, விண்ணவா, வீரா பரா
எல்லாமாய் என்முன்னே இலங்கும்போது
தொல்லைகள் முன்நில்லா தூரவே போம்
எல்லையில் இன்பமே என் பாகமாம்

மே. ஆ. வத்பரி
ஆர். சி. பி. வெல்ச்

271

1. நண்பராய் அன்பராய் ஒரு தட்டைச் சுற்றி
பண்போடும் பணிவோடும் பகிர்ந்து நாம் உண்போம்
மண்ணகம் பார்த்து நற்படிப்பினை பெறவே
விண்ணக விருந்தினை மகிழ்வுடன் உண்போம்

2. அறுசுவை கொண்ட நற் கருணையில் நாங்கள்
பெறும் சுவை வாழ்வின் வளமானதன்றே?
வேறு நினைவின்றி இயேசுவை எண்ணி
மறுலோக வாழ்வின் சுவையினைக் காண்போம்

3. பாத்திரம் ஒன்றில் அமுதெனத் தமது
உதிரத்தைத் தந்தார் விடாயினை விலக்க
பத்தியத்தோடதைப் பருகியே நாங்கள்
நித்தமும் நினது வாழ்வினை வாழ்வோம்

4. தூய தம் உடலினை உணவாகக் கொடுத்தார்
காயம் நிறைந்த மானிடர் எமக்கு
ஆயர் பணிந்த இறைவனை இன்று நாம்
சேயர் பணிந்து உண்டு மகிழ்வோம்

272

பல்லவி

கல்வாரியின் அன்பினையே
கண்டு விரைந்தோடி வந்தேன்
கழுவும் உம் திரு இரத்தத்தாலே
கறை நீங்க இருதயத்தை

சரணங்கள்

1. பலிபீடத் திலென்னை பரனே
படைக்கிறேனே இந்த வேளை
அடியேனைத் திருச்சித்தம் போல
ஆண்டு நடத்திடுவீர் - கல்வாரி

2. நீரன்றி என்னுலே பாரில்
ஏதும் நான் செய்திட இயலேன்
சேர்ப்பீரே வழுவாது என்னை
காத்துமக்காய் நிறுத்தி - கல்வாரி

3. பொன்னையும் பொருளையும் விரும்பேன்
மண்ணின் வாழ்வையும் வெறுத்தேன்
மன்னவன் இயேசுவின் சாயல்
இந்நிலத்தே கண்டதால் - கல்வாரி

273

பல்லவி

ஜீவனின் அப்பம் ஜீவனின் அப்பம் வானின்றிறங்கியது
ஜீவனின் அப்பம் அன்பாய் இனிக்கிறது
அன்பாய் ருசிக்கிறது

சரணங்கள்

1. ஜீவ சுடரே சுத்த ஒளியே
வீசும் இறைக்கதிரே - அன்று
பிளவுண்ட மலையே புகலிடம் தாருமே
சிறகுகளால் மறையும்

2. நிழல் நேர் இவ்வாழ்வில் கனவான தீவில்
போராட்டம் பீறி வர - விண்ணில்
ஏறிடும் வேளை புகலிடம் தாரும்
எனை ஏற்று அரவணையும்

3. ஓயாமற் போரில் போராட நின்றீர்
சத்திய வல்லவராய் - உம்மை
சேவித்து வாழ்ந்து புகழ்படிக்க வென்
நித்தியத்தைப் பெறுவேன்

— கே. எஸ். அருள்ராஜா

திருமறை

274

பல்லவி

இயேசுவை நாம் எங்கே காணலாம்
அவர் பேசுவதை எங்கே கேட்கலாம்?

அனுபல்லவி

பனி படர்ந்த மலையின் மீது பார்க்க முடியுமா?
கனி நிறைந்த சோலை நடுவே காண முடியுமா? - இயேசு

சரணங்கள்

1. ஓடுகின்ற அருவியெல்லாம் தேடியலைந்தேனே
ஆடுகின்ற அலைகடலில் நாடி அயர்ந்தேனே
தேடுகின்ற என் எதிரே தெய்வத்தைக் காணேனே
பாடுபடும் ஏழை நான் அழுது வாடினேனே இயேசு

2. வானமதில் பவனி வரும் கார் முகில் கூட்டங்களே
வந்தருளும் இயேசுவையே காட்டிட மாட்டீரோ
காலமெல்லாம் அவனியின் மேல் வீசும் காற்றே நீ
கர்த்தன்யேசு வாழுமிடம் கூறிட மாட்டாயோ - இயேசு

3. கண்ணிரண்டும் புனலாக நெஞ்சம் அனலாக
மண்டியிட்டு வீழ்ந்தேன் நான் திருமறை முன்பாக
விண்ணரசர் அன்புடனே கண்விழிப்பாய் என்றார்
கண்விழித்தேன் என்முன்னே கர்த்தன் இயேசு நின்றார்
- இயேசு

275

இங்கிலீஸ் ஆதிதாளம்

பல்லவி

எந்தை யேசு நாயகனை
ஏத்தித் தொழுவோம், இத்தினமே

அனுபல்லவி

விந்தையான மோட்சங் காட்டும்
வேதமீந்த - மா - தயவுக்காய் -எந்தை

சரணங்கள்

1. முற்பிதாக்கள் வழிகளையும்
மோனஞான முறைகளையும்
தற்காலத்தி லெவர்க்குங் காட்டும்
தாவில் - ஞான - தீப - மிதே - எந்தை

2. அகந்தை, பெருமை, இறுமாப்பும்
அடம், பகை, வன்மம், அக்ரமமும்
அன்பு செறியாக் குணங்கள்
ஆகா - தென்று - காட்டு - மறையிதே - எந்தை

3. நேய தீர்க்க ரப்போஸ்தலர்
நின்மல நாமத்திற் பன்னியதும்,
தூயன் யேசு அவதாரத்திற்
சொன்ன - வன்ன – மொழி - யுமிதே - எந்தை

4. உன்னத வீட்டினிலிளைப்பாற முன்
ஓயாப் போரெல்லாம் புரிந்து வென்று
மன்னவனுர் திரு மறையை
மானிட ரெல்லார்க்குங் - கூறுவோம் - எந்தை

சொலமன் செல்லத்துரை

276

பிலஹரி ஆதிதாளம்

பல்லவி

கர்த்தர் அருள் வேதமே
காசினியின் தீபமே!

அனுபல்லவி

பத்தரின் பட்டயமே, பாவியின் பாக்கியமே

சரணங்கள்

1. சத்தியம் நிலைகொள்ள சாட்சி என்றும் சொல்லுவாய்,
முத்தியின் வழிதோன்ற மூடர்க்கு நீ போதிப்பாய்

2. செம்மை நெஞ்சை நீ தந்து சேதமெல்லாம் நீக்குவாய்,
நம்முள்ளம் மகிழ்கொள்ள ஞானவாக்கைக் கூறுவாய்

3. பொன்னிலும் மிக்கபசும் பொன்னிலும் விஷேசமே,
தேனிலும் நல்ல தெளி தேனிலும் மதுரமே

4. சோதிப் பிரகாசமே, சோர்வெல்லாம் நீ மாற்றுவாய்,
ஆதியின் மெய் வார்த்தையே ஆற்றுவாய் நம் துக்கத்தை

5. பால் போலவே போஷித்து, பத்தரை நீ பாலிப்பாய்
மேலுள்ள பேரின்பத்தை மென்மேலும் நீ ஊட்டுவாய்

6. கண்ணுடிபோல் தெளிவாய்க் கர்த்தரை நீ காட்டுவாய்,
விண்ணேரின் சாயலே நீ விம்பித்துத் துலங்குவாய்

7. வானத்தின் மழைக்கொப்பாய் வாட்டமெல்லாம் மாற்று
வாய்,
ஆன்மாக்கள் சந்தோஷித்து ஆனந்த துதி சொல்லுவார்

8. அக்கினிபோல் ஊக்கத்தை ஆன்மாவிலே மூட்டுவாய்,
அக்கிரமம் யாவையும் ஆசறுதி பண்ணுவாய்

— டீ. பீ. நயில்ஸ்

277

Lord Thy word abideth (M. H. B. 308)

6, 6, 6, 6.

1. கர்த்தரே நும் வாக்கு - தீபம் எம் நடைக்கு;
அதை நம்பும்போது - நீங்கும் நெஞ்சின் வாது

2. சூழும் போது வஞ்சம் - அதுவே நம் தஞ்சம்;
அது நம்மை ஆற்றும் - மீட்பின் சீரைச் சாற்றும்

3. தாழ்வில் அது தேற்றும் - வாழ்வில் நம்மை ஏற்றும்;
நேர் வழியைக் காட்டும் - மோட்ச மாண்பை ஊட்டும்

4. நும் வாக்கு இன்பமே - ஒப்பற்ற செல்வமே;
பக்தரின் நெஞ்சிலே, - எப்போதும் தங்குமே

5. அது நண்பை நாட்டும் - பக்தர் நெஞ்சைத் தீட்டும்;
ஜீவன் தந்து தேற்றும் - சாவின் கூரை மாற்றும்

6. வாக்கின் நற்போதத்தை - கற்று, நாம் ஞானத்தை
நாட, நம் தேவரீர் – நம் நெஞ்சில் தங்குவீர்.

— டீ. பீ. நயில்ஸ்

278

Sing them over again (S, S, R. 357)
P, M.

பல்லவி

அமிர்தமே, அற்புதமே
திவ்விய சத்தியம்
அமிர்தமே, அற்புதமே
திவ்விய வசனம்

சரணங்கள்

1. காது குளிரப் பாடுங்கள் கிருபா சத்தியம்,
புத்தி தெளியக் காட்டுங்கள் திவ்விய வசனம்
வெல்க, சத்திய வேதம்; வாழ்க, சத்திய வேதம்;

2. நல்ல செய்தியைக் கூறுமே கிருபா சத்தியம்;
பாவ நாசத்தைக் காட்டுமே திவ்விய வசனம்,
வான வருஷமாரி, ஞான பொக்கிஷவாரி;

3. வேத நாயகர் பொழியும் கிருபா சத்தியம்?
சீவ மங்கலம் பொழியும் திவ்விய வசனம்,
யேசு மீட்பரைக் காட்டும், இரட்சண்ய வழியை நாட்டும்

—இந்திய மொழிபெயர்ப்பு

279

பல்லவி

சத்திய வேதம்! வேதம்! வேதம்!
நித்தியமாய் வாழவே தேவன் தந்த பாடம்
நித்தமும் தியானித்தால் தீய சிந்தை மாறும்

சரணங்கள்

1. கர்த்தர் தந்தது; களங்மற்றது
மனிதன் வாழ வழியும் தந்து ஒளியுமானது
பாக்கிய முள்ளது! பரிசுத்தமானது..... = சத்திய

2. உண்மை தெய்வம் மைந்தர் யேசு மொழியுமானது
கண்ணைப் போன்றது - விண் ஆட்சி தருவது
நம்மைக் காக்கும் கடவுள் அன்பை எடுத்துச் சொல்வது
- சத்திய

3. குறைவில்லாதது, நிறை வாழ்வைத் தருவது
இறைவன் மனிதன் உறவை என்றும் காத்துக்கொள்வது
- சத்திய

280

பல்லவி

வேதமே தீபமே
பாதைக்கு பண்புள்ள தீபமே

சரணங்கள்

1. தேனிலும் இனிய வேதமே
தித்திக்கும் திவ்விய வேதமே
பாதைக்கு பண்புள்ள தீபமே
பாக்கிய மளிக்கும் பேரின்பமே - வேதமே

2. துன்பத்தில் இன்பம் அளிக்குமே
தூய வழியைக் காட்டுமே
மாயமான வாழ்வை நீக்குமே
மாநிலத்தில் என்னைக் காக்குமே - வேதமே

3. என்னை எனக்குக் காட்டுமே
நன்மையில் என்னை நாட்டுமே
அல்லும் பகலும் என் ஆதரவே
எல்லையில்லா இன்ப ஊற்றுமே. - வேதமே

281

மோகனம் ஏகதாளம்

பல்லவி

பாதைக்கு தீபமாமே
பரிசுத்த ஆகமம், - மா நல்ல

சரணங்கள்

1. பாதைக்கு தீபமே; பாவிக்கு லாபமே
பேதைக்கு திரவியமே, பரிசுத்த ஆகமம் - மா நல்ல

2. தேனின் மதுரமே, திவ்விய அமுதமே
வான பிதாவின் வாக்கே, பரிசுத்த ஆகமம் - மா நல்ல

3. நீதியினுதாரமே, நெறியுள்ளோர் செல்வமே
ஜாதிகள் மேன்மையாமே, பரிசுத்த ஆகமம் - மா நல்ல

4. ஞான சமுத்திரமே, நல்ல சுமுத்திரையே
ஈனர்க்கும் ஆதரவே, பரிசுத்த ஆகமம் - மா நல்ல

— டீ. அருளானந்தம்

282

பல்லவி

2. யாரிடம் செல்வோம் இறைவா
வாழ்வு தரும் நல் வார்த்தை எல்லாம்
உம்மிடம் அன்றே உள்ளன – யாரிடம்

சரணங்கள்

அலை மோதும் உலகினிலே
ஆறுதல் நீர் தரவேண்டும்
அண்டிவந்தோம் அடைக்கலம் நீர்
ஆதரித்தே அரவணைப்பீர் — யாரிடம்

2. கல்வாரி மலைமீது
கண்டு உம்மைக் கலங்கி நின்றேரும்
கரம், கால்கள், தலை யாவும்
குருதி கண்டு உருகி நின்றேரும் - யாரிடம்

3. அனுமதி ஒன்றைத் தேடி வந்தோம்
நீர் என்றே உமைத் தொடர்ந்தோம்
பாருலகில் ஆறுதல் யார்
நீர் அன்றேல் எம் துணை யார்? - யாரிடம்

283

பிலஹரி — ஆதிதாளம்

பல்லவி

ஞானசுவி சேஷமே! நன்மை தரும் நேசமே

அனுபல்லவி

வானவுபதேசமே! வளரும் விசுவாசமே - ஞான

சரணங்கள்

1. சத்தியவாக் கியமே! சந்தோஷபாக் கியமே!
புத்தியாரோக் கியமே! புண்யசலாக் கியமே! - ஞான

2. நீதிப்பிரசங்கமே! நிமலனருள் தங்குமே
சோதி மிகுந் துங்குமே! துதிபெருகும் பொங்குமே -ஞான

3. அஞ்ஞானத்தை யழிக்கும், அலகையிட ரொழிக்கும்
மெய்ஞ்ஞானத்தை அளிக்கும், விளங்கியென்றுஞ் செழிக்கும்
- ஞான

4. யேசுவண்டை யிற்சேர்க்கும், எல்லா இடரும் நீக்கும்
பேசும் பவத்தைப் போக்கும், பேதமையோரைக் காக்கும்
- ஞான

— யே. யேக்கப்

284

I am so glad that our Father in Heaven
(M. H. B. 421) 10, 10, 10, 10.

பல்லவி

ஆனந்தம் யேசு நேசிக்கிறார்,
நேசிக்கிறார், நேசிக்கிறார்
ஆனந்தம் யேசு நேசிக்கிறார்,
நேசிக்கிறார் என்னையும்

சரணங்கள்

1. வானபிதா தந்த வேதத்திலே
நான் மகிழ்வேன் அன்பு சொல்லுகிறார்
விவ்வில்ய ஆச்சர்யம் யாவினுள்ளே
ஆச்சர்யம் யேசென்னை நேசிக்கிறார்

2. நான் மறந்தோடினும், நேசித்தென்னை
சென்ற இடம் வந்து தேடுகிறார்;
மீண்டவர் கையினுள் ஓடத்தன்னை
தந்த அத்நேசத்தால் நேசிக்கிறார்

3. நேசிக்கிறார், நானும் நேசிக்கிறேன்
மீட்க வந்தாத்துமம் நேசிக்கிறார்;
சாவு மரத்தில் அந்நேசங் கண்டேன்
நிச்சயம் யேசென்னை நேசிக்கிறார்

4. எவ்விதம் நீ அறிவாயென்கிலோ
யேசுவுக்குத் தோத்திரம் காட்டுகிறார்,
தேவ சுத்தாவி என் ஆவியிலோ
சாட்சி, என் யேசென்னை நேசிக்கிறார்

5. நிச்சயத்தால் இன்ப ஓய்வு பெற்றேன்
நம்பும் என் யேசென்னை வாழ்விக்கிறார்
சாத்தான் நில்லாதஞ்சி ஓடக்கண்டேன்
நான் சொல்ல யேசென்னை நேசிக்கிறார்

— பிலிப் பிலிப்
யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு

285

பல்லவி

வேத புத்தகமே, வேத புத்தகமே
வேத புத்தகமே, விலைபெற்ற செல்வம் நீயே

சரணங்கள்

1. பேதைகளின் ஞானமே - பெரிய திரவியமே
பாதைக்கு நற்தீபமே - பாக்யர் விரும்பும் தேனே - வேத

2. என்னை எனக்குக் காட்டி - என் நிலைமையை மாற்றிப்
பொன்னுல கத்தைக் காட்டிப் - போகும் வழி சொல்வாயே
- வேத

3. துன்ப காலம் ஆறுதல் - உன்னுல் வரும் நிசமே
இன்பமாக்குஞ் சாவென்றுய் - என்றும் நம்பின பேர்க்கே
- வேத

4. பன்னிரு மாதங்களும் - பறித்துண்ணலாம் உன்கனி
உன்னைத் தியானிப்பவர் – உயர் கதி சேர்ந்திடுவார் – வேத

286

துசாவந்தி ரூபகதாளம்

பல்லவி

தித்திக்குந் திவ்விய வாக்கை - தேவா
எத்திக்கு மியலச் செய்தாயே - தேவா

அனுபல்லவி

பக்தியாய்ப் பணிவாய்ப் பாடியே கூடுவோம்
பரம நின் அருள் பாடி - தித்

சரணங்கள்

1. கண்ணின் மணிபோல காத்திடென் வாக்கென்றுய்
கண்டோமே வேதம் விண்டோமே துயர்
உண்டோ ஒருகுறை, தெண்ட முனைதடி;
காரண, பூரண, ஆரணு, தீஸ்பர - தித்

2. மூத்தி வழியைக் காட்டும் சத்திய மறையிது
மூதுல குய்ய, ஏதிலர் நைய;
போதருள் பெய்ய, ஓதிடு துய்ய
மோட்ச - மாட்சி - காட்சி - வாய்ந்திட - தித்

3. தீய குணமகற்றி, தூயநெறி நிறுவி,
சிறுமைகள் நீக்கி உறுதுயர் போக்கி,
இறுதி கைதூக்கி, நிறையுளஞ்க்கி
இன்ப - சுகானந்தம் - என்பதெல்லாம் - தந்த - தித்

— சொலமன் செல்லத்துரை

திருப்பணி, சாட்சி

287

பல்லவி

அழைக்கும் தெய்வம் இயேசுவைப்பார் - உன்
அன்பைக் கேட்கும் நேசரைப் பார்
உன்னைத் தாவியே அணைத்திடவே அவர்
எடுத்த கோலம் சிலுவையிற் பார் - அவர்

சரணங்கள்

1. பாவிக்கு ஜீவ ஊற்றுனர் - இந்த
பாருக்கு ஜீவ வழியானர் - நேசர்
அன்பு வழி சென்றிடுவாய் - அவர்
அழைப்பை ஏற்றுக் கொண்டிடுவாய் - அழைக்கும்

2. காயங்களாலே வழி திறந்தார் - அன்று
கல்வாரியிலே உயிர் துறந்தார்
நீசன் உன்னைச் சேர்த்திடவே - அன்று
நேசனுக உயிர்த்தெழுந்தார் - அழைக்கும்

288

Jesus is tenderly calling (S. S. R. 396)
P. M.

பல்லவி

வா..... என்கிறார்! ..... வா..... என்கிறார்!
இயேசுவா..... என்.....கிறார் அன்பாக வா என்கிறார்!

சரணங்கள்

1. இயேசு தாம் அன்பாக வா என்கிறார்
வா என்கிறார், வா என்கிறார்!
என் அன்பைத் தள்ளாதே என்று சொல்வார்;
தூரம் போகாதே என்பார்!

2. இயேசு தொய்ந்தோருக்கு ஈவார் ஆற்றி;
வா என்கிறார், வா என்கிறார்!
ஆசி சொல்வார், பாவங்களை நீக்கி;
உன்னைத் தள்ளவே மாட்டார்

3. இயேசு காத்து நிற்கிறார், வா பாவி,
வா இப்போதே, வா இப்போதே!
ஏற்பார் உன் பாவப் பாரங்கள் நீக்கி,
இப்போ வா, பின் நில்லாதே!

4. இயேசு வாதாடும் சத்தத்தைக் கேட்பாய்,
கேள் இப்போதே, கேள் இப்போதே!
விஸ்வாசித்தால் ரட்சை பெற்றுக் கொள்வாய்,
தேடு ரட்சிப்பை இன்றே

— டீ. பீ. நயில்ஸ

289

சங்கராபரணம் ரூபகதாளம்

பல்லவி

இன்றைக்கே மனந்திரும்புவாய்,
இயேசு பதத்தைத் தேடுவாய்,

அனுபல்லவி

பின்னைக்கென்று நீ பின்னிடுவது
பிசாசின் தந்திரப் பேச்சென்றே நினை – இன்

சரணங்கள்

1. நீதி வெட்டக் கைஓங்குதே, நீடிய சாந்தமோ தாங்குதே;
மாதயவோடு இயேசுரட்சகர் வருந்திப், பாவி உனை
அழைக்கிறார் – இன்

2. நாளை பிழைப்பதசாத்தியம், நரகப் பாடுன் சம்பாத்தியம்
வேளை இதுவே, பரிசுத்தாவியும் வெகுவாய்த் தூண்டப்
பிகு செய்யாதே – இன்,

3. அந்திய காலம் பார்க்கலாம், அதுவரை தனஞ் சேர்க்கலாம்
முந்திப்போகாதெனச் சிந்தை கொள்வது மோசடியாய்–
முடியும், முடியும் - இன்

— ஏ. அலன்

290

கல்யாணி

சாபுதாளம்

பல்லவி

என்னையும் உமதாட்டின் மந்தையோ
டேற்றுக் காத்திடும் இயேசுவே!

சரணங்கள்

1. ஐயிருபது ஆட்டில் ஒன்று
அகன்றிட்டால் மனம் உவந்து கோனதை
மெய்யதாகவே தேடுவான் – என்ற
மேய்ப்பரே! எனைச் சேர்த்திடும் – என்

2. வாசலாகவே இருக்கிறேன், என்பால்
வந்தவன் மனம் நொந்திடான் வெகு
நேசமாகவே வாழ்வான் என்ற நல்
நிமலனே! எனைச் சேர்த்திடும்; - என்

3. நல்ல மேய்ப்பன் நானென்று மொழிந்தவென்
நாதனே ஞான போதனே! சீவ
புல்லுள்ள தலந்தன்னிற் கொண்டெனைப்
போஷித்து, முசிப்பாற்றிடும்; - என்

4. மேய்ப்பராகவே இருக்கிறீர், என்றன்
மேய்ச்சலும் நீர் தாமல்லவோ? ஞான
வாய்ப்புள்ள சத்ய மறையில் மேய்ந்து நான்
வளர்ந்திட அருள் புரிந்திடும்; - என்

— உபதேசியார் மரியான்

291

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

தாசரே இத்தாரணியை அன்பாய்
இயேசுவுக்குச் சொந்தமாக்குவோம்

அனுபல்லவி

நேசமாய் இயேசுவைக் கூறுவோம், அவரைக்
காண்பிப்போம், மாவிருள் நீக்குவோம்
வெளிச்சம் வீசுவோம்

சரணங்கள்

1. வருத்தப்பட்டுப் பாரம் சுமந்தோரை
வருந்தியன்பாய் அழைத்திடுவோம்;
உரித்தாய் இயேசு பாவப்பாரத்தை
நமது துக்கத்தை, நமது துன்பத்தை, சுமந்து
தீர்த்தாரே - தாச

2. பசியுற்றோர்க்கும் பிணியாளிகட்கும்
பட்சமாக உதவி செய்வோம்
உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து
இயேசு, கனிந்து திரிந்தனரே - தாச

3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம்;
பொறுக்க வொண்ணுக் கஷ்டத்துக்குள்
நிஷ்டுரத்துக்குள், படுகுழிக்குள் விழுந்தனரே – தாச

4. மார்க்கம் தப்பி நடப்போரைச் சத்ய
வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்
ஊக்கமாகச் செபித்திடுவோம், நாமுயன்றிடுவோம்;
நாம் உழைத்திடுவோம், நாம் ஜெயித்திடுவோம் - தாச

— வி சந்தியாகு

292

கமாசு ரூபகதாளம்

பல்லவி

நீ யுனக்குச் சொந்த மல்லவே
மீட்கப்பட்ட பாவி!
நீ யுனக்குச் சொந்தமல்லவே

அனுபல்லவி

நீ உனக்குச் சொந்தமல்லவே
நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம் - நீ

சரணங்கள்

1. சிலுவை மரத்திற் தொங்கி மரித்தாரே - திருரத்தம்
திருவிலாவில் வடிந்தது பாரே,
மிகுந்த பரிசத்தாற் கொண்டாரே
மோட்ச மகிமை யுனக்கிவாரே – நீ

2. இந்த நன்றியை மறந்து போனையோ – இயேசுவை விட்டு
எங்கேயாகிலும் மறைந்து திரிவாயோ?
சந்தத மாயுன திதயங் காயமும்
சாமி கிறிஸ்தினுடைய தல்லவோ? - நீ

3. இயேக உன் ஜெயும் மீட்டுக் கொண்டாரே-அவரின் நன்றியை
தாசனுகக் காட்டிக் கொள்வாயே
நேசத்தோடு வேலை செய்துநீ
மோட்ச இன்பந் தேடுவாயே - நீ

— உபதேசியார் தேவசகாயம்

293

பல்லவி

பலன் கொடுப்பீர் - நல்ல
பலன் கொடுப்பீர்
பண்பட்ட நிலம்போல் பலன் கொடுப்பீர்
வழியோரமா? கற்பாறையா? முட்புதரா?
நான் நல்ல நிலமா?

சரணங்கள்

1. இறைவனின் வார்த்தை விதையாகும்
அறியா உள்ளம் வழியோரம்
பறவைகள் விரைந்து நிற்பது போல்
பகைவனும் தியோன் பறித்திடுவான்

2. மண்ணில்லாப் பாறை நிலமாகும்
மனதில் நிலையற்ற மனிதர்களே
வேரற்ற வாழ்க்கை வாழ்வதினுல்
வெயிலில் வார்த்தை கருகிவிடும்

3. முட்செடி புதராம் என் உள்ளம்
முளைத்திடும் ஆசைகள் நெருக்கிடவே
இறைவனின் வார்த்தை வளரவில்லை
நெருங்கிய ஆசைகள் கொண்டதினுல்

294

செஞ்சுருட்டி ரூபகதாளம்

பல்லவி

பாவம் போக்கும் ஜீவநதியைப்
பாராய், வந்து சேராய் - பாவி

அனுபல்லவி

தீவினை தீர்க்கும் தேவ மறியின்
திருரத்த மிந்த ஆறும் - பாவி ! – பாவம்

சரணங்கள்

1. கல்வாரி மலைச் சிகர மீதுற்றுக்
கண்கள் ஐந்து திறந்து - அதோ!
மல்கிச் சிலுவை யடியில் விழுந்து
வழிந்தோடுது பாராய் - பாவி – பாவம்

2. பாவச் சுமையால் நொந்து சோர்ந்து
பதறி விழுந்தலறி - நிதம்
கூவியழுத அனந்தம் பேர் இதில்
குளித்தே உளம் களித்தார் - பாவி - பாவம்

3. ஒருதர மித்தநதியின் தீர்த்தம்
உண்டோர் ஜீவன் கண்டோர் - தாகம்
அறுதியடைவர், வேறெரு நதிக்கு
அலையார், தேடி அலையார் – பாவி – பாவம்

— ஜி. எஸ். வேதநாயகம்

295

பல்லவி

காமதமே செய்திடாதே
தருணமே இதை விடாதே
தற்பரன் இயேசு உன்னை ரட்சிப்பார்
பொற்பாதம் ஓடியே வா

சரணங்கள்

1. பாவியே ஜீவ ஊற்றண்டைவா
மேவியே ஜீவன் உண்டு
கூவியே இயேசுன்னைக் கூப்பிட்டாரே
தாவியே ஓடி நீ வா - தாமதமே

2. உள்ள நிலைமையுட னுடி வா
கள்ள உலகை விட்டு
தள்ள மாட்டாரே எப்பாவியையும்
வல்ல இயேசு நாதரே - தாமதமே

3. வந்து நீ சொஸ்தமடைந்து கொள்வாய்
ஐந்து காயத் தழும்பால்
நொந்தவன் சொந்தமாய் வரும்போது
ஈந்தவர் இடர் களைவார் - தாமதமே

4. வாக்குத் தத்தங்களைச் செய்துள்ளவர்
வாய்மை தவறுதவர்
போக்குச் சொல்லுகிற வர்களையோ
தாக்கு மியல் வைத்துள்ளார் - தாமதமே

5. உண்மையாய் இயேசுவை ஏற்பவரை
வெண்மையாக மாற்றுவார்
நன்மையே நாடெங்கும் செய்திட்டவர்
உன்னையும் அழைக்கிறார் - தாமதமே

— கொன்வென்சன் பாட்டு

296

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

மகனே உன் நெஞ்செனக்குத் தாராயோ? - மோட்ச
வாழ்வதைத் தருவேன் இது பாராயோ?

சரணங்கள்

1. அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பேனே - பாவ
அழுக்கை நீக்கி அருள் கொடுப்பேனே - மகனே

2 பாவம் அனைத்துமே விட்டோடாயோ? - நித்ய
பரகதி வாழ்வை இன்றே தேடாயோ? - மகனே

3. உன்தன் பாவம் முற்றும் பரிகரிப்பேனே - அதை
உண்மையாய் அகற்ற யான் மரித்தேனே - மகனே

4. உலகவாழ்வினை விட்டகல் வாயே - மகா
உவப்பார்க் கதி ஈவேன் மகிழ்வாயே - மகனே

— ரி. யோசேப்

297

ஹரிகாம்போதி திஸ்ர ஏகதாளம்

பல்லவி

வா, பாவி, மலைத்து நில்லாதே, வா

சரணங்கள்

1. என்னிடத்தில் ஒரு நன்மையு மில்லையென்
றெண்ணித் திகையாதே
உன்னிடத்தில் ஒன்றுமில்லை அறிவேனே
உள்ளபடி வாவேன் - வா

2. உன்தனுக்காகவே நானே யடிபட்டேன்
உன் பாவத்தைச் சுமந்தேன்;
சிந்திய என் திரு ரத்தத்தால் உன் பாவந்
தீர்த்துவிட்டேன் பாவி, வா - வா

3. விலக யாதொரு கதியில்லாதவன்
உலகை நம்பலாமோ?
சிலுவை பாவிகளடைக்கல மல்லோ?
சிக்கிரம் ஓடி வாவேன் - வா

4. என்னிடத்தில் வரும் பாவி யெவரையும்
இகழ்ந்து தள்ளேனே;
மன்னிய மேலோக வாழ்வை யருள்வேனே,
வாராயோ பாவி? - வா

— உபதேசியார் தேவசகாயம்

298

உசேனி ரூபகதாளம்

பல்லவி

வேறு ஜென்மம் வேணும் - மனம்
மாறுதலாகிய உள்ள சுத்தி என்னும்

சரணங்கள்

1. கூறு பரிசுத்தர் மாறிலாத் தேவனின்
தேறுதலான விண்பேறு பெற இங்கே - வேறு

2. பாவ சுபாவமும் ஜீவியமும் மாறி
தேவனின் சாயலே மேவுதலாகிய - வேறு

3. மைந்தர் கெடாமல் உகந்து சேடேறவே
சொந்த மகன்றனைத் தந்த பிதா அருள் - வேறு

4. மண்ணினில் பத்தராய் நண்ணி நடக்கவும்
விண்ணினில் சுத்தராய்த் தண்ணளி கொள்ளவும் - வேறு

— ரி. யோசேப்

299

கமாஸ ஆதிதாளம்

பல்லவி

இயேசு நாமம் ஒன்றை நம்புவீர்
பூலோகத் தாரே - இயேசு

சரணங்கள்

1. யேசு நாமம் ஒன்றை நம்பும் ; ரட்சண்யத்துக்கதுவே
ஸ்தம்பம்
பேசும் வேறே நாமமெல்லாம் - பேருலகை ரட்சிக்காதே
- இயேசு

2. பூதலத் தஞ்ஞான இருள்-போக்கவே மெய்ஞ்ஞான-பெருஞ்
சோதியாய் விளங்கி நிற்கும்-நீதியின் சூரியன்ஆன - இயேசு

3. பாவிகளீடேற்றி மோட்ச-பாக்கியம் பெறுவதற்காய்ச்
சீவன்விட்டுயிர்த் தெழுந்து சேணுலகுக் கேறிச்சென்ற
— இயேசு

4. விண்டலத்தவர்கள் சூழ — கண்டலகை பதறிவிழ
மண்டலத்தைத் தீர்வைசெய்யக் கொண்டல்
— மிசைவரும் ராசன் — இயேசு

— ஈ. பாக்கியநாதன்

300

Hark Sinner While God (S. S. R. 442)

12, 11

பல்லவி

மீட்பைப் பெறும்வேளை நீங்கிப் போகுமே
மீட்பைப் பெறும்வேளை நீங்கிப் போகுமே

சரணங்கள்

1. கேள்பாவியே, தேவன் அழைக்கிறார் அன்பாய்;
உன் கேட்டை உணர்த்தும் சத்தம் இதுவே!
மறுத்து நின்றால், உன் பாவத்தில் மரிப்பாய்;
மீட்பைப் பெறும் வேளை நீங்கிப் போகுமே!

2. எத்தனைமுறை உன் தீங்கைத் தெரிவித்தார்!
எத்தனைமுறை அழைத்தார் பாவியே!
என்றைக்கும் உன்னோடு வழக்காட மாட்டார்
மீட்பைப் பெறும்வேளை நீங்கிப் போகுமே

3. நீ தேவனை நிந்தித்தால் அப்பாலே போவார்;
அதால் வரும் துக்கம் நெஞ்சை மூடுமே;
விரைந்து பாவி, அவர் அன்பை எண்ணிப்பார்;
மீட்பைப் பெறும்வேளை நீங்கிப்போகுமே

4. கடைசிநாளில், சர்த்தரே நீதி தீர்ப்பார்
தயா மீட்பரைப் பற்றிக்கொள் இப்போதே
அன்றேல், 'என்னைவிட்டு அகன்று போ' — என்பார்;
மீட்பைப் பெறுவேனே நீங்கிப் போகுமே

— டீ. பி. நயில்ஸ்

கிறிஸ்தவ வாழ்வு
ஜெபம்

301

கரகரப்பிரியா ஆதிதாளம்

பல்லவி

ஆயத்த செபஞ் செய்யப் பெலன் தாரும் சுவாமி!
அடைக்கலா! உன்தன் தூணை வேணும் நேமி!

சரணங்கள்

1. சாத்தானுற் சோதனை மெத்தவுண்டையா!
சர்வாயுதந் தந்து காத்திடு தய்யா — ஆயத்

2. கேட்கிற வரமெல்லாம் கிருபையாய்த் தாரும்
கேடான மனம் நன்றாய் மாறிட வாரும் — ஆயத்

3. கருத்தான மனத்துடன் ஒருமித்துப்பாடி
கனிவுடன் மன்றாட அருள் செய்யும் சுவாமி — ஆயத்

4. இப்படியாகவே கேட்கும் மன்றாட்டை
யேசுவின் மூலமாய் ஏற்றுக்கொள் ஐயா — ஆயத்

— யாழ்ப்பாணப் பாடல்

302

1. ஆ இரங்கும் இயேசு சுவாமி தாவீதின் குமாரனே
என்று சொல்லிக் கண் குருடன் பார்த்திமேயு கேட்டானே

2. இரத்தினம், தங்கம், கல்வி என்னும் லோக ஆஸ்தி
வேண்டாமே
கண் திறந்து பார்வை தாரும் நேசமுள்ள யேசுவே

3. இயேசு நின்று கண் கடாட்சம் செய்யப்பார்வை பெற்
ருேஞய்
நேசத்தோடு ஆவலோடு பின் சென்ருன் விடாமையாய்

4. கர்த்தனே உம் கிருபை காண கண்திறந்து தாருமே
அத்தனே உம் அருமையான முகத்தைப் பார்க்க வையுமே.

— யாழ்ப்பாணப் பாடல்.

303

வாசஸ்பதி

ஆதிதாளம்

பல்லவி

இயேசு பரா, என் அன்பே நீவா ;
இன்பமே என்தேவா, என்னை ஏற்றுக் கா, வா

அனுபல்லவி

வேத நாயகா, விண்ணவர் குகா
வேண்டினேம் உன்னையே ஆண்டருள் எம்மையே—இயேசு

சரணங்கள்

1. அன்னை தந்தை நீயே, அருள், ஜோதியே
அறநெறி துறவே, அனைவருறவே
அன்பு செய்தென்னை ஆள்வாய் தேவனே
அஞ்சலித் தேனுன்னை, கெஞ்சினேன் என்கோனே

— இயேசு

2. முன்னே என்னை நாடிப் பொன்னுடலை ஈந்து
நன்னயமாய்க் கொண்டு நற்பயனுய்ப் போந்து
என்னை எவரும் ஏற்றுக் கொள்வாரோ?
கன்மனதில்லா காதல் கொண்டாய் ஏனே — இயேசு

3. பந்தப் பாசப் பாரில் பாவ மாயை தோய்ந்த
பற்று மெல்லாம் முற்றும் விட்டு வாழ்வதெப்போ?
பரலோக வாஞ்சை பாவி என்னுள் ஓசை
பஞ்சரித்துத் துஞ்ச மிஞ்சுதே என் ஆசை — இயேசு

— உபாத்தியாயர் ஞானப்பிரகாசம்.

304

1. உடைந்த பாத்திரம் போன்ற என்னைப்
படைத்த பரம குருநாதா
கடையேனு மெனைக் கண்ணோக்கி
அடைவுடன் ஆதரி, அருள் நாதா!
அழைத்த ஆண்டவனும் நீயே,
பிழைப்பது முன் பெருங்கருணையாலே
இழைத்துப் போகா தெனைக் காப்பாய்,
உழைக்க ஊக்கம் தந்தருள்வாய்

2. சிருஷ்டி யாவும் படைத்தவனே,
எதுவுமவற்றில் வீணல்லவே,
கருவினிலெனையும் அமைத்தவனே,
சிறுவனைச் சேவைக் குபயோகி,
குருநாதா, உனை விடமாட்டேன்,
திருவருளே யுனைப் பற்றிக் கொள்வேன்,
மருளு மிருளு மயக்காது,
தெருள் தருமபிஷேகம் பொழிவாய்

3. விழுந்த என்னைத் தூக்கி நிறுத்தி,
அழுமென் கண்ணீர் அறத்துடைத்து,
கழுவிக் காயம் பல ஆற்றி,
பழுதறச் சுத்தம், பல மருள்வாய்,
எழும் என் இதயந்தனில் தேவே
தொழுதுனைத் தோத்தரித்தக மகிழ்வேன்,
கழுவித் தாமரைப் பாதம் பணிவேன்
முழுவுளத்தால் உனை முத்தி செய்வேன்.

— சேவக் இயேசு சகாயம்

305

பல்லவி

பேசும் ! பேசும் செபம் செய்யும் போது;
ஆண்டவா ! பிரிய மானதை
இப்போ காட்டும் செய்ய ஆயத்தம்,

சரணங்கள்

1. என் ஆத்தும நேச மேய்ப்பரே!
என் உள்ளத்தின் ஆனந்தமே !
இன்னும் உம்மைக் கிட்டிச் சேர நான்
வாஞ்சையோடு சமீபிக்கிறேன்

2. மெய் மீட்பரைக் கிழ்ப்படிவோர்
தம் ஆத்மத்தைத் தேற்றுமிடம்,
அடியேனும் பெற அருள்வீர்,
அப்பனே விண்ணப்பம் கேட்டிடும்

3. பாவிகளுக்குமது அன்பை
எப்போதும் நான் காட்டச்செய்யும்!
கல்வாரி ஆவியால் உள்ளத்தைப்
போரில் வெல்ல அபிஷேகியும்

4. என் ஜீவிய நாட்களெல்லாம்,
நீர் சென்ற பாதையே செல்வேன்;
ஆசித்து நிற்கிறேன் என்னெல்லாம்
மீட்பரே, வல்லமை தந்திடும்

— இரட்சணிய சேனைப் பாடல்

306

காபி ஆதிதாளம்

பல்லவி

ஏற்றுக் கொண்டருளுமே தேவா ! — இப்போ
தேழையென் செபத்தை யேசுவின் மூலம்

சரணங்கள்

1. சாற்றின ஆதி ஆயத்த செபமும்
சாந்தமாய்ச் செய்த பாவ அறிக்கையும்
தேற்றிக் கொண்டருளும் மன்னிப்பின் மறுவும்,
யேசுவின் பாதத்தில் வைக்கிறேன் சாமி — ஏற்

2. குறைவுண்டு இதிலே அருமைப்பிதாவே,
குற்றம் மன்னித்திடும் யேசுவின் மூலம்;
முறைப்படி கேட்க நான் தெரியாத பாவி
முழுதும் யேசையா மேல் வைக்கிறேன் சாமி — ஏற்

3. மறுரூப ஆவி வேண்டுமென் சாமி
மனமெல்லாம் புதிய தாக்கிடுஞ் சாமி,
சிறுமைப் பட்டடியேன் கேட்கிறேன் சாமி
தேற்றிடும் புதுப்பெலன் ஊற்றிடுஞ் சாமி — ஏற்

4. விசுவாசம் பெருகி நிலைத்திடச் செய்யும்,
வெளிப்படும் மறை பொருள் பலபடச் செய்யும்
சிசுவைப் போல் மறுபடி பிறந்திடச் செய்யும்,
தேவாவி என்னுளம் தங்கிடச் செய்யும் — ஏற்

— பிரசங்கி அருளானந்தம்.

307

கமாஸ் ஆதிதாளம்

பல்லவி

செபம் மறவாதே நேசனே! எக்காலமும்

சரணங்கள்

1. அந்தி, சந்தி, மத்தியானம் அவரது சந்நிதானம்
நாடுவது பிரதானம் பக்தரிதற் குபமானம் — செப

2. திருவாக்கு விளக்காக திருச்சித்தம் வீதியாக
ஆவி, வழிகாட்டியாக புதுவெருசலே போக — செப

3. மனமே தகளியாக, நேசரன்பே நெய்யாக
ஆத்துமமே திரியாக தெய்வாவி தீபமாக — செப

— எஸ். டபிள்யூ. சவரிமுத்து

308

Sweet Hour of Prayer (S. S. R. 318)

D. L. M.

1. செப நேரம் இன்ப நேரம்,
லோக வாஞ்சை விட்டழைக்கும்
பிதாவின் கிருபாசனத்தே,
குறை, ஆசை கூறச் செய்தே;
ஆபத்து துக்க காலத்தில்
ஆற்றல் உண்டாம் என் ஆன்மாவில்;
தப்பினேன் சாத்தான் கண்ணியால்,
செப நேரம் நீ வந்ததால்

2. செப நேரம் இன்ப நேரம்,
என் விண்ணப்பம் ஏந்திச் செல்லும்
செபிப்போரைக் காத்து நின்று
மீட்கும் சத்தியர் அண்டைக்கு,

தம் சொல் நம்பி, அருள் பெற்று,
தம் முகம் தேடக் கேட்கிறார் ;
அவரின் மேற் சுமை வைப்பேன்,
செப நேரம் உன்னைக் காப்பேன்

3. செப நேரம் இன்ப நேரம்,
உன் ஆறுதல் நான் பெறட்டும்;
பிஸ்கா மலை உச்சி நின்று
பறப்பேன் என்வீடு கண்டு;
தேகப் போர்வை கழன்தேறி
பெறுவேனே மாமுமுடி;
ஏறி ஏறி நான் கூறுவேன்,
செப நேரம் போவேன், போவேன்.

— யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு.

309

பல்லவி

தினமே நானுனைத் தேடி பணிய
துணை புரிவாய் நித்ய ஏக தெய்வமே.

அனுபல்லவி

மனநிலை தவறி மறுகினேன் நானே
மா சீலனே அநுகூல நற்கோனே.

சரணம்

அருள் நாயகனே அம்பரத்தீசா
ஆதியாம் நின்ற பேரருள் நிறை பாசா
மருள் பவநாசா, மனுக்குல இராசா
மகிமையடைந்த மா மகத்துவநேசா — தினமே

310

In the Secret of his Presence (S. S. R. 1186)

P. M.

1. தேவனின் மறைவில் தங்க நாடுதே என் ஆத்துமா,
யேசு பாதம் கற்கும் பாடம் இன்பமானதல்லவா?
சாத்தான் என்னைச் சோதித்தால், நான் தேவபாதம்
செல்வேனே;
லோகபாரம், துன்பம், துக்கம் தாக்கியும் தாழாமலே

2. என்தன் ஆத்மா தாகமுற்று சோர்ந்து போகில் தங்குமே
அவர் செட்டை நிழலின் கீழ் ஊற்றும் ஒதுக்கு முண்டே;
இன்பமாய் சம்பாஷித்து என்பக்கம் நிற்பார் மீட்பரே;
சொல்ல என்னுற் கூடுதில்லை. இன்பர்கூறும் செய்தியே

3. ஒன்றுதான் அறிவேன், என்தன் ஐயர், துக்கம் பயமும்
சொல்லக் கேட்பார் பொறுமையாய், சோரும் ஆன்மா
பூரிக்கும்
"கண்டிக்கார் என்னை" என்பாயோ, என்னிற் பாவம்
கண்டாலோ
எனக்கவர் காட்டாவிட்டாற் போலி நேசராகாரோ?

4. ஆண்டவர் ஒதுக்கின்ப மறிந்துணர ஆசையா?
சென்றவர் நிழலில் தங்கு. இது பலன்பார்ப்பாயே;
கூட்டுறவின் அமைதி ஸ்தானம் விட்டேகும் போதெல்லாம்
எசமானின் சாயல் பெற்ற முகத்தோடு செல்வாயாம்.

— ஆர், சி. பீ. வெஸ்ட்

311

பல்லவி

தேவா பிரசன்னம் தாருமே
தேடி உம் பாதம் தொழுகிறோம்

அனுபல்லவி

இயேசுவே உம் திவ்ய நாமத்திலே
இன்பமுடன் கூடிவந்தோமே.

சரணங்கள்

1. வானம் உமது சிங்காசனம்
பூமி உமது பாதஸ்தலம்
பணிந்து குனிந்து தொழுகிறோம்
கனிந்தெம்மைக் கண் பாருமே

2. கர்த்தர் செய்த உபகாரங்களை
கணக்குரைத் தெண்ணலாகுமோ
இரட்சிப்பின் பாத்திரம் — கையிலேந்தி
இரட்சகரைத் தொழுகிறோம்

3. சாரோனின் ரோஜா லீலிப்புஷ்பம்
சாந்த சொரூபி, என் யேசுவே
ஆயிரம் பேரிலும் சிறந்தோராம்
ஆண்டவரைத் தொழுகிறோம்.

4. கர்த்தர் சமூகம் ஆனந்தமே
பக்தர் சபையில் பேரின்பமே
கர்த்தர் நாமத்தைக் கொண்டாடுகிறோம்
சுத்தர்கள் போற்றும் தேவனே

5. நூற்றிருபது பேர் நடுவே
தேற்றரவாளனே வந்தீரே
உன்னத ஆவியை ஊற்றிடுமே
மன்னவனே இந்நேரமே

6. எப்போ வருவீர் என் யேசுவே
ஏங்கி உள்ளம் உம்மைத் தேடுதே
பறந்து விரைந்து தீவிரமே
இறங்கி வாரும் யேசுவே.

312

O for a Closer Walk with God (M. H. B. 461)
C. M.

1. தேவனோடு சஞ்சரிக்க— தேவ சாயல் பெற்று,
மோட்ச பாதையில் நடக்க — ஆசை எனக்குண்டு

2. நான் கர்த்தரைக் கண்டபோது—பெற்ற இன்பம் எங்கே?
யேசுவும் வாக்கும் எனக்குத் — தந்த ஆற்றி எங்கே?

3. அப்போ பெற்றேன் சமாதானம் — மா இன்ப நினைவு
இப்போ வெறுமை என் நெஞ்சம் உலகம் நிறைக்காது

4. வாரும், துய்ய புரு, வாரும் — என் ஆற்றிக்குச் சாட்சி;
உம்மைத் துரத்திய யாவும் — வெறுக்கிறேன் இனி

5. நான் வணங்கும் விக்கிரகம் — யாதாயினும், நீங்க
உமதருள் தாரும். நெஞ்சம் — உம்மையே வணங்க

6. அப்போ உம்மிற் சஞ்சரிப்பேன் — தேவ சாயல் பெற்று;
மோட்ச பாதையில் நடப்பேன் — விண் ஒளி அடைந்து

— உவில்லியம் கூப்பர்
எஸ். நயில்ஸ்

313

பல்லவி

ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்
ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்

சரணங்கள்

1. ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்,
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மையைக் காணச் செய்யும் — ஜெபமே

2. ஊக்கத்துடனே ஓர் முகமாய்
வாக்குத் தத்தத்தைப் பற்றிக் கொண்டு
நோக்கத்தை எல்லாம் நேர்மையாக்கி
கேட்கும் படி கிருபை செய்யும் — ஜெபமே

3. ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சை விட்டு
வாகான தாக்கும் மனமெல்லாம்
வல்லமையோடே வேண்டிக் கொள்வோம் — ஜெபமே

314

தேசிகதோடி சாபுதாளம்

1. பத்தியாய்ச் செபம் பண்ணவே சுத்தமாய்த் தெரியாதையா!
புத்தியோ டும்மைப் போற்றநல், சித்தமீந்திடும் யேசுவே!

2. பாவ பாதையை விட்டுநான் ஜீவபாதையில் சேரநல்
ஆவி தந்தெனை ஆட்கொளும், தேவ தேவ குமாரனே!

3. பொய்யும் வஞ்சமும் போக்கியே, மெய்யும் அன்பும்
விடாமல் யான்
தெய்வமேயுனைச் சேவித்திங் குய்யும் நல்வரம் உதவுவாய்

4. அப்பனே! உனதன்பினுக் கெப்படிப் பதில் ஈட்டுவேன்?
செப்பும் என்னிதயத்தையே ஒப்படைத்தனன் உன்னதே

5. சிறுவன் நானுனைச் செவ்வையாய் அறியவும், முழு அன்
பிலுல்
நிறையு முள்ளம் நிலைக்கவும், இறைவனே! வரம் ஈகுவாய்

6. அண்ணலே! உனதாலயம் நண்ணி, நல்லுணர்வோடுனை
எண்ணி யெண்ணி இறைஞ்சி, உன் கண்ணில் இன்னருள்
காட்டுவாய்,

— எச். ஏ. கிருஷ்ணபிள்ளை.

315

நாதநாமக் கிரியை — ஆதிதாளம்

பரமண்டலங்களில் வீற்றிருக்கும்
பரமபிதாவே, எந்நாளும்
பரிசுத்தப் படுக உம் நாமம்,
பரிவுடன் வருக உம் ராச்சியம்
பரலோகத்தில் உமது சித்தம்
பண்புடன் செய்யப் படுவதுபோல்
தரணியிலுமது சித்தமுமே
தவருது செய்யப்படுக சதா;
அன்றன்றுள்ள எம் ஆகாரம்
அன்புடன் எங்களுக்கீந்தருளும்;
நன்றயலார் கடன் யாம் மன்னிக்கும்
நன்னயம் போலெம் பிழை மன்னியும்;
தேவே, சோதனைக் கெமை விலக்கி
தீமையினின்றும் இரட்சியுமே
ராச்சியம், வல்லமை, மகிமையுமாம்
உமதென்றென்றுமே, சதா, ஆமென்.

316

What a Friend we have in Jesus (M. H. B. 538

8, 7, 8, 7. D

1. பாவ சஞ்சலத்தை நீக்கப் பிராண சிநேகிதனுண்டே,
பாவப் பாரம் தீர்ந்து போக மீட்பர் பாதம் தஞ்சமே;
லோக துக்கம் துன்பத்தாலே, நெஞ்சம் நொந்து சோருங்
சால்
துன்பம் இன்பமாக மாறும் ஊக்சுமான ஜெபத்தால்

2. கஷ்ட நஷ்ட முண்டானாலும் யேசுவண்டை சேருவோம்;
மோச நாசம் நேரிட்டாலும், செபதூபங் காட்டுவோம்,
நோக்குவாரே நெஞ்சின் நோவை, பெலவீனம் தாங்குவார்;
நீக்குவாரே மனச் சோர்வை தீயகுணம் மாற்றுவார்

3. பெலவீனமானபோதும் திருபாசனமுண்டே,
இன சனம் சாகும்போதும் புகலிடம் இதுவே,
ஒப்பில்லாத பிராணநேசா! உம்மை நம்பி நேசிப்போம்
அளவற்ற அருள் நாதா! உம்மைநோக்கிக் கெஞ்சுவோம்.

— ஜே. எம். ஸ்க்றீவன்,
டீ. பி. நயில்ஸ்

317

பைரவி — சாபுதாளம்

பல்லவி

மா! இன்ப காலமல்லோ — செபவேளை
ஆனந்த காலமல்லோ?

அனுபல்லவி

பூவின் கவலைகள் போக்கி, என் ஆசையை
பொன்னுல காதிபன் முன்னே கொண்டேகிடும் — மா

சரணங்கள்

1. துன்பம் துயர் நீக்கி,—பொல்லாங்குகள்—சோதனைகள்
போக்கி,
அம்பர வாசிகளோ—டிதயத்தை—இன்ப உறவாக்கி
கெம்பீரமாகவே தம்பிரான் ஆசனம்
கிட்டி மகிழ்வுடனுற்று வரச் செய்யும் — மா

2. ஜீவ ஆறுதல் பெற்று—பிஸ்காவின்—சிகரமதனில் உற்று,
தேவ நகர் கண்ணுற்று—சடத்தை—ஜெகத்தில்
எறிந்துவிட்டு,
ஆவி களிப்போடு ஆகாயஞ் செல்லவே
அன்போடு பார்த்து நல் வந்தனஞ் சொல்லுவேன்
— மா

— எம். வேதமாணிக்கம்

விசுவாசம், மறுபிறப்பு

318

கரஹரப்பிரியா — சாப்புதாளம்

பல்லவி

அடைக்கலம், அடைக்கலமே, இயேசுநாதா, உன்
அடைக்கலம், அடைக்கலமே!

அனுபல்லவி

திடனற்றுப் பெலனற்றுன் அடியுற்று அழும் ஏழைக்கு
— அடை

சரணங்கள்

1. ஆசையோடு பாவமதில் அலைந்து திரிந்தேனே,
அன்புள்ள பிதா உனை விட்டகன்று பிரிந்தேனே;
மோசமதையே யல்லால் மற்றொன்றையும் காணுமலே
தோஷமோடு சேர்ந்தனன், துரத்திடாது சேர்த்தருள்
— அடை

2. சிந்திய உதிரமதும் ஐந்து திருக்காயமும்
நொந்துருகு மெனது மனச் சஞ்சல மகற்றிடும்;
பஞ்சமா பாவி எனது கெஞ்சிடும் கரத்தினை
எந்தவிதமுந் தள்ளாமல் இரங்குவா யையனே! — அடை

3. என்னிடத்தில் வருவோரை எந்தவிதமும் தள்ளேன்
என்று சொன்ன வாக்கதனில் எனக்கும் பங்கில்லையோ?
அன்றுனது பக்கமதிலேயிருந்த கள்ளனுக்கு
அன்று பரதீசிலிருப்பா யென்றுரைத் தாயல்லோ! அடை

— ஐ. டானியேல்

319

பல்லவி

அத்திமரம் துளிர்விடாமற் போனாலும்
திராட்சைச் செடி பழம் கொடாமற் போனாலும்
ஒலிவ மரம் பலனற்றுப் போனாலும் — நான்
இயேசுவுக்குள் மகிழ்ச்சியா யிருப்பேன்

சரணங்கள்

1. வயல்களிலே தானிய மின்றிப் போனாலும்
மந்தையிலே முதலற்றுப் போனாலும்
தொழுவத்திலே மாடுகளின்றிப் போனாலும்—நான்
இயேசுவுக்குள் மகிழ்ச்சியா யிருப்பேன்

2. நதிகளிலே தண்ணீர் வற்றிப் போனாலும்
நாவரண்டு நான் மயங்கிப் போனாலும்
உடலழிந்து உயிர் பிரிந்து போனாலும் — நான்
இயேசுவுக்குள் மகிழ்ச்சியா யிருப்பேன்

320

Pleased Assurance Jesus is Mine (M. H. B. 422)

9, 9, 9

பல்லவி

அன்பில் நிலைப்பேன், இன்பம் கொள்வேன்,
என்றும் இயேசுவை வாழ்த்தி நிற்பேன்;
அன்பில் நிலைப்பேன், இன்பம் கொள்வேன்,
என்றும் இயேசுவை வாழ்த்தி நிற்பேன்

சரணங்கள்

1. இயேசுவின் பிள்ளை நான் இப்போதே!
வானோர் இன்பத்தைக் காண்பேன் இங்கே!
மீட்பர் மூலமாய் ஜீவன் பெற்றேன்;
ஆவியின் பேரூய்த் தூயன் ஆனேன்

2. இயேசுவைச் சேர்வேன் மெய்த் தொண்டனுய்
மோட்சம் தோன்றுமே என் கண்முன்பாய்?
தூதரின் காட்சி என்னைத் தேற்றும்,
நாதரின் அன்பு கேட்டை மாற்றும்

3. இயேசுவைச் சேர்வேன் நேர் அன்பனுய்,
என்றும் சீவிப்பேன் பேரின்பனுய்;
கண்ணுய் நோக்குவேன் விண்ணோர் வாழ்வை,
மேலாய்த் தேடுவேன் மீட்பின் ஈவை

— எவ். ஜே. அல்ஸ்டின்
டூ. யி நயில்ஸ்

321

There is a Fountain Filled with Blood

(M. H. B. 201) C. M

சரணங்கள்

1. இரத்தம் பாயும் ஊற்றுண்டு, இம்மானுவேல் இடம்;
அவ்வூற்றிற் பாவிகள் தாழ்ந்து, நீக்கிக்கொள்வார் குற்றம்

2 சாவிற் கள்ளன் ஊற்றைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்
தான்,
அவன்போல் தோய்ந்தால், மகிழ்ந்து ஈசுத்தன் ஆவேன்
— நான்

3. தேவர்ட்டுக்குட்டி, உம் ரத்தம் பலமாய் பெலமாய்
நிலைக்கும்
மீட்படைத்த தேவசங்கம் பாவம்நீங்கு மட்டும்

4. காயத்தில் ஒடும் வெள்ளத்தை விசுவாசம் கண்டு
கூறச் செய்யும் மீட்பின் அன்பைச் சாகுமட்டும் நின்று

5. இந்த நாவு சாக்குழியில் பேசாமல் அடங்கும்
ஆனால் மீட்பின் வல்லமையில், என் துதி எழும்பும்

—உவில்லியம் கூப்பர்

ஜோன் கில்னர்

322

எந்தன் நாவில் புதுப்பாட்டு —எந்தன்
நேசர் தருகிறார்

பல்லவி

ஆனந்தம் கொள்ளுவேன் அவரை நான் பாடுவேன்
உயிருள்ள நாள்வரையில் — அல்லேலூயா

சரணங்கள்

1. பாவ இருள் என்னை வந்து சூழ்ந்து கொள்கையில்
தேவனவர் தீபமாக என்னைத் தேற்றினர் — ஆனந்

2. வாதை, நோயும் வந்தபோது வேண்டல் கேட்டிட்டார்
பாதை காட்டி துன்பமெல்லாம் நீக்கி மீட்டிட்டார்
— ஆனந்

3. சேற்றில் வீழ்ந்த என்னை அவர் தூக்கி எடுத்தார்
நாற்ற மெல்லாம் ஜீவரத்தம் கொண்டு மாற்றினர்
— ஆனந்

4. இவ்வுலக பாடு ((என்ன செய்திடும்
அவ்வுலக வாழ்வைக் காணக் காத்து நிற்கிறேன் — ஆனந்

323

மோகனம் ஏகதாளம்

பல்லவி

ஒரு மருந்தரும் குரு மருந்தே
உம்பரத்திற் கண்டேனே

அனுபல்லவி

அருள் மருந்துடன் ஆனந்த மருந்து
ஆதியிற்ருனைய் முளைத்த மருந்து
வரும் வினைகளை, மாற்றும் மருந்து
வறுமையுள்ளோர்க்கே வாய்த்த மருந்து — ஒரு

சரணங்கள்

1. சிங்கார வனத்தில் செழித்த மருந்து
ஜீவ தருமீதில் படர்ந்த மருந்து
மங்கை ஏவை பவம் மாற்றும் மருந்து
வல்ல சர்ப்பம் விஷம் மாய்த்த மருந்து — ஒரு

2. மோசே முதல் முன்னோர் காணு மருந்து
மோட்ச மகிமையைக் காட்டும் மருந்து
தேசத்தோர் பிணியைத் தீர்த்த மருந்து
தீர்க்கதரிசிகள் செப்பிய மருந்து — ஒரு

3. தீராத குஷ்டத்தைத் தீர்த்த மருந்து
செவிடு, குருடுமை தின்ற மருந்து
மாளு திரித்துவ மான மருந்து
மனுவாய் உலகினில் வந்த மருந்து — ஒரு

4. செத்தோர் உயிர்த்தே எழுந்த மருந்து
ஜீவன் தவரு தருளும் மருந்து
பக்தரைச் சுத்திகரிக்கும் மருந்து
பரம வாழ்வினில் சேர்க்கும் மருந்து ... ஒரு

— ஜே. ஜேக்கப்

324

சகானா ஆதிதாளம்

பல்லவி

ஐயா, உனது திவ்ய அன்பே — என்
மெய்யாம் பரமபத மாண்பே!

அனுபல்லவி

அங்கு மிங்கு மலசடிப்பட்டும் — அகம்
எங்கு மெய்மனச் சாந்தி கிட்டும்? — ஐயா

சரணங்கள்

1. மருகித் தியங்கு மெனதுள்ளம் – மெத்த
உருகி ஒடு மென் கண்ணீர் வெள்ளம்
பெருகி விலக்கும் பாவப்பள்ளம் - உன
தருகிலணைந்தே னேற்றுக் கொள்ளும் - என்தன் — ஐயா

2. உன்னை நான் தேடவில்லை, நீயே - அன்பால்
என்னை முனமே யிழுத்தாயே;
பொன்னடி சேர்ந்தேனுன்தன் சேயே – சொந்த
அன்னை நீ, அரவணைப்பாயே - என்தன் — ஐயா

3. உன்னோடு போட்டி செய்யும் ஏதும் – மண்ணின்
மாய்மாலக் கவர்ச்சிகள் யாதும்
என்னை மயக்காமலெப்போதும் உயர்
விண்ணின் மொழியென் காதில் ஒதும் - என்தன்—ஐயா

4. ஓடின னெனைத் தொடர்ந்தாயே மாறித்
தேடிக் கண்டு கைப்பிடித்தாயே
நாடி வளர்த்தணைக்கும் ஆயே - உனைப்
பாடிப்புகழு மென்தன் வாயே – என்தன் — ஐயா

– பெரியண்ணன் யேசுதாசன்

325

பல்லவி

பொங்கி வரும் அருள் மனிதரை மாற்றிடுதே
மங்கிப்போன மனம் புதுவாழ்வில் மலர்ந்திடுதே

சரணங்கள்

1. தீயவர் திருடரும் கொடியவர் கொலைஞரும்
இயேசுவில் மாற்றம் பெற்றார்
மாறிய மனதுடன் மங்கள வாழ்விற்கு
அழைக்கிறார் ஓடியே வா

2. தேவனின் ஆவியால் விடுதலை வாழ்வில்
பெற்றவர் பலரும் உண்டு
இயேசு மகாராஜன் உன்னைத்தான் அழைக்கிறார்
நம்பி நீ ஓடியே வா

3. கிருபையின் நாட்களைத் தயவுடன் ஏற்றிடக்
கனிவுடன் வேண்டுகிறேம்
வருகையின் நாளிதில் வருந்திட வேண்டாம் நீ
அழைக்கிறார் ஓடியே வா

326

Give me the Faith which can Remove (M. H. B. 390)
8, 8, 8, 8, 8, 8

1. மலையையும் பேர்க்கத்தக்க விசுவாசத்தை ஈந்திடும்
திருச்சபையை வளர்க்கத் தவிக்கும் நெஞ்சைத் தந்திடும்
உமதன்பிலில் முற்றுக என் நெஞ்சைப் பட்சிப்பீராக

2. கெட்டுப்போன ஆன்மாக்களை நரகினின்று மீட்பதும்,
இயேசுவின் மூலம் மன்னிப்பை அவர் அடையச் செய்வதும்
என் நெஞ்சத்தின் வாஞ்சையாகும்; அதற்கேற்ற
ஊக்கம் தாரும்

3. இரட்சை பெறுதோர்க்காக, எப்போதும் முயற்சி செய்வேன்,
முற்றும் அவர் நன்மைக்காக, என் சீவனை ஒப்புவிப்பேன்;
உமதன்பு என் சுவாசம், ஆன்ம ரட்சையே என் நோக்கம்

4. எனது தத்துவம் வரம் எல்லாம் நீரே ஏற்றுக்கொள்ளும்;
உம் வாக்கைப் போதித்து நிதம் உமக்காய்ச் சீவிக்கப்
பண்ணும்
பாவி நண்பரை எப்போதும் கூறுதற்கு என்னை ஏவும்

5. தெய்வீக நேசம் என்நெஞ்சில் பரந்து மூளச் செய்திடும்;
நல் மேய்ப்பராம் உம்மிடத்தில் உம் ஆடுகளைச் சேர்க்கவும்
அவரை நான் உம்மைப்போல நேசிக்கவும் செய்வீராக

— சால்ஸ் உவெஸ்லி
ஜேன் கில்னர்

327

ஆனந்தபைரவி — ஆதிதாளம்

பல்லவி

தேவாதி தேவனே, திருச்சுதனுவியே
திரித்துவனே உமக்கே தோத்ரம்

சரணங்கள்

1. செல்வமாயின்றுவரை சேமமாய்க் காத்தீரே
எல்லையில்லா நன்மைகளை ஏழைகட்கிந்தீரே - தேவா

2. பாவஞ்செய் தோம்பல பாடுகட் காளானேம்,
பராபரனேபாவி கட்கிரங்கு வீரே - தேவா

3. தீரோ வெங்கவலை தீர்த்திரட்சித் தெமைத்
தாரீரோ வுந்தனுவி தந்தெமையாட் கொள்ளீரோ - தேவா

4. உமது வேதத்திலுள்ள அதிசயங்களைக் காண
உமது சமுகந்தந் தெம்மை நடத்துவீர் - தேவா

— சொலமன் செல்லத்துரை

328

I am Coming to the Cross (S. S. R. 477)

சரணங்கள்

1. சிலுவையிற் சேருவேன் ஏழை ஈனக் குருடன்;
லோகம் குப்பை என்கிறேன், பூரண மீட்சி பெற்றவன்

பல்லவி

கர்த்தா உம்மை நம்புவேன்
கல்வாரிப் பலியே நீர்
சிலுவை யண்டை தாழ்வேன்
இப்போ, யேசே இரட்சிப்பீர்

2. நெடும் வாஞ்சை உமக்காய் ஆயின் ஆண்டது தீமை,
இயேசு சொல்வார் இன்பமாய் ''தீர்ப்பேன் முற்றுய்ப்
பாவத்தை'.

3. ஈவேன் உமக்கே யாவும், இனம், வாழ்நாள் செல்வமும்,
ஆன்மா, உடல் முழுதும் உமக்கென்றே என்றைக்கும்

4. வாக்குத்தத்தம் நம்புவேன் – உணர்வேன் திரு இரத்தம்
மண்ணில் தாழ்ந்து விழுவேன் - அறையுண்டேன்
— கிறிஸ்தோடும்

5. சேர்வார், ஆன்மா நிறையும்; அவரே என்பூரிப்பு
அடைந்தேன் சொஸ்தம், முற்றும், ஆட்டுக்குட்டிக்கே
மாண்பு

டீ. பி. நயில்ஸ

329

O Christ in thee my Soul Hath Found

(S. S. R. 833) C. M.

சரணங்கள்

1. கிறிஸ்துவே உம்மால் மாத்திரம் ஆசியெல்லாம் தோன்றும்
ஆவலாய் நான்நாடித் தேடும் பாக்கியம் பேறுகும்

பல்லவி

கிறிஸ்துவின் நாமம் எனக்கு
ஆற்றி தந்து தேற்றும்;
ஜீவன் ரட்சை நிறைவெல்லாம்
இயேசுவின் ஈவாகும்

2, உம்மைத் தேடாமற் பேதையாய் நான்நடந்து கெட்டேன்;
ஆயின் உம் நேசத்தைக் கண்டு சீர் அடைந்து வென்றேன்

3. ஜீவ தண்ணீர் ஊற்றைவிட்டு தாகத்தால் இளைத்தேன்;
ஓட்டைத் தொட்டிகளை நம்பி நாணித் துன்பப்பட்டேன்

4. நீரே என்செல்வம் என்பதை எண்ணுமற் திகைத்தேன்
ஆயின் உமது காட்சியால் தேறுதல் அடைந்தேன்

- டீ . பி. நயில்ஸ

அன்பு, தெய்வ நிநேகம்

330

பல்லவி

அன்புக் கரங்கள் வாழ்க - இறைவன்
அன்புச் சபைகள் வாழ்க - அடியார்
அன்புப் பணிகள் வாழ்க

சரணங்கள்

1. பயிர்செய்து உயிரோம்பும் உழவர்களை வாழ்வில்
உயிராக மதித்து நல்உவமை சொன்னாய்
அயராது மனமாரத் தொழில் நீ செய்தாய்
அயராது மனமாரத் துணிநெய்து பணி செய்வோர்க்கருள்

2. ஆண்டாண்டு தோறும் எம் அடைக்கலமே
மாண்டாலும் மறவோம் உம் நடத்துதல்கள்
தூண்டா விளக்கே எம் ஆதவனே
ஊண் ஊட்டி உடைபோர்த்து உயிர்மீட்ட உத்தமனின்

3. திருநோக்கல் பிணி தீர்த்தாய் குருநாதனே
அருள் வாக்கால் பயம் தீர்த்தாய் திருவாசனே
இருள்நீக்கி ஒளி ஈந்தாய் குமரேசனே
மருள் தீர்த்துன் பணிசெய்ய அருள்செய்தாய் ஈசனே உன்

331

1. அன்பின் மயமே உனையே, உனையே அண்டினேனே
ஆருயிர் உறவே அரும்பெருந் துணையே
ஆறுதல் உமதண்டையே - அன்பின்

2. ஒரு நாளேனும் உறங்கா துறங்கா துவந்து காத்தே
உயிர் கொடுத்தனையே உயிர்த்திட எனையே
உயிர்த்திட எனையுமக்கே - அன்பின்

3. இன்ப இசையே இறைவா, இறைவா ஈந்து அணைத்தீர்
இந்நில உலகில் இடர் புயல் வரினும்
இன்பமே உன்தன் தொனியே —அன்பின்

4. நம்பினவரைத் தயவாய் தயவாய் தாங்கும் கரமே
நாள் முழுவதிலும் நன்மையே தொடர
நன்றியுடன் துதிப்பேன் —அன்பின்

5. பதினாயிரம் பேர்தனிலும் தனிலும் அரிய அன்பே
கதி தந்தெனையே கடைக்கணித் திடவே
பாரினில் யாருமில்லையே —அன்பின்

332

சாவேரி — சாப்புதாளம்

பல்லவி

இத்தரை மீதினில் வித்தகனு யெழுந்த
உத்தமனே தோத்ரம்!

அனுபல்லவி

நித்தமென் இருதயம் சுத்தமாக விளங்க
சித்தங்கொள்வா யென்மீது தத்தஞ்செய்தே னிப்போது
—இத்

சரணங்கள்

1 கண்ணே மணியே உன்னைக் கண்டபின் விடுவேனே?
காதலாய்ப் பவத்தில் வீண்காலம் பின்னிடுவேனே?
விண்ணே உனை மறந்து வேறொன்றைத் தொடுவேனே?
வேஷ மார்க்கம் நடந்து வேதனைப்படுவேனே? —இத்

2 அன்னையும் பிதாவும் ஆளும் பொருளும் நீயே;
ஆசாரியன் தீர்க்கன் ஆயனும் ஆடும் நீயே;
உன்னைப் பிரிந்தால் வேறு போக வழியில்லையே;
உத்தம சத்திய முத்தே, அதிபதியே! —இத்

3. தேனே, கனியே, என்றுந் திகட்டாத அமிர்தமே
தீயனென் மனப்புண்கள் ஆற்றிடும் அமிழ்தமே
வானேயிருந்து புவி வந்த பெரும்பதமே
மறவாது திருப்புகழ் வரைவேன் நிதம் நிதமே —இத்

4. செஞ்சோதி போன்ற அவன் சீர்பாதத்தை எந்நாளும்
நெஞ்சானத்தில் வைத்து நீடூழி வாழ்த்தல் வேணும்
பஞ்சாய்ப் பறந்திடுமென் பஞ்ச பாதகம் யாவும்
அஞ்சனே அஞ்சனே தேவதஞ்சம் கண்டதேபோதும் —இத்

— எஸ் பரமானந்தம்

333

நாதநாமக்கிரியை சாப்புதாளம்

பல்லவி

இயேசு என் அஸ்திபாரம், ஆசை எனச்சுவரே
நேசமுசிப்பாறுதல் இயேசுவில் சுண்டேன் யானும்

சரணங்கள்

1. என்ன மதுரம் அவர், நன்னைய நாமச் சுவை
என்னகத்தில் நினைத்தால் இன்னல் பறந்திடுமே

2. பஞ்சம் பசியுடனே மிஞ்சும் துயர் வந்தாலும்
அஞ்சுடேன் இவற்றை என் தஞ்சம் இயேசிருக்கையில்

3. வியாதியால் என்தனது காயங் கெட்டுப்போயினும்
மாய தோற்றத்தை இயேசு நாயகன் மாற்றிடுவார்

4. உலகம் எனை எதிர்த்து போவென்று சொல்லிடினும்
சோகம் அடைடவேனே என் நேசர் எனக்கிருக்க

5. ஆசை என் மணவாட்டி ஆக்குவேன் உன்னை எனும்
நேச உறுதியுரை இயேசு எனக்களித்தார்

— ரீ. யே. அன்றூஸ்

334

முகாரி — ரூபகதாளம்

பல்லவி

இயேசுவே! -செங்கரும்பே! — உனை
எத்தனை நாவினால் இத்தினம் போற்றுவேன்

அனுபல்லவி

தாசர்கள் நாடிடும் சங்கையின் இராசனே
நேசர்கள் தேடிடும் உன்னத வாசனே; — இயே

சரணங்கள்

1. அன்பைப் பெருக்கி என் ஆருயிர் காத்திடும்
அற்புத விற்பன தற்பரன் நீயல்லோ?
இன்பமே நின்னருள் இன்றி வருந்தினேன்,
இன்றடியேன் அதை உன்னிலருந்தினேன் — இயே

2. வஞ்சம் நிறைந்த தென் நெஞ்சம் என்றறிவாய்
வானகம் பூதலம் யாவும் நிறைந்தவா!
தஞ்சமென்றெய்தினேன் தஞ்சமே கொடுத்தாய்
தாழ விழும் என்னைச் சால்புடன் எடுத்தாய் —இயே

3. தித்திப்புன் நாமம் மாதித்திப்புன் செய்தி மா
தித்திப்புத் தித்திப்புன் உள்ளமெல்லாம் அல்லோ?
சத்துருப் பேய்க் கசப்பிற்கு நான் அஞ்சிடேன்,
சாவிலும் நின்னை மறந்துநான் துஞ்சிடேன் —இயே

— ஞா. சாமுவேல்

335

உசேனி ரூபகதாளம்

பல்லவி

என் உள்ளம் கவரும்,— நீர் மரித்த
இன்பக் குருசண்டை இன்னும் நெருங்கிட—என்

அனுபல்லவி

என்பாவம் போக்கவே ஈட்டியால் குத்துண்டு
இரத்தம் தண்ணீர் வழிந்தோடும் விலாவண்டை

சரணங்கள்

1. உம்தம் மகா இன்ப சத்தம் நான் கேட்டவன்
உமதாச்சரிய அன்பை உணர்ந்தவன்,
எந்தையே நானுப்மைச் சேர்ந்தவனையினும்
இன்னும் நெருங்கி நான் உம்மண்டை சேர்ந்திட —என்

2. சுத்த கிருபையின் வல்லமையால் என்னை
முத்திரியும் உமக்கூழியம் செய்திட.
அத்தனே உம்மில் நல் நம்பிக்கையாய் உம்தம்
சித்தமே என் சித்தமாகப் பிழைத்திட —என்

3. உம்தம் அடிதனில் உறைந்து தனித்து
ஓர்மணி நேரம் கழிப்பதே பாக்கியம்,
என் தேவனே அதிநேசமாய் உம்முடன்
இன்ப சம்பாஷணை செய்வதே ஆனந்தம் —என்

4. அம்பரா மரண ஆழி தாண்டும்வரை
அறியமுடியா அன்பின் ஆழம் உண்டு;
எம்பரனே உம்தம் அன்பின் ஆழத்தை நான்
இம்மையில் கூடிய மட்டும் அறிந்திட —என்

— வி. சந்தியாகு

336

I'm not Ashamed to own my Lord (S .S. R. 883) C. M

பல்லவி

1. என் கர்த்தரின் புகழ் சொல்வேன்—அன்புவைத்தார் என்னில்
என் மன்னிப்பைப் பெற்றுக்கொண்டேன் சிலுவை
அண்டையில்

சிலுவை அண்டையில் ஒளியை நான் கண்டேன்;
நெஞ்சின் பாரம் நீங்கிற்றே தீர்க்கமாய்;
விசுவாசத்தால் கிருபை பெற்றேன்
இப்போ மகிழுவேன் நாள் முற்றும்

சரணங்கள்

2. இயேசுவின் திருநாமத்தில் எப்போதும் நம்புவேன்
முடிவில் என்னை மோட்சத்தில் சேர்ப்பார் என்றறிவேன்

3. அவர் சொன்ன வாக்குத்தத்தம் மாறாது நிலைக்கும்
ஈறுமட்டும் அவர் சித்தம் என்னில் நிறைவேறும்

4. பிதாவின் சந்நிதானத்தில் என்னை ஒப்புக்கொள்வார்;
சுத்தவாளரின் வாசத்தில் ஓர் ஸ்தானம் தருவார்

—டீ. பி. நயில்ஸ்

337

Hark my soul it is the Lord (M. H. B. 839)
8, 6, 7 6; 7, 6; 7, 6

சரணங்கள்

1. கேள் நெஞ்சே கர்த்தர் சொல்லை அப்போ நீங்கும்
— உன் தொல்லை
நேசிக்கிறாயா நீ என்னை, என்று கேட்கிறார் உன்னை

2. உன் தொழும்பை மாற்றினேன் உன் காயத்தை ஆற்றினேன்
ஊற்றி எனதருளை, நீக்கினேன் உன் இருளை

3. ஓர் அன்னை தன் பாலனை, விட்டும் நான் விடேன் உன்னை
அவள் மறந்தபோதும், நான் மறவேன் ஓர்போதும்

4, எனதன்பு மாறுது, உன்னைவிட்டால் ஆறுது;
ஆழிபோலப் பரக்கும், சாவின்மேலும் சிறக்கும்

5. பெற்றுக்கொள் உன் மீட்சியை, காண்பாய் நீ என்மாட்சியை
நேசிக்கிறாயா நீ என்னை, என்று கேட்கிறார் உன்னை

6. எனதன்பு குறைவு, கர்த்தா தாரும் நிறைவு,
என்று கெஞ்சு நெஞ்சமே, அவர் அருள் தஞ்சமே

— டீ. பி. நயில்ஸ்

338

செஞ்சுருட்டி — ரூபகதாளம்

பல்லவி

நிச்சயம், நிச்சயம், நித்திய நிச்சயம்
அச்சயனின் பிரசன்னமே

அனுபல்லவி

சந்தேகங்கள் சேர்ந்து சோர்வுற்று வாடி நான்
கொந்தளித்து மனம் கொதித்து — நிச்சயம்

சரணங்கள்

1. உள்ளத்தில் உண்மையிருக்க விரும்பினாய்
பள்ளமும் பாவத்தை மூடுமோ? —மெள்ள
உள்ளத்தில் மெதுவாய் வந்தனையொதுங்கில்
எள்ளளவில்லா தகற்றுவாய் —நிச்சயம்

2. கற்று விட்டேனென்ற கடின நெஞ்சத்தால்
முற்றும் உனை மறப்பேனே? — உற்று
சற்றே நின்று மாயும் அற்ப வாழ்வில் சிக்கி
சுற்றி அலைந்துழல்வேனே? —நிச்சயம்

3. காலூன்றி நிற்கும் கற்பாறையைப் பார்க்கிலும்
மேலே மிளிரும் சோதியிலும் —மனு
வேலே யுனை மிக வாய்மையை நம்பிட
சால வுதவி செய்திடுவாய் —நிச்சயம்

4. உன் பிரசன்ன உணர்ச்சி ஓங்கிடவும்
என் மாம்ச சொரூப மங்கவும் —இன்னே
மண்ணை மறந்து நின்பொன்னடி போற்றவே
விண்ணே அருள் ஒளி வீசுவாய் —நிச்சயம்

— பெரியண்ணன் யேசுதாசன்

339

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

ஜெகநாதா; குருபர நாதா, திரு
அருள்நாதா ஏசு, பிரசாத நாதா

அனுபல்லவி

திகழுறும் நாதா, புகழுறும் பாதா,
நீதறும் வேத போதா! — ஜெக

சரணங்கள்

1. எளிய வேஷந்தரித்தே இங்கவ தரித்தாலும்,
இமையோர் வந்திறைஞ்சிடத் தெரிந்தாயே;
ஒளிசெய்யும் மணிமுடி உயர் மன்னர் தொழும்படி
உடு வழி காட்டிடப் புரிந்தாயே — ஜெக

2. இஷ்டமுடன் நேசித்தும் எனக்குப-தேசித்தும்
இணையில் பேரின்பக் கண்ணல் பார்த்தாயே;
துஷ்டப் பேயைக் கடிந்தும் துஞ்சினார்க் குயிர் தந்தும்
துன்பப் பிணி பலவுந் தீர்த்தாயே —ஜெக

3. சயிலம் பிளந்திடவும், தபனன் வில் மங்கிடவும்,
சுவாமி, எமைப் புரக்க மரித்தாயே;
உயிரோடு செஞ்சுடர்போல் உயிர்த்து, திருவுடல்மேல்
உற்ற ஐந்துகாயங்கள் தரித்தாயே —ஜெக

4. அமரர் முற்றும் அறியார், அடிகள் சற்றும் அறியார்,
ஆர் உன்திறல் அறிவார், கர்த்தாவே?
எமது பவம் பொறுத்தே இரக்கம் என்மேல் உகுத்தே,
எமைப் புரந்தாள்வாய், மானப் பர்த்தாவே —ஜெக

— வீரமாமுனிவர்

340

பல்லவி

உள்ளம் ஆனந்தக் கீதத்திலே
வெள்ளமாகவே பாய்கின்றதே
எந்தன் ஆத்தும நேசரையே — என்றும்
வாழ்த்தியே பாடிடுவேன்

சரணங்கள்

1. பாவப் பாரம் நிறைந்தவராய்
பல நாட்களாய் நான் அலைந்தேன் - அந்தப்
பாரச் சிலுவையிலே - எந்தன்
பாவத்தைச் சுமந்தவரே - உள்ளம்

2. பல ஆசையின் ஆழியிலே
அழிந்தே மனம் சோர்ந்திடுதே - அந்த
பாசக் கரங்களிலே
அணைத்தே என்னைத் தூக்கிடுவீரே -உள்ளம்

341

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

வாழ்த்துவேன் வாழ்த்துவேன் வாழ்த்துவேன் - எனை
அழைத்த அரசே அனுதினம் உமைநான் - வாழ்

சரணங்கள்

1. கதியடைய உந்தன் குருசினி லறையுண்டேன் பதியே
புதிய உள்ளந் தந்து புது வாழ்வு வழி ஈந்த
சிவாதி பதி உமையே - வாழ்

2. சரணுகதி யடைந்தேன் கருணுகரனே உமதடியில்
சரணர விந்தங்கதி அருணுதையமே
உமதடிமையாய் என்றும் வாழ்வேனே - வாழ்

3. நிறைந்தேன் என்னகத்தில் உறைந்த கிறிஸ்துவே என்குருவே
மறந்தேன் என்னையே நின் மகிமை இராட்சியம்
பெலன் என்றென்றும் பாடுவேனே - வாழ்

4. சேவை செய்ய எனக்காசை தந்த நசரேயனே
சாவை அஞ்சிடேனே தாசனுய் நிதம் சேவை
செய்வேனே உமக்கே அன்பாய் - வாழ்

5 விசுவாசத்தில் நிலைப்பேன் அசையேன் கணம்மறவேன் அரசே
பசிதாகம் வந்திடினும் விசுவாசித்திருப்பவர்
இன்னர் என்ப தறிவேனே - வாழ்

6. அன்பு கூர்வேன் எனக்கா யுயிரீந்த என் அன்பே
இன்ப வாழ்விதுவே துன்பம் தீர்த்தவனே
ஆனந்தம் ஆனந்தமே

ஐ. சி. இயேசுகாயம்
(சின்னண்ணன்)

342

Jesus Loves me this I Know (S. S. R. 1155)

பல்லவி

ஆம், யேசு, அன்பே, ஆம், யேசு, அன்பே
ஆம், யேசு, அன்பே, என் வேதம் சொல்லுமே

சரணங்கள்

1. இயேசென்னை நேசிக்கிறார், வேதத்தில் அதை சொன்னார்
சிறு பிள்ளைக்கவரே, பெலவீனர் பெலனே

2. இயேசு அன்பால் மரித்தார், மோட்சவாசல் திறந்தார்
பாவம் எல்லாம் நீக்கிட, சிறுபிள்ளையைச் சேர்க்க

3. இயேசு அன்பே இப்போதும், என்னில் பெலன் குறைந்தும்
மோட்சம் விட்டிறங்கினார், மேவிக் காத்துக்கொள்வார்

4. இயேசு அன்பால் சேருவார் - வழியில் என்னைக் காப்பார்
அவரை நான் நேசிக்கில், என்னைச் சேர்ப்பார் மோட்சத்தில்

- யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு

சோதனை, துன்பம்

343

சகானா — சாப்புதாளம்

பல்லவி

அமர்ந்திரு ஆத்துமாவே - அருள்நாதன் அடிதனில்
அணைப்பாருனைத் தம் கரத்தால்

அனுபல்லவி

இந்த விதமாய்த் தினம் நொந்து நடுங்கி மனம்
வெந்து வெருளி நின்று உன்தனை வதைக்காதே — அம

சரணங்கள்

1. நோயால் சரீரம் வாடி நொந்து நீவதைந்தாலும்
ஓயாது செய்யும் ஜெபம் உன்னதம் சென்றிடுமே;
ஆயாசம் வேண்டாம், அண்ணல் ஆலயமுன் சரீரம்
சாயாது சீர்ப்படுத்த சர்வ வல்லவராவர் — அம

2. சோதனைகளினூலே சோர்ந்து நீ வாடும் போது
நாதனின் பிரசன்னம் நான் தோறும் நின்னைத் தேற்றும்;
காதலாய்க் கர்த்தர் திருக்கண்ணுடன் உனைக் காப்பார்,
போதுமலர் அழைப்பும் பொன்மொழி வாக்குரையும் - அம

3. இஷ்டரின் அன்பு குன்றி இடறல்கள் ஏற்பட்டாலும்
கஷ்டமோடுன் தனுள்ளம் கலங்கிக் குழம்பினாலும்.
துஷ்டர்கள் தூஷித்தாலும் துயர்வந்து தவித்தாலும்;
நஷ்டம் நேரிடுமென்று பயந்து நடுங்கினாலும் — அம

4. வருங்காலக் கவலையால் வருந்திக் கண்ணீர் சொரிய
நெருக்கடி நேரிடினும் நம்பு நாதனின் கரம்
கருத்ததாயுனை நடத்தும் கண்மணி கலங்காதே
இறுதிவரை இருப்போர் இதுகாறும் காத்தவர்தான் - அம

— பெரியண்ணன் யேசுதாசன்,

344

பிலகரி ரூபகதாளம்

பல்லவி

உனக் கொத்தாசை வரும் நல் உயர் பருவதம் இதோ!

அனுபல்லவி

தினமும் மனதுநொந்து சிந்தை கலங்குவோனே - உன

சரணங்கள்

1. வானம் புவி திரையும் வகுத்த நன்மைப் பிதாவின்
மாட்சிமையின் கரமே வல்லமையுள்ள தல்லோ - உன

2. காலைத் தள்ளாட வொட்டார், கரத்தைத் தளரவொட்டார்
மாலை உறங்க மாட்டார், மறதியாய்ப் போக மாட்டார்
- உன

3. கர்த்தருன்னைக் காப்பவராம், கரமதில் சேர்ப்பவராம்
நித்தியமு முந்தனுக்கு நிழலாயிருப்பவராம் - உன்

4. பகலில் வெயிலெனினும், இரவில் நிலவெனினும்
துயர் வருவதுமில்லை, துன்பஞ் செய்வதுமில்லை - உன

5. தீங்கு தொடராதுன்னை, தீமை படராதுன்மேல்
தாங்குவார் தூதர்கோடி, தாளி டுறுதபடி - உன

6. போக்கும் ஆசீர்வாதமாம், வரத்தும் ஆசீர்வாதமாம்
காக்கைக் குஞ்சுகள் முதல் கதறி நம்பி விடுமே - உன

7. துன்ப துயரத்திலும், துக்க சமயத்திலும்
இன்ப முறும் பொழுதும் எல்லாம் உனக்கவரே - உன

— பாளையங்கோட்டைப் பாடல்.

345

Through the love of God our Saviour
(M. H. B. 525.) 8, 4, 8, 4, 8. 8, 8,4.

1. ஏசுதேவன் இன்ப அன்பால்
எல்லாம் நலம்
தாகம் தீர்த்துத் தாபரிப்பார்
எல்லாம் நலம்
நேசராஜன் கை பிடிக்க
யேசுபோன பாதை சென்று
ஈசனடி நாமடைவோம்
எல்லாம் நலம்

2, சத்துருக்கள் முனிந்தாலும்
எல்லாம் நலம்
மித்துருக்கள் கைவிட்டாலும்
எல்லாம் நலம்
ஆயன் யேசு ஆசாஞ்க
மாயலோகம் என்ன செய்யும்
தூயரடி நாம் தொடர்வோம்
எல்லாம் நலம்

3, கூரிருள் தான் மூடினாலும்
எல்லாம் நலம்
வாரிதி வான் மோதினாலும்
எல்லாம் நலம்
துங்கனடி தேடினோர்க்கு
கங்குல் பகல் பேதமில்லை
எங்கும் எங்கள் தேவன் ஆள்வான்
எல்லாம் நலம்

— மேரி பீற்றர்ஸ்

ஏ. எம். கே. குமாரசுவாமி

346

சகானு ஆதிதாளம்

பல்லவி

நெஞ்சமே தள்ளாடி நொந்து
நீ கலங்காதே – கிறிஸ்த்
யேசுவே உனக்கு நல்ல
நேச துணையே

சரணங்கள்

1. நேசமான தோழர்களும் மோசமாகச் - சற்றும்
நேரறப்ப கைஞராக நின்றபோதிலும் – நெஞ்

2. அன்னை தந்தை ஆனவரும் பின்ன பேதமாய் - உனை
அங்கலாய்க்க விட்டெழிஞன் ஆனபோதிலும் – நெஞ்

3. சீவனமிழந்து துன்பம் மேவினாலும் - மா
சிறுமையாய்ச் சகிக்கொணு வறுமை கொண்டாலும் – நெஞ்

4. கெட்ட நோயிலும் நீ அகப்பட்டுழன்றாலும் - எந்தக்
கேடுகளுன் மேலே வந்து மூடினாலும் - நெஞ்

– யோண் பாமர்

347

பல்லவி

பாடிடுவேன் மனதார
இயேசுவின் நாமத்தை
நாடிடுவேன் காலமெல்லாம்
கர்த்தரின் சித்தமதை

சரணங்கள்

1. துன்பங்கள் தொடர்ந்து வரட்டுமே
உலகம் சோதனை தரட்டுமே
இறைமகனின் கரங்களிலே
அடைக்கலமாய் இருந்திடுவேன் – பாடிடுவேன்

2. உறவுகள் கொடுப்பது தெய்வமன்றே
கொடுத்ததைப் பிரிப்பதும் அவரன்றே
இனியவர் துணையிருக்க
துயரமெல்லாம் பறந்திடுமே —பாடிடுவேன்

348

இந்துஸ்தானி ஏகதாளம்

பல்லவி

வாரா வினை வந்தாலும், சோராதே மனமே
வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே

சரணங்கள்

1. அலகை சதித்துன் மீது, வலைவீசினாலும்
அஞ்சாதே, யேசுபரன் தஞ்சம் விடாதே —வாரா
2. உலகம் எதிர்த்துனக்கு மலைவு செய்தாலும்
உறுதி விட்டயராதே, நெறி தவறுதே —வாரா
3. பெற்ற, பிதாப்போல் உன் குற்றம் எண்ணாரே
பிள்ளை யாதலாலே தள்ளி விடாரே —வாரா
4. தன் உயிர் ஈந்திட்ட உன் யேசு நாதர்
தள்ளுவாரோ? அன்பு கொள்ளவர் மீதே —வாரா
5. மரணம் உறுகின்ற தருணம் வந்தாலும்
மருள விழாதே, நல் அருளை விடாதே —வாரா

யோண் பாமர்

349

Jesu Lover of my Soul (M. H. B. 110) 7, 7, 7, 7, D

1. ஆன்ம நேச யேசுவே, வெள்ளம் பாய்ந்து பெருகி
சூறைக்காற்று வீசவே, நெஞ்சிலே என்னைப் பேணி
சேவிப்புயல் அடிக்க, புகலிடம் தாருமே!
நான் மோட்ச கரையேற, அருள் செய்யும் கர்த்தரே!

3. நீர் அன்றித் தஞ்சமில்லை, உம்மைச் சேர்ந்ததென் ஆன்மம்
கைவிடாமற் காத்தென்னை, ஆற்றித் தாங்கிக் கொண்டிரும்
நான் உம்மைச் சார்ந்து நம்பி திடங்கொள்ளும் படிக்கு
சிறகால் என்னை மூடி அருள் செய்யும் எனக்கு

4. தயாநிதி கிறிஸ்து நீர், என்குறை நிறைவேற்றி
விழுந்தேனை, தூக்குவீர், துன்பம் தீர்த்து விளக்கி
நீரே சுத்த நீதியான், நானே மருளாளனே
வஞ்சன், துஷ்டன். தீயன் நான் நீரோ அருளாளரே

4. பாவம் எல்லாம் ஒழிக்க, உமதருள் போதுமே
என்னைச் சுத்திகரிக்க, அருள் நதி காட்டுமே
நீரே சீவ நதி நான் உம்மில் என்றும் மூழ்கவே
உள்ளத்திற் சம்பூரணம் ஊறச் செய்யும் நித்தமே

— சால்ஸ் உவெஸ்லி
பீற்றர் பேசிவல்

350

When storms of life are raging (S. S. R. 547)
8, 7, 8, 7.

சரணங்கள்

1. என்னைச் சுற்றிச் சீவ சூறை
மூர்க்கமாய் மோதுகையில்
கேடின்றி என் தேவன் என்னை
மறைப்பார் உள்ளங்கையில்

மறைப்பார் .... தாம்.....மறைப்பார்..... தாம்
தீங்கொன்றும்... கிட்டமாட்டாது
மறைப்பார் தாம் .... காப்பார் என்.....னை
தம் கையால்..... மூடிக் கொள்வார்

3. தண்டிக்கில் என் தேவன் என்னை
மோட்ச வீட்டை வாஞ்சிப்பேன்
என் பிதா சிட்சிக்கும் போது
அன்பினைத் செய்தார் என்பேன்

3. சத்துருக்களும் சாத்தானும்
தீமை செய்ய யூகிப்பார்
என் தேவன் அவை யாவையும்
நன்மையாக மாற்றுவார்

4. சூறைக் கூடாய்ச் சிலுவையை
நான் சுமக்கும் போதிங்கே
ஆத்துமாவைச் சேதமின்றி
யேசு காத்துக் கொள்வாரே

- டீ. பி. நயில்ஸ்

நம்பிக்கை, சமாதானம்

351

பல்லவி

அப்பன் இருக்கையில் அஞ்சாதே
உன்னை ஆண்டு நடத்திடும் ஆண்டவரும் அவரே

சரணங்கள்

1, தப்பிதம் நீ செய்தால் மறையாதே,
தஞ்சம் அவரென்பதை மறவாதே மனமே, —அப்

2. பட்டினி யாலுலும் பதறுதே,
பக்தியோடே துதிக்கத் தவறுதே, மனமே! —அப்

3. கஷ்ட நஷ்டத்திலும் காப்பாரே
கண்ணீர் விடும் பாவியைப் பார்ப்பாரே மனமே —அப்

4. துன்ப துயரத்திலும் துணை அவரே
துதியோடு ஜெபி, உன்னைச் சேர்ப்பாரே மனமே —அப்

கொண்வென்ஷன் பாடல்

352

நாத நாமக்கிரியை சாப்புதாளம்

பல்லவி

இயேசு நான் நிற்கும் சன்மலையே!—மற்ற
எத்த ஆதாரமும் வெறும் மணல் தரையே

சரணங்கள்

1, இயேசுவின் நாமத்தின் மேலே - என்றன்
எல்லா நம்பிக்கையும் வைத்தேன் அன்பாலே
நேசனேயுங் கூட நம்பேன் - நான்
யேசு நாமத்தின்மேல் முழுதுமே சார்வேன்

2. இருள் அவர் அருள் முகம் மறைக்க - நான்
உறுதியாய் அவர் மாறுக்கிருபையில் நிலைப்பேன்
உரமாகக் கடும்புயல் வீச - சற்றும்
உலையாத எனது நங்கூரமாம் அவரே

3. பெருவெள்ளம் பிரவாகம் வரினும் - அவர்
பிரதிக்னை, ஆணை, இரத்தம் என் காவல்
இருதயத்தின் நிலை அசைய - அப்போ
யேசுவே என் முழு நம்பிக்கையாமே

4. சோதியாய் அவர் வரும் போது - நான்
சுத்தனுய்த் தரிசித்தே அவரைப் போலாவேன்
நீதியாம் ஆடை தரிப்பேன் - சதா
நித்திய காலமாய் ஆளுகை செய்வேன்

— வி. சந்தியாகு

353

சரணங்கள்

1. இயேசுவை நம்பினோர் மாண்டதில்லை
என்னென்ன துன்பங்கள் நேரிட்டாலும்
சிங்கத்தின் வாயினின்றுன்னை இரட்சிப்பார்
பங்கம் வராதுன்னை ஆதரிப்பார்

பல்லவி

நெஞ்சமே நீ அஞ்சிடாதே
நம்பினோரைக் கிருபை தேற்றிடுதே
இம்மட்டும் காத்தவர் இம்மானுவேல்
இன்னமும் காத்துன்னை நடத்துவார்

2. கல்லுகள் முள்ளுகள் பாதையிலே
கஷ்டங்கள் துக்கங்கள் நெஞ்சத்திலே
எல்லாம் எதிர்த்தாலும் அஞ்சிடாதே
வல்லவர் யேசு நம் முன் செல்கிறார்

3. வருத்தப் பட்டுப் பாரம் சுமப்பவரே
வாருங்கள் இயேசுவின் பாதத்தண்டை
உங்களின் பாரத்தைத் தான் சுமந்து
நித்திய ஆறுதல் தருவேன் என்றார்,

விசுவாசப் பிரமாணம்

354

உலகும் வானும் செய்தாளும் ஒப்பில் சர்வ வல்லவராய்
இலகும் அருளாம் தந்தையாம் எம்பிரான்றனை நம்புகிறேன்

அவரொரு பேரு மைந்தனுமாய் ஆதிமுதலெங் கர்த்தனுமாய்
தவறிலேசுக் கிறிஸ்துவையும் சந்ததமேயான் நம்புகிறேன்

பரிசுத்தாவி யருளதனுல் படிமேல் கன்னி மரியிடமாய்
உருவாய் நரரவதாரமதாய் உதித்தாரெனவும் நம்புகிறேன்

பொந்து பிலாத்ததிபதி நாளில் புகலரு பாடுகளே யேற்று
உந்துஞ் சிலுவை யறையுண்டு உயிர்விட்டாரெனவும் நம்புகிறேன்

இறந்தே அடங்கிப் பாதாளம் இறங்கி மூன்றுந் தினமதிலே
இறந்தோரிடநின்றே உயிரோ டெழுந்தாரெனவும் நம்புகிறேன்

சந்தத மோட்சம் எழுந்தருளிச் சர்வ வல்ல பரனுன
எந்தை தன் வலப் பாரிசமே இருக்கின்றாரென நம்புகிறேன்

உயிருள்ளோரை மரித்தோரை உத்தம ஞாயம் தீர்த்திடவே
செயமாய்த் திரும்ப வருவரெனச் சிந்தையார நம்புகிறேன்

பரிசுத்தாவியை நம்புகிறேன் பரிசுத்த மா பொதுச்சபையும்
பரிசுத்தர்களின் ஐக்கியமும் பரிவாயுண்டென நம்புகிறேன்

பாவ மன்னிப்புளதெனவும் மரித்தோ ருயிர்த்தெழுவாரெனவும்
ஓவா நித்திய சீவனுமே உளதெனவும் யான் நம்புகிறேன்

சுவாமி! ஆமென், சுவாமி! ஆமென்! சுவாமி! ஆமென்.

355

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

எல்லாம் இயேசுவே - எனக்கெல்லாம் இயேசுவே

அநுபல்லவி

தொல்லை மிகு மிவ்வுலகில் - சுகம் அவரே - எல்

சரணங்கள்

1. ஆயனும் சகாயனும் நேயனும் உபாயனும்
நாயனும் எனக்கன்பான ஞான மணவாளனும் -எல்

2. தந்தை தாய் இனம் ஜனம் பந்துளோர் சிநேகிதர்
சந்தோட சகல யோக சம்பூரண பாக்கியமும் -எல்

3. கவலையில் ஆறுதலும், கங்குலிலென் ஜோதியும்
கஷ்ட நோய்ப் படுக்கையிலே கை கண்ட ஔஷதமும்-எல்

4. போதகப் பிதாவுமென் போக்கினில் வரத்தினில்
ஆதரவு செய்திடுங் கூட்டாளியு மென் தோழனும் -எல்

5. அணியுமாபரணமும். ஆஸ்தியும் சம்பாத்தியமும்
பிணையாளியும் மீட்பருமென் பிரிய மத்தியஸ்தனும் -எல்

6. ஆன ஜீவ அப்பமும் ஆவலுமென் காவலும்
ஞான கீதமும் களிப்பும் நாட்டமும் கொண்டாட்டமும்-எல்

—எவ, ஞானமணி

356

மாயாமாளவகௌள ஆதிதாளம்

பல்லவி

என்மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்
கென்ன குறைவுண்டு? நீ சொல் மனமே

சரணங்கள்

1. என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தார்
என்னெழுந்திருக்கவே எழுந்திருந்தார்
விண்ணுல குயர்ந்தார், உன்னதஞ் சிறந்தார்
மித்திரனே, சுகபத்திர மருளும் —என்

2. பாவமோ, மரணமோ, நரகமோ பேயோ
பயந்து நடுங்கிடச் செயஞ் சிறந்தார்
சாபமே தீர்த்தார், சற்குரு நாதர்
சஞ்சல மினியேன் நெஞ்சமே மகிழாய் —என்

3. ஆசி செய்திடுவார். அருள் மிகவளிப்பார்
அம்பரந் தனிலெனக்காய்ச் செபிப்பார்
மோசமே மறைப்பார் முன்னமே நடப்பார்
மோட்சவழி சத்தியம் வாசல் உயிரெனும் —என்

4. கவலைகள் தீர்ப்பார், கண்ணீர் துடைப்பார்
கடைசி மட்டும் கைவிடா திருப்பார்
பவ மன்னிப்பளிப்பார், பாக்கியங் கொடுப்பார்
பரம பதவியினுள் என்றனை எடுப்பார் —என்

— ஞா. சாமுவேல்

357

Simply Trusting every day (M. H. B. 517) 7, S.

1. என் ஜீவ காலம் முற்றும்—எவ்வித புயல் வந்தும்
நான் திகிலப்பேன் பக்தியில்—நம்புவேன் என்யேசுவில்

நம்புவேன் இன்றே முற்றுமாய்—நம்புவேன் நிறைபத்துமாய்
நம்புவேன் அவர் அன்பில்—நம்புவேன் என்யேசுவில்

2. வான் சுத்தாவியை அவர்—தந்தென் நெஞ்சைக் காக்கிறார்
ஆகையால் என் உள்ளத்தில்—நம்புவேன் என்யேசுவில்

3. இன்பத்தில் நான் பாடுவேன் – துன்பத்தில் மன்றாடுவேன்
அஞ்ச மாட்டேன் மோசத்தில் - நம்புவேன் என்யேசுவில்

4. நம்புவேன் துயர் வந்தும் – நம்புவேன் மனம் நொந்தும்
சேருமட்டும் முத்தியில் - நம்புவேன் என்யேசுவில்

— எட்கர் பேஜ்
டீ, பி. நயில்ஸ்

358

பல்லவி

கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறதே
தாழ்ச்சி அடையேன்; என்றுமே

அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து
அமர்ந்த தண்ணீரண்டை நடத்துகிறார்

சரணங்கள்

1. ஆத்துமாவைத் தேற்றும் நேசரென்னை
ஆனந்தத்தால் நிரப்புகிறார்
மகிமையின் நாமத்தின் நிமித்தம் அவர்தம்
நீதியின் பாதையில் நடத்துகிறார் - கர்த்தர்

2. மரணப் பள்ளத்தாக்கில் நடந்திடினும்
மாபெரும் தீங்குக்கும் அஞ்சேன்
கர்த்தர் என்னோடென்றும் இருப்பதால் அவர்
கோலும் தடியும் என்னைத் தேற்றிடுமே –கர்த்தர்

3. சத்துருக்கள் முன்பில் எனக்காகப்
பந்தி யொன்றுயத்தம் செய்தார்
என்னைத் தம் எண்ணெயால் அபிஷேகித்து என்
பாத்திரம் நிரம்பியே வழியச் செய்தார் –கர்த்தர்

4. ஜீவன் என்னில் உள்ள காலம் வரையும்
நன்மை கிருபை தொடரும்
கர்த்தரின் வீட்டிலே களிப்புடன் துதித்து
நித்திய நாட்களாய் நிலைத்திருப்பேன் -கர்த்தர்

359

In Heavenly Love Abiding (M. H. B. 528)
7, 6, 7, 6 D

1. கர்த்தர் என்றன் தஞ்சமால்—கங்குல் தாக்கா தென்னை
வித்தையீவான் விண்ணவன்—வீரியம் என் பங்காம்
மத்தகஜம் மாருதம்—மாற்றூர் மோதினாலும்
அத்தனைனைச் சூழ்ந்ததால்—அஞ்சேன் ஒருபோதும்

2. எங்கு நடத்தினாலும்—ஏகுவேன் நான் பின்னே
துங்கன் எந்தன் மேய்ப்பனால் — துன்பம் அணுகாதே;
மங்காதவன் கண்ணென்றும் - மாளாதவன் ஞானம்
இங்கோ, அங்கோ, எங்குமே - ஈசன் பின்னே போவேன்

3. இயம்பொணா இன்பங்கள் - ஈசன் பக்கம் தோணும்
நயம்பொலி வானமும் - நறுமணம் வீசும்
ஆயன் யேசு என் அன்பன் - அவன் கையாதாரம்
ஜெயக்கொடி விரித்து ஜீவபாதை செல்வேன்

-அன்னு லற்றீஷியா வொறிஞ்
ஏ. எம். கே. குமாரசுவாமி

360

பல்லவி

கடவுள் நமக்குத் துணையுண்டு
அவர் காவல் நமக்குத் தினமுண்டு
கடவுள் நமக்குத் துணையிருக்க வீண்
கவலைகள் நமக்கு ஏன் இன்று, ஏன் இன்று, ஏன் இன்று?

சரணங்கள்

1. ஆயன் நான் என்று சொல்லவில்லையா?
ஒரு ஆட்டினைத்தேடி அவர் செல்லவில்லையா?
தாயின் மொழிகள் கூறவில்லையா? ஒரு
தந்தையின் வடிவாய் மாறவில்லையா, மாறவில்லையா?
மாறவில்லையா?

2. பசித்தவர் ஆயிரம் வரவில்லையா?
அன்று பரிவுடன் உணவுகள் பெறவில்லையா?
சிறகினில் அணைத்திடும் தாய் இல்லையா?
சின்னஞ்சிறுவயதுச் சேயில்லையா? சேயில்லையா?
சேயில்லையா?

3. கல்லினுள் தேரை வாழவில்லையா?
சிறு கருவிலும் உயிர்கள் தேறவில்லையா?
பல்லுயிர் படைத்தவர் அவரில்லையா நம்மை
படைத்தவர் இருப்பது நினைவில்லையா? நினைவில்லையா,
நினைவில்லையா?

361

Gentle Jesus Meek and Mild (M. H. B. 842)
7, 7, 7, 7.

1. சாந்தமுள்ள யேசுவே, பாரும் பாலன் முகத்தை
என்னில் தயை வைத்திடும், என்னில் தங்கியருளும்

2. உம்மை நாடிப் பற்றுவேன், என்னை ஏற்றுக்கொள்ளுமேன்
மோட்ச ராச்சியத்திலே, தாரும் எனக்கிடமே

3. இன்ப முகங்காட்டுவீர், என்னைக் கையில் ஏந்துவீர்
உமக்கேற் றேனுகவே, ஆசீர்வாதந் தாருமே

4. தியோர் செய்கை ஒன்றுமே, நான் செய்யாதிருக்கவே
என்மேல் ஆவி ஊற்றிடும், நெஞ்சைச் சுத்திகரியும்

5. அன்பு உள்ள யேசுவே - ஏழையேனைப் பாருமே
என்னை அன்பாய் ரட்சியும் — மோட்சவீட்டிற் சேர்த்திடும்

—சால்ஸ் உவெஸ்லி

டீ. பி. நயில்ஸ்

362

Art thow weary art thou languid (M. H. B. 320)
8, 5, 8, 3.

1. சோர்ந்தோ போனாய் நீ கனைத்து பட்டாயா துன்பம்?
என்னிடம் வா, என்னூர் இயேசு தொய்வாறும்

2. நடத்தும் குறிகள் உண்டா வழி காட்டியில்?
உண்டு காயம் கையில், காலில், பக்கத்தில்

3. அவர்க்குக் கிரீடம் உண்டா சோடிக்க நெற்றி
ஆம், அவர் தலையில் உண்டு முள்முடி

4. அவரைக் கண்டு பின்சென்றுல், வேறுண்டோ இங்கும்?
உண்டு கனதுக்கம், வேலை கண்ணீரும்

5. அவரைப்பற்றி நான் சேர்ந்தால், பலனே ஈற்றில்?
துக்கம், வேலை, சாவும் வெல்வாய், முடிவில்

6. என்னை ஏற்றுக் கொள்ளக் கேட்டால் இல்லை என்பாரோ?
மண், விண் ஒழிந்தாலும், சொல்லார் நம்பிப்போ

7. பிடித்துப் பின்பற்றினோர்க்குக் கதியா ஈவார்?
தூயர், தீர்க்கர், அப்போஸ்தலர், ஆம் என்பார்

— சேபைற் ஸ்தேவான்

ஜோன் கில்னர்

361

பல்லவி

காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு
காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு
காத்திடுவார் என்றுமே

சரணங்கள்

1. தொல்லைகள் கஷ்டங்கள் சூழ்ந்திடும்
துன்பம் துக்கம் வரும்
இன்பத்தில் துன்பம் தோன்றிடும்
இருளாய்த் தோன்றும் என்றும்
சோதனை வரும் நேரத்தில்
சொற் கேட்கும் செவியிலே
பரத்திலிருந்து ஜெயம் வரும்
பரன் உன்னைக் காக்க வல்லோர்

2. ஐயமிருந்தோர் காலத்தில்
ஆவிக் குறைவால் தான்
மீட்பர் உதிர பலத்தால்
சத்துருவை வென்றேன்
என்பயம் யாவும் நீங்கிற்றே
ஏசு கைத்தூக்கினார்
முற்றும் என்உள்ளம் மாறிற்றே
இயே சென்னைக் காக்க வல்லோர்

3. என்ன வந்தாலும் நம்புவேன்
என் நேச மீட்பரை
யாரை விட்டாலும் பின் செல்வேன்
எனது யேசுவை
அகல மாழ முயரமாய்
எவ்வளவன்பு வைத்தார்
என்ன கஷ்டங்கள் வந்தாலும் அவரி
என்னைக் கைவிடமாட்டார்

364

ஹரிகாம்போதி — ஆதிதாளம்

பல்லவி

தேவபிதா எந்தன் மேய்ப்பனல்லோ?
சிறுமை தாழ்ச்சி அடைகிலனே

அனுபல்லவி

ஆலலதாயெனைப் பைம்புன்மேல்
அவர் மேய்த்தமர் நீர் அருளுகின்றார் -தேவ

சரணங்கள்

1. ஆத்துமந் தன்னைக் குளிரப் பண்ணி
அடியேன் கால்களை நீதியென்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமுஞ் சுகமாய் நடத்துகின்றார் -தேவ

2. சாநிழல் பள்ளத் திறங்கிடினும்
சற்றுந் தீங்கு கண்டஞ்சேனே
வான பரன் என்னோடிருப்பார்
வளைதடியும் கோலுமே தேற்றும் -தேவ

3. பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக் கென்றேற் படுத்தி
சுகதைலங் கொண்டென் தலையைச்
சுகமாய் அபிஷேகம் செய்குவார் - தேவ

4. ஆயுள் முழுவதும் என்பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாட் குடியாய் நிலைத்திருப்பேன் — தேவ

கி. மோசஸ்

365

செஞ்சுருட்டி ஆதிதாளம்

பல்லவி

நம்பி வந்தேன் யேசையா! நான்
நம்பி வந்தேனே திவ்ய
சரணம், சரணம், சரண் ஐயா! நான்
நம்பி வந்தேனே

சரணங்கள்

1. நம்புவேன் பிதாவேநான், நம்பிக்கை நின் தயை - நிறை
குறை பொறுத்திடுமென துயிரும திருவடி நம்பி வந்தேனே

2. தம்பிரான் ஒருவனே! தம்பமே தருவனே! - வரு
தவிதுகுமர குரு பரமனுவேலே! நம்பி வந்தேனே

3. யேசுவின் மூலமே, தூய நெஞ்சியுமே - மனக்
கலக்கமெல் லாமழித் தருள் பவநாசம் - நம்பிவந்தேனே

4. நாதனே! இருபைகூர் வேதனே! சிறுமைதீர் - அதி
நல மிகும் உனதிரு திருவடி அருளே நம்பிவந்தேனே

5. தேடினேன் பாதமே நாடினேன் வேதமே - தேவா
திரு உளமே! கைவிடாதே ஐயா! நம்பி வந்தேனே

வேதநாயக சாஸ்திரியார்

366

சரணங்கள்

1. வானோர் வணங்கும் சருவேசா,
விந்தைக் இருபாசன வாசா,
கானுன் பதி சங்கையின் ராசா,
கருணை பொழியுங் குமரேசா,

பல்லவி

சுவாமி, ஆமென்
சுவாமி, ஆமென்
சுவாமி, ஆமென்

2. பரமண்டலத்தைத் திறந்தீரே,
பாவிகளுக்காய்ப் பிறந்தீரே,
தரை மண்டலத்தைப் புரந்தீரே,
தயவாயுயிரைத் தந்தீரே.

3. சத்திய பாதை சீவனுமாய்,
சற்குருவும் நல் மேய்ப்பனுமாய்,
சுத்த ஞான வைத்தியராய்,
சிறந்தெந் நாளும் அருள்புரிவாய்.

4. இரங்கு மிரங்கும் பராபரனே,
எங்கு மிருக்கும் நிராதரனே,
திரங்கள் அளிக்கும் சுந்தரமே,
தினமு மடியார் மந்திரமே.

வேதநாயக சாஸ்திரியார்

367

Not now but in the coming years (S. S. R. 740)
L. M.

1. இப்போதல்ல, பின்னேர் காலம்
மீட்பின் அன்பை நாம் உணர்வோம்
பூணும் போது நாம் விண்கோலம்
எல்லாம் தெளிவாய் அறிவோம்

பல்லவி

நம்புவோம் தேவனில் முற்றுய்
அவர் ஒளியில் நடப்போம்
தாழ்விலும் நேசிப்போம் பற்றுய்
முற்றும் தெளிவாய் அறிவோம்

2. நம்மைக் கார் மூடினவகை
எல்லாம் விளங்கிக் கொள்ளும்
நம்மைச் சூழ்ந்து நின்ற பகை
வந்த விதம் நாம் அறிவோம்

3. நாம் மிக வாஞ்சித்த நன்மை
கிட்டாத காரணம் காண்போம்
நம் வாழ்வைக் கெடுத்த வன்மை
உற்ற நோக்கம் நாம் அறிவோம்

4. நமக்குண்டு தேவ தஞ்சம்,
என்று திடனுய் நம்புவோம்.
பூரிக்க நமது நெஞ்சம்
விண்வாசத்தில் நாம் அறிவோம்

ஜ. பி. நயில்ஸ்

368

சரணங்கள்

1. உன்னதமானவரின்
உயர் மறைவினிருக்கிறவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்
இது பரம சலாக்கியமே — அவர்

பல்லவி

அவர் செட்டையின் கீழ் அடைக்கலம்புகவே
தம் சிறகுகளால் மூடுவார்

2. தேவன் என் அடைக்கலமே
என் கோட்டையும் அரணுமவர்
அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்
என் நம்பிக்கையும் அவரே — அவர்

3. ஆயிரம் பதினாயிரம் போர்கள்
உன்பக்கம் விழுந்தாலும்
அது ஒருகாலத்தும் உன்னை அணுகிடாதே
உன் தேவன் உன் தாபரமே — அவர்

4. இரவில் பயங்கரத்திற்கும்
பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
நான் பயப்படவே மாட்டேன் — அவர்

5. உன் வழிகளிலெல்லாம் உன்னை
தூதர்கள் காத்திடுவார்
உன் பாதம் கல்லில் இடறுதபடி
தங்கள் கரங்களில் ஏந்திடுவார் — அவர்

6. தேவன் உன் அடைக்கலமே
ஒரு பொல்லாப்பும் உன்னைச் சேருமா?
ஒருவாதையும் உன் கூடாரத்தையே
அணுகாமலே காத்திடுவார் — அவர்

7. சிங்கத்தின் மேலும் நடந்து
வலு சர்ப்பத்தையும் மிதித்து
அவர் நாமத்தை நீ முற்றும் நம்பினதால்
உன்னை விடுவித்துக் காத்திடுவார் — அவர்

8. ஆபத்திலும் அவரை
நான் கூப்பிடும் வேளையிலும்
என்னைத் தப்புவித்தே முற்றும் இரட்சிப்பாரே
என் ஆத்தும நேசரவர் — அவர்

பரிசுத்தத்தை நாடுதல்

369

O thou who camest from above (M. H. B. 386)
L. M.

சரணங்கள்

1. அன்பின் அக்கினி மனதில் — கொளுத்த வந்த இயேசுவே
எரியும் சுவாலை என்னில் — பற்றுவிக்க இரங்கும்

2. தேவ மகிமை காண்பிக்க — அது அவியாமல் ஒங்கட்டும்
துதியும் செபமுமாக — அது உம்மிடம் ஏறட்டும்

3. என் செய்கை, வாக்கு, நினைவு — உமக்கென்றே நேருகிறேன்
என்னில் உள்ளசுத்த அன்பு-மென்மேல் எரியட்டும் என்பேன்

4. நம்பிக்கை அன்புமுதலாய் — உமது சித்தம் என்னிலே
மரணமட்டும் நிறைவாய் — செய்யப்படட்டும் இயேசுவே

- சார்ல்ஸ் உவெஸ்லி
ஈ. கூல்

370

பல்லவி

இன்னு மின்னும் தூய்மைசெய் — என்
அண்ணலே அரசே, யேசையா, அண்ணலே அரசே

அனுபல்லவி

ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம், இரட்சகா — இன்

சரணங்கள்

1. வாழும் வழியை வகுத்தாய் இரங்கி
தாழும் பாவியைத் தடுத்தாய் நெருங்கி
சூழும் துன்பம் துடைத்தாய் நெருங்கி
நாளும் அன்பாய்த் துதிப்பேன் விருப்பி — இன்

2. தாழ்விலெனை வந் தெடுத்தாய் அரசே
வாழ்வில் சாந்தி கொடுத்தாய் குருசே
நாளில் பாடி மகிழ்வேன் முரசே
தாளில் பணிந்து தொழுவேன் சிரசே — இன்

—சேவக் ஐ. ரீ. யேசுசகாயகம்

371

O Jesus I have promise (M. H. B. 526)
7, 6, 7, 6 D

சரணங்கள்

1. எப்போதும் இயேசுநாதா - உம்மைப் பின்பற்றுவேன்
என்றே தீர்மானமாக - நான் வாக்குக் கொடுத்தேன்
நீர் என்னைத் தாங்கிக் காப்பீர் - அப்போதே அஞ்சிடேன்
முன் சென்று பாதை காட்டும் - நான் வழி தவறேன்

2. பூலோகம், இன்பம், செல்வம் - வீண் ஆசா பாசத்தால்
என் ஆத்மா மயங்காமல் — தெய்வீக பலத்தால்
நீர் துணைநின்று தாங்கும் - என் அருள் நாயகா
தீங்கணுமாமற் பேணும் - மா வல்ல இரட்சகா

3. ஆங்காரம், சுயசித்தம் - தகாத சிந்தையால்
மா கலக்கம் உண்டாகி - நான் தடுமாறினால்
நீர் பேசும் அருள் நாதா — கொந்தளிப் படங்கும்
உம் நேச சத்தம்கேட்டு - என் ஆவி மகிழும்

4. பின்பற்றினுல் விண்வீட்டில் - பேரின்பம் பெறுவீர்
என்றும் தன்சீஷர் நோக்கி - நீர் வாக்கு அளித்தீர்
அவ்வருள் வாக்கை நம்பி - இவ்வேழை அடியேன்
இதோ பின்செல்வேன் என்று - ஆணைகொடுக்கிறேன்

5. ஓயாமற் பெலன்தாரும் - உம்மடிச் சுவட்டில்
கால்வைத்து நடந்தேகி - யாத்திரை செய்கையில்
நீர் வழிகாட்டி என்னை - கைதாங்கி வருவீர்
அப்பாலே மோட்ச வீட்டில் - பேர்வாழ்வை அருள்வீர்

– ஜே. ஈ. போட்
இந்திய மொழிபெயர்ப்பு

372

சரணங்கள்

1. துள்ளித் துள்ளிப் பாலனே, பாடிப் பாடி ஓடியே,
இயேசு வண்டை சேரலாம், பாலர் நேசர் அவர்தாம்

2. பெத்தலகேமிற் பிறந்தார், பெற்றூர் தந்தைக் கமைந்தார்,
கோபம் வஞ்சம் துர்க்குணம் அவரிடம் இல்லையாம்

3. சிறுபிள்ளை நீயும் வா, நெஞ்சை இயேசுவுக்குத் தா,
அவர் கையில் ஏந்துவார், ஆசீர்வாதந் தருவார்

4. வாரும் சிறுபாலரே, பயமில்லை நேசரே
துன்பம் துக்கம் நீக்குவார், கண்ணீர் முற்றும் துடைப்பார்

– யாழ்ப்பாணப் பாடல்

373

ஆனந்தபைரவி — சாப்புதாளம்

பல்லவி

தேவனே நான் உமதண்டையில்-இன்னும் நெருங்கிச்
சேர்வதே என்ஆவல் பூமியில்

அனுபல்லவி

மாவலிய கோரமாக வன்சிலுவை மீதினில் நான்
கோவே தொங்க நேரிடினும் ஆவலாய் உம்மண்டை சேர்வேன்

சரணங்கள்

1. யாக்கோபைப்போல் போகும்பாதையில் - பொழுதுபட்டு
இராவில் இருள்வந்து மூடிட
தூக்கத்தால் நான் கல்லில் சாய்ந்து தூங்கிஞலும் என்கனவில்
நோக்கியும்மைக் கிட்டிச்சேர்வேன், வாக்கடங்கா நல்லநாதா

2. பரத்துக்கேறும் படிகள் போலவே - என் பாதை தோன்றப்
பண்ணும் ஐயா, என்றன் தேவனே
கிருபையாக நீர் எனக்குத் தருவதெல்லாம் உமதண்டை
அருமையாய் என்னையழைக்கும் அன்பின் தூதராகச் செய்யும்

3. நித்திரையினின்று விழித்துக் - காலை எழுந்து
கர்த்தாவே நான் உம்மைப் போற்றுவேன்
இத்தரையில் உம்தம் வீடாய் என் துயர்க்கல் நாட்டுவேனே
என்தன் துன்பத்தின் வழியாய் இன்னும் உம்மைக்
கிட்டிச் சேர்வேன்

4. ஆனந்தமாம் செட்டை விரித்துப் பரவசமாய்
ஆகாயத்தில் ஏறிப் போயினும்
வானமண்டலங் கடந்து மறந்து மேலே சென்றிடினும்
மகிழ்வுறு காலத்திலும் நான் மருவியும்மைக்
கிட்டிச் சேர்வேன்

வி. சந்தியாகு

374

And can it be that I Should Gain (M. H. B. 371)

8, 8, 8. 8, 8, 8

சரணங்கள்

1. சத்துருவைத் தள்ளவொட்டா – மித்துரு நீயாஞ்ஞ் மேவி
ரத்தம்நின் விலாவினின்று -எத்துணை சொரிந்தாய் நாதா!
எண்ணெண்ணு அன்பு இங்கேகாண் - விண்ணவன் என்பால்
மாண்டானே

2. அமரன் மரித்தல் என்னே! - அளவிலா ஆச்சரியம்
தேம் அருபிகள் தேங்கியே - தேராராம் அன்பின் ஆழத்தை
காருண்யம் கண்ணுக்கெட்டாதால் - யாருமே யறியார்களே

3. தந்தையின் சிம்மாசனமும் - தள்ளி விட்டிங்கு வந்தாயே,
விந்தை அன்பொழி மற்றெலாம் - வெறுத்தாய்
மானிடர்க்காய் நீ,
நின்காதல் என்கொலோ நேசா - என்காதல் உனக்காகட்டே

4. பாசத்தால் பீடிக்கப்பட்டே –பாரிலுழன்றேன் பலநாள்,
தாசன்நின் கடைக்கணிப்பால் - தழுவினேனுன் கரத்தை,
பாவம் நீங்கிக் கட்டறுந்து - பரனே உன்னைப் பற்றினேன்

5. பயமணுகா தென்னையே - பாசமினி யாட்கொள்ளாதே,
சுயநீதியைக் களைந்தே - சூடினேன் தெய்வநீதியை
தேவசந்நிதானம் சேர்ந்து - ஜீவகிரீடம் அணிவேனே

— சால்ஸ் உவெஸ்லி
ஏ. எம். கே. குமாரசுவாமி

375

உசேனி ரூபகதாளம்

பல்லவி

நித்தம் முயல் மனமே! பரி
சுத்த ஜீவியத்தில் மெத்த வளர நீ

சரணங்கள்

1. அத்தன் இயேசுவினில் பத்தியாய் அமர்ந்து
சத்திய வேதத்தால் நித்தம் உன்னைப் போஷி - நித்

2. அல்பகல் இயேசுவோ டதிக நேரத்தை
ஆசையாய்க் கழிநீ! அவரைப் போலாவாய் - நித்

3. தேவன்றன் பிள்ளைகள் யாவரையும் நேசி
ஆவலாய் எளியோர்க் கன்பாலுதவி செய் - நித்

4. இயேசுவே உன்றனை என்றும் நடத்துவார்
இன்ப துன்பத்திலும் அன்பாய் நீ பின்செல்லு -நித்

5. எந்த எண்ணத்தையும் இயேசுவின் கீழ் ஆக்கி
உந்தன் உள்ளத்தில் அமர்ந்திரு சாந்தமாய் - நித்

6. மேவும் அன்பினுக்குள் தேவாவி நடத்த
மேலான வாழ்வுக்குத் தக்கவனுகுவாய் - நித்

— வி. சந்தியாகு

376

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

பாக்கியர் இன்னர் - என்றிறைவன்
பண்புடன் சொன்னார்

அனுபல்லவி

ஆக்கியோன் இயேசுவின் வாக்கியங் கேட்கவே
அனந்தமான சனம் வனந்தனில் நிற்கையில்

சரணங்கள்

1. ஆவிபணிந்தோர். மனத்தாழ்மை யானதணிந்தோர்
பாவிகள் தாமென்று பணிந்து நடப்போர்
தேவனின் ராச்சியம் சேர்வதால் பாக்கியர்

2. துக்கப்படுவோர் பாவத்துக்காய்த் துயரப்படுவோர்,
விக்கினமின்றி எம் தேவன் அருளினால்
மிக்க மெய்யாறுதல் மீட்புறும் பாக்கியர்

3. சாந்த குணத்தோர். சண்டை கோபதாபம் வெறுத்தோர்,
வேந்தனுர் செய்கையுட் சாந்தனையுங் கொள்வோர்
மேதினி வாழ்விலும் விண்ணிலும் பாக்கியர்

4. நீதியின்பேரில் பசிதாகம் நித்தங் கொள்வோரில்,
போதமெய்ப் புத்தியும் பூரண பக்தியும்
காதலின் ஆவி கடாட்சிப்பர் பாக்கியர்

5. இரக்கமுடையோர், பிறர்மீது உருக்கமுடையோர்
நெருக்கப் படுவோர்க்கு நேயமுற்றுதவுவோர்
பெருக்க இரக்கங்கள் பெற்றிடும் பாக்கியர்

6. சுத்த நெஞ்சத்தோர் தேவனருள் சுகிர்த்த சென்மத்தோர்
பக்தியில் வர்த்தித்து நித்தமும் தேவனின்
பரிசுத்த சமூகத்தைச் தரிசிக்கும் பாக்கியர்

7. சமாதானத்தை நடப்பித்து, சல்யம் வாதத்தை
தமதுரை நடக்கையால் தள்ளி ஒழுகுவோர்
எமதேகன் சேயர்கள் என்னும் மெய்ப் பாக்கியர்

8. நற்செய்கையிட்டுப் பகைஞரால் நஷ்டங்கள் பட்டு
துர்ச்செய்கை நீங்கியே துன்பங்கள் படுவோர்
சுகலோகம் சேர்ந்தென்றும் முகியாத பாக்கியர்

-ரி. யோசேப்

377

கமாசு ஆதிதாளம்

பல்லவி

பூரண ரட்சையும் அறிவும் ஞானமும் தா
புதனி இதய வர தா

அனுபல்லவி

ஆரண முறைப்படி அருளிவை நிதமே
அன்பரிதய கமலாலய சதமே, – பூரண

சரணங்கள்

1. அரைகுறைச் சீவியம் அருளவோ ஈசா
அவதரித்தனே நேசா
திரை குறை சிறிதெனும் செகமுறு மயலில்
செற்றிய விடாயென்றன் சிந்தை சொல் செயலில் - பூரண

2. ஆசை யிச்சைக ளெல்லாம் அருங் குருசறைய
அமல உன்னருள் நிறைய
அனுதின மகத்திலே அமர்ந்திடுவாயே
அன்பின் கட்டாலெனை அணைத்திடு நீயே – பூரண

3. உலகமோர் போதுமென்னை அலைத்திடா துய்ய
உனின் பத சேவை செய்ய
நித நிதமெனை யாளும் நிருமல ஆவி
நிறைவுற அருளுவை நித்திய சோதி - பூரண

4. தின முமுன்னருள் நதித்திம்புன லருந்தித்
தெய்வ பக்தியே பொருந்தி
செகதல சாட்சியாய்ச் சீவிக்க அருளைச்
செய்திடு வேன்சேவை மெய்ப்பொருளே, நீ - பூரண

– சேவக். ஐ. ரி. யேசுசகாயம்

378

சூரியகாந்தம் ஏகதாளம்

பல்லவி

மானுனது நீரோடையில் மனமாகவே யோடும்
மாயேசுவிலென் னுத்தும வாஞ்சையது போலும்

சரணங்கள்

1 தேனூர்சொரி ஞானகர தேவே தயை தந்தார்
வானூரிட நீத்தார் புவி வந்தாரருள் தந்தார் – மா

2 சோதிதரு நீதியெனக் காதியருள் செய்தார்;
நீதிமுறை யோதிப்புவி மீதிலருள் பெய்தார்

3. பாவச்சுமை தாங்கப்பெல னேழை யெனக்கில்லை
பார்மேவிய யேசே மிகப்பார்த்தார் மனத்தொல்லை – மா

4. சொந்தப் பெலனற்று நலங்கெட்டு மதியற்றேன்
எந்தை தரு விந்தைக் கதிபெற்றேன் பெலனுற்றேன் – மா

5. மீட்பர் மிகு தீட்பானவன் மேலே தயை தந்தார்
தீட்பானரு மீட்பைப் பெறத் தேவன் புவி வந்தார் – மா

—எஸ். ஐ. கிறிஸ்மஸ்

379

பல்லவி

வாஞ்சையாய் நிற்கிறார், ஆசையாய் தட்டுகிறார்
நேசராம் யேசு நீசராம் எம்மைப் பாசமாய்க் கேட்கிறார்

சரணங்கள்

1, பாவியாகவே வா பாதம் சேர்ந்திட வா
தாவியே உன்னை மாசற்று நீக்க மேசியா உதித்தார்

2. தாகம் தீர்த்திடவே ரோகம் மாற்றிடவே
மாட்சிமைவிட்டு தாழ்ச்சியடைந்து மாந்தரை மீட்டாரே

3, தூயனும் இயேசுவே தாவிதின் ராஜனே
ஜீவனை ஈந்து சாபத்தைப் போக்க பாவிக்காய் மரித்தார்

4. சிலுவை அண்டை வா சீயோனை அடைய
பாவியா முன்னை மீட்டுக்கொள்ளவே பாதையாய் வந்தாரே

380

பல்லவி

என்னை மறக்க அருள்செய் - தேவா
உன்னை நினைக்க அருள்செய், வாழ்வில்

அனுபல்லவி

உன்னுயிரை ஈந்து மன்னுயிரை ரட்சித்த
உன்னதனே உன் உரிமையை நானுணர்ந்தேன் - என்

சரணங்கள்

1. நரிக்குக் குழியுண்டு, குருவிக்குக் கூடுஉண்டு
தரித்துத் தலைசாய்க்கத் தலமுனக் கில்லை என்றாய்;
உரித்தாய் எனை ஆண்டாய், மரித்துயிர்த்த பரனே!
தரியா இச்செல்வ மெல்லாம் வாரி எனக்கேனீந்தாய் – என்

2. தந்தை தாய் சோதரரைச் சொந்த இருப்பிடத்தை,
உந்த னழைப்பால் விட்டுச் செஞ்சிலுவை எடுத்தேன்,
எந்த இடம் சென்றாலும் சொந்தம் பாராட்டுகின்றார்
பந்தமுறுது காத்தாள் செந்தாமரைப் பாதனே ! – என்

சேவக். ஐ. ரி. யேசுசகாயம்

381

காம்போதி — சாபு தாளம்

பல்லவி

ஐயா. உமதுசித்தம் ஆகிடவே வேணும்

அனுபல்லவி

மெய்யாய் எனது சித்தம் வெகுமோசமேகாணும் - ஐயா

சரணங்கள்

1. ஆடுபோல் வழிதப்பி அவனவன் வழியொப்பி
கேடடைந்தோர் பாவத்தைக் கிறிஸ்துவின்மேல் சுமத்தினீர்
- ஐயா

2. ஜீவனே, மரணமோ, செல்வமோ, வறுமையோ
யாவிலெனை நிறுத்த தேவரீர் நினைக்கினும் - ஐயா

3. வசையிசை, பகைநேசம், வாழ்வுயர் அதிமோசம்
பசி, நிருவாணம், நாசம், பாடு. நோய் அடைகினும் - ஐயா

4. என்னிஷ்டம் வாயாததால் எத்தனையுயர் கொண்டேன்,
பொன்னடிக் கீழடங்கிப் புகழுக்கென்று வாழ்வேன் - ஐயா

5. குயவன் கைக் களிமண்ணைப் குருவே யுமக் கமைவேன்
நயமிது வென்றறிந்த ஞானமுள்ள பிதாவே ! - ஐயா

—ஜீ. எஸ். வேதநாயகம்

யாத்திரை, வழிநடத்துதல்

382

சரணங்கள்

1. எனக்காய் ஜீவன் விட்டவரே
என்னோடிருக்க எழுந்தவரே
என்னை என்றும் வழி நடத்துவாரே
என்னைச் சந்திக்க வந்திடுவாரே

பல்லவி

இயேசு போதுமே! போதுமே! போதுமே!
எந்த நாளிலுமே எந்நிலையிலுமே
எந்தன் வாழ்வினிலே இயேசு போதுமே!

2. பிசாசின் சோதனை பெருகிட்டாலும்
சோர்ந்து போகாமல் முன் செல்லவே
உலகமும் மாமிசமும் மயக்கிட்டாலும்
மயங்கிடாமல் முன்னேறவே

3. மனிதன் என்னைக் கைவிட்டாலும்
மாமிசம் அழுகி நாறிட்டாலும்
ஐசுவரியம் யாவும் அழிந்திட்டாலும்
ஆகாதவன் என்று தள்ளிட்டாலும்

383

பல்லவி

நான் செல்லும் பாதை என் நேசர் அறிவாரே
நாசம் அணுகாமற் காப்பாரே

சரணங்கள்

1. மரண பள்ளத் தாக்கிலும் -நான்
ஒரு பொல்லாப்பிற்கும் அஞ்சேன்
கருத்தாய் காத்திட வாக்குத் தவறிடா
ஓர் நல்ல தேவன் உண்டெனக்கு

2. பாடுகள் சகித்த இயேசு - அவர்
நடந்த பாதையிதல்லோ
ஓடியே வீரனும் இயேசுவை நோக்கியே
பாடுவேன் நம்பிக்கையுடனே

3. மண் வாழ்வின் இன்பம் வெறுத்தேன் - அவ்
விண் வாழ்வின் இன்பத்தைக் கண்டேன்
துன்பங்கள் மூலமாய் சென்ற சுத்தருடன்
பொன் நகர் சேர்ந்து நான் வாழ்வேன்

4. ஆவியினால் இடைக்கட்டி - என்னை
ஆனந்தமாய் ஓடச் செய்தார்
ஆவியின் அச்சாரம் புத்திர சுவீகாரம்
ஆறுதலையும் அங்கு பெறுவேன்

384

கண்ணிகள்

1. பரம பிதா நீரெமக்குப் பார்த்திபராயிரும் அதே போதும்
தருமகுணு தயைவடிவே! தரிசனம் தினம் தினம் தந்தாற்
போதும்

2. அரைமனதாயுமைத் தொழுது அப்பாவென்று நாம்
செப்பவில்லை
குறையறவே முழுமன்தாய்க் குடும்பமுழுதுமுமை
நம்பிநேமே

3. நீர் பெருக! நீர் வாழ்க! நீதிபரா நின்நாமம் உயர்க
பாரிலடியார் சிறுக பாடுவோம் ஆடுவோம், தேடுவோமே

4. கள்ளமில்லா உள்ளமுள்ள கனிவுடைய பிள்ளைகட்கு
வள்ளலே நீர் நல்லவராய் வாழ்வுடனுறுதல் நல்கிடுவீர்

—இரத்தினம் பரதேசி

385

Guide me O Thou great Jehovah (M. H. B. 615)
8, 7, 8, 7, 4, 7.

1. பாதை காட்டும், மா யேகோவா பரதேசியான நான்
பலவீனன், நான் அல்லவா; இவ்வுலோகங் காடுதான்
வானுகாரம் தந்து என்னைப் போஷியும்

2. சீவ தண்ணீர் ஊற்றும் ஊற்றை, நீர் திறந்து தாருமே
தீபமேகத் தம்பங் காட்டும், வழியில் நடத்துமே
வல்லமீட்பர் என்னைத் தாங்கும் 'யேசுவே

3. சாவின் அந்தகாரம் வந்து, என்னை மூடும் நேரத்தில்
சாவின் மேலும் வெற்றி தந்து, என்னைச்சேரும் மோட்சத்தில்
கீத வாழ்த்தல் உமக்கென்றும் பாடுவேன்

—உவில்லியம் உவில்லியர்ஸ்
ஈ. கூல்

386

Down in the valley (S. S. R. 529)
P. M.

சரணங்கள்

1. பூவின் நற்கந்தம் வீசும் சோலையாயினும்
நல்ல தண்ணீர் ஓடும் பள்ளத்தாக்கிலேயும்
யேசுநாதர் பின் சென்றேகி மோட்சம் நாடுவேன்
விண்ணில் சூடும் கிரீடம் நோக்கி ஓடுவேன்

பல்லவி

பின்செல்வேனே, மீட்பர் பின் செல்வேனே
எங்கேயும் எப்போதும் பின்னே செல்லுவேன்
பின்செல்வேனே, மீட்பர் பின் செல்வேனே
யேசு காட்டும் பாதை எல்லாம் செல்லுவேன்

2. கார்மேகம் மேலே மூடும் பள்ள மென்றாலும்
காற்று வேகமாக மோதும் இடத்திலும்,
இயேசு பாதை காட்டச் சற்றும் அஞ்சவே மாட்டேன்
ரட்சகர் கை தாங்கத் தைரியம் கொள்ளுவேன்

3. நாள்தோறும், யேசுநாதா, கிட்டிச் சேருவேன்
மேடானாலும் காடானாலும் பின் செல்லுவேன்
மீட்பர் என்னை மோசமின்றிச் சுகமே காப்பார்
விண்ணில் தாசரோடு சேர்த்து வாழ்விப்பார்

யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு

387

Precious Promise God Hath Given (S. S. S. R 543)

சரணங்கள்

1. வல்ல தேவன் கூறுவித்துச் சொல்லும் வாக்கைக் கேளுங்கள்;
உன்றன் மேல் என் கண்ணை வைத்து என்றும் பாதை
காட்டுவேன்

பல்லவி

உன்றன் மேல் என் கண்ணைவைத்து
என்றும் பாதை காட்டுவேன்
இன்ப மோட்சம் சேருமட்டும்
என்றும் பாதை காட்டுவேன்

2. சாத்தான், மாமிசம், லோகத்தாலும் ஆத்மா சோர்ந்து
போவதேன்?
என்றன் ஆவி வாக்கினாலும் என்றும் பாதை காட்டுவேன்

3. துன்பம் துக்கம் நேரிட்டாலும் இன்பமாக மாற்றுவேன்
என்ன சோதனை வந்தாலும், என்றும் பாதை காட்டுவேன்

4. சாவின் பள்ளத்தாக்கிலேயும் சீவசோதி வீசுவேன்
உன்னைச்சேர்த்து விண்ணிலேயும் என்றும் பாதை காட்டுவேன்

யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு

388

Lead Kindly Light (M. H. B. 612)

10, 4, 10, 4. 10, 10

1. விண் ஒளியே! நள்ளிருட்டில் என்னை நடத்துமே
இருள் ஆழம், வீடும் தூரம், என்னை நடத்துமே
ஓர் அடிதான் உம்மிடம் நான் கேட்பேன்;
தூரக்காட்சி காட்டும் என்று சொல்லேன்

2. இவ்விதம் நான் முன் செபிக்கவில்லை; - நல் மீட்பரே!
ஆனால் இப்போ கண்டேன் என் மூடத்தை; - நல் மீட்பரே
ஓர் வீம்பனாய் நடந்தேன்; ஆயினும்
நான் கெடுத்த காலம் எண்ணை திரும்

3. இம்மட்டும் என்னைக் காத்த வண்ணமாய் நடத்துமே
ஆழிகுடா மலைகளின் மேலாய் - நடத்துமே
காலை ஒளி அப்போ வரக்காண்பேன்
விண் தூதரைக் கண்டு மகிழ் கொள்வேன்

ஜே. எச். நியூமன்
- டி. பி. நயில்ஸ்

389

Jesus Saviour Pilot Me (S.S.R.556)

1. இயேசு நாதா காக்கிறீர், இனப்பாறச் செய்கிறீர்;
மோசம் நேரிடாமலும் பாதம் இடராமலும்
என்னைத் தாங்கி நிற்கிறீர் யேசுநாதா காக்கிறீர்

2. வாரிபோன்ற லோகத்தில் யாத்திரையில் போகையில்,
சூறைக்காற்று மோதினும் ஆழி கோஸ்ட மாயினும்
அமைதல் உண்டாக்குவீர் யேசு நாதா காக்கிறீர்

3. சற்றுத் தூரம் செல்லவே மோட்ச கரை தோன்றுமே
துன்பம் நீங்கி வாழுவேன் இன்பம் பெற்றுப் போற்றுவேன்
அது மட்டும் தாங்குவீர் யேசு நாதா காக்கிறீர்

— இந்திய மொழிபெயர்ப்பு

390

Nearer my God To Thee (M. H. B. 468)

6, 4, 6, 4, 6, 6, 4

1. உம்மண்டை தேவனே நான் சேரட்டும்;
சிலுவை சுமந்து நடக்கினும்,
என் ஆவல் என்றுமே உம்மண்டை தேவனே,
உம்மண்டை தேவனே நான் சேர்வதே

2. தாசன் யாக்கோபைப்போல் இராக்காலத்தில்
திக்கற்று கல்லின்மேல் நான் துயில்கையில்
எந்தன் கனவிலே உம்மண்டை தேவனே
உம்மண்டை தேவனே இருப்பேனே

3. நீர் என்னை நடத்தும் பாதை எல்லாம்
விண் எட்டும்ஏணிபோல் விளங்குமாம்
தூதர் அழைப்பாரே உம்மண்டை தேவனே
உம்மண்டை தேவனே நான் சேரவே

4. விழித்து உம்மையே நான் துதிப்பேன்
என் துயர்க் கல்லை உம் வீடாக்குவேன்
என்துன்பத்தாலுமே உம்மண்டை தேவனே
உம்மண்டை தேவனே நான் சேர்வேனே

எஸ். எவ். அடம்ஸ்

இந்திய மொழிபெயர்ப்பு

391

He Leadeth Me O Blessed Thought

(S. S. R. 542) L. M.

சரணங்கள்

1. என் முன்னே மேய்ப்பர் போகிறார்;
தல் மேய்ப்பராகக் காக்கிறார்
ஒர்காலும் என்னைக் கைவிடார்;
நேர் பாதையில் நடத்துவார்

பல்லவி

நடத்துவாரீ நடத்துவார்,
தம் கையாலே நடத்துவார்,
நல் மேய்ப்பர் சத்தம் அறிவேன்,
அன்போடு பின் சென்றேகுவேன்

2. கார்மேகம் வந்து மூடினும்
சீர் ஜோதி தோன்றி வீசினும்
என் வாழ்வு தாழ்வில் நீங்கிடார்,
என்றும் என்னை நடத்துவார்

3. மெய்ப் பாதைகாட்டி பின்செல்வேன்,
தெய்வீக கையால் தாங்குமேன்;
எவ்விக்கினம் வந்தாலும் நீர்
அவ்வேளையில் நடத்துவீர்

4. ஒப்பற்ற உம் காருணியத்தால்
இப்பூமி பாடு தீருங்கால்
நீர் சாவை வெல்லச் செய்குவீர்
பேரன்புக்குள் நடத்துவீர்

— இந்திய மொழிபெயர்ப்பு

சேவை

392

Father Whose Everlasting Love (M. H. B 75)
L. M.

1. அணுதி அன்பன் தேவேநீ -அருமகவை யீந்ததையே
தணுதிபதி தயவின் - தந்தையாளுய் விந்ததையே

2. அளவிறந்த நின்அன்பை - அவதரிக்கச் செய்தாயோ
பழவினைகள் போக்கிட - பார்த்திபன் பலியாகவோ!

3. நல்லோர் தீயோரென்றுன்னுமல் - நரர் குலத்தை
இரட்சித்தாய்
புல்லோர்க்குப் போந்தகிருபை - புத்திரனிட்டார் நிறைவாய்

4. மானிடர் சார்பில் மனுவாய் - மாளும் சுதன் நமோ,
நமோ
தாள் இணையுண்ணுதாருக்கும் - தான்பிணையாளுனே நமோ

5, தேவாதி தேவே யெழுந்து - தேற்றரவாளனுவியால்
மூவா முதலே முன்னவா - முத்திரித்தெம்மைக்காவாயோ

— சால்ஸ் உவெஸ்லி
ஏ, எம். கே. குமாரசுவாமி

393

பல்லவி

அழைக்கிறார் அழைக்கிறார் இதோ
நீயும் வா உந்தன் நேசர்
ஆவலாய் அழைக்கிறார் - இதோ

சரணங்கள்

1. பாவத்தை ஏற்றவர் - பலியாய் மாண்டவர்
கல்வாரியின் மேட்டினில் - கண்கொள்ளாத காட்சியே
கண்டிடும் வேண்டிடும் - பாவப்பாரம் நீங்கிடும் - அழை

2. நோயையும் ஏற்றவர் - பேயையும் வென்றவர்
நேசர் உந்தன் நோய்களை நிச்சயமாய் தீர்த்தாரே
நோயுற்ற உன்னையே நேசமாய் அழைக்கிறார்-அழை

3. துன்பம் சகித்தவர் - துயரடைந்தவர்
இன்னலுற்ற உன்னையே - அண்ணல் யேசழைக்கிறார்
துன்புறும் நெஞ்சமே துரிதமாய் நீ வாராயோ - அழை

4. அந்தக் கேடடைந்தார் - அழகற்றுத் தோன்றினர்
சொந்தமாகச் சேர்த்திட - இந்தப்பாடடைந்தாரே
நிந்திக்கும் உன்னையும் சந்திப்பார் நீ வாராயோ - அழை

5. கல்லறை திறக்க - காவலர் நடுங்க
கஸ்திகளடைந்தாரே - கட்டுக்களறுத்தாரே
உயிர்த்தார், ஜெயித்தார், உண்டுமீட்புனக்குமே - அழை

6. சாந்தசொரூபனே - சத்தியவாசனே
வஞ்சமற்றவாயனே - வந்தணைக்கும் நேயனே
தஞ்சமே தன்னையே தந்துனை அழைக்கிறார் - அழை

394

Jesus Bids us Shine (S, S. R. 1138)

P. M.

1. இயேசு கற்பித்தார் ஒளி வீசவே
சிறு தீபம்போல இருள் நீக்கவே
அந்த காரலோகில் ஒளி வீசுவோம்
அங்கும், இங்கும், எங்கும் பிரகாசிப்போம்.

1. முதல் அவர்க்காய் ஒளி வீசுவோம்
ஒளி மங்கிடாமல் காத்துக் கொள்ளுவோம்
யேசு நோக்கிப்பார்க்க ஒளி வீசுவோம்
அங்கும், இங்கும், எங்கும் பிரகாசிப்போம்.

3. பிறரின் தன்மைக்கும் ஒளி வீசுவோம்
உலகின் மா இருள்நீக்க முயல்வோம்
பாவம், சாபம் யாவும் பறந்தோடிப்போம்
அங்கும், இங்கும், எங்கும் பிரகாசிப்பேமே

—இந்திய மொழிபெயர்ப்பு

395

பல்லவி

இயேசுன்னே அழைக்கிறார் - இன்பசத்தம் கேளாயோ
இன்னமுமே தாமதமேன்? இரட்சண்ய நாளிதுவே

சரணங்கள்

1. கல்வாரி குருசினிலே கள்வரின் மத்தியிலே
குருதி சிந்திக் கிரயமீந்தார்
கர்த்தன் இயேசுந்தனுக்காய் – இயேசுன்னே

2. மாநிலத்தின் இன்பங்கள் மாறிடுமே அழிந்தே
மாய்ந்திடாதே வாஞ்சிப்பாயே
மன்னவன் யேசுவையே – இயேசுன்னே

3. பாவ ஜீவியத்தை நீ பற்றிடுவாயோ இன்னும்
பரிகரிப்பார் பாவத்தையும்
சாபம் மரணத்தையும் - இயேசுன்னே

396

சரணங்கள்

1. உலகோர் உன்னைப் பகைத்தாலும்
உண்மையாய் அன்பு கூருவாயா
உற்றூர் உன்னை வெறுத்தாலும்
உந்தன் சிலுவையைச் சுமப்பாயா

பல்லவி

உனக்காக நான் மரித்தேனே
எனக்காக நீ என்ன செய்தாய்

2. உலக மேன்மை அற்பமென்றும்
உலக ஆஸ்தி குப்பையென்றும்
உள்ளத்தில் நின்று கூறுவாயா
ஊழியம் செய்ய வருவாயா - உனக்காக

3. மேய்ப்பன் இல்லாத ஆடுகள்போல
மேய்கின்றூர் பாவப் புல்வெளியில்
மேய்ப்பன் இயேசுவை அறிந்த நீயும்
மேன்மையை நாடி ஓடுறுயா? - உனக்காக

4. ஐந்து சகோதரர் அழிகிறரே
யாரையாவது அனுப்பீடுமே
யாரை நானும் அனுப்பிடுவேன்
யார்தான் போவார் எனக்காக - உனக்காக

5 ஜீவ அப்பம் யேசுவல்லோ
ஆத்தும பசியைத் தீர்க்குமன்றே
பின்னைகள் அப்பம் கேட்கின்றனர்
ஜீவஅப்பம் கொடுப்பாயா - உனக்காக

397

பல்லவி

ஊழியம் வளர்ந்தோங்கச் செய்யும் தேவ
ஊழியத்தால் டிவி ஈடேறச் செய்யும்

அனுபல்லவி

நாளெல்லாம் உழைத்தும் நற்பலன் காணேம்
நாதனின் வல்லமை தேடாதே போனேம்

சரணங்கள்

1. பணந்தானே வேலைக்கு ஜீவன் - இந்த
பணம் போனாலாண்டவர் பெலன் குன்றிப் போமோ?
குணமான சீஷரைக் கூட்டிரட்சித்தீர்
குருதியுமாவியுந் தனமாக வைத்தீர்

2. உத்தம ஊழியருமை – முற்றும்
உறுதியாய் நம்பிட விதுநல்ல சமயம்
நித்தமுமவர் அப்பம் தப்பாது எனவே
சத்தியன் சொன்ன சொல் தவறியும் போமோ?

3, சம்பள ஊழியரிவர்கள் - எனச்
சாற்றும் தப்பெண்ணத்தைத் தகர்க்க நற்சமயம்
அன்பான தாசரனேகரெழும்ப
அந்தச்சபையினில் ஆவியை ஊற்றும்.

398

தோடி ரூபக தாளம்

கண்ணிகள்

1. எங்கேயாகிலும் – சுவாமி – எங்கேயாகிலும்
அங்கே யேசுவே! - உம்மை – அடியேன் பின்செல்வேன்

2. பங்கம் பாடுகள் – உள்ள - பள்ளத்தாக்கிலும்
பயமில்லாமல் நான் – உம்தம் - பாதம் பின் செல்வேன்

3. வேகுந்தியிலும் மிஞ்சும் - வெள்ளப் பெருக்கிலும்
போகும் போதும் நீர் – அங்கும் – ஏகுவேன் பின்னே

4. பாழ்வனத்திலும் – உம்தன் - பாதை சென்றிலும்
பதைக்காமலே நான் - உம்தன் - பக்கம் பின்செல்வேன்

5. எனக்கு நேசமாய் - உள்ள - எல்லாவற்றையும்
எடுத்திட்டாலுமே - உம்மை – எங்கும் பின்செல்வேன்

6. உம்தன் பாதையில் - மோசம் - ஒன்றும் நேரிடா
மந்தாரம் மப்பும் - உம்மால் - மாறிப்போகுமே.

—வி. சந்தியாகு

399

Must I Go Empty Handed (S. S. R. 789) 8, 7, 8, 7

சரணங்கள்

கரையேறி உமதண்டை நிற்கும்போது ரட்சகா,
உதவாமற் பலனற்று வெட்கப்பட்டுப் போவேனே?

பல்லவி

ஆத்மா ஒன்றும் ரட்சிக்காமல் வெட்கத்தோடே - ஆண்டவா
வெறுங்கையனுக, உம்மைக் கண்டுகொள்ளல் ஆகுமா?

2. ஆத்துமாக்கள் பேரில் வாஞ்சை வைத்திராமற் சோம்பலாய்
காலங்கழித்தோர் அந்நாளில் துக்கிப்பார் நிர்ப்பந்தராய்

3. தேவரீர் கை தாங்க, சற்றும்சாவுக்கஞ்சிக் கலங்கேன்
ஆயினும் நான் பலன்காண உழைக்காமற் போயினேன்

4. வாழ்நாளெல்லாம் வீண்தாளாக சென்றுபோயிற்றே, ஐயோ!
மோசம்போனேன், விட்டநன்மை அழுதாலும் வருமோ?

—யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு

400

பல்லவி

திருக்கரத்தால் தாங்கி என்னை
திருச்சித்தம் போல் நடத்திடுமே
குயவன் கையில் களிமண் நான்
அனுதினமும் வணைந்திடுமே

சரணங்கள்

1. உம்வசனம் தியானிக்கையில்
இதயமதில் ஆறுதலே
காரிருளில் நடக்கையிலே
தீபமாக வழி நடத்தும்- திருக்.....

2. ஆழ் கடலில் அலைகளினூல்
அசையும்போது என் படகில்
ஆத்ம நண்பன் இயேசு நிற்க
சேர்ந்திடுவேன் அவர் சமுகம் – திருக்.....

3. அவர் எனக்காய் ஜீவன் தந்து
அளித்த இந்த மீட்பினையே
கண்களினூல் காண்கிறேனே
இன்பக் கானான் தேசமதை , திருக்.....

401

What Shall We Offer To Our Good Lord
(M. H. B 784) L.M.

1. தேவே, உமது தயைக்காய்
என்ன பதில் செலுத்துவோம்
உம் நாமத்தைப் போற்றி இன்பாய்
உமது மாண்பைக் கூறுவோம்

2. உமதருளை வியந்து
உம்மை நேசிப்போம் மென்மேலும்
திவ்விய ஊற்றைத் திறந்து
நம் ஆன்மாக்களை நிரப்பும்.

3. சகலரும் உம்மைப் போற்றிக்
கை விரித்துத் தொழுமட்டும்
உம் அருட்சக்தியைக் கூறித்
தெரிவிப்போம் எப்பாவிக்கும்.

4. உம்வாக்காம் விதைவளர்ந்து
நாடோறும் பலன் தரட்டும்
உம் சுவீசேஷம் பரந்து
செல்வதாக லோகம் எங்கும்

5. முற்றன்பைப் பெற்று நம் நெஞ்சில்,
உமது மாண்பை உணர்வோம்;
நம் தேவனின் ஆலயத்தில்
தூண்களாய் எப்போதும் நிற்போம்.

—ஏ. ஜி. ஸ்மன்ஜன்பேர்க்

டீ. பி. நயில்ஸ்

402

We Have Heard A Joyful Sound (M. H. B 316)

7, 6. 7, 6, 7, 7. 7, 6.

1. செம்பொருள் நற்செய்திகேள் - இயேசுவே மீட்பராம்
அம்புவியில் அஞ்சல்செய் - இயேசுவே மீட்பராம்,
இன்சொல் எங்கும் கூறுவோம் - அஞ்சலென்றூர்ப்பரிப்போம்
முன்செல் என்றுகற்பித்தார் - இயேசுவே மீட்பராம்.

2. யுத்தகளம் கேட்கலாம் - இயேசுவே மீட்பராம்
அத்தனூர் மரித்ததால் - இயேசுவே மீட்பராம்,
பத்தியோடு பாடுவீர் - சித்தமுவந்தேத்துவீர்
நித்தமும் நீர் போற்றுவீர் – இயேசுவே மீட்பராம்

3. இன்பகோஷிம் கூறுவோம் – இயேசுவே மீட்பராம்
நண்பர் கூடிப்பாடுவோம் - இயேசுவே மீட்பராம்
அன்பின் நாதன் ஆளுவார் - துன்பம் நீக்கித் தாங்குவார்
பொன்பதியைப் போற்றுவோம் - இயேசுவேமீடபராம்.

—பிறிசிலா ஜேன் ஓவன்ஸ்
ஏ. எம். கே. குமாரசுவாமி

403

6, 6, 6, 6, 8, 6

1. நீயே உயிர்பெற – நான் ரத்தம் சிந்தினேன்
நீயே மீட்கப்பட - நான் விலையாகினேன்
என் ஜீவன் நான் தந்தேன், தந்தேன் – நீ என்னத்தைத் தந்தாய்?

2. சதாகால இன்பம் – நீ பெற்று வாழ்ந்திட,
இவ்வுலகின் துன்பம் - வந்தேன் சகித்திட,
அனேக ஆண்டாய் பட்டேன் பாடு – ஓர்நாள் நீ தந்தாயா?

3 மகத்வ மாளிகை – உனக்காய் நான்விட்டேன்
உலகின் வாதையை . உனக்காய்ச் சகித்தேன்
தந்தேனே நான் என்னை, என்னை . நீ கொடுத்தாய் எதை?

4. உன் சீவன் ததிதஞ்செய் – உன்நேச மீட்பர்க்காய்
பூலோக வாழ்வு பொய் – சீவி நித்தியத்திற்காய்
குப்பையாய் உன் எல்லாம் ஈந்து - நீ என்னைப் பின்செல்லு

டி. பி. நயில்ஸ்

404

பல்லவி

பாவி நீ ஓடிவா - அன்பர்
இயேசு அழைக்கிறார்
பாவம் நீங்கிட வா - உந்தன்
பாவம் போக்கிட வா-

சரணங்கள்

1. ஆத்தும தாகம் தீர்க்க
ஆண்டவர் அழைக்கிறார்.
தீராத தாகம் தீர்க்க - நீயும்
நேராக இங்கே வாராய் - பாவி

2. தானே திராட்சைச் செடி
நீங்களே கொடிகள் என்றார்
நானே நல் மேய்ப்பன் – அல்லோ
நீங்கள் என் மந்தை என்றார் - பாவி

3. வெண்ணங்கி நீ தரிக்க
முள்முடி சூட்டினரே
தந்தை தன் அன்பினாலே – உன்னை
பந்தமாய்ப் பாதுகாப்பார் பாவி

405

பல்லவி

விளைந்த பயிரை அறுப்பாரில்லை
விளைவின் நற்பலன் பாடிடுவேன்
அறுவடை மிகுதி ஆளோ இல்லை
அந்தோ மனிதன் அழுகின்றாரே

சரணங்கள்

1. ஆத்தும இரட்சண்யம் அடையாதவர்
ஆயிரம் ஆயிரம் வருகின்றாரே
இரக்கும் வாசலில் நிற்பவர் யார்
தினமும் அவர் குரல் கேட்கலையோ

2. அவர்போல் பேசிட நாவுமில்லை
அவர்போல் அலைந்திடக் கால்கள் இல்லை
என்னிலடங்கா மாந்தர் சத்தம்
உந்தன் செவியினில் தொனிக்கலையோ.

சிங்கப்பூர் பாடல்

406

பல்லவி

அழைக்கிறார் இயேசு – அவரிடம் பேச
அழைத்திடுவார்

சரணங்கள்

1. மந்தையில் சேரா ஆடுகளே
எங்கிலும் கோடி, கோடி உண்டே
சிந்தையில் ஆன்ம தாகம் கொண்டே
தேடி வந்தாரே திருச்சபையில் - அழை

2. காடுகளில் பல நாடுகளில்
எங்கிலும் சிதறுண்டு சாகுவதால்
பாடுபட்டு நரர்க்காகவுமே
காப்பது யார் என் ஆடுகளை - அழை

3. சொல்லப்பட்டிராத இடங்களுண்டு
என்னைக் கொண்டுசெல்ல அங்கு ஆட்களுண்டு
அழைப்புப் பெற்றோர் யாரும் புறப்படுவீர்
இது ஆண்டவர் கட்டளை கீழ்படிவீர் - அழை

—சிங்கப்பூர் பாடல்

407

See How Great A Flame Aspires (M. H. B. 263)
7, 7, 7, 7 D

1. கிருபையின் பொறியால் சுவாலை எழும்பிற்று!
லோகம் இறிஸ்துவின் அன்பால் அனல் பற்றுகின்றது;
அக்கினி போட வந்தார் இலர் நெஞ்சில் மூண்டது
ஆ! எப்போ மூளச்செய்வார் யாவரிலும் தம் அன்பு?

2. சுவிசேஷம் ஆதியில் கொஞ்சமாய்த் தோன்றினது!
இப்போதே விஸ்தாரத்தில் ஓடி வெல்லுகின்றது.
பாவத்தின் அரண்களை முற்றுய் இடிக்கின்றது
நரக வாயில்களை ஆட்டி அசைக்கின்றது.

3. இதைப்பார்த்து, இயேசுவை மகிழ்ச்சியாய்த் தொழுங்கள்;
அவர் அருள்வார்த்தையை தந்தார்என்று வாழ்த்துங்கள்;
லோகத்தின் சிருட்டிகர், தம் வல்லமை காட்டுவார்;
இயேசுவே எங்கள் மீட்பர், இயேசுவே செயங்கொள்வார்

4. மேகம் எழும்புகையில் கைபோற் சிறிதானது;
இப்போ நீண்டவானத்தில் எங்கும் பரக்கின்றது;
பெருமழை பூமியில் கர்த்தர் வருஷிக்கிறார்;
நிறைவாய்ச் சீக்கிரத்தில் அன்பின் ஆவி ஊற்றுவார்.

— சார்ல்ஸ் உவெஸ்லி
ஈ. கூல்

408

Pass me not O Gentle Saviour (M, H· B. 335)
8, 5

சரணங்கள்

1. சாந்த யேசே, கேளும் வேண்டல் —தள்ளாதேழையை
மற்றோரை அழைத்தீர்; என்மேல் — காட்டும் உம்தயை

பல்லவி

யேசே, யேசே
கேளும் ஏழையை
மற்றோரை அழைத்தீர், என்மேல்
காட்டும் உம்தயை

2. உம் கிருபாசனம் சேர்கையில் — ஆறுதல் தாரும்
நைந்த நெஞ்சோடு கேட்கையில் — விசுவாசம் தாரும்

3. உம் புண்ணியம் நம்பிச்சேர்வேன் — உம் தயைதேடி
என் காயம் நோவுமாற்றுவீர் — கிருபையாற்பேணி

4. என் ஆறுதலின் ஊற்றுநீர்தாம் — என்றன் சிவனே
பூமியில் என்துணை நீர்தாம் — விண்ணிலும் நீரே.

எவ். ஜே. அல்ஸ்ரீன்
டீ. பி. நயில்ஸ்

மறுமை

அநித்திய வாழ்வு, மரணம்

409

பல்லவி

ஆனந்தமாய் இன்பக் கானான் ஏகிடுவேன்
தூய பிதாவின் முகம் தரிசிப்பேன்

அனுபல்லவி

நாளுக்கு நாள் அற்புதமாய் என்னைத் தாங்கிடும்
நாதன் இயேசு என்னை டிருப்பார் -ஆனந்

சரணங்கள்

1. சேற்றினின் றென்னைத் தூக்கி எடுத்து
மாற்றி உள்ளம் புதிதாக்கினாரே
கல்லான என் உள்ளம் உருக்கின கல்வாரியை
கண்டு நன்றியுடன் பாடிடுவேன் - ஆனந்

2. கர்த்தரின் சித்தம் செய்திட நித்தம்
தத்தம் செய்தே என்னை அர்ப்பணித்தேன்
இயேசு அல்லால் ஆசை இப்பூவினில் வேறே இல்லை
என்றும் எனக்கவர் ஆதரவே - ஆனந்

3. உம்மைப் பின்சென்று ஊழியம் செய்து
உம்பாதம் சேர வாஞ்சிக்கிறேன்
தாரும் தேவா ஏழைக்கும் மாறுத உம்கிருபை
கண்பாரும் என்றும் நான் உம் அடிமை - ஆனந்

4. தேற்றிடுதே உம் வாக்குகள் என்னை
ஆற்றிடுதே உன்தன் சமூகமே
பெலத்தின்மேல் பெலனடைந்து நான் சேருவேன்
பேரின்ப சீயோனில் வாழ்ந்திடுவேன் -ஆனந்

410

Safe In The Arms Of Jesus (S. S. R 57)

7, 6

சரணங்கள்

1. இயேசுவின் கரத்திலே, திங்கற்றுச் சீவிப்பேன்;
மா நேசரின் மறைவில், இன்பாய் ஆறிக்கொள்வேன்;
விண்தூதர் பாடுங்கீதம், ஓசையாய் கேட்குமே,
வான்வெளிக் கூடாய்வந்து காதில் தொனிக்குமே

பல்லவி

இயேசுவின் கரத்திலே, தீங்கற்றுச் சீவிப்பேன்;
மா நேசரின் மறைவில், இன்பாய் ஆறிக்கொள்வேன்;

2. இயேசுவின் கரத்திலே நோவின்றித் தங்குவேன்;
சோதனைக்கு நீங்கலாய், சீர்பெற்று வாழுவேன்;
வாதையால் வருந்தாமல் பூரிப்பேன் எப்போதும்
என் துன்பம் துக்கம் யாவும் சிக்கிரத்தில் நீங்கும்

3. இயேசுவே என் ரட்சகர், இயேசுவே என் தஞ்சம்
நீடும் என் கன்மலையின்மேல், நிற்குமே என்நெஞ்சம்;
என் இருள் நீங்குமட்டும், அங்கே நான் தரிப்பேன்,
வான்கரை மேல் வைகறை தோன்றுமட்டும் காப்பேன்

- டீ. பி. நயில்ஸ்

411

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

உச்சித மோட்ச பட்டணம் போக
ஓடி நடப்போமே; - அங்கே
உன்னத யேசு மன்னவருண்டு, ஓயா இன்பமுண்டு

சரணங்கள்

1. சித்திரச் சீயோன் பெற்றிடச் செல்லும்
சேனையின் கூட்டமதாய், - எங்கள்
சீவனின் அதிபர் இயேசு நம்மகிபர்
சீயோன் பதி மனுவேல் - உச்சித

2. அன்பினுல் அழைப்பார், ஆறுதல் சொல்வார்
அதிபதி இயேசுதுரை; - அங்கே
இன்பங்களுண்டு; இயேசுவின் சமுகம்
என்றென்றும் ஆறுதலே - உச்சித

3. கீதங்களோடு இயேசுவைப் போற்றிக்
கெம்பீரமாய் நடப்போம்; அங்கே
இளர் ஒளியுள்ள பட்டண ராசன்
கீதங்கள் நாம் அறைவோம் - உச்சித

எஸ். ஐ. கிறிஸ்மஸ்

412

பல்லவி

எனக்கும் ஒருநாள் வரும் - அந்த
நாளினில் நீங்கள் அழவேண்டும்
கழுகுகள் போலவே சிறகடித்து நான்
தொடங்குவேன் ஒரு புதுப்பயணம்

சரணங்கள்

1. போகப்போக சந்தோஷம் மேலே காண்பது யாவும் சிங்காரம்
மேலே ஏறஏற இன்பமதாம் என்றும் விபரிக்க முடியா
அலங்காரம்

2. மாளிகையுண்டு ராஜாவாய் என் ஆண்டவர் இயேசு
வீற்றிருப்பார்
தன் கரத்தை நீட்டி அன்பாக என்னை அருகில்
வரும்படி அழைத்திடுவார்

3. அங்கே வறுமை இல்லை; பகையில்லை; வஞ்சம் சூதுகள்
வாதுகள் ஏதுமில்லை
அங்கே உள்ளவர் மானிட தெய்வங்கள் அங்கு
பாய்ந்து ஓடுவது ஜீவநதி

4. என் இயேசுவின் மார்பினில் வினையாடி அவர் மடியினில்
நானொரு சிசுவாகி
இந்த உலகத்தின் வேதனை வினையெல்லாம் ஒரு கனவென
மதித்து நான் மகிழ்வேன்

5. மாளிகை எல்லாம் அன்புமணம் ஒரு சிலுவையின்
நிழலில் கொண்டாட்டம்
அந்த அன்புக் கரங்களில் பிடிபட்டேன் இனி துன்பம்
புவியில் எனக்கேது?

கே. எஸ். அருள்ராஜா

413

There is a Land That's Fairer (S. S. S. 964)
9, S

சரணங்கள்

1. சோதி தோன்றும் ஓர் தேசமுண்டு
விசுவாசக் கண்ணால் காண்கிறோம்,
நம் பிதா அழைக்கும் போழுது
நாம் அங்கே வசிக்கச் செல்லுவோம்

பல்லவி

இன்பராய் ..... ஈற்றிலே .....
மோட்ச கரையில் நாம் சந்திப்போம்
இன்பராய் ..... ஈறறிலே
மோட்ச கரையில் நாம் சந்திப்போம்

2. அந்த வான் கரையில் நாம் நின்று
விண்ணோர் கீதங்களைப் பாடுவோம்,
துக்கம் யாதும் அற்று மகிழ்ந்து
சுத்தரின் ஆறுதல் அடைவோம்

3. நம்பிதாவின் அன்பை நினைந்து,
அவரில் மகிழ்ந்து பூரிப்போம்
மீட்பின் நன்மைகளை உணர்ந்து
அவரை வணங்கித் துதிப்போம்

4. அந்த மோட்சகரை அடைந்து,
வான் சேனையுடன் நாம் களிப்போம்;
நம் தொல்லை யாத்திரை முடித்து,
விண் கிரீடத்தை நாம் தரிப்போம்;

5. சாவற்றோர் பூரிக்கும் தேசத்தில்
சந்திப்போம், பாடுவோம், ஆடுவோம்;
துக்கம் நோவொழிந்த வாசத்தில்
நேசமாய் நாம் இளைப்பாறுவோம்

6. அங்கே நம் இரட்சகர் என்றென்றும்
ஆளுகை செய்து வீற்றிருப்பார்;
துக்கம், நோ, சாவுகள் நீங்கிடும்
தேவன் நம் கண்ணீரைத் துடைப்பார்

7. தூதர் சூழ்ந்து நின்று பாடுவார்
கேட்டு நாம் யாவரும் மகிழ்வோம்;
பக்தர் அங்கே முடி சூடுவார்
ஓர் முடி அங்குண்டு எனக்கும்

8. என் உற்றோர் போய்விட்டார் முன் அங்கே,
ஆயின் நான் மீளவும் சந்திப்பேன்;
அவர் கூட்டத்தில் நான் விண்ணிலே,
ஓய்வற்ற பேரின்பம் கொள்ளுவேன்

9. ஏழைக்கும் மாளிகை இங்குண்டு
என்று, என் மீட்பர் அழைக்கிறார்;
மாந்தர் யாவர்க்கும் இடமுண்டு,
எல்லோரும் வாருங்கள் என்கிறார்

— டீ. பி. நயில்ஸ்

414

Life at Best is Very Brief (S. S. R. 437)
P. H.

சரணங்கள்

1. நம் ஆயுள் பறந்தோடும், தன் முடிவையே நாடும்
அரிக் கட்டைபோல் வாடும்; எத்தனி!
நாட்கள் விரைந்து செல்லும், தேவ வெல்லும்
விக்கினம் நம்மைக் கொல்லும்; எத்தனி!

பல்லவி

எத்தனி.....எத்தனி.....!
இயேசுவின் அழைப்பை எண்ணி, எத்தனி!
நேசித்தால் நீ பாவத்தை, இழந்து விண்வாசத்தை
காண்பாய் வந்த மோசத்தை; எத்தனி!

2. வாசமலர் வதங்கும் பால தோற்றம் ஒடுங்கும்,
நற்தருணம் தடங்கும்; எத்தனி!
மீட்பு வரும் வேளையில், நீ நில்லாது தீமையில்,
பாவியே வா பாதையில் எத்தனி!

3. காலம் போகுதே நிதம், சாவு கிட்டுதே நிசம்
ஓடு இயேசுவின் வசம்; எத்தனி!
பாவி நின் சீர்கேட்டைப் பார், தேவன் உன் திங்கை
காண்பார்
ஏற்ற தண்டம் விதிப்பார், எத்தனி!

4. கேள் கத்தரின் அழைப்பை, பெற்றுக்கொள் உன் ரட்சிப்பை
காண்பாய் மீட்பின் பலிப்பை; எத்தனி!
வா விண்ணெளி அண்டைக்கு, வா இயேசுவின் தன்மைக்கு
வா விரைவாய் இன்றைக்கு, எத்தனி!

— டீ. பி. நயில்ஸ்

415

Days and Moments Quickly Flying (S. S, R. 1046

8, 7, 8, 7

சரணங்கள்

1. நம் ஆயுள் நாட்கள் விரைவாய் —ஓர் கதைபோல் நீங்குமே;
அப்போ நம் தேகங்கள் வேரூய்—கல்லறையில் ஆறுமே

2. இயேசுவே, மேன்மையாய் நம்மைப்—படைத்துக் காத்து
வந்தீர்
நம் வாழ்நாள் ஓடும் விரைவைப்—போதித்திடும் தேவரீர்!

3. நம் ஆவி மூச்சாய்ப் பறந்து—தேவன் அண்டைசெல்லுமே;
இம்முடிவை நாம் உணர்ந்து—மீட்பைத் தேடவேண்டுமே

4. இயேசுவே தெய்வ மீட்பரே, பாவத்தில் மரித்தோரை
நேசமாய் எழுப்பி, இன்றே தேடப்பண்ணும் மன்னிப்பை

5. யாவரும் கடைசிநாளில் தீர்ப்படைய நிற்போமே;
அப்போர் நும் வலப்பக்கத்தில் நம்மை வைத்துக் கொள்ளுமே

6. காலம்போக, சாவும்கிட்டும்; தேவே நம்மை ஈறுமட்டும்
பேணி, தேற்றி நம் சாவிலே, சேர்த்துக் கொள்ளும்
மோட்ச வீட்டிலே — ஆமென்

— டீ. பி. நயில்ஸ்

நித்திய வாழ்வு, மோட்சம்

416

தோடி — ரூபகதாளம்

பல்லவி

ஆனந்தமே பரமானந்தமே – இயேசு
அண்ணலே அண்டினோர்க் கானந்தமே

சரணங்கள்

1. இந்தப்புவி ஒரு சொந்தமல்ல என்று
இயேசு ஏன் நேசர் மொழிந்தனரே;
இக்கட்டுத் துன்பமும் இயேசுவின் தொண்டர்க்கு
இங்கேயே பாங்காய்க் கிடைத்திடினும்

2. கர்த்தாவே நீர் என்தன் காருண்ய கோட்டையே
காரணமின்றிக் கலங்கேனே யான்;
விசுவாசப் பேழையில் மேலோகம் வந்திட
மேவியே சுக்கான் பிடித்திடுமே

3. என்னுள்ளமே உன்னில் சஞ்சலம் ஏன் வீணாய்?
கண்ணீரின் பள்ளத்தாக்கல்லோ இது!
சீயோன் நகரத்தில் சீக்கிரம் சென்றுநாம்
ஜெயகீதம் பாடி மகிழ்ந்திடலாம்

4. கூடார வாசிகளாகும் நமக் கிங்கு
வீடென்றும் நாடென்றும் சொல்லலாமோ?
கைவேலை யல்லாத வீடொன்றை மேலேதான்
செய்வேன் எனச் சொல்லிப் போகலியோ?

5. துன்பங்கள் தொல்லை இடுக்கண் இடர் இவை
தொண்டர் எமை அண்டி வந்திடினும்,
சொல்லிமுடியாத ஆறுதல் கிருபையை
துன்பத்தி னூடே அனுப்பிடுவார்

6. இயேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன்
எழை வெகுவாய்க் கலங்குறேனே;
என் நேசர் தன்முக சோதியே அல்லாமல்
இன்பம்தரும் பொருள் ஏதுமில்லை

-வீ. எஸ். சகாயம்

417

Peace, Perfect Peace (M. H. B. 501)

10, 16

சரணங்கள்

1. ஆற்றி தோன்றும் இப்பாவப் பூமியில்
இயேசுவில் நம்பும் பக்தரின் நெஞ்சில்,

2. ஆற்றி தோன்றும், வந்தும் லோகத் தொல்லை,
நாம் பற்றிக்கொண்டால் இயேசுவின் சொல்லை,

3. ஆற்றி தோன்றும், துக்கம் மோதிநின்றும்,
இயேசுவின் மார்பு ஒதுக்கம் என்றும்,

4. ஆற்றி தோன்றும், சாவு வரும் வேளை,
இயேசு தாம் ஒடித்தார் சாவின் கூரை,

5. ஆற்றி தோன்றும் வரும் நாளுக்காக,
இயேசு வழிகாட்டுவார் அன்பாக,

6. ஆற்றி தோன்றும், நம்நண்பர் நிமித்தம்,
இயேசுவின் அன்பில் வாழுவார் நிமித்தம்,

7. ஆம் விரைவில் நம் தொல்லைகள் நீங்கும்,
வானில் இயேசுதரும் ஆற்றி ஓங்கும்.

— டீ. பி. நயில்ஸ்

418

சரணங்கள்

Jerusalem My Happy Home

S. S. 129

1. எருசலேம் என் ஆலயம்'
ஆசித்த வீடதே
நான் அதைக்கண்டு பாக்கியம்
அடைய வேண்டுமே

2. பொற்றளம் போட்ட வீதியில்
எப்போது லாவுவேன் ?
பளிங்காய்த் தோன்றும் ஸ்தலத்தில்
எப்போது பணிவேன் ?

3. எந்நாளும் கூட்டம் கூட்டமாய்
நிற்கும் அம் மோட்சத்தார்
கர்த்தாவைப் போற்றிக் களிப்பார்
ஓய்வின்றிப் பாடுவார்

4. நானும் அங்குள்ள கூட்டத்தில்
சேர்ந்து தும்மைக் காணவே
வாஞ்சித்து, லோக துன்பத்தில்
களிப்பேன், இயேசுவே

5. எருசலேம் என் ஆலயம்,
நான் உன்னில் வாழுவேன்;
என் ஆவல், என் அடைக்கலம்,
எப்போது சேருவேன்?

419

For Ever With The Lord (M. H. B. 658)

D. S. M.

சரணங்கள்

1. என்றும் கர்த்தரோடே சொல்வோம் ஆமென் என்று.
சாவை நீக்கும் சொல் அதுவே சாவாமையின் வாக்கு
இங்கே தேகத்தோடு சுற்றித் திரிகிறேன்!
இக்கூடாரம் போர்த்துக்கொண்டு வீட்டைக் கிட்டுகிறேன்

2. தந்தையின் விண்மனை என் ஆன்மாவின் வீடாம்,
விசுவாசம் எனும் பார்வை பொன்வாசல் காணும்மாம்
சோருமே என்மனம் சேர நேச தேசம்,
அது சுத்தர் சுதந்திரம், மேலாம் எருசலேம்

3. ''என்றும் கர்த்தரோடே'' என்னும் வாக்குத்தத்தம்
இப்போ ஈந்திடும் பிதாவே கொண்டு திருச்சித்தம்
என்னைக் கிட்டிநில்லும் அப்போ விழமாட்டேன்,
என்னை நல்நிலையில் தாங்கும் அப்போ செயங்கொள்வேன்

4. சாவின் கடைசிமூச்சு திரையைக் கிழிக்கும்,
சாவால் நான் சாவைக்கடந்து, சீவிப்பேன் என்றென்றும்
முற்றறிவு கொள்வேன், போற்றி என்றென்றுமே
சிங்காசன முன்இருப்பேன் என்றும் கர்த்தரோடே

—உவில்லியம் சாட்டர் பிகொத்

ஜோன கில்னர்

420

பல்லவி

சீயோன் தேசமதில் சேர்ந்தென்றும்
அன்பருடன் வாழ்வேன்
ஜெயகீதம் பேரின்பம் துதிபாடி மகிழுவேன்

சரணங்கள்

1. நகரத்தின் வீதிகள் பொன்னுக மின்னுதே
இராப்பகல் இல்லை – என்
இரட்சகர் வெளிச்சமே! —சீயோன்

2. என் கண்ணீர் யாவையும் தம் கரத்தால் துடைப்பாரே
சஞ்சலம் இல்லையே—என்
நேசரில் மகிழுவேன் —சீயோன்

3. மண்சாயல் மாறியே விண்சாயல் அணிந்துமே
மறுரூபம் அடைவேனே —நான்
இயேசுபோல் மாறுவேன் —சீயோன்

4. நிதமும் என் நேசரை துதிப்பாடிப் போற்றுவேன்
மகிபனின் தேசத்தில் —நான்
மகிமையாய் வாழுவேன் —சீயோன்

421

பல்லவி

தெரியுது தெரியுது எந்தன் வீடு தெரியுது
பயணமே முடியுது இலக்கை நெருங்க விரையுது

1. நான் மோட்ச பிரயாணி
என் தோளிற் பாரங்கள்
தயங்கி நடந்து அலைந்து வந்தேன்
யாத்திரையின் பாதை —தெரியுது

சரணங்கள்

2. பாரச் சுமையிதே
நீய வாழ்வின் பயனிதே
அமைதியிழந்து அலைந்து வந்தேன்
நிம்மதியை நாடி —தெரியுது

3. கண்கள் காணுது
பரலோக காட்சியை
உடல் பூமிமீது தவண்டு உருகி
சாக்குழியை நெருங்க —தெரியுது

4. சிலுவை தெரியுது
பரலோக வாசலில்
ஜோதியாக வீசும் குறியை
நோக்கி நடந்து வந்தேன் —தெரியுது

5. ராஜ ராஜனுய்
இயேசு தந்த காட்சியில்
பாரம் அறுந்து குழியில் பிரள
நான் அடைந்தேன் அவரை —தெரியுது

—கே. எஸ். அருள்ராஜா

422

காப்பி ஆதிதாளம்

பல்லவி

நித்தியா னந்தத்தை நாடு — பரன்
நின்மல சுகந்தேடு.— ஓ! மனமே!

அனுபல்லவி

சத்திய மார்க்கந் தனிலே கூடு
சற்சனர் சங்கத்தி லேடுற வாடு —நித்

சரணங்கள்

1. இந்திர சாலம் உலக வைபோகம்
இன்றைக் கிருப்பதுவோ சந்தேகம்
அந்தர மின்னல்போல் அழியுமித் திரேகம்
ஐயோ! அதனுடன் உனக்கென்ன சிநேகம்? —நித்

2. தனதா னியமுத லான சம்பத்து
சாஸ்வதமோ அதற் காயிரந் தந்து
தினமுங் கவலையை விளைத்திடும் வித்து
சீச்சீ அதனை விரும்பல் விபத்து —நித்

3. காண்ப தெல்லாம் நிலையானது அநித்தியம்
காய மிறந்திட வேணும் அகத்தியம்
வீண்பொருள் மீதுனக் கென்ன பயித்தியம்
வேதா கமங்கள் சொல்வதே சத்தியம் —நித்

— எஸ். வேதநாயகம்பிள்ளை

423

கன்னடா ஆதிதாளம்

பல்லவி

வெள்ளை யங்கிகள் தரித்த
விமல முத்தர் இவர் யார்?

அனுபல்லவி

கள்ளமில்லா ஆட்டுக் குட்டி
கருணை வள்ளல் முன் நிற்கும் —வெள்ளை

சரணங்கள்

1. நாளு திக்கிலு மிருந்து
நயந்து வந்தவர் இவர்;
கோணது துன்பக் கடலில்
குளித்து வந்தவர் இவர் —வெள்ளை

2. குருத் தோலைகள் பிடித்துக்
கொற்றவனைச் சூழ நிற்கும்
பெருத்த கூட்டத்தார் இவர்;
பேரன்பின் அடியார்களாம் —வெள்ளை

3. ஆட்டுக் குட்டியாலே மீட்பை
அடைந்த உத்தமர் இவர்;
தேட்ட முடனே நாயனை
சேவித்து நிற்கின்றார் நித்தம் —வெள்ளை

4. பசி தாகம் யாவுமற்றார்
பாக்கிய நிலைமை பெற்றார்;
உஷித மோட்சத்தில் கண்ணீர்
உகுக்கா வாழ்வினை யுற்றார் —வெள்ளை

— ஸ்தேவான் ஐயர்

நியாயத்தீர்ப்பு

424

We are out on the ocean (S. S. R. 507)
8, 7

சரணங்கள்

1. ஆழிமேற் கப்பலோடுகிறோம், மோட்சதுறைக்கு நேராய்;
ஆழிமேற் கப்பலோடுகிறோம், வீட்டிற் சேர்வோம் விரைவாய்

பல்லவி

சூறைகள் எல்லாங் கடப்போம்,
வான்கரை தோன்றும் சிறப்பாய்;
ஆழிமேற் கப்பலோடுகிறோம்,
வீட்டிற் சேர்வோம் விரைவாய்;
ஆழிமேற் கப்பலோடுகிறோம்
வீட்டிற் சேர்வோம் விரைவாய்

2. கோடிபேர் யாத்திரை முடித்து, பொற்கரைமேல் நிற்கிறார்;
பின்னும் கோடிஜனம் மகிழ்ந்து, துறைநோக்கிப் போகிறார்

3. கூறைப் பாய்களிற் கோடைக்காற்று வீசும்படி தூக்குவோம்;
நாம் அருள் மீட்பைப் பெற்றோமென்று பாடிக்கொண்டு
செல்லுவோம்

4. பாரில் நங்கூரம் போட்டபின்பு கரையேறிப் பூரிப்போம்;
கூடிநின்று சந்திதிமுன்பு, மீட்பரை நாம் போற்றுவோம்

—டீ. பி. நயில்ஸ்

425

முகாரி — சாப்புதாளம்

பல்லவி

இதோ, கிறிஸ்து மகாராசா வருகிறார்
எச்சரிப்பாயிருங்கள்

சரணங்கள்

1. இந்தநாள் எந்தநாள் என்று முணராத
இருமன முள்ளவர்கள் — நமது
யேசுவின் வருகைக்கு எதிர்நிற்கக் கூடுமோ?
என் செய்வீர் மானிடரே! —இதோ

2. அடைக்கலப் பட்டணங் கன்மலைக் கோட்டையுங்
கேடயமு மவரே! — அந்த
அடைக்கலப் பட்டணக் கன்மலைக் கோட்டையில்
அடைகுவீர் மானிடரே —இதோ

– யாழ்ப்பாணப் பாடல்

426

Earthly Riches I heed not (S. S. R. 285)
P. M.

பல்லவி

மோட்ச மாளிகையில் பங்குண்டா வெனக்கும்?
ஜீவபுஸ்தகத்திலே தோன்றுதா என்பேரும்?

சரணங்கள்

1. தேவனேதாழ் செல்வத்தை நான் மதிக்கமாட்டேன்;
நாடி என்றும் மோட்சத்தை, ஊக்கமாய்ச் சேவிப்பேன்;
யேசுவே, அன்பாய்ச் சொல்லும் பங்குண்டோ வெனக்கும்?
ஜீவ புஸ்தகத்திலே தோன்றுதா என்பேரும்?

2. பார் மணல் போல் என்பாவம் பாரவேதனையாம்;
ஆயின் யாக செந்நீரால் நல் நிவிர்த்தி உண்டாம்
உம் ரத்தம் நம் பாவத்தை நீக்குமென்றீர் முற்றும்:
ஆகவே மீட்பின் பேறுய்த் தோன்றுதா என்பேரும்?

3; தூயர் விண் மாளிகையில் நித்த சோதி காண்பார்
வெண் வஸ்திரம் தரித்து, ஆனந்தம் கொள்ளுவார்;
மீட்பரின் மாண்பைக் கூறி, போற்றுவார் எல்லோரும்
நான் அங்கே பங்கடைய தோன்றுதா என்பேரும்?

டீ. பி. நயில்ஸ

427

For all the Saints (M. H. B. 832)

10, 10, 10, 4

1. விசுவாசத்தோடு சாட்சி பகர்ந்தே;
தம் வேலை முடித்தோர் நிமித்தமே
கர்த்தாவே உம்மைத் துதிசெய்வோமே;
அல்லேலூயா! அல்லேலூயா!

2. நீர் அவர் வல்ல கோட்டை ஆயினீர்;
வெம் போரில் வெற்றி தந்து வாழ்வித்தீர்;
காரிருளில் மாசோதி வீசினீர்;
அல்லேலூயா; அல்லேலூயா!

3. முந்நாளில் பக்தர் நற் போராடியே
வென்றுற்போல் நாங்கள் வீரராகவே
பொற்கீரீடம் பெற்றுக் கொள்வோமாகவே;
அல்லேலூயா! அல்லேலூயா!

4. கடூரமான யுத்த கோஷ்டத்தில்,
கெம்பீரகீதம் விண்ணில் கேட்கையில்,
அஞ்சாமல் வீரங் கொள்வோம் நெஞ்சத்தில்;
அல்லேலூயா! அல்லேலூயா!

5. செவ்வானம் மேற்கில் தோன்றி ஒளிதரும்
மெய் வீரருக்கு ஓய்வு வாய்த்திடும்,
சீர்ப்பரதீசில் பாக்யம் அமையும்;
அல்லேலூயா! அல்லேலூயா!

6. அப்பாலே நித்ய பகல் விடியும்
வென்றோர்கள் மாட்சியாய் எழும்பவும்
கிறிஸ்துவின் ராஜரீகம் தொடங்கும்;
அல்லேலூயா! அல்லேலூயா!

—வி. வோ. ஹௌள
இந்திய மொழிபெயர்ப்பு

428

1. யாரிவர்கள் பாடுவோரே
யாருமறியாப் புதுப்பாட்டிஸை
ஆசை யேசுவின் பின் சென்றோரிவரே
அனுதினம் பாடு சகித்தோர்

பல்லவி

அல்லேலூயா சீயோனிலே
ஆனந்தமாய் பாடுகிறார்
அன்பினால் ஜீவனை விட்டதனாலே
அன்பரின் திருமுகம் காண்பார்

2. மாந்தரினின்றும் மானிலம் நின்றும்
மாண்புறு முதற்பலன் மீட்படைந்தோர்
காசினி மீதில் கரைதிரை இல்லாத
கற்புள்ள கன்னியரிவரே

3. சாந்தமாய் ஆட்டுக் குட்டிபோல் சித்தம்
தாமே வகுத்த சாட்சியுள்ளோர்
தேவசிங்காசனம் முன்னிற்கும் இவர்கள்
தேசுயர் தேவ ஊழியரே

தினங்களும், தருணங்களும்

ஆலயப் பிரதிஷ்டை, ஆண்டுவிழா

429

ஆனந்தபைரவி — ஆதிதாளம்

பல்லவி

ஆலயம் போய்த் தொழவா ருமென்ற தொனி
ஆனந்தப் பரவசம் அருளுதாத்துமந்தனில்

அனுபல்லவி

ஆலயந் தொழுவது சாலவும் நன்றெனை
ஆண்டேருரை நெறி சான்றவர்க் கானதே
ஆவலாயதி காலையும் பகல் மாலையுந் திருநாளிலும் பரன்
—ஆலயம்

சரணங்கள்

1. பரம சன்னிதியென்றும் பரிசுத்த தூதர்கள்
பணிந்து புகழ்ந்து கீதம் பாடியஞ்சலி செய்யும்
முறையோதுந் திருமறை கரமேந்தி தகுமோ
முழு மனத்தோடு கொண்டு உளம் இதழ் துதிவிண்டு
மோட்ச மாநகர் காட்சியால் இக சாட்சியாம் பரன்
மாட்சிகாணவே—ஆலயம்

2. பூர்வமுதல் தொழும்பர் போந்தாலயந் தொழுதார்;
புனித சுதனும் நமக்கினு முன்மாதிரி தந்தார்;
ஆர்வமுளாரவரே ஆராருடனுஞ் சென்றூர்;
ஐயனின் மகிமையே அங்கும் விளங்க நின்றூர்.
ஆதலாலினி யாரிலுங் குறை யோதிடாதென துள்ளமே
இன — ஆலயம்

3. தனித்தியா னத்துடன் சமூசார ஜெபம் நன்று;
சபையாரோ டார்ச்சனை தருதல் மிகவும் நன்று;
இனிதே சத்திய வேதம் பொருளறவே உணர்ந்து
இலகு சுடர்கள்போல உலகுக் கொளியே தந்து
எந்தையார் சுதன் சிந்தையில் வளர்ந் தென்று மன்பதில்
ஒன்றவே திரு — ஆலயம்

—ஜி. சே. வேதநாயகம் ஐயர்

430

பல்லவி

இதயம் தேவனின் ஆலயம்
அதன் வாசல் அவர் சீவியம்

சரணங்கள்

1. மாரு மனப்புயல் வந்தாலும்
தீரா தினச் சோர் விருந்தாலும் — தினம்
தெய்வபதம் நாடி மெய்மறை தழுவி
தீச்செயல் தவிர்ப்போம் என்னுளும் — நம்

2. உண்மை அன்பு நீ தேடில்
அண்மையிலிருக்குது திருவடி — பெரும்
நன்மையைத் தினம் நீ தேடி
நசரேயன் வழி நிதம் நாடு — நம்

3. உலகமே உனையே வெறுத்தாலும்
உதவிடுவோர் உனைப் பகைத்தாலும் —தம்
கரத்தினில் ஏந்தி கருணையை ஈந்து
காத்திடுவார் நீ தயங்காதே — நம்

4. பிணிகள் யாவும் தீர்த்திடவே
பணிகளிலுலே உலகை வென்றார் – நாம்
கனிதரும் கொடியாய் நிலைத்திருந்தாலே
இனிவரும் தேவ ராச்சியமாம் – நம்

5. சாந்தம் அன்பு தயவாலே
சர்வமும் வென்றார் அவராமே - தினம்
தெய்வ பதம் நாடி மெய்மறை தழுவி
தீச்செயல் தவிர்ப்போம் என்னுளும் - நம்

6. ஆதியில் ஆவியை அளித்ததுபோல்
அனுதினம் ஈவார் கனித்திடவே - தினம்
தெய்வபதம் நாடி மெய்மறை தழுவி
தீச்செயல் தவிர்ப்போம் என்னுளும் - நம்

—பாவரல் கிரான் ஜீவன்

431

பல்லவி

எந்தன் இதயம் உந்தன் வீடு
என்னில் வாசமாய் தங்கும்
என்னில் வாசமாய் தங்கும்

சரணங்கள்

1. இருண்ட வீட்டில் ஒளியை ஏற்றும்
ஜீவ தீபமே
இதயம் தந்தேன் உந்தனுக்கே
எந்தன் தேவனே, எந்தன் தேவனே -எந்தன்

2. திரண்ட பாவம் என்னை மூடும்
வேளை தேவனே
மருண்டு வீழ்ந்து விட்டிடாமல்
காரும் தேவனே, காரும் தேவனே - எந்தன்

3. அலைகள் மோதி திசைகள் மாறி
உருளும் வேளையில்
கரையில் சேர்க்க கரத்தை தந்து
காரும் ராஜனே, காரும் ராஜனே - எந்தன்

— ஜோசப் சந்திரசேகரம்

432

This Stone to Thee in Faith (M. B, O. 660)

L. M.

1- கர்த்தரே ஓர் ஆலயத்தைக் - கட்ட, இக்கல்லே வைக்கிறோம்
இங்கே உம் அருட்பலத்தை - அடையக் காத்திருக்கிறோம்

2. உம்மை நாம் வணங்கி இங்கே - செலுத்தும்போது
மன்றாட்டை
விண்ணின்று கேட்டுக் கர்த்தரே – அருளும் பாவ மன்னிப்பை

3. உம் தொண்டர் கூறும் வேளையில் – யேசுவின் சுவிசேஷத்தை
அவருடைய நாமத்தில் - காட்டும் அற்புதக் காட்சியை

4. கர்த்தரே இவ்வாலயத்தில் - வசிப்பதன்றி நீர் மாண்பாய்
உம் அடியார் நெஞ்சங்களில் – வீற்றிரும் சதாகாலமாய்

— F. எஸ். அட்கின்ஸ்

433

பல்லவி

கர்த்தர் பெரியவர் அவர் நமது
தேவனுடைய நகரத்திலும்
தமது பரிசுத்த பர்வதத்திலும்
மிகத் துதிக்கப் படத்தக்கவர்

சரணங்கள்

1. வட திசையிலுள்ள சீயோன் பர்வதம்
வடிப்பமான ஸ்தானமும்
சர்வ பூமியின் மகிழ்ச்சியாயிருக்கிறது
அது மகா ராசாவின் நகரம்

2. அதின் அரண்மனைகளில் தேவன் உயர்ந்த
அடைக்கலமா யறியப்பட்டுள்ளார்
இதோ இராசாக்கள் கூடிக்கொண்டு ஏகமாய்க்
கடந்து கொண்டு வந்தார்கள்

3. தேவனே உமது ஆலயத்தின் நடுவில்
உம்முடைய கிருபையை
நாங்கள் சிந்தித்துக் கொண்டு இருக்கிறோம்
உம் நாமம் விளங்குகிறது

4. பின்வரும் சந்ததிக்கு விபரமாய்க் கூறவே
அதின் அலங்கத்தைக் கவனியுங்கள்
அலங்காரத் துடனுள்ள அரண்மனையை
நீங்களுற்றுப் பார்த்திடுங்கள்

5. என்றென்றைக்குமுள்ள சதாகாலமுமே
எங்கள் தேவன் அவரே
மரண பரியந்தம் நம்மை நடத்தும்
மாறுக் கர்த்தரும் அவரே

434

ஆனந்தபைரவி — சாப்பு தாளம்

பல்லவி

காலமிதிலே வந்திவ் வாலயந்தனில் நின்றன்
கையேற்றுக் கொள்வையையா!

அனுபல்லவி

மேலாம் பரனே வேத – நூலோ ரறியாநீத
சீலா யேகோவா போதா - கோலா யாங்கூடுமிந்தக் - கால

சரணம்

எங்கும் வியாபியாகி -இரந்தோர் இதயமேகி
யாவும் படைத்தருட்கை போலிப்
பங்கமுறக் கரத்தாற் - பண்ணுஞ் சினகரத்திற்
பற்றுனக்கில்லை யேலுந் திரத்தாற்
பொங்கும் பவம் புரிந்து - தங்கு மண்ணோர்ப் பரிந்து
துங்கச் சுதனைத் தந்த - எங்கள் பிதாவே! இந்தக் - கால

– ஜே. ஆர். ஆண்ஸிட்

435

பல்லவி

துதிப்பேன் துதிப்பேன் துதிப்பேன்
காலா காலமெல்லாம் என்னைக் காத்தவரை
நான் உள்ளளவும் துதிப்பேன்

சரணங்கள்

1. பாவங்கள் பல நான் செய்திட்டாலும்
பாவி என் மீது அன்பைச் சொரிந்து
என்னை மீட்டுக்காத்து நடத்திய
எந்தன் இயேசுவைத் துதிப்பேன்

2. நண்பர்கள் பகைவராய் மாறிட்டாலும்
துன்பங்கள் துயரங்கள் சூழ்ந்திட்டாலும்
என்னைத் தேற்றி அன்பு கூர்ந்த
எந்தன் இயேசுவைத் துதிப்பேன்

3. வாழ்விலே உம்மை நான் ஏற்றிடவே
தாழ்விலும் என்னை நீர் தாங்கிடவே
ஏழை நானே பாதம் பணிந்து
எந்தன் இயேசுவைத் துதிப்பேன்

குரு அபிஷேகம்

436

ஸ்ரீரஞ்சினி — சாப்புதாளம்

பல்லவி

ஆண்டவா உன்றன் சேவைக்கடியேன் அர்ப்பணஞ்செய்ய
தூண்டும் உன் ஆவி அருள்வாய்

அனுபல்லவி

என்னைத் தியாகிக்க ஏவும்
உன் அனல் மூட்டிடுவாய்
இந்நிலம் தன்னில் மாளும்
மனுமக்கள் மீட்பிற்காக -ஆண்

சரணங்கள்

1. அருமை ரட்சகா உன்றன்
அரும்பாடு கண்ணீர் தியாகம்
பேரன்பு பாரச்சிலுவை,
சருவமும் கண்ட என்றன்
இருதயம் நைந்துருகி,
வெறும் பேச்சாய் நின்றிடாமல்
தருணம் எனையே தந்தேன் -ஆண்

2. உலகே உனதாயினும்
தலைசாய்க்கத் தாவில்லாமல்,
நலமே புரிந்து திரிந்தாய்;
எல்லாம் துறந்து யான் உன்
நல்லாவி கொண்டுழைக்க,
வல்லா, உனில் சிலுவை
அல்லால் வழி வேறுண்டா? -ஆண்

3. புசிக்கப் பண்டமில்லாமல்
பூவில் இல்லமுமே அன்றி,
நசிந்து நலிந்து நாட்டில்
கசிந்து கண்ணீர் சொரிந்து,
தேசமெல்லாந் தியங்கும்
நேசமக்கள் சேவைக்கே
நிமலா, எனை ஏற்றுக்கொள். -ஆண்

-டாக்டர் சவரிராயன்

437

கேதாரகௌளம் ஆதிதாளம்

பல்லவி

இதோ! அடியேனிருக்கிறேன் – என்னை அனுப்பும்
யேசுவே, இபபோதே போகிறேன்

அனுபல்லவி

இதோ போகிறேன் நாதனே, இப்புவியில் நீர் எனக்கு
எந்த இடம் காண்பித்தாலும் உம்தன் சித்தம் செய்திடுவேன்

சரணங்கள்

1. மலைகள், பள்ளங்கள் தாண்டியோ - மா கஷ்டமான
வனங்கள் கடல்கள் கடந்தோ,
தொலை தூரமாகச் சென்றோ, சுவிசேஷம் கூறும்படி
சொல்லும்போது நீர் ஏசுவே, துரிதமாய்ச் சென்றிடுவேன்

2. வறியர் அறிவினருக்கும் - மாதுஷ்டருக்கும்,
வணங்காக் கழுத்துள்ளோருக்கும்
அறிவி என்நாமம் என்று அடியேனை ஏவும்போது
சரியென்றிணங்கி எல்லாச் சனத்தையும் தேடிப்போவேன்

3. வயல் நிலங்கள் இப்பொழுதே - அறுப்புக்கேற்க
வளமாய் விளைந்திருக்குதே!
நயமான வேலையாட்கள் ஞாலமதில் தேடுகின்றீர்;
பயமின்றி என்னை உம்தன் பாதமதில் ஒப்புவித்தேன்

4. உலக முடிவு மட்டும் - சகல நாளும்
உங்களோடிருப்பேன் என்றீரே;
மலை மேலே நீர் கொடுத்த மாபெரிய கட்டளையைத்
தலைமேலே கொண்டிப்போது தரணியில் ஏகிடுவேன்

—வி. சந்தியாகு

438

பல்லவி

உம் சித்தம்போல் என்னை என்றும்
தற்பரனே நீர் நடத்தும்
என் சித்தமோ ஒன்றும் வேண்டாம்
என் நேசரே என் யேசுவே

சரணங்கள்

1. திருமார்பில் நான் சாய்ந்திடுவேன்
மறு துறையான காலம் வரை
பரனே உந்தன் திரு சித்தத்தை
அறிவதல்லோ தூய வழி - உம்.....

2. அக்கினிஸ்தம்பம் மேகஸ்தம்பம்
ஆம் இவற்றுல் நீர் நடத்தும்
ராவுபகல் கூடநின்று
என்றென்றுமாய் நடத்திடுமே - உம்.....

439

மோகனம் சாப்புதாளம்

பல்லவி

தருணம் இதில் ஏசு பரனே! - உனதாவியை
தரவேணுமே சாமி!

அனுபல்லவி

அருள் தரும் சக்தி வல்ல, அன்பின் செபத்தின் ஆவி
அபிஷேகம் பெறுமுன்றன் அடியர்மே லமர்ந்திட -தரு

சரணங்கள்

1. விந்தை ஞானம் அறிவு வேத சத்யங்களில்
மிக்க உயர்ந்து சேர்ந்து விண்ணெளி இவர் வீச
சத்யம் சகலத்துள்ளும் தாசர்களை நடத்தும்
சத்ய ஆவி இவர்மேல், சம்பூரணமாய்ப் பெய்ய — தரு

2. பாவத்தை வேரறுக்கும் ஆவியின் வாள்பிடித்துப்
பலமாகவே இவர் உலகினில் போர் செய்ய.
சாவுற்றோர்களை நித்திய ஜீவனைப் பெறச் செய்யும்
மா வீரராய் விளங்க வல்லாவியே இறங்க - தரு

3. ஆவியின் கனியென்னும் அன்பாதி குணங்களை
அனுதினமும் இவர் அணிகல மாயணிந்து,
மேவும் திருமந்தையை மேய்த்து வளர்க்க, நல்ல
மேய்ப்பனே, அன்பின் ஆவி வாய்ப்பாய் இவரில் தங்க-தரு

4. ஏக்கம் ஆத்தும தாகம் இடைவிடாமல் அடைந்து
ஊக்கத்துடனே இவர் ஓயாமல் ஜெபித்திட,
வாக்குக் கடங்காப் பெருமூச்சோடு எமக்காக
மன்றாடும் ஜெப ஆவி என்றென்றும் நிரம்பிட -தரு

5. மாசுகளற உன்னில் வாசமாக நிலைத்து
மா பணிவாய் உன் தன் மகிமையை நிதம் தேட,
தேசுறு அருள் நாதா, தாசர் உள்ளத்தினின்று
ஜீவநதிகள் ஓடிச் செல்வம் பொழியச் செய்ய -தரு

வி. சந்தியாகு

440

பல்லவி

தந்தேன் என்னை யேசுவே
என்றுமே உமக்கே நான்

அனுபல்லவி

உன்றனுக்கு ஊழியம் செய்ய
தந்தேன் என்னைத் தாங்கியருளும் - தந்தேன்

சரணங்கள்

1. ஜீவகாலம் முழுவதும்
தேவப்பணி செய்திடுவேன்
பூவிற்கடும் போர் புரிகையில்
காவும் உன்றன் கரத்தில் வைத்து - தந்தேன்

2. உன்றன் சித்தம் செய்திடுவேன்
என்றன் சித்தம் ஒழித்திடுவேன்
எந்த இடம் எனக்குக் காட்டினும்
இயேசுவே அங்கே இதோ போகிறேன் - தந்தேன்

3. ஒன்றுமில்லை தான் ஐயா
உம்மாலன்றி ஒன்றும் செய்யேன்
அன்று சீஷர்க்களித்த ஆவியால்
அடியேன் உம்மில் அமரச் செய்யும் - தந்தேன்

441

நாட்டை — திசரதாளம்

பல்லவி

தேவ மைந்தா, - பெந்தேக்கோஸ்தின்
திரு வரந்தா.

அனுபல்லவி

பாவம், நல்நீதி, நியாயத்தீர்ப் பிவற்றைப்
பாரித்துணர்த் தாவி பாலிப்பேன் என்றுயே -தேவ

சரணங்கள்

வானவனே, - நரர் பிணை
யானவனே.

1. ஞான சோதியா யிதயத் திருந்தென்னை
நாளுந் தனிமைதீர்த் தாளும்படிக் கின்னே - தேவ

2. புன்மை நீங்க, – புனிதா, உன்
நன்மை தேங்க,
உன்னையே எல்லாமென் றுன்னி உளம் பொங்க
உலகம் பிசாசம் உடலும் மடங்க - தேவ

3. துஞ்சுகிறேன், - நின்னருட்குக்
கெஞ்சுகிறேன்,
அஞ்சவேண்டாம், அந்தரிக்க விடேன் என்று
ஐய; நீ சொன்னதும், பொய்யாகுமோ? இன்று - தேவ

4. இன்பத்திலும், - தாங்க வொணாத
துன்பத்திலும்,
அன்பன் நீ, மாறாத நண்பனெனக் கண்டு,
ஆற்றியடைந் துன்னைப் போற்றிச்செய்யத் தொண்டு – தேவ

5. மாசழிக்க, – எனக்குன்றன்
தேசளிக்க'
பாசமனைத்தும் பாழாகிப் பறந்திடப்
பற்றிப் பிடித் தென்னை முற்றிலும் ரட்சிக்க - தேவ

–கே. சி. பி. குமாரகுலசிங்கம்

442

விவாகம்

நாதநாமக்கிரியை — சாப்புதாளம்

பல்லவி

இம்மணர்க் குன்னருள் ஈ பரவாசா,
இயேசு கிறிஸ்தையா ஓ சருவேசா!

சரணங்கள்

1. செம்மையும் நன்மையும் செல்வமுந்தா, வா,
தேவனே இவ்விரு பேரையுங் கா, வா, - இம்

2. ஆதமோ டேவையை அன்றமைத் தாயே,
அவ்வித மாகநீ இன்றுஞ் செய்வாயே – இம்

3. உன் தயை பெற்றிவர் ஓங்கிப் பெருகவும்,
ஒருவர்க் கொருவர் நல்லன்பில் நிலைக்கவும் - இம்

4. தாழ்மை பொறுமைகள் சற்குண மேன்மைகள்
தந்துன தாவியைக் கொண்டுகாத்தாளாய் - இம்

5. இயேசு கிறிஸ்துவை நேசித்து வாழவும்,
இன்ப விசுவாச வீட்டாரொன்றுகவும் - இம்

பி. பாக்கியநாதன்

443

The Voice That Breathed O'er Eden (M. H. B. 775)
7, 6, 7, 6.

1. ஏதேனின் விவாகத்தில் - தேவன் சொன்ன வாழ்த்து
ஓர்போதும் ஒழியாமல் – நிற்குமே நிலைத்து

2. இந்த ஸ்திரி புருஷர் – ஏற்படும் வாழ்விலே
மேலான வரங்களை – அருளும் தேவனே

3. புத்திர செல்வத்தையும் – இன்புள்ள கற்பையும்
மாறுத ஐக்கியத்தையும் - இவருக் கீந்திடும்

4. ஆதாமுக்கு ஏவாளை . கொடுத்த வண்ணமே
இந்த மணவாட்டியை - ஈந்திடும் பிதாவே

5. இரு சுபாவங்களை - இணைத்த மீட்பரே
அன்பர் இருவரையும் - ஏகராய்ச் சேருமே

6. கிறிஸ்துவைச் சபையுடன் - சேர்த்த தேவாவியே
இந்த மன்றலினை நீர் - திடப்படுத்துமே

7. உமது செட்டைகளை – இவர்மேல் விரியும்
உமது பீடத்தண்டை - வணங்கச் செய்திடும்

8. கிறிஸ்துவின் மணாட்டியாம் – சுத்தருடன் இன்பாய்
இருவரும் மோட்சம் சேர - அருள்செய்யும் அன்பாய்

—ஜோன் கெபின்
— டீ. பி. நயில்ஸ்

444

அம்ஸ தொனி ரூபகதாளம்

பல்லவி

தேவே, இம்மணம் தேறநீர் இங்கு தோன்றுமே !
பாவை பத்தா நீடுவாழ்ந்து பாக்கிய பதம் பெற – தேவே

சரணங்கள்

1. ஆதியில் ஏதேன் காவிலே, ஆதாமுக்கேவை நேர்ந்திட்டீர்,
மேதினி சிறக்க (தேவே) கருணை காட்டினீர்;
மேலுறுதி தந்தெமைக் கடாட்சிக்க வேண்டுவோம் - தேவே

2. இவரின் தஞ்சமாய் என்றுமே தோன்றி ஈனம் கடித்திடும்
நவமுறு நன்மை (தேவே) நாளும் சொரிந்திடும்;
நலிவின்றிக் கதிக்க நல்லருள் என்றும் பொழிந்திடும் - தேவே

3. ....எனும் நம்பிக்கும் நங்கைகக்குமே,
எல்லாச் செல்வமும் (தேவே) ஏகமாய் ஈந்திடும்;
எப்பொருட்கும்ஈசனே எங்கள் விண்ணப்பம்கேளுமே-தேவே

— டீ. பி. நயில்ஸ்

445

பல்லவி

நன்னுள் இதிலே ஆசி கூற
வாரும் தேவனே!

அனுபல்லவி

வருடங்கள் காலங்கள் கழிந்தாலும்
வழுவாமல் காத்த பரிசுத்தரே

சரணங்கள்

1. உன் கைகளின் பலனைச் சாப்பிடுவாய்
பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்
உன் பிள்ளைகள் உன்னைச் சுற்றிலுமிருந்து
ஒலிவமரக் கன்றுகளைப் போலிருப்பார்கள்! - நன்னுள்

2. நித்திய ஜீவனை அளியும் தேவா
நித்தமும் உம்மை ஆராதிக்க
உம் செட்டைகள் மறைவில் குஞ்சுகள் போல
எந்நாளும் பாதுகாத்திடுவீரே! - நன்னுள்

446

O Perfect Love (M. H. B. 777)

11, 10, 11, 10.

1. புத்திக் கெட்டாத அன்பின் வாரி, பாரும்,
உம்பாதம் அண்டினேமே, தேவரீர்.
விவாகத்தால் இணைக்கும் இருபேரும்,
ஒன்றுக வாழும் அன்பை ஈகுவீர்.

2. ஆ ஜீவ ஊற்றே, இவரில் உம் நேசம்,
நல் நம்பிக்கையும், நோவு சாவிலும்
உம்பேரில் சாரும் ஊக்க விசுவாசம்
குன்றுத தீரமும் தந்தருளும்.

3. பூலோகத் துன்பம் இன்பமாக மாற்றி,
மெய்ச் சமாதானம் தந்து தேற்றுவீர்;
வாழ்நாளின் ஈற்றில் மோட்ச கரையேற்றி
நிறைந்த ஜீவன் அன்பும் நல்குவீர்.

டீ. எவ். கேணி

– யாழ்ப்பாண மொழிபெயர்ப்பு

447

பல்லவி

வல்ல தேவா ஆசிகூற வாரும் இந்நேரத்திலே
உந்தன் சமுகம் தந்து தயவாய்ச்சேரும் இம்மன்றலிலே

சரணங்கள்

1. ஏதேன் விவாகத்தை அர்த்தத் தோடாக்கினீர்
ஆதாமுக் கேவாளை ஆதரவாக்கினீர்
இல்லற வாழ்விலே இவ் விருவரை இணைத்தே
இன்ப வாழ்வு அன்பின் ஊற்றாய் ஓங்கிட ஆசிசெய்வீர்.

2. இம்மணவாளருக்கும் ஆசியை மாரியாய்
சொரிந்தே அன்புடன் ஆதரித்திடுவீர்
இன்பம் நிறை வாழ்வே இவர்க் கென்றும் நீரீந்தே
இன்னல் இக்கட் டின்றி இதமாய் வாழ்ந்திட நிறைந்த
அருள் செய்வீர்

3. தம்பதிகள் புது வாழ்வினுள் சேருங்கால்
காரணராகக் கரங்காட்டி முன்செல்வீர்.
பூலோக செல்வம் சுகம் இவர்க்குப்புத்திர பாக்கியமும்
பூரணமாகவே ஈந்திவர் கென்றுமே புகலிடம் ஆகுவீர்,

448

பல்லவி

மங்களம் செழிக்க கிருபையருளும்
மங்கள நாதனே

சரணங்கள்

1. மங்கள நித்திய மங்கள நீ மங்கள பத்தியும் நாதனும் நீ
எங்கள் புங்கவ நீ எங்கள் துங்கவ நீ
உத்தம சத்திய நித்திய தத்துவ மெத்த மகத்துவ
அத்தனுக் கத்தனும் ஆபீரகாம் தேவ நீ —மங்களம்

2. மனமகன்.....
மனமகள்.....
மானுலவேலருக்கும் மகானுபவர்க்கும்
பக்தியுடன் புத்தி முத்தியளித்திடும் நித்தியனே யுன்னை
துத்தியம் செய்திடும் சத்திய வேதர்க்கும் —மங்களம்

449

இந்துஸ்தான் காப்பி — ஆதிதாளம்

பல்லவி

மண வாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு!—மங்கள வாழ்வு
மருவிய சோபன சுப வாழ்வு

சரணங்கள்

1. துணை பிரியாது, தோகை இம்மாது
சுப மண மகளிவர் இது போது
மணமுறை யோது வசனம் விடாது
வந்தனர் உமதருள் பெற ஏது, —நல்ல —மண

2. ஜீவதயாகரா சிருஷ்டியதிகாரா,
தெய்வீக மாமண அலங்காரா,
தேவகுமாரா திருவெல்லியூரா,
சேர்ந்தவர்க்கருள் தராதிருப்பீரா?—நல்ல—மண

3. குடித்தன வீரம்; குணமுள்ள தாரம்,
கொடுத்துங் கொண்டாலது சமுசாரம்,
அடக்க ஆசாரம், அன்பு, உதாரம்,
அம்புவி தனில் மனைக்கலங்காரம் —நல்ல—மண

4. மன்றல் செய் தேவி, மணாளனுக்காவி
மந்திரம் அவற்குறை மேதாவி
அன்றியிப் பூவிலமிர்த சஞ்சீவி;
அவளையில்லாதவ னொரு பாவி—நல்ல—மண

❋❋❋❋

விழிப்பிரவு
புதுவருடம், உடன்படிக்கை

450

Sinners Jesus Will Receive (M. H. B. 322)
7, 7, 7, 7, and Refruin

பல்லவி

போற்றுவோம்..... மனம் ஒன்றுய்
இயேசுவே.....நம் மீட்பராம்
கூறுவோம்.....தினம் அன்பாய்
இயேசுவே.....நம் மீட்பராம்

சரணங்கள்

1. இயேசுவே நம் மீட்பராம்
உலகம் எங்கும் கூறுவோம்
அவரால் மன்னிப் புண்டாம்
மோட்ச வாழ்விற் செல்வோம்

2. அவர் ஆறுதல் தருவார்
தேவ வார்த்தை உண்மையாம்
நீசரை ஏற்றுக் கொள்வார்
இயேசுவே நம் மீட்பராம்

3. நீதிமான்கள் ஆக்குவார்
தண்டனைக்கு தப்புவோம்
கறை எல்லாம் நீக்குவார்
சுத்தமாகச் சீவிப்போம்

4. இயேசுவே நம் மீட்பராம்
அவர் அன்பில் நாம் சார்வோம்
அவரால் நற்சீர் உண்டாம்
இன்பராய் மோட்சம் சேர்வோம்

— டீ. பி. நயினா

451

பிலகரி ஆதிதாளம்

பல்லவி

ஆனந்தமே! ஜெயா! ஜெயா!
அகமகிழ்ந் தனைவரும் பாடிடுவோம்

அனுபல்லவி

ஞான ரட்சகா. நாதர் நமை—இந்த
நாள்வரை ஞாலமதினில் காத்தார் —புகழ்

சரணங்கள்

1. சங்கு சனம், வளர் செங்கோலரசினை
தளராதுள கிறிஸ்தானவராம்,
எங்கள் ரட்சகரேசு நமை -வெகு
இரக்கம் இருபையுடன் ரட்சித்ததால் —புகழ்

2. முத்து வருடமதினில் மனுடரில் வெகு
மோசகஸ்திகள் தனிலே யுழல,
தந்து நமக்குயிருடை யுணவும் -வெகு
தயவுடன் இயேசு தற்காத்ததிலல் —புகழ்

3. பஞ்சம் பசிக்கும் பட்டயத்துக்கும் வெகுகொடும்
பாழ் கொள்ளை நோய் விஷ தோஷத்திற்கும்
தஞ்சரட்சகர் தவிர்த்து நமை -இத்
தரைதனில் குறைதணித் தாற்றியதால் —புகழ்

— மாதிலாமணி ஐயர்

452

ஆனந்தபைரவி ஆதிதாளம்

பல்லவி

இம்மட்டும் சிவன் தந்த கர்த்தாவை அத்தியந்த
எண்ணமாய் ஸ்தோத்தரிப்போமாக

அனுபல்லவி

நம்மை ரட்சிக்க வந்து, தம்மைப் பலியாய்த் தந்து,
நற்சுக மேவவும், அற்புதமாகவும் -இம்

சரணங்கள்

1. காலம் சொல்போல் கழியும், தண்ணீரைப்போல் வடியும்,
கனலைவப் போலே ஒழியும்,
வாலிபமும் மறையும், சீலம் எல்லாம் குறையும்,
மண்ணின் வாழ்வொன்றும் நிற்கமாட்டாது
கோலப் பதுமைக்கும் நீர்க்குமிழிக்கும் புகைக்குமே
கொண்ட உலகத்தில் அண்டர்பரன் எனைக்
கண்டு கருணைகள் விண்டு தயவுடன் -இம்

2. பலவித இக்கட்டையும் திகில்களையும் கடந்தோம்
பரம பாதையைத் தொடர்ந்தோம்,
வலிய நிமையை வென்றோம், நலியும் ஆசையைக்
கொன்றோம்
வஞ்சகர் பகைக்கும் தப்பி நின்றோம்,
கலி என்றதெல்லாம் விண்டோம், கர்த்தாவின் மீட்பைக்
கண்டோம்
காய்ந்த மனதோடு பாய்ந்து விழுகணம்
சாய்ந்து கெடவும் ஆராய்ந்து நெறியுடன் -இம்

8. பிசகில வரக்கண்டதாய் பெற்ற குழந்தை தனைப்
பேணித் தற்காக்கும் நேர்மையே,
விசுவாசமாய் ரட்சகர் காலில் விழுந்தவரை
மேவிச் சரண் புகுந்தோரையே
நிசமாயிக் கர்த்தாவின் கையேதுன் நாளில் காக்கும் மெய்யே
நேயத்திலுல் ஐந்து காயத்திலுல் வெகு
பாயத்திலுல் மிகு ஞாயத்திலுலுமே -இம்

— வேதநாயகம் சாஸ்திரியார்

453

சரணங்கள்

1. ஒரு பெரிய பயணம் போகிறேன்
என்னுடன் வருவார் இயேசு;
இப்பாதை மேன்மையைக் கூறுவேன்,
என்னுடன் வருவார் இயேசு

பல்லவி

இயேசு, இயேசு,
என்னுடன் வருவார் இயேசு

2. நான் பயமில்லாமற் போகலாம்,
என்னுடன் வருவார் இயேசு;
என் நெஞ்சில் மகிழ்ச்சி நிறைவாம்,
என்னுடன் வருவார் இயேசு

3 அநேக தடைகள் சந்திப்பேன்,
என்னுடன் வருவார் இயேசு;
எல்லாவற்றையும் நான் மேற்கொள்வேன்,
என்னுடன் வருவார் இயேசு

4. பிதாவின் நேசத்தைக் காட்டியே
என்னுடன் வருவார் இயேசு
அவ்வன்புக் கவர் அத்தாட்சியே,
என்னுடன் வருவார் இயேசு

5. நாம் இப்பாதையில் சேருவோம்
நம்முடன் வருவார் இயேசு;
என்றென்றும் மோட்சத்தில் வாழுவோம்
நம்முடன் வருவார் இயேசு

—யாழ்ப்பாணப் பாடல்

454

சஹானா — சாப்புதாளம்

பல்லவி

ஒருபோதும் மறவாத உண்மைப் பிதாவிருக்க
உனக்கென்ன குறை மகனே!

அனுபல்லவி

சிறுவம் தொட்டுனை ஒரு செல்லப் பிள்ளைபோல் பார்த்த
உரிய தந்தை உனக்கு உயிரோடிருப்பார் என்றும்–ஒரு

சரணங்கள்

1. கப்பலின் அடித்தட்டில் சுகப்புடன் தூங்குவார்
கதறும் என் சத்தம்கேட்டால் கடல் தன்னை அமர்த்துவார்
எப்பெரிய போரிலும் ஏற்ற ஆயுதமீவார்,
ஏழைப் பிள்ளையுனக்கு ஏற்ற தந்தை நானென்பார் –ஒரு

2. கடல் தனக்கதிகாரி கர்த்த ரென்றறிவாயே,
கடவாதிருக்க வெல்லை கற்பித்தா ரவர் சேயே
விடுவாளோ பிள்ளையைத் தாய் மேதினியிற் றனியே
மெய்ப்பரனை நீ தினம் விசுவாசித் திருப்பாயே –ஒரு

3. உன்னுடை விசுவாசம் செபமும் வீணுகுமா?
உறக்கமில்லாதவர் கண் உன்னை விட்டொழியுமா?
இந்நில மீதிலுனக் கென்ன வந்தாலும், சும்மா
இருக்குமா அவர் மனம் உருக்கமில்லாதே போமா? -ஒரு

4. உலகம் பேயுடலாசை உன்னை மோசம் செய்யாது,
ஊக்கம் விடாதே திருவுள முன்னை மறவாது
இலங்கும் பரிசுத்தாவி எழில் வரம் ஒழியாது
என்றும் மாருத நண்பன் இரட்சகருடன் சேர்ந்து -ஒரு

— உபாத்தியாயர் முத்துச்சாமி

455

O God Our Help in Ages Past (M, H. B. 878)

C. M.

சரணங்கள்

1. கர்த்தாவே, என்றைக்கும் எங்கள் அடைக்கலம் ஆனீர்;
மோதும்போது மா சூறைகள்,-நித்த வீடாய் நிற்பீர்

2. உம் சிங்காசன நிழலில்--சுகமாய் இருப்போம்;
நீர் உமது கையை நீட்டில்,-ஒன்றும் அஞ்சமாட்டோம்

3. நிற்குமுன்னே மலைகளும்-பூமிதோன்று முன்னும்
நீர் தேவனுனீர் நித்தமும்;-இருப்பீர் என்றைக்கும்

4. உமக் காயிர வருஷம்-ஓர்நாள் போற் செல்லுமே;
இராச் சாமம் போல் யுகமும்-பறந்து போகுமே,

5. சாவுக்குரிய மனிதர் நிலை - நிற்கமாட்டார்;
காலமாம் வெள்ளத்தில், அவர் - அமிழ்ந்திப் போகிறூர்

6. காலம் ஆற்றைப்போல் ஓட்டமாய்-நம்மை வாரிச்செல்லும்
விரைந்தகன்ற கனவாய் - நம் சிவனும் போகும்

7. கர்த்தாவே என்றைக்கும் எங்கள் - அடைக்கல மானீர்
மூடிவுமட்டும் காத்தெங்கள் - நீங்கா வீடாய் நிற்பீர்

—ஐசக் வொற்ஸ்

ஈ. கூல்

456

இந்துஸ்தான் காபி — ஆதிதாளம்

பல்லவி

கருணைக்கண் பாராயிவ் வருடமுஞ் சீராய்;
சரணம், சரணம், இது தருணமே வாராய்

சரணங்கள்

1. ஆனந்த வெளியே, அகம் விளக் கொளியே
ஆதி, சுதன், ஆவியாம் திரியேகா.
பாதம் பணிந்தோம் பங்கமில் நீதா,
பாதகர் பவமின்றே பற்றறு நாதா -கரு

2. சென்ற வாண்டெம்மைச் சேர்த்தனை யொன்றாய்
குன்றுத வாழ்வு கொடுத்தனை நன்றாய்,
துன்று பிணியெல்லாந் தொலைத்தனை யன்பாய்;
தொல்லை வறுமைகள் தொடர்ந்திடா தின்பாய் -கரு

3. பஞ்சத்தி னேடுறு பகைமைக ளுக்கும்
பாழ்தரு நோயொடு பாவ வலைக்கும்
அஞ்சிடரென்று தஞ்சமே தந்து
அருட்கடலே, காத்தா யாதரவாய் சாமி -கரு

4. புதிய வருடத்தில் பூரண மனதோடு
புண்ணியனே உனைப் போற்றி மகிழ்வம்
கதி தத்திடுவையேற் கவலை விடுவம்,
கஞ்ச மலரடி யஞ்சலி செய்ய நாம் -கரு

—வி. க. நிற்சிங்கம்

457

God be with you till we meet again (S. S. R. 298)
P. M

சரணங்கள்

1. தேவன் சேமமாய்க் காப்பாராக
மீள நாம் சந்திக்கு மட்டாய்
பாதையில் நடத்தி அன்பாய்,
தேவன் சேமமாய்க் காப்பாராக

பல்லவி

சேமமாய்.....சேமமாய்
சேமமாய்க்.....காப்பாராக
சேமமாய்.....சேமமாய்
மீள நாம் சந்திக்கு மட்டாக

2. தேவன் சேமமாய்க் காப்பாராக
தம் செட்டைகளால் மறைத்து
நாடோறும் உம்மைப் போஷித்து,
தேவன் சேமமாய்க் காப்பாராக

3. தேவன் சேமமாய்க் காப்பாராக
தீமை யாவையும் தடுத்து
தம் கையால் உம்மை அணைத்து
தேவன் ,சேமமாய்க் காப்பாராக

4. தேவன் சேமமாய்க் காப்பாராக
என்றும் உம்மை ஆற்றித் தேற்றி
சாவின் அச்சத்தை அகற்றி
தேவன் சேமமாய்க் காப்பாராக

— ம. பி. நயிலஸ்

458

Tune (M. H. B. 498)
7, 7, 7, 7, 7, 7.

சரணங்கள்

1. தேவே சென்றுண்டு முற்றுய் - நம்மைக் காத்தீர் பேணமாய்
தீங்கெல்லாம் விலக்கினீர் – நெஞ்சின் பூரிப்பைத் தந்தீர்;
உம்மன்பை நாம் சிந்திப்போம் - உம்மைப் போற்றி
வாழ்த்துவோம்

2. இவ்வாண்டை நம் எல்லோர்க்கும் - சோபன காலம் ஆக்கும்
வாழ்வு தாழ்வு யாவிலும், – இயேசுவே எம்மைப் பேணும்
துன்ப துக்க நேரத்தில் – ஆற்றிதாரும் நெஞ்சத்தில்

3. எம் வாழ்நாட்காலம் முற்றும் – எம்மைத்தாங்கிநடத்தும்;
ஆவியின் வரம் தந்து - ஆன்மாவைச் சுத்தம் செய்து,
எம்மை உத்தமராக்கும்; - பாவத்தை முற்றுய் நீக்கும்

4. மோட்சத்தை நாம் வாஞ்சிக்க, - ஏற்றவண்ணம் சீவிக்க,
எம்மை எத்தன்ம் பண்ணும்; - எம் நெஞ்சை ஆண்டு
கொள்ளும்
அப்போ, தேறி மண்ணிலே, - நித்தம் வாழ்வோம் விண்ணிலே

— டீ. பி. நயில்ஸ்

459

சங்கராபரணம் திரிசுரதாளம்

பல்லவி

தேவனே அடைக்கலம் – நாங்கள்
பாவத்தைச் செய்து கெட்டோம்

அனுபல்லவி

பர்வதம் ஆதியாம் சர்வமும் தோன்றுமுன்
கர்த்தரே, மாறுமல் நித்தமிருக்கிறீர் - தேவ

சரணங்கள்

1. நாங்களே பாவம் செய்தோம், - வந்த
தீங்கினால் வாடுகிறோம்,
ஓங்கினால் தேவகோபம், - அஞ்சி
ஏங்குமே எங்கள் நெஞ்சம்,
தேங்கும் பொறையினால் தாங்கினீர் கோபத்தை,
ஆங்காரம் கொண்டுநாம் தீங்கராய் நாள்விட்டோம்-தேவ

2. ஆயிரம் ஆண்டுமது முன்பாய்,
வாயிராச் சாமம் போல
மாயமாய் ஓடிப்போகும் - நம்மை
ஓயாமல் வாரிச் செல்லும்
சண்டு நம் ஆயுள்நாள் ஆண்டொன்பதாயினும்
நீண்ட துன்பத்தைத் தந்து தூண்டுமே துக்கத்தை - தேவ

3. வெள்ளம் போல எங்களை, - வாரி
அள்ளிக்கொண்டு போகிறீர்,
வெள்ளெனத் தோன்றும் புல்லு - அன்றே
பொள்ளென வாடிப்போகும்,
வள்ளலே கோபித்துத் தள்ளாமல் எங்களை
உள்ளத்தில் நேசித்து வள்ளுமே மன்னிப்பை - தேவ

4. தேவனே உம்மன்பினால் - எங்கள்
பாவத்தை நீர் மன்னித்து,
ஆவியின் ஸ்நானம் தந்து, - சுத்த
சீவனை நம்மில் ஏவும்,
காலை நிறைவையும், மாலை மகிழ்வையும்,
மேலோர் நினைவையும், சீலமாய்த் தந்திடும் - தேவ

5. தேவனே சாவை வென்று, - நாங்கள்
சீவனை நாடிச் சென்று,
ஆவலாய் விண்ணை நோக்க, - நீரே
காவலாய் நம்மோடிரும்,
ஆதிப் பிதாவுக்கும் ஜோதிச் சுதனுக்கும்
கோதில் சுத்தாவிக்கும் தோத்திரம் சொல்லுவோம் - தேவ

-டீ. பி. நயில்ஸ்

460

பல்லவி

துதிசெய் மனமே நிதம் துதிசெய் - துதிசெய்
இம்மட்டும் நடத்திய உன் தேவனை
இனறும் என்றும் நன்றி யிகுந்த மனதோடே

சரணங்கள்

1. உன் காலம் எலலாம் உன்னைத் தம் கரமதில் ஏந்தி
ஒருபோதும் மறவாத தாயனின் அன்பை நினைந்து - துதிசெய்

2. தாய் தந்தை தானும் ஏகமாய் உன்னை மறந்தாலும்
ஒருபோதும் மறவாத தாயனின் அன்பை நினைந்து - துதிசெய்

3. சந்ததம் உன்னை நடத்திடும் சத்திய தேவன்
சொந்தம் பாராட்டி உன்னுடன் இருப்பதினாலே - துதிசெய்

461

பல்லவி

நன்றியால் பாடிடுவோம்
நன்றியால் பாடிடுவோம்
நல்லவர் இயேசு நல்கிய எல்லா
நன்மைகளை நினைந்தே

சரணங்கள்

1. செங்கடல்தனை நடுவாய்ப் பிரித்த எங்கள்
தேவனின் கரமே
தாங்கியதே இந்நாள் வரையும்
தயவாய் மா தயவாய் ஆ, ஆ - நன்றியால்

2. அழைக்கப்பட்டோரே நீர் உன்னத அழைப்பினை
அறிந்தே வந்திடுவீர்
அளவில்லா திரு ஆக்கமிதனை
அவனியோர்க் களிப்பீர் ஆ, ஆ - நன்றியால்

462

When Thy Soldiers Take Their Swords

(M. H. B. 398) 77, 77, 77

சரணங்கள்

1. நும் தொண்டர், பொரும் போதும் - வாக்கைப் போதிக்கும் போதும்,
தாழ்மை பூணச்செய்திடும் - உம்மிலே சாரப்பண்ணும்;
தேவே, தொண்டரை தாங்கும் – நும் ஆவியை அனுப்பும்

2. லோக நேசம் மீறுமல் - தொண்டர் தோற்றுப்போகாமல்
போர்முறையைப் போதிப்பீர் : வான் துணையைச்சாதிப்பீர்,
தேவே, தொண்டரைத் தாங்கும் – ஞானவரம் ஈந்திடும்

3. வெற்றி கொண்டோம் நாமென்று – அவர் வீம்பு பேசாது
அவர் செருக்கைத் தடும் - மனத் தாழ்மையைக் கொடும்
தேவே தொண்டரைத்தாங்கும் - உம்மைத்துதிக்கப்பண்ணும்

4. அவர் நேர்ந்த கடனும் – அவர் செய்த ஜெபமும்
நில்லாமல் அவர் நெஞ்சில் - போகும்போது மறப்பில்;
தேவே, தொண்டரைத் தாங்கும் - ஈறுமட்டும் காத்திடும்

5. ஆயுள், வாது யாவிலும் - தேவே முற்றுமாய்க் காத்திடும்;
போரில் தோற்றோரை, அன்பாய் - தேற்றும் கிறிஸ்து மூலமாய்
தேவே, தொண்டரைத் தாங்கும் - சாவு அவரை ஆற்றும்

— ஃபிரான்சஸ் மேரி ஓவன்
டீ. பி. நயில்ஸ்

463

O God of Bethel, By Whose Hand (M. H. B. 607)
C. M.

சரணங்கள்

1. பெத்தேலின் தேவே! பக்தரை - என்றும் போஷிக்கிறீர்;
எம்முன்னோர், தம் பயணத்தை - நிறைவேற்றச்செய்தீர்,

2. எம் விண்ணப்பத்தை இப்போதே - இரக்கமாய்க் கேளும்;
முற் பிதாக்களின் தேவனே - எம்தேவனுமாய் இரும்

3. நாம் கெட்டலைந்து போகாமல், - நீரேவழிகாட்டும்;
அன்றன்றுள்ள ஆகாரமும், - வஸ்திரமும் தாரும்

4. பிதாவின் வீட்டில் மகிழ்வாய் - எம் ஆன்மாக்கள் யாவும்
சேதமின்றிச் சேருமட்டாய், - உம் செட்டையால் மூடும்

5. இவ்வாசிர்வாதம் யாவையும், - அருளும் தேவரீர்;
அப்போ எமது தேவனும், - பங்குமாய் இருப்பீர்

— பிலிப் டொட்றிஜ்
உ. எம். வோல்ரன்

464

Come Let Us Anew (M. H. B 956)

5, 5, 5, 11

சரணங்கள்

1. வாரும், பின்னும் நாம் - பயணம் செல்வோம்,
ஆண்டுடன் கூடி,
நாயன் தோற்று மட்டும், நில்லாமல் ஓடி

2. அவர் நற்சித்தம், - ஆக்கி நம் இன்பம் ,
தேற்றித் தாலந்தை,
செய்து யார்க்கும் நன்மை, கொள்வோம் நம்பிக்கை

3. சீவன் சொப்பனம்; - கால நீரோட்டம்
ஓடிச் செல்லுமே,
விரைத்து நிமிஷம், நில்லேன் என்னுமே

4. அம்பு பாய்ந்தது - கணஞ்சென்றது;
பூர்ண வருஷம்,
காட்சியாகின்றது; கிட்டும் நித்தியம்

5. அவர் நான்வரும்; – அப்போது யாரும்,
"வென்றேன் போர் செய்து,
என் தொண்டு முடித்தேன்" என்றுலே நன்று

6. யாருங் கர்த்தர்மூன், - "நீ மெய் உத்தமன்!
இன்பம் ஓங்கவே,
சிங்காசனம் கொள்வாய்" என்று கேட்கவே

-சார்ல்ஸ் உவெஸ்லி

— டீ. பி. நயில்ஸ்

465

சரணங்கள்

1. வா, எங்கள் சுவாமி, வா இந்த நேரத்திலே
வந்து நின் சுந்தரக் கையால் தந்திடு நன்மையெல்லாம்

2. யேசையா, உன்னையல்லாமல் எங்களுக்கு யாருமில்லை
நீசரென்றெமை விடாதே, நின்னடி தஞ்சமையா

3. இராப்பகல் எங்களைக்காராய், போக்கு வரத்திலெல்லாம்;
கூப்பிடும் போதெல்லாம் கேட்டு, கொண்டணைத்
தன்பு செய்வாய்

466

Come Let us Use The Grace Divine (M. H. B. 749)

C. M.

சரணங்கள்

1. வாரும், எல்லோரும் ஏகமாய்—சீயோன் நோக்கிச்
செல்லுவோம்
நித்த ஏற்பாட்டின் மூலமாய்—நாம் கர்த்தரைச் சேர்வோம்

2. இயேசு தரும் பெலன் வாங்கி,- சாகுமட்டும் நம்மை
ஒப்புவித்து தேவைப் போற்றி,- செய்வோம் உடன்பாட்டை

3. இப்போ செய்த உடன்பாட்டில்-என்றும் மனம் வைத்து,
இனித் தேவை விலகாமல்,-நிற்போம் நிலைகொண்டு

4. பிதா, சுதன், ஆவி உம்மை-நெஞ்சில் ஏற்றுக்கொள்வோம்
சமாதான நல்விடையைத்தர வேண்டுகிறோம்

5. ஏற்பாட்டின் ரத்தத்தைக் காட்டி-எம்மைச் சுத்தராக்கும்
வானில் எம் நாமத்தைத் தீட்டி-நித்தம் எம்மைப்பேணும்

—சால்ஸ் உவெஸ்லி

பிற்றர் பேசிவல்

தேசப்பணி

467

கரகரப்ரியை — ஆதிதாளம்

பல்லவி

எங்கும் புகழ் யேசு ராசனுக்கே
எழில் மாட்சிமை வளர் வாலிபரே!

அனுபல்லவி

உங்களையல்லவோ உண்மை வேதங் காக்கும்
உயர் வீரரெனப் பக்தர் ஓதுகிறார்

சரணங்கள்

1. ஆயிரத்தொருவர் ஆவீரல்லோ நீரும்
அதை அறிந்து துதி செய்குவீர்
தாயினும் மடங்கு சதம் அன்புடைய
சாமி யேசுவுக் கிதயம் தந்திடுவீர் -எங்கும்

2. கல்வி கற்றவர்கள் கல்வி கல்லாதோர்க்குக்
கடன் பட்டவர் கண்திறக்கவே;
பல்வழி அலையும் பாதை தப்பிஜீவரைப்
பரிந்து திருப்ப நிதம் பார்த்திடுவீர் -எங்கும்

3. தாழ்மை சற்குணமும், தயை காருண்யமும்
தழைப்பதல்லோ தகுந்த கல்வியே?
பாழுந்துர்க் குணமும் பாவச் செய்கையாவும்
பறந்தோடப் பார்ப்பதுங்கள் பாரமன்றே? -எங்கும்

4. சுத்த சுவிஷேம் துரிதமாய்ச் செல்ல
தூதர் நீங்களே தூயன் வீரரே
கர்த்தரின் பாதத்தில் காணிமாலே தங்கிக்
கருணை நிறை வசனம் கற்றிடுவீர் -எங்கும்

—ல. பொன்னுச்சுவாமி ஐயர்

468

1. ஐயனே அருமைநாதா - துய்ய நின் கருணையாலே
தொய்யுமெம் ஏழை நாட்டார்-உய்யவுன் தயவுகூர்வாய்

2. தாயுமெம் தந்தையும் நீ-பேயல்ல பெற்றபிதா
வாய்மை யிதுவுணர வுந்தன்-சேயரிவர் கண் திறப்பாய்

3. வீடுமோ ரோட்டைக் குடில் - வாடுமிவ ரிடுப்பில் கந்தை
நாடு மிக நஷ்டங் கடன் – பாடுமோர் ஏடுகொள்ளா

4. பாலகரின் பட்டினியும் – வாலவரின் பேதமையும்
ஓலமிடு முதியவரின் - கோலமுற்று மாற்றிடப்பா

5. காலை, மனக் கவலை கொண்டு-மூலைமுடுக்கெல்லாம் சென்று
வேலைக்காய் திரிந்து சோர்ந்து - மலைவுற்று மயங்குறுரே

6. இத்தரை மானிடவுரிமை - புத்திர சிலாக்கிய செல்வம்
பக்தர்களின் பாக்கியமிவர் – அத்தனே அடைவதெப்போ?

7. கற்றவர் கரிசனையில்லை-கொற்றவர்கண் நோக்குமில்லை
பெற்றவன் நீ யன்றே வேறே-உற்றவா உருகுவாயே

